காவ்யா



ஞானி

வரலாற்றில் தமிழர், தமிழ் இலக்கியம்

New Book Lands
FOREIGN & INDIAN BOOKS
52-C, North Usman Road, T' Nagar,
Chennai - 17. Phone : 28158171,
28156006 Fax : 24336312
www.newbooklands.com

வரலாற்றில் தமிழர், தமிழிலக்கியம்

ஞானி

காவ்யா

வரலாற்றில் தமிழர், தமிழிலக்கியம்

© ஞானி (கி. பழனிச்சாமி)
24, வி.ஆர்.வி. நகர்,
ஞானாம்பிகை ஆலை அஞ்சல்,
கோவை - 641 029
வெளியீடு : காவ்யா
14, முதல் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
☎ : 2480 1603
E-mail : kaavyabooks@yahoo.co.in
www.kaavyabooks.com
முதற்பதிப்பு : 2004

கணிணி அச்சு : ஸ்ரீ ராம் கிராபிக்ஸ், சென்னை. ☎ : 2473 1809

அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை-5
அட்டை வடிவமைப்பு : முத்து
பக்கங்கள் : IX + 272 = 281

விலை : ரூ.140/-

உள்ளடக்கம்

பதிப்புரை

கோவை ஞானி அவர்களின் பணி பாராட்டத்தக்கது. அவரது பயணம் முடிவற்றது. முதிய வயதிலும் இளைய எண்ணங்களோடு வாழ்ந்து வருகிறார். சமரசங்கள் அற்ற வாழ்க்கை அவருடையது. 'விளக்கு' போன்ற விருதுகள் இவரால் பெருமை பெற்றன. 'காவ்யா' தொடர்ந்து இவரது எழுத்துக்களைக் கௌரவித்து வருகிறது. இப்போது 'வரலாற்றில் தமிழர் தமிழிலக்கியம்' இதில் 18 கட்டுரைகள் உள்ளன. 'தொல்காப்பியப் பூங்கா' வும் சரி 'யுரேகா என்றொரு நகரம்' என்றாலும் சரி எல்லாவற்றிலும் இவரது கவனம் குவிக்கப்படுகிறது.

வாசகர்கள் வாங்கி உதவ வேண்டும்.

அன்புடன்
காவ்யா சண்முகசுந்தரம்

முன்னுரை

இயற்பியல், வேதியியல் முதலியவற்றை உள்ளடக்கிய அறிவியல் தேவை என்பதைப் போலவே, சமூகவியல் வரலாறு கலை இலக்கியம் முதலியவற்றினுள்ளும் இயங்கும் அறிவியல் பார்வை நமக்கு இன்றியமையாதது. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் வள்ளுவர் கூறுவதில் அவரது அறிவியல் பார்வையை நாம் அறிந்து கொள்கிறோம். தோற்றம் எத்தகையதாகினும் அதற்குள், அதனைக் கடந்து இயங்குகிற உண்மையைக் காண்பது அறிவியல் பார்வை.

எதனுள்ளும் காரண காரியத்தொடர்பைக் காண்பது அறிவியல் பார்வை. வாழ்வுக்கும் இந்த உண்மை பொருந்தும். "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்றும் "மேற்பிறந்தும் மேல் அல்லாதவர், மேல் அல்லவர்" என்றும் வள்ளுவர் தோற்றத்தைக் கடந்து உண்மை காண்கிறார்.

பெரியதொரு தேரை மிகச் சிறிய அச்சாணி காப்பதைப் போல, சிறியவர் என்று ஒருவரை அவரது உருவத்தைப் பார்த்துக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது என்பதும் அறிவியல் பார்வை. இப்படி வள்ளுவரிடம் எத்தனையோ சான்றுகளை நாம் பார்க்கிறோம்.

தமிழ் இலக்கியத்தினுள் செயல்படும் அறிவியல் பார்வைக்கு மேலும் சில சான்றுகளை இங்குத் தரலாம். சங்க காலத்தை அடுத்து தமிழகத்தில் வறுமை பேரளவில் நிலவியபோது, சாத்தனார் அமுத சுரபியைப் படைத்தார். எடுக்க எடுக்கக் குறையாமல் உணவை இந்தப் பாத்திரம் தரும் என்பது நடைமுறைக்குப் பொருந்தாத கற்பனை. அன்று நிலவிய கடுமையான வறுமைத் துயரத்தைச் செல்வர்களால் தீர்க்க இயலாது. வறுமை தீர்க்கும் மன்னர்களும் இல்லை. இந்நிலையில் தெய்வம் தலையிட்டால் அன்றி வறுமைத் துயரம் தீராது. அதுவும் எவ்வளவு எடுத்தாலும் குறைவில்லாது உணவைச் சுரக்கும் ஒரு பாத்திரம் கிடைத்தால் ஒழிய வறுமையைத் தீர்க்க இயலாது. இத்தகைய சூழலில்தான் சாத்தனாரிடம் கற்பனைப்

பாத்திரம் தோன்றியது. பகுத்தறிவை மட்டும் ஆதாரமாக வைத்து இலக்கியத்தை விளக்க முடியாது என்பதையும் இங்கு நாம் புரிந்து கொள்ள முடியும். சாத்தனாரின் கற்பனையை அவர்காலச் சூழல், மற்றும் தேவை அடிப்படையில் புரிந்து கொள்வது அறிவியல் பார்வை.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வழக்குரை கேட்டுப் பாண்டியன் இறக்கிறான். கோப்பெருந்தேவியும் உடன் சாகிறாள். மதுரை நகரம் பற்றி எரிகிறது. இப்படித்தான் தமிழக வரலாற்றில் நேர்ந்தது என்பதற்கு நமக்கு ஆதாரம் இல்லை. மதுரைத் தெருவில் சிலம்போடு திரிந்த கண்ணகி கதறியதைப் போல சான்றோர்களும் தெய்வங்களும் கற்புடைய பெண்களும் வாழ்வதற்கான நீதி நிலவாத ஒரு அரசு அழியத்தான் வேண்டும்.

இளங்கோ இப்படித்தான் நீதி வகுக்கிறார். இது கவிஞரின் நீதி. இப்படித் தெ.பொ.மீ விளக்கினார். இத்தகைய புரிதலை அறிவியல் பார்வை என்று நாம் சரியாகவே சொல்ல முடியும்.

இலக்கியம் முதற்கொண்டு சாதி, சமயம், மெய்யியல், வாழ்வியல் நெருக்கடி முதலிய எல்லாவற்றையும் அவற்றுக்கான வரலாறு, பொருளியல் போன்ற சூழலில் வைத்துப் பார்ப்பதோடு அந்தச் சூழலுக்கு எதிர்வினை தரும் மனிதருக்குள் செயல்படும் மரபு முதலிய ஆற்றல்களையும் புரிந்து கொள்வதை அறிவியல் பார்வை என்று நாம் வகுத்துச் சொல்ல முடியும். மார்க்சீயம் முதலிய ஆய்வு முறைகளும் இந்த அறிவியல் பார்வையை உட்கொண்டது என்பதோடு வேறுசில பார்வைகளையும் உள்ளடக்கியதாக அறிவியல் ஆய்வுமுறை செயல்படமுடியும்.

சிலப்பதிகாரம் முதலிய காவியங்களை மட்டுமல்லாமல், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய நெடுங்காலத் தமிழ் இலக்கியத்தை இத்தகைய அறிவியல் பார்வை கொண்டு நம்மால் புரிந்து கொள்ள இயலும். நம் காலத் தேவைகளை முன் வைத்துத்தான் இப்படி தமிழ் இலக்கியத்தை மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் வரலாற்றையும், சமயங்கள் முதலியவற்றையும் நாம் பொருள் படுத்துகிறோம்.

சமத்துவமும் சமதர்மமும் இன்று நமக்கு இன்றியமையாத

வாழ்வியல் அறங்கள். தமிழ் இலக்கியம், தமிழ் மக்களின் வரலாறு பற்றிய ஆய்வுகளின் வழியே இந்த அறஉணர்வை நமக்குள் செரித்துக் கொள்கிறோம். சங்கச் சான்றோர்கள், வள்ளுவர், இளங்கோ முதலியவர்களுக்குள்ளும் திருமூலர் முதலிய சித்தர்களுக் குள்ளும் செயல்பட்டது இந்தப் பேருணர்வு. பக்தி இலக்கியத்தினுள் மட்டுமல்லாமல், பாரதியார், பாரதிதாசன், பெரியார் முதலியவர்களி னுள்ளும் இந்த அற உணர்வின் ஆட்சியை நம்மால் அறிந்து கொள்ள இயலும். இலக்கியம் குறித்த திறனாய்வென்பதும், இலக்கியத்தினுள் செயல்படும் இந்தப் பேருணர்வை நமக்குள்ளும், நம் காலச் சூழலிலிருந்தும் செரித்துக் கொள்வதற்காகத் தான் அன்றியும் அற உணர்விலிருந்து அழகியல் உணர்வை, கலை இரசனையை நாம் பிரித்துப்பார்க்க வேண்டும் என்பதும் இல்லை. நம்மைப் பொருத்தவரை தமிழ் இலக்கியத்தையும், தமிழ் வரலாற்றையும் நமக்குள் வைத்து வாசிக்கிறோம்.

எங்கே, எந்த வரலாற்றுச் சூழலில் யாருடைய ஊடுருவலோடு, யாருடைய ஆதிக்கத்திற்கு நம்மை நாமே விட்டுக் கொடுத்தோம். மீண்டும் இன்றைய வரலாற்றுச் சூழலில் நம்மை நாமே எப்படி எல்லாம் உயிர்ப்பித்துக் கொள்ளப் போகிறோம், எவ்வாறு தமிழ் வரலாற்றை நமக்குள் தக்க வைத்துக் கொள்ளப்போகிறோம் என்றெல்லாம் நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

இலக்கிய ஆய்வு என்று தொடங்கினால் இப்படி வரலாற்றி னுள்ளும், பொருளியல், சமயம், மெய்யியல் முதலியவற்றினுள்ளும் சென்றால் ஒழிய இலக்கிய ஆய்வென்பது தன்னளவில் முற்றுப் பெறுவதில்லை. இத்தகைய உணர்வை தமிழ் இலக்கிய மாணவர்களுக்குள் தூண்டும் நோக்கில்தான் இந்தத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் அமைகின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்குள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலரின் தூண்டுதலோடு இக்கட்டுரைகள் எழுதப்பட்டன என்ற போதிலும், எல்லாக் கட்டுரைகளின் உள்ளடக்கம் என்னவென்பதை நான் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. தமிழின், தமிழனின் மீட்சிதான் இந்த உள்ளடக்கம்.

தமிழ்த் தேசியம் என்று இந்த உணர்வைக் குறிப்பிடலாம். தமிழ் இலக்கியத்தையும், தமிழ் மக்களின் வரலாற்றையும் ஆழ்ந்து

கற்கும் ஒரு மாணவன் இந்த உணர்வை இயல்பாகவே பெற முடியும். கடந்த ஒரு நூற்றாண்டுக்கால அளவிலான தமிழியல் ஆய்வுகள் இந்த உணர்வை நமக்குள் வலுப்படுத்தி உள்ளன. அரசியல் வடிவில் வெளிப்படும் இந்த உணர்வு, அதன் ஆழத்தில் சமத்துவம், சமதர்மம் ஆகிய பேரறங்களை உள்ளடக்கிய தமிழ் மெய்யியலை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்தான் நமக்கு ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துவது இந்த அறிவியலின் ஒரு கூறு. தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான நிலமும், நீரும், காடுகளும், கடலும் அந்நியர் கைப்படக்கூடாது என்பதோடு இவை மாசுபட்டு அழியக்கூடாது என்பதும் இன்னொரு கூறு. தேசிய இன உரிமைகளை ஒப்புக் கொள்கிற ஒரு சரியான கூட்டாட்சி இந்தியாவில் அமைய வேண்டும் என்பது இன்னும் ஒரு கூறு. தமிழ் என்பதை, தமிழ் உணர்வு என்பதை, தமிழ் இலக்கியம் என்பதை, தமிழர் வரலாறு என்பதை இவ்வாறெல்லாம் நாம் கற்கிறோம், பொருள் படுத்துகிறோம், ஆய்வு செய்கிறோம், செரித்துக் கொள்கிறோம்.

தமிழ் இலக்கியத்தை, தமிழர் வரலாற்றை அவற்றின் உள்ளியக்கம், உள் ஆற்றல் முதலியவற்றை நான் உணர்ந்து கொள்ளும் முறையில் எனக்குத் தமிழ் கற்பித்த எத்தனையோ, தமிழ் அறிஞர்களை நான் இங்கு நினைவு கொள்கிறேன். மார்க்ஸியத்தின் வழியே எனக்குள் தமிழ்த் தேசிய உணர்வை மேம்படுத்தியவர் என்று தோழர் எஸ்.என். நாகராசன் அவர்களைக் குறிப்பிடமுடியும்,

கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழகச் சூழலிலிருந்து எனக்குள் தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்தவர்கள், வலுப்படுத்திய வர்கள் என்று பலரைக் குறிப்பிடலாம். இந்தப் பட்டியலில் பெரியார், பாரதிதாசன், அறிஞர் அண்ணா முதலியவர்களுக்கும் இடம் உண்டு. தொடரும் இந்தப்பட்டியலில் கடந்த இருபதாண்டுக்கால அளவில் சொல்வதென்றால் பெரியவர் தோழர் ஆனைமுத்து, தோழர் பூ.அர.குப்புசாமி, தோழர் பழ.நெடுமாறன் முதலியவர்களை நான் இங்கு மரியாதையோடு குறிப்பிட வேண்டும். தமிழ்த் தேசியத் திறனாய்வாளர் என என்னைக் குறிப்பிட்ட பேராசிரியர்

க.ப.அறவாணன் அவர்களை இப்பொழுது நினைத்துக் கொள்கிறேன். பெயர் குறிப்பிடத் தொடங்கினால் விடுபட்டவர்கள் தொகை அதிகரிக்கும் போலத் தோன்றுகிறது. பெரியவர்கள், நண்பர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூலை வழக்கம் போலவே என் வேண்டுகோளை அன்புடன் ஏற்று உடனடியாக வெளியிடுவதற்கு இசைந்த என் அருமை நண்பரும் 'காவ்யா' பதிப்பகத்தின் உரிமையாளரும் ஆகிய பேரா. திரு. சண்முகசுந்தரம் அவர்களுக்கு என் மனம் நிறைந்த நன்றிகள் உரியவை. இந்தக் கட்டுரைகளை ஒளி அச்சு செய்வதற்கும் பிழைதிருத்தம் பார்ப்பதிலும் பேருதவியாக இருந்த நண்பர்களுக்கும் என் நன்றிகள் உரியவை.

தங்கள்

ஞானி

1. வாழ்வியலும் அழகியலும்

கலை, இலக்கியக் களங்களில் பயன்படுத்துகிற மார்க்சிய அழகியல் என்னும் கோட்பாட்டை, மனிதனின் வாழ்வியலுக்கும் பொருத்திப் பார்க்க முடியுமென்று தோன்றுகிறது. இவ்வகையில் மார்க்சிய அழகியல் மேலும் விரிவும் ஆழமும் பெறுவதும் சாத்தியம். அழகியல் என்பதை இலக்கியத்தின் வடிவம், உத்தி ஆகியவற்றோடு பொருத்திப் பார்ப்பதைக் காட்டிலும் இலக்கியத்தின் உள்ளியக்கத் திற்கு பொருத்திப் பார்க்கிற ஆய்வை "மார்க்சிய அழகியல்" என்ற எனது கட்டுரைத் தொகுப்பில் செய்திருக்கிறேன். அப்படிச் செய்யும் பொழுதே மார்க்சிய நோக்கிலான மனிதனின் வாழ்வியலோடும் அங்கங்கே சில இடங்களில் பொருத்திப் பார்த்திருக்கிறேன் என்பது உண்மை என்றாலும் அப்பொழுதெல்லாம் என் மனத்தினுள் ஏதோ ஒரு வகைப்பட்ட நெருடல் இருந்தது. இந்த நெருடல் பற்றித் தொடர்ந்து சிந்தித்ததன் விளைவாகவே "மார்க்சிய அழகியல்" என்பதே முதன்மையாக மனிதனைப் பற்றிய அழகியல் என்று விரித்துரைக்க முடியுமென்று தோன்றியது.

"மார்க்சிய அழகியல்" பற்றிப் பலகாலமாகவே ஆய்வில் ஈடுபட்டவர்கள் இந்த உண்மைபற்றிப் பேசாமல் இருந்திருக்க முடியாது. அப்படி என்ன பேசினார்கள் என்று இப்பொழுது என்னால் சொல்ல இயலவில்லை. என்னைப் பொருத்தவரை "மார்க்சிய அழகியலை" இப்படி மனித வாழ்வியலோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதன் மூலமே கலை இலக்கியத்தினுள் நாம் காணும் அழகியலும் முழுமை பெறுமென்று நம்புகிறேன். இதைப்பற்றியதே இக்கட்டுரை.

விலங்கிலிருந்து மனிதன் எவ்வாறு தோன்றினான், இன்று வரை எவ்வாறெல்லாம் வளர்ந்து வருகிறான் என்பது பற்றிய விரிவான பார்வையை மார்க்சியம்தான் தருகிறது என்று அழுத்தமாகச் சொல்லமுடியும். இத்தகையதொரு விரிவான வரலாற்றுப் பார்வையின் வழியே சமதர்மம் என்ற பெரும் காட்சியை மார்க்சியம் முன்வைக்கிறது. இயற்கையோடும், சமூகத்தோடும், தன்னோடும், இடைக்காலத்தில் ஏற்பட்ட

அந்நியமாதலிலிருந்து விடுபட்டு மீண்டும் ஒருங்கிணைகிற மனித வாழ்வு பற்றிய பெருங் காட்சி மார்க்சியத்திற்குரியது. இத்தகைய பெருங்காட்சி சில சமயங்களினுள்ளும் இடம் பெற்றிருக்கிறது என்று சமயவாதிகளில் சிலர் கூறுவதும் சாத்தியம்தான்.

சமயத்திற்கும், மார்க்சியத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் காண்பதற்கான தேவை இருந்த போதிலும், இப்பொழுதைக்கு இந்த ஆய்வைத் தவிர்த்துக் கொள்கிறேன். சமயத்தினுள் இடம் பெறுகிற பெருங்காட்சியும் கவர்ச்சிகரமானது தான் என்பதில் ஐயமில்லை. கடவுளோடு இணைத்துக் காண்கிற அந்தப் பெருங்காட்சி கற்பனையானதுதான் என்றோ மார்க்சியர் காணும் பெருங்காட்சி உடனடியான யதார்த்தம் என்றோ நான் இங்கு விவாதிப்பதில் பயனில்லை.

மார்க்சியத்தின் மையக்கூறு என வர்க்கப் போராட்டம் என்ற கருத்தைத்தான் குறிப்பிடமுடியும். வர்க்கப் போராட்டத்தின் மூலமே மனிதன் வரலாற்றில் வளர்ந்து வந்திருக்கிறான். போராட்டங்கள் மனிதனைப் புதிய ஆற்றல், புதிய ஒளி பெற வைத்திருக்கிறது. சில சமயங்களில் போராட்டத்தில் வெற்றி கிடைக்காத சந்தர்ப்பங்களில் கூட மனிதன் வரலாற்றுச் சூழலில் உள்ள நெருக்கடிகள், தடைகள் பற்றிய புதிய பார்வைகளைப் பெற்றான் என்பதையும் உள்ளடக்கிக் கொண்டுதான் நான் இப்படிச் சொல்லுகிறேன். இந்த வரலாற்று வளர்ச்சிப் போக்கினுள்ளும் சில கடுமையான சிக்கல்கள் உண்டு என்பதையும் நான் மறுக்கவில்லை. கடவுளை மனிதன் கண்டு பிடித்தான்; அதன் மூலம் புதிய பார்வையைப் பெற்றான். மேலும் சில அனுபவங்கள் மூலம் கடவுளைக் கேள்விக்குள்ளாக்கினான். கடவுள் என்பதை வரலாற்றுச் சூழலில் தனக்குத்தேவை என்று கற்பித்துக்கொண்ட ஒரு கருத்தாக்கம் என்று புரிந்துகொண்டவரை மனிதன் தனக்குள்ளும், வெளியிலும் தேடுகிறான். இவ்வாறெல்லாம் செய்வதன்மூலம் தனக்குள்ளும் கடவுள்தன்மையை, படைப்பியக்கத்தை மனிதன் காண்கிறான்.

தன் அகத்தையும், புறத்தையும் – புற உலகத்தையும் மாற்றுகிற படைப்பியக்கத்தின் வசப்படவும் செய்கிறான் மனிதன்.

வரலாற்றின் மையத்தில் தன்னை நிறுத்திக் காண்பவனாக மனிதன் மாறி இருக்கிறான். இப்பொழுது மன்னர்கள் இவனுக்குத் தேவையில்லை. ஆதிக்கம் எந்த வகையிலும் இவனுக்குத் தேவையில்லை. ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமூகம் இயங்க முடியும். இயற்கையை நாசம் செய்வதன் மூலம் தான் தன்னை வாழ்வித்துக் கொள்ள இயலும் என்ற நிலை இவனுக்கு இல்லை. இயற்கை யோடும், உயிர் வகைகளோடும் தன் நேசத்தை இவன் வளர்த்துக் கொள்ள இயலும். அடக்கு முறையோ, ஒழுங்கு முறையோ இல்லாமல் மனிதச் சமூகம் வாழ முடியும். இவ்வகையில் பேரன்போடு இவன் வாழமுடியும். அன்பும் இசையும் இவனுக்குள் பொங்க முடியும்.

பரிணாமம் என்ற முறையில் இவன் பல இலட்சம் ஆண்டுகள் வளர்ந்து வந்தவன். இப்படி ஒரு மனித உயிரைத் தோற்றுவித்தாக வேண்டும் என்ற கட்டாயமோ, நிர்ப்பந்தமோ இயற்கைக்கு இருந்ததாக நம்மால் சொல்ல இயலவில்லை. ஓர் உயிரியிலிருந்து இன்னொரு உயிரி தோன்றியதைத் தற்செயல் என்றே வைத்துக் கொண்டாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது பரிணாம கதியில் மனிதன் அடைந்த வளர்ச்சியை மறுப்பதற்கில்லை. உயிர்களின் தோற்றத்திற்கு முன்பும் பரிணாமம் என்ற இந்த இயக்கத்தை நாம் பார்க்க முடியும்.

எத்தனை காலம், இடம் ஆகியவற்றில் இந்த இயக்கத்தை எத்தனை தொலைவுக்கு முன் நகர்த்திப் பார்க்க முடியும் என்று சிந்திப்பதிலும் நமக்குச் சிரமங்கள் இருக்கக் கூடும். இப்படிச் சிந்திக்கும் பொழுது ஓர் உணர்வை நாம் பெறமுடியும். பிரபஞ்சத்தின் மாபெரும் இயக்கத்தோடு நாம் இன்றியமையாத உறவுடையவர்களாக இருக்கிறோம். பிரபஞ்சத்திற்குள் நாம் இருப்பதைப் போலவே நமக்குள்ளும் பிரபஞ்சம் இருக்கிறது. பிரபஞ்சத்தின் மாபெரும் இயக்கத்திற்குள் நாமும் இருக்கிறோம். பிரபஞ்சத்தின் உயிரியக்கம், படைப்பியக்கம் நமக்குள்ளும் இருக்கிறது. இயக்கத்தினுள் இயக்கமாகவும் நாம் இருக்கிறோம்.

பகவத் கீதையில் கண்ணன் ஒரு கட்டத்தில் விசயனுக்கு தன் விசுவரூபம் காட்டுகிறான். அண்டங்களையும், உலகங்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாபெரும் காட்சி இந்த

விசுவரூபம். இதைக் காணும் பொழுதே வியப்புணர்வில் ஆழ்ந்து விடுகிற விசயன் கண்ணனின் விசுவரூபத்திற்குள் தன்னையும் காண்கிறான். குருச்சேத்திரத்தில் தேரில் அமர்ந்திருக்கிற கண்ணன், அவனுக்கு முன் நின்று கொண்டிருக்கிற விசயன்; இந்தக் காட்சியையும் விசயன் காண்கிறான், தன்னை இழந்துவிடுகிறான். விசுவரூப தரிசனத்துள் தான் கரைந்து விடுகிறான். இதுவரையில் இவனுக்கு இருந்த ஐயம், அச்சம் முதலியவை இனி இவனுக்கு இல்லை.

தன்னால் இனி எதையும் செய்ய முடியும். கண்ணன் கூறுகிற அறத்தை இவனால் செயல்படுத்த முடியும். பாரதப் போரின் நியாய, அநியாயங்கள் பற்றி இப்பொழுது நாம் பேசுவதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கண்ணன் விசயனுக்கு அவனைப் பற்றிய உண்மையையும் உணர்த்துகிறான். அவன் தனியனில்லை. மாபெரும் பிரபஞ்ச இயக்கத்தினுள் அவன் இருக்கிறான். தான் சுற்றப்போகிறான். அறம்தான் இப்பொழுதுஇவனுக்கு ஒரே இலக்கு. போரிடுவதன் மூலம் அறத்தை நிலைநிறுத்த வேண்டும்.

பகவத்கீதையில் சொல்லப்படும் இந்த விசுவரூப தரிசனத்தை சமய வகைப்பட்ட ஒரு பெருங்காட்சி என்று நாம் சொல்லிவிட இயலும். சமயச் சொற்பொழிவு நடத்தும் அறிஞர்கள் சாதாரண மனிதனுக்கும் இத்தகைய தரிசனம் சாத்தியம்தான் என்று சொல்வார்கள் என்று தோன்றவில்லை. பகவத் கீதையில் மனிதனின் ஒரு பேரனுபவம் பதிந்திருக்கிறது என்பதை மார்க்சியராகிய நம்மால் உறுதியாகச் சொல்லமுடியும். மாபெரும் பிரபஞ்ச இயக்கத்தினுள் நாம் இருக்கிறோம். இம்முறையில் பிரபஞ்சத்தில் உள்ள சூரியன், சந்திரன், விண்மீன்கள் என்று கோடிக்கணக்கான அண்டங்களோடும் நாம் உறவு கொண்டிருக்கிறோம். இந்த உறவை நம்மால் எந்தளவுக்கு உணரமுடியும் என்பதும் ஒரு கேள்வி. இருந்த போதிலும் இந்த உறவை நாம் மறுப்பதற்கில்லை. பிரபஞ்சம் / உலக இயக்கத்தினுள் நாம் இருக்கிறோம். உலக இயக்கத்தினுள்ளும் இயற்கை மற்றும் வரலாற்று இயக்கத்தினுள் நாம் இருக்கிறோம். இயற்கை, வரலாறு, சமூகம் இவற்றினுள் நாம் இயங்குவதைக்

கூடியவரை குறைந்தளவிலோ அதிக அளவிலோ நாம் உணரமுடியும். இத்தகைய புரிதலை நமக்கு ஏற்படுத்துவதில் மார்க்சியத்தின் ஆழமான பார்வையை நாம் மறுப்பதற்கில்லை. வரலாற்று வழியே வந்தவன் மனிதன். வரலாறென்னும் பேரியக்கத்தைத் தனக்குள் காண்பவன் மனிதன். இத்தகைய பார்வை அற்புதமானது என்பதை நாம் இங்கு விவரிக்க வேண்டியிதில்லை.

பிரபஞ்ச இயக்கத்தினுள் அல்லது வரலாற்று இயக்கத்தினுள் நாம் இருக்கிறோம் என்ற புரிதல் குறித்து மேலும் ஒன்றை இங்கு சொல்லாம். நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? என் இறுதி இலக்கு என்ன? என்ற வகையிலான கேள்விகள் சமயச் சார்பானவை என்று மட்டுமே பலர் கூறி வருகின்றனர். நான்யார் என்று கேட்டு, நான் பிரம்மம் என்றோ, நான் ஆன்மா என்றோ, தொடங்கிச் சமயவாதிகள் சில, பல விளக்கங்களைத் தருகிறார்கள். நான் பிரம்மன் என்று சொல்பவர்கள் நானும் நீயும் பிரம்மம் என்றால் நமக்கு எந்த வகையிலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வருவதில்லை.

கடவுள்தான் நம்மைப் படைத்தார் – நாமனைவரும் கடவுளின் குழந்தைகள் என்று சொல்பவரும், நாம் அனைவரும் சகோதரர்கள் என்றால் இந்த உலகம் நம் அனைவருக்கும் பொதுவானது என்ற முடிவுக்கு வருவதில்லை. விவேகானந்தர், பாரதியார் போன்றவர்கள் சமதர்மம் என்ற முடிவுக்கு வந்தவர்கள். இவர்களையே உண்மையான சமயவாதிகள் என்று நாம் சொல்ல முடியும். மற்றவர்கள் தனிவுடமை, சாதி முதலியவற்றை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு வாழ்கிறார்கள். இவர்களால் உலகம் நலம் பெறமுடியாது.

நான் யார்? என்று ஒரு மார்க்சியனும் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள இயலும். இந்தக் கேள்வியை நானும் கேட்டுக் கொள்கிறேன். நான் யார் என்ற கேள்விக்கு விடை தேடும் பொழுது நான் பிறந்து வளர்ந்த கிராமம், என் பெற்றோர், என் ஆசிரியர்கள், நான் கற்ற பலவகையான நூல்கள் என்று தொடங்கி எத்தனையோ விவரங்கள் என் நினைவுக்கு வருகின்றன. இவை

எல்லாம் என்னை உருவாக்கியிருக்கின்றன. இன்னும் தேடிச் செல்ல வேண்டும். எனது மொழி, நாடு, சமூகம், வரலாறு என்று இன்னும் எனக்குள் தேட வேண்டும். என் ஆக்கத்தினுள் இவற்றின் கூறுகள் ஏராளமாக இருக்கின்றன. எனக்கு இப்பொழுது வயது 68 என்ற போதிலும் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றின் ஆக்கம் எனக்குள் இருக்கிறது.

என்னைப் படைத்ததில் இயற்கைகும் உயிரினங்களுக்கும் பங்குண்டு. எனக்குள் இருக்கிற அறிவு, கலை, பண்பாடு முதலியவற்றின் மூலங்கள் என்று நான் எவ்வளவோ சொல்ல முடியும். எனக்குள் வள்ளுவர், நாயன்மார், உழவர்கள் என்று எத்தனையோ பேர் இருக்கின்றனர். எனக்குள் ஆதிவாசியும் உண்டு, இயேசு புத்தர் முதலியவர்களையும் எனக்குள் எங்காவது காண முடியும். வரலாற்றுக்குள் நான் இருக்கிறேன். பிரபஞ்சத்தோடு நான் இருக்கிறேன். என்க்கு வயது 68 அல்ல; என் ஆளுமை என்பது மிகவும் விரிவுடையது.

ஒரு மார்க்சியன் இன்னும் பார்க்க முடியும். வரலாற்று முறையில் காலங்காலமாக உருவான பேரறிவில் நான் திரட்டிக் கொண்டது 0.0001% என்றுதான் சொல்லமுடியும். இதைப் போலத்தான் என்னுடைய பண்பு, ஆற்றல் முதலியவை. வரலாறும் சமூகமும் என்னை வாழ்விக்கின்றன. இவற்றிலிருந்து நான் பெற்றுக் கொண்டவை மிக அதிகம். நான் திருப்பித் தருவது மிகவும் குறைவு. நான் சேகரித்த அறிவை நான் சமூகத்திற்குத் திருப்பித்தர வேண்டும். இந்த அறிவு எனக்குள் பெருமையாகவோ ஆணவமாகவோ மாற முடியாது.

தான் என்று நான் ஆணவம் கொள்வதில் அர்த்தம் இல்லை. எனக்கு வரும் ஊதியம் என்பது என் உழைப்பினால் மட்டும் சேர்ந்தது அல்ல. யார் யாருக்கோ போய்ச் சேர வேண்டியவை எனக்கு வந்து சேர்ந்துள்ளன. பிறரிடமிருந்து பறித்து எனக்கு இதைத் தந்தவருடைய நோக்கம் எனக்குப் புரிகிறது. இவர்களுக்கு நான் சேவகம் செய்ய முடியாது. எனக்கு வந்து சேர்ந்ததை நான் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தச் சமூகத்தோடு என்னை நான் கரைத்துக் கொள்ள வேண்டும். நான்

யார் என்ற கேள்வி இப்படி எல்லாம் என்னைச் சிந்திக்க வைக்கிறது. ஒரு மார்க்சியன் இப்படிச் சிந்திக்கமுடியும். என் ஆக்கத்தினுள் வந்த ஒவ்வொன்றையும் மறுத்து, மறுத்து இறுதியில் நானே பிரம்மன் என்று கூறுவது வரலாறு, சமூகம் பற்றிய அறிவுடையவர்களுக்குப் பொருந்தாது; சமய வாதிகள் என்பவர்கள் இப்படித்தான் சமூகம், வரலாறு பற்றிய புரிதலை விலக்கி இறுதியில் கடவுளைக் காண்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்களுடைய நான் என்பதுதான், இவர்களுக்குக் கடவுளாக இறுதியில் காட்சி தருகிறது. இவர்களுடைய கடவுள் உண்மையில் கடவுளாகவும் இல்லை. இவர்கள் தமக்குள்ளேயே சுருங்கி விட்டவர்கள்.

இப்பொழுது நான் மார்க்சிய அழகியல் என்பதனுள் அடங்குகிற பலவற்றையும் இப்படித் தொகுத்துக் கூறலாம். வரலற்றோடும், சமூகத்தோடும், உயிர்களோடும் நான் இணைந்திருக்கிறேன். வர்க்கப் போராட்டம் என்பது எனக்குள்ளும் நடைபெறுகிறது. வரலாற்றின் முரணியக்கத்தினுள் நான் இருக்கிறேன். வரலாற்று இயக்கத்தோடு நான் இருக்கிறேன். எனக்குள் நன்மையும், தீமையும் உண்டு. எனக்குள்ளும் நான் போராடுகிறேன். எல்லாவற்றையும் நான் என்னை வைத்தும் பொருள்படுத்துகிறேன். தமிழ் என்னைத் தாங்குகிறது. என்னை மனிதன் என்று எத்தனையோ வகைகளில் உணர்கிறேன். நான் மனிதன்தானா என்றும் என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். புறத்தோடு நான் போராடுகிறேன். அகத்தினுள் என்னை நானே படைத்துக் கொள்கிறேன். எனக்குள் தேடிச்செல்லும்போது மாபெரும் வரலாற்றின் நீரோட்டத்தைக் காண்கிறேன். அங்கிருந்தும் படைக்கிறேன். எனக்கு யாரும் அந்நியர்கள் இல்லை. என் அனுபவங்களைப் புதிய, புதிய சொற்களில், மொழியில் சொல்கிறேன். என் அனுபவங்களைப் பல்வேறு முரண்பட்ட வடிவங்களிலும் பொருள் படுத்துகிறேன். ஒன்றையழித்து இன்னொன்றைப் படைக்கிறேன்.

இப்படித் தொடர்ந்து நான் எவ்வளவோ சொல்ல முடியும். ஒரு அறிஞனைப் போலப் பேசமுடியும். எனக்குள் சேகரித்த எல்லாவற்றையும் அப்புறம்விட்டு விடுகிறேன். நான் அதிகாரம்

செய்யவில்லை. அதிகாரத்திற்குநான் கட்டுப்படவில்லை. எவற்றையாவது உருவாக்கக் கொஞ்சம் அதிகாரம் தேவைப்படுகிறது. அப்புறம் அதையும் விட்டு விடுகிறேன். காற்றைப் போல, மலர்களைப் போல, மண்ணைப் போல நான் இருக்கிறேன். எனக்குள் பறவைகள் பாடுகின்றன. இசையில் நான் கலக்கிறேன். என்னை எப்பொழுதும் திறந்து வைத்திருக்கிறேன். எல்லாவற்றுக்கும் நான் காது கொடுப்பேன். எனக்கு அழிவில்லை. அழிவைநான் ஒரு ஆக்கமாகக் கருதுகிறேன்.

மனிதர்கள் அவர் அவர்களுக்குள்ள சூழலில் கட்டுப்பட்டுக் கிடக்கின்றனர். இதன் காரணமாகவே போட்டி, பொறாமை, வம்பு வழக்குகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் குற்றவாளிகள் இல்லை. இவர்களைப் புரிந்து கொள்ள முடியும். எல்லாவகை இயக்கத்தி னுள்ளும் அழகுண்டு, அர்த்தம் உண்டு. வரலாற்றின் வழியே நான் அனைத்தையும் பார்க்கிறேன், மதிப்பிடுகிறேன். வாழ்வின் முன் செல்வதற்கும், செயல்படுவதற்கும் திட்டங்கள் இடுகிறோம். அமைப்புக்களை உருவாக்கி அப்புறம் கலைத்துப் போடுகிறோம். ஒருவகையில் வரலாறென்பது மாபெரும் நாடகம். இவற்றினுள் நாம் ஆடுகிறோம். பாடுகிறோம். மார்க்சியனுடைய அழகியல் இப்படியெல்லாம் இன்னும் விரிவுபெறும்.

குறிப்பு

மார்க்சிய அழகியல் என்ற எனது நூலுக்கு நான் எழுதி இருக்கவேண்டிய ஒரு பின்னுரை.

2. நாவல் — கலை மற்றும் கல்வி

1970 முதல் 1990 வரையிலான சுமார் 20/25 ஆண்டு அளவில் தமிழில் மிகச் சிறந்த நாவலாசிரியர்களின் குறிப்பிடத்தக்க படைப்புகளைப் பற்றி இந்தத் தொகுப்பில் கட்டுரைகள் அடங்கி உள்ளன. 1970க்கு முன்னர் அகிலன், நா. பார்த்தசாரதி, மு.வ. போன்றவர்கள் தரமான பல நாவல்களைத் தந்த போதிலும் இவர்களுக்குப் பிறகு தமிழ் நாவலின் போக்கு முற்றிலும் வேறான தடத்தில் சென்றதை நாம் அறியமுடியும். அகிலன் முதலியவர்களின் நாவல்களில் கனவியல் கூறுகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன.

பின் வந்த நாவல்களில் வாழ்வின் யதார்த்தம் அழுத்தம் பெற்றது. அகிலன் முதலியவர்களின் நாவல்கள் முன்பு நிலவிய காவியப் போக்கின் நீட்சி என்று சொல்லலாம். பின் வந்தவர்களின் நாவல்களில் இந்தப் போக்குக்குப் பெரும்பாலும் இடமில்லை. இங்கு தான் நாவல் என்பது கலை என்று ஆயிற்று. இந்தப் போக்கு 1990 வரைத் தொடர்கிறது என்பதில் ஐயமில்லை. 1980களின் இறுதியிலேயே நாவல் கலையாக்கத்தில் வேறொரு போக்குத் தோன்றியது. பின்–நவீனத்துவக் கூறுகள் நாவலில் புகுந்தன. இந்தக் கூறுகளைக் கொண்ட நாவல்கள் பற்றி இந்தத் தொகுப்பில் நான் எழுதவில்லை. யதார்த்தவாதத்திற்கு அழிவு இல்லை என்பது என் அழுத்தமான கருத்து. நவீனத்துவமோ, பின்–நவீனத்துவமோ கலையாக்கத்திற்குள் இடம்பெற்ற போதிலும் யதார்த்தம் என்பதன் கூறுகளை மேம்படுத்துகின்றனவே அன்றி அழித்துவிடுவதில்லை. யதார்த்தம் என்பதன் கலைக்கூறுகளும் பலதரப்பட்டவை. இவை எல்லாம் தமிழ் நாவல்களை அழகுபடுத்தி உள்ளன.

என்னைப் பொறுத்தவரை கவிதைகள் பற்றியோ, நாவல்கள் பற்றியோ நான் எழுதிய கட்டுரைகளைத் திறனாய்வுக் கட்டுரைகள் என்று நானும் கூட முன்பு கருதினேன். இப்பொழுது மீள நினைத்துப் பார்க்கிற பொழுது படைப்பாளிகளைச் சீர்தூக்கிப் பார்க்கிற நோக்கில் நான் செய்தவை திறனாய்வுகள் அல்ல. அநேகமாக என் கட்டுரைகளில் யாரையும் நான் ஒதுக்கவில்லை,

அவமதிக்கவில்லை.

யாரிடமாவது குறைகள் அதிகம் தென்பட்டால் அவர்களைப் பற்றி நான் எழுதாமல் இருந்திருக்கிறேன். எழுத வேண்டாம் என்று இருந்திருக்கிறேன். எந்த ஒருவருடைய படைப்பிலும் உள்ள மேன்மையான, கற்றுக் கொள்வதற்குரிய கூறுகளிலேயே நான் கவனம் செலுத்தியிருக்கிறேன். அந்தப் படைப்பாளிக்குள் நிகழ்கிற படைப்பியக்கம்தான் என் கவனத்தை ஈர்க்கிறது. படைப்பியக்கம் என்று நாம் கவனம் கொள்கிறபோது குறிப்பிட்ட படைப்பாளியின் வாழ்க்கை விவரங்கள் முதலியவற்றிலிருந்து நாம் விடுபடுவதோடு கலைஞர்கள் என்ற முறையில் எல்லோருக்குள்ளும் பொதுவாக இயக்கம் கொள்கிற படைப்பியக்கத்திற்குள் நாமும் நுழைகிறோம்.

படைப்பாளிக்கும் நமக்கும் பொதுவானதாகிய சமூகம், வரலாறு என்ற இனங்களுக்குள் இயங்குகிறோம். படைப்பாளியும் நாமும் கைகோர்த்துக்கொள்கிறோம். அவரும் நாமும் படைப்பியக்கத்திற்குள் இருக்கிறோம். எந்த அளவிற்கு ஆழ் மனத்திற்குள் செல்ல முடியுமோ அந்தளவுக்குப் படைப்பியக்கம் நமக்குள் தரிசனமாகிறது. இங்கு நாம் மெய்யியல்வாதிகள் ஆகிறோம். இந்த தளத்திற்குள் நாம் நுழைந்தவுடன் மாபெரும் வரலாற்று நீரோட்டத்திற்குள் செல்கிறோம். இப்பொழுது நமக்குள் காலம் இல்லை. வள்ளுவரோடும், இளங்கோவோடும் நாம் இருக்கிறோம். நாயன்மார்கள் முதலியவர்கள் நமக்கு நெருக்கமாகின்றனர். சித்தர்கள் நமக்கு நெருக்கமான வர்கள்.

இங்கெல்லாம் நாம் தமிழர்களாக இருக்கும் பொழுதே உலக மனிதராகிறோம். இப்பொழுது டால்ஸ்டாய் என்றும், ஹோமர் என்றும், சேக்ஸ்பியர் என்றும் பேச முடியும்.

தமிழ் நாவல்கள் பற்றிய என் கட்டுரைகளிலும் இத்தகைய தொரு படைப்பியக்க்ததைத் தேடுகிறேன். வாழ்வியல் பற்றிய பேருண்மைகளைத் திரட்டுகிறேன். இந்தப் பேருண்மைகளை முன் நிறுத்தி நம்மை நாமே பார்த்துக் கொள்ள முடியும். மதிப்பீடு செய்து கொள்ள முடியும். எந்தஒரு நாவலில் வரும் எந்த ஒரு மனிதரோடும்

நாம் உறவு கொள்கிறோம். அந்த மனிதன் நமக்கு அந்நியன் அல்லன். அவன் நமக்குள்ளும் இருக்கிறான். வாழ்க்கைப் பயணத்தில் இத்தகையவர்களை முன்பு நாம் கண்டு கொள்ளாமலிருந்தால் இப்பொழுது கண்டு கொள்கிறோம். மனிதர்களை அவர்களின் குறைகளோடு நாம் ஏற்கிறோம். குறைகள் கடந்தும் அவர்கள் மனிதர்களாக இருப்பதைக் காண்கிறோம். இவ்வகையில் நம்மை நாமே விரிவுபடுத்திக் கொள்கிறோம். தூய்மைப்படுத்திக் கொள்கிறோம். எல்லாவகையிலும் நாவல்-வாசிப்பென்பது ஒரு பொழுதுபோக்கல்ல. நாவல் வாசிப்பு என்பது ஒரு கலை, கல்வி. பொழுதுபோக்கு என்று எழுதப்படும் ஒரு நாவலிலிருந்து கூட நமக்கான இன்னொரு நாவலை நாம் படைத்துக் கொள்ளமுடியும்.

நான் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எந்தஒரு நாவலையும் நான் படித்துமுடித்தவுடன், நாவலில் சொல்லப்படும் கதையை, கதைக்குள் இடம்பெறும் மனிதர்களை முதலில் தொகுத்துக் கொள்கிறேன். கதையை நான் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவும் இதை நான் செய்கிறேன். நாவலைப் படிக்காத வாசகர்களுக்கும் முதலில் கதை தேவைப்படுகிறது. இதன் பிறகு கதைக்குள் இடம்பெறும் சிக்கல்கள், வாழ்க்கை பற்றிய பார்வைகள் என்று உள்ளே செல்கிறேன்.

இங்குதான் நான் அதிக நேரம் தங்குகிறேன். ஒருவேளை ஆசிரியர் குறிப்பிட்ட மனிதர் அல்லது வாழ்க்கையை ஆழ்ந்து பார்க்கவில்லை என்று எனக்குத் தோன்றினால் ஆசிரியரையும் கடந்து நாவலில் இடம்பெறும் மனிதர்களின் வாழ்வுக்குள் நானும் தேடிச் செல்கிறேன். ஆசிரியரைக் கடந்து செல்வதும் இங்குத் தேவையாகிறது. இதுவும் ஒரு உயர்நோக்கில் திறனாய்வாளனுடைய கடமை என்றே நான் உணர்கிறேன். நாவலில் சொல்லப்படும் மனிதர்கள் நாவலாசிரியருக்கும், நமக்கும் பொதுவான மனிதர்கள். நாவலாசிரியரும் நாமும் சமகால வரலாற்றுச் சூழலில் வாழ்கிறோம். நாவலில் இடம்பெறும் மனிதர்கள் நமக்கும் தெரிந்தவர்கள். அந்த மனிதர்கள் நாமாகவும் இருக்கமுடியும். இதன் காரணமாகத்தான் நாவலாசிரியரையும் நாம் கடந்துசெல்ல நேர்கிறது. அதே சமயம் இன்னொன்றையும் நாம்

பார்க்கவேண்டும். நம் பார்வைக்கு அகப்படாத தொலைவில் பயணம் செய்கிற நாவலாசிரியர்களோடு நாமும் உடன் சென்று கற்றுக் கொள்வதற்கும் இடமிருக்கிறது. இத்தகையவர்கள்தாம் ஒரு மொழியின் ஆற்றலை மேம்படுத்துபவர்கள். தமிழில் இத்தகைய நாவலாசிரியர்களை நாம் பெற்றிருப்பது நமக்கு ஒரு பேறு.

வாழ்க்கை, பார்வை, மெய்யயியல் என்பதிலே என் கவனம் குவிந்திருப்பதால் நாவலில் இடம்பெறும் உத்திகள் முதலியவை பற்றி எப்பொழுதும் என் கவனம் செல்வதில்லை. எடுத்துக் கொண்ட கருப்பொருளை விரிவுபடுத்தும் அல்லது ஆழப்படுத்தும் உத்திகள் என் பார்வையில் பட்டபோதிலும், உத்திகள், மொழிநடை என்றெல்லாம் அங்கங்கே தங்கி நான் ஆராய்வதில்லை. மையம் எதுவோ அதிலேயே என் கவனம் குவிகிறது. வாழ்க்கை என்பது எப்பொழுதுமே எனக்கு ஒரு கடுமையான சிக்கல். மனிதர்களைப் புரிந்துகொள்வது எப்பொழுதுமே தேவையாக இருக்கிறது. எந்த ஒரு மனிதனையும் தீயவனென்றோ, பொல்லாதவனென்றோ ஒரு நாவல் ஆசிரியர் கருத முடியாது. தீயவன் என்று நாம் சாதாரணமாகச் சொல்லிவிடும் ஒரு நபருக்குள் நாவலாசிரியர் பயணம் செய்து எந்தச் சூழலில் எதன் காரணமாக அவன் தீயவனானான் என்று கண்டறிந்து சொல்லவேண்டும். மனிதனின் மறுபக்கத்திற்குள் ஆசிரியர் செல்ல வேண்டும். இங்குதான் உளவியல், சமூகவியல் முதலிய அறிவுகள் ஆசிரியருக்குத் தேவைப்படுகின்றன. எந்த ஒரு ஆசிரியனும் தொடக்கத்திலேயே டால்ஸ்டாய் ஆகிவிடுவதில்லை. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளில் விரிவுகளில் ஏறி இறங்கி அடிபட்டு, அல்லல்பட்டு, எல்லாவற்றையும் ஆய்வுக்குட்படுத்தி தன் காயங்களிலிருந்து வெளியேறி விரிந்த பரப்பில் வாழ்வை தரிசனம் எனக் கண்ட முறையில்தான் ஒருவன் டால்ஸ்டாய் ஆக முடியும். அரைகுறையான கதை ஒன்றை எழுதும் ஒருவரை நாம் பொருட் படுத்த வேண்டியதில்லை. தமிழில் இப்படி நிறையப்பேர் எழுதி உள்ளனர். பத்திரிகை தேவை முதலியவை கருதி அவர்கள் எழுதுகிறார்கள். இவர்களைக் காய்வதால் பயனில்லை. வணிக உலகம் மிகவும் பெரியது, வல்லமை வாய்ந்தது. நேரிடையாக இவற்றோடு நாம் போராட முடியாது. வணிகம் நமக்குள்ளும் நுழைந்து நம்மைச் சிதைப்பதையும் நாம் காண்கிறோம். இத்தகைய

சிதைவு நாவலுக்கான கருப்பொருள். வேறு வழியில்லை. நம் காலத்தை, நம்கால நெருக்கடிகளை, நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை நம் படைப்புகளில் நாம் பதிவு செய்தோம். இந்தப் பதிவுகள் வாசகர்களுக்குள் உரத்துப்பேசும். இது நமக்குப் போதும்.

குறிப்பு

தமிழ் நாவல்களில் தேடலும், திரட்டலும் என்ற இதுவரை வெளிவராத என் கட்டுரைத் தொகுப்புக்கு நான் எழுதிய முன்னுரையிலிருந்து ஒரு பகுதி.

●

3. தமிழில் திறனாய்வு இலக்கியம்

1. இலக்கியத்திறனாய்வென்று பேசும் பொழுது, அது இலக்கியத்தை மட்டும் திறனாய்வதாக இருக் முடியாது. அடிப்படையில் வாழ்க்கை என்றும், சமூகம் என்றும் வரலாறென்றும், மெய்யியல் என்றும் நம் திறனாய்வுப் பார்வை இயங்க வேண்டும். இலக்கியத்தின் எந்த வடிவிலும் மனித வாழ்க்கைதான் இடம் பெறுகிறது. வாழ்வின் சிக்கல்கள், தீர்வுகள் பற்றி எல்லாம் இலக்கியம் ஆராய்கிறது. வாழ்வுக்கான அர்த்தம் என்ன என்று இலக்கியம் தேடுகிறது. வாழ்க்கை என்பது சமூகம்/ வரலாற்றுச் சூழலில் நடைபெறுவது. வாழ்வுக்கான அர்த்தங்கள் வரலாறு மற்றும் சமூகச் சூழலில் தான் சிதைகின்றன அல்லது மேம்படுகின்றன.

ஒரு இலக்கியப் படைப்பைத் திறனாய்வாளன் என்பவன், இப்படி விரிவான வரலாறு மற்றும் சமூகச் சூழலில் வைத்து முதலில் புரிந்து கொள்ளமுடியும். தன் பார்வைக்கு அந்தக் குறிப்பிட்ட படைப்பு ஒத்து வருகிறதா என்ற ஆய்விலிருந்து தொடங்கக் கூடாது. இலக்கியப் படைப்பை முதலில் அதன் தளத்தில் வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளும் பொழுதே படைப்பிலுள்ள குறைகளும் நிறைகளும் நமக்குப் புலப்படத் தொடங்கும். குறிப்பிட்ட படைப்பில் இலக்கியத்திற்கான சமூகம் வரலாற்றுத் தொடர்புக்கு அழுத்தம் இல்லாமல் இருக்கலாம். இலக்கியத்தில் உளவியலுக்கு முக்கியமான இடம் உண்டு.

இவற்றோடு குறிப்பிட்ட இலக்கியத்தின் உள்ளடக்கம்/ உருவம் என்பது மரபோடு உறவுடையது. மரபை ஒட்டியோ, மீறியோ ஒரு இலக்கியப் படைப்பு வரலாம். ஆசிரியனுடைய நோக்கத்தை மீறியும் படைப்பு இயங்கக்கூடும். கலை பற்றிய எல்லாம் திறனாய்வாளனுக்கு அக்கறை இருக்க வேண்டும். இதற்காக தகுதி இல்லாதவன் திறனாய்வாளனாகச் சிறக்க முடியாது.

அடிப்படையில் திறனாய்வென்பது இலக்கியத்தை வியந்து

உரைப்பதாக இருக்க முடியாது. குறிப்பிட்ட ஒரு படைப்பை அதன் எல்லைகளை, உள்ளாழங்களைக் கண்டறிவதோடு நிற்க முடியாது. ஒரு மொழி இலக்கியத்திற்கு இந்தக் குறிப்பிட்ட படைப்பு என்ன வழங்குகிறது என்றும் ஆராயவேண்டும். திருக்குறள் முதலிய இலக்கியங்கள் தமிழில் இப்படித்தான் முன்னிலைக்கு வந்தன.

2. தற்காலச் சூழலில்தான் திறனாய்வு பற்றி நாம் விரிவாகப் பேசுகிறோம் என்பது உண்மைதான். திறனாய்வுப் பார்வை இல்லாமல் எந்த ஒரு மொழியும், இலக்கியமும் மாற்றமோ வளர்ச்சியோ பெற முடியாது. தொல்காபபியம் இலக்கியத்திற்கான இலக்கண வரையறைகளை முன் வைக்கிறது என்பது உண்மைதான். தொல்காப்பியரோடு கருத்து வேறுபாடு உடையவர்களும் அக்காலத்தில் இருந்தனர். அப்படியானால் இங்கும் திறனாய்வு செயல்பட்டிருக்கிறது என்றே கருத முடியும்.

சங்க இலக்கிய ஆய்வு என்று செய்யும் பொழுது பல்வேறு கருத்து நிலைகளை நாம் மேற்கொள்கிறோம். சங்க இலக்கியத்தை முற்காலம் என்றும், பிற்காலம் என்றும் பிரிக்கிறோம். சங்க இலக்கியத்திற்குப் பிறகு அற இலக்கியங்கள் தோன்றுகின்றன. இதன் பிறகு காப்பியங்கள் பின்னர் பக்தி இலக்கியம், பிரபந்த இலக்கியங்கள் கூடவே புராணங்கள் அதன் பிறகு தற்கால இலக்கியம் என்று தமிழ் இலக்கியத்தை வரிசைப் படுத்துகிறோம். இடையில் சித்தர் இலக்கியங்கள்.

திறனாய்வுப் பார்வை இல்லாமல் இலக்கியத்தில் மாற்றங்கள் நிகழமுடியாது. இந்த மாற்றங்கள் சமூகம் / வரலாற்றுச் சூழலை ஒட்டி நிகழ்க்கூடியவை. தொல்காப்பியர் முதல், கரு, உரி எனப் பேசுகிறார். அகத்திணைக்கு மட்டுமே உரிப் பொருள் கூறுகிறார். ஆனால் அடுத்து வந்த காலங்களில் ஒரு கட்டத்தில் அறம், இன்னொரு கட்டத்தில் பக்தி முதலியவை உரிப்பொருள்கள் ஆகி உள்ளன. இந்த மாற்றத்திற்கான சமூகப் பின்புலம் பற்றி ஆராய்வது தேவை. இவை குறித்த ஆய்வுகள் இல்லை என்பதனால், இப்படிப் புதுப் புது இலக்கியங்கள் படைத்தவர்களுக்குத் திறனாய்வுப் பார்வை இல்லை என்று

சொல்வதற்கில்லை. இந்தப் பார்வையை இலக்கணக்காரர்கள் தொகுக்கவில்லை. ஏன் என்பது கேள்வி. தம் காலச் சமூக வாழ்க்கை பற்றிய திறனாய்வு இல்லாமல் இளங்கோ சிலப்பதிகாரம் எழுதி இருக்கமுடியாது.

சிலப்பதிகாரமும் முன்னைய இலக்கிய வடிவிலிருந்து மாறுபட்டது. இதைப்போலவே மணிமேகலை முதலிய காப்பியங் களும், பிறவகை இலக்கியங்களும். வால்மீகியின் பார்வைக்கும், கம்பருடைய பார்வைக்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. கம்பருக்குள் ஆற்றல் மிக்க ஒரு திறனாய்வாளன் செயல் பட்டிருக்கிறான் என்பதுதான் உண்மை. சமயம், சமூகம், இலக்கியம் பற்றியெல்லாம் புதிய பார்வைகள் இப்படித்தான் தோன்றுகின்றன. தம் காலச் சமூக நிலவரங்களுக்குப் படைப்பாளி என்பவன் ஒரு எதிர்வினையைப் படைக்கிறான். இப்பொழுது உறுதியாகச் சொல்லலாம், தமிழிலக்கியப் படைப்பாளிகளுக்குத் திறனாய்வுப் பார்வை உண்டு.

3. ஒரு நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழில் புதிய வகையிலான படைப்புக்கள் எழுந்திருக்கின்றன. படைப்பு குறித்த வகை வகையான பார்வைகளும் எழுந்திருக்கின்றன. கருத்து வேறுபாடுகளும் நிறையவே எழுந்துள்ளன. நாவல் என்றால் என்ன? சிறுகதை என்றால் என்ன? கவிதை என்றால் என்ன? என்ற கேள்விகள் தொடர்ந்து கேட்கப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியம் குறித்துத் தமிழ் அறிஞர் பலர் நிறையவே எழுதி உள்ளனர். இவர்களின் பார்வையைப் பண்பாட்டுப் பார்வை என்று கூறலாம். திருக்குறள், சிலப்பதிகாரம் சங்க இலக்கியம் வழியே தெரியவரும் பழந்தமிழர்களின் பண்பாட்டு மேன்மையை இவர்கள் எடுத்துரைக்கின்றனர். இன்றைக்கும் இந்தப் பண்பாடு நமக்குத் தேவை என்பது இவர்களின் நோக்கம்.

தொடக்க காலத்தில் நாவல் முதலியவற்றைப் படைத்த வருக்கும் இத்தகைய பார்வை இருந்தது. நாவல், சிறுகதை முதலிய படைப்புக்கள் தோன்றிய பொழுது சமூகப் பார்வையும் கூடவே அழகியல் பார்வையும் மேம்பட்டிருந்தன. நாவல் மற்றும் சிறுகதையின் வடிவ நேர்த்தி குறித்து இவர்கள் ஆராயந்தனர்.

க.நா.சு., சி.சு. செல்லப்பா, போன்றவர்களை இங்கு குறிப்பிடலாம். கலையின் தரம், நேர்த்தி குறைவுபடக் கூடாது என்பது இவர்களின் அழகியல் பார்வை; சமூகப் பார்வை குறித்து இவர்களுக்கு ஆழமான ஆய்வோ, புரிதலோ இல்லை. சமூகச் சிக்கல்கள் என்பதை இவர்கள் இயல்பாக எடுத்துக் கொண்டனர். காலந்தோறும் இவை தொடரக் கூடியவை என்பது இவர்கள் கருத்து. குடும்பம், தனிவுடைமை, அரசதிகாரம் ஆகியவை இல்லாமல் முடியாது என்றும் இவர்கள் கருதினர்.

தற்காலத் தமிழ் இலக்கியக் களத்திற்குள் யதார்த்தாவாதம் என்ற பார்வையை அழுத்தமாக முன் வைத்தவர் மார்க்சியர். வர்க்கப் போராட்டம், சமூகமாற்றம் என்பதற்கு இவர்கள் அழுத்தம் தந்தனர். அழகியல்வாதிகளோடு இவர்கள் கடுமையாக முரண்பட்டனர். தற்கால இலக்கியத்தை மட்டுமல்லாமல் பழங்கால இலக்கியத்தையும் வர்க்கப் போராட்டம் என்ற பார்வைக்கு உட்படுத்தினர். இலக்கியத்தில் சமூக மாற்றம் என்பதற்கு அழுத்தம் தரும் வகையில் சமகால அரசியல் பற்றியும் இவர்கள் அழுத்தமாகப் பேசினார்கள்.

பாரதியார் மகா கவியா? இல்லையா? என்ற விரிவான ஆய்வுகள் இக்கால அளவில் நடைபெற்றன. கலை இயல் வாதிகளும், மார்க்சியரும் பாரதியை மகா கவிஎன நிறுவினர். பாரதியின் கலையும், பாரதியின் அரசியலும் இங்கு ஒருங்கிணைந்தன.

இதற்கடுத்த காலத்தில் புதுக்கவிதை என்ற புதிய கவிதை முறை தோன்றியது. மரபுக் கவிதைக்காரர்கள் புதுக்கவிதையை நோக்கிக் கடுமையான திறனாய்வுகளை முன் வைத்தனர். கவிதை என்றால் என்ன என்பது பற்றிப் புதிய பார்வைகள் தமிழுக்குக் கிடைத்தன. இந்தப் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்றாலும் தணிந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். தொடக்கத்தில் மரபு முறையை ஆதரித்த மார்க்சியர், பின்னர் புதுக்கவிதை முறையை ஒப்புக்கொள்ள நேர்ந்திருக்கிறது. வானம்பாடிகளிடம் கலையும், சமூக உணர்வும் ஒருங்கிணைந்தன. இவர்களைக் குறித்தும் இன்னும் குறை கூறுவதும் தொடர்கிறது.

தமிழ் இலக்கிய ஆய்வில் ஈடுபட்ட புலமையாளர்கள் மேற்கத்தியத் திறனாய்விலிருந்து பலவற்றை எடுத்துக் கொண்டனர். யதார்த்தம், புனைவியல், படிமம், காப்பிய இலக்கணம், குறியீடு, என்று பலவற்றை எடுத்துக் கொண்டனர். நாவல் பற்றிய ஆய்விலும் பாத்திரப் படைப்பு, மொழிநடை, கரு, உத்தி என்றெல்லாம் எடுத்துக் கொண்டனர்.

1960/70 வரை இவ்வகை போக்குகள் அழுத்தம் பெற்றன. வெங்கட்சாமிநாதன், ப்ரமிள், தமிழவன், கைலாசபதி, தொ.பொ.மீ., மு.வ. என்று பலரை இங்கு குறிப்பிடலாம். இவர்களோடு தமிழ் இலக்கிய ஆய்வில் பகுத்தறிவுப் பார்வையை முன் வைத்தவர்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும். பகுத்தறிவுப் பார்வை உடையவர்களினுள்ளும் இருவகைப் போக்குகள் இருந்தன. பகுத்தறிவு நோக்கில் பக்தி இலக்கியத்தைக் கடுமையாக மறுப்பது ஒரு போக்கு. சங்ககால, இடைக்காலச் சமூகம் குறித்து விரிவாகப் பேசும் பொழுதே நம் காலத்துக்குத் தேவையான அரசியலுக்கு முதன்மை கொடுப்பது இன்னொரு போக்கு. அறிஞர் அண்ணா, கலைஞர் முதலியவர்களை இங்கு குறிப்பிடலாம். தீ பரவட்டும் என்று அறிஞர் அண்ணா கம்பர் காவியத்தைத் தாக்கி எழுதினார். இராமாயணம், இதிகாசம், புராணங்கள் குறித்துப் பெரியார் விரிவாகப் பேசினார்.

4. 1980க்குப் பிறகு தமிழில் புதிய வகையான திறனாய்வுப் பார்வைகள் இடம்பெறுகின்றன. தமிழ் இலக்கியச் சூழலை இவை பெருமளவு மாற்றியுள்ளன. அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம் என்ற முறையில் புதிய பார்வைகள் முன் வைக்கப்படுகின்றன.

சுமார் ஐம்பதாண்டுகளுக்கு மேல் பழங்கால, தற்காலத் தமிழ் இலக்கியம் குறித்து முன்பு முன்வைக்கப்பட்ட பார்வைகள் அனைத்தும் கேள்விக்கு உள்ளாகின்றன. புனைவு, கட்டமைப்பு, கட்டுடைத்தல், பிரதி, தலைகீழாகப் புரட்டுதல், மொழி என்றெல்லாம் இவர்கள் புதுவகை ஆய்வு முறைகளை முன் வைக்கின்றனர்.

இலக்கியம் என்பது ஒரு கட்டமைப்பு/புனைவு, யதார்த்தம்

என ஒன்று இருக்க முடியாது. யதார்த்தம் என்பதும் ஒரு புனைவு ஒரு கட்டமைப்பு. மார்க்ஸியம் என்றோ இன்னொரு தத்துவம் என்றோ ஒற்றைக் குரலில் பேசமுடியாது. இலக்கியவாதி என்பவன் தன்னளவில் முழுமையானவன் இல்லை. இலக்கிய மரபின் தொடர்ச்சியில் இவன் வருகிறான். சமூகம் இவனுக்குள் தன்னை எழுதிக் கொள்கிறது. இவன் தருவது ஒரு பிரதி. வேறு பிரதிகளும் நியாயமாகவே இருக்க உரிமை உடையவை. தமிழ் இலக்கியம் என்பது அதிகளவில் உயர்சாதி இலக்கியம்/உயர்ந்தோர் இலக்கியம். தலித்மக்கள் தமிழ் இலக்கியத்தில் மறுக்கப் பட்டவர்கள் அல்லது மறைக்கப்பட்டவர்கள்.

தமிழ் இலக்கியம் பெண்களைப் போகப் பொருளாகச் சித்தரிக்கிறது. இது உண்மையில்லை; இந்தப் போக்கை மாற்ற வேண்டும். வாழ்வுக்குத்தனி அர்த்தம் இல்லை. அழகு, உண்மை, அறம், உன்னதம், பெண்மை, கற்பு என்பனவெல்லாம் புனைவுகள். இவை உயர்ந்தோர் செய்த புனைவுகள். இவை தலித்துகளையும், பெண்களையும் அடிமைப்படுத்துகின்றன. இலக்கியத்தின் மையத்தில் உயர்ந்தோரின் அதிகாரம் குவிந்துள்ளது. இதை உடைக்க வேண்டும். இத்தகைய பார்வைகளை இவர்கள் முன் வைக்கின்றனர்.

இவ்வகை ஆய்வு முறைகளை நாம் உடனடியாக மறுப்பதற்கில்லை. அக்கறையோடு இவைகுறித்து நாம் பார்க்க வேண்டும். பழந்தமிழ் இலக்கிய ஆய்வுக்கு இவ்வகைக் கருத்தாக் கங்கள் பயன்பட முடியும். ஒருவகையில் இவர்கள் கலகம் செய்கின்றனர். உயர்சாதி மனப்பான்மை என்பதை இவர்கள் நம்மி டமிருந்து கலைக்கின்றனர். வாழ்வுக்கு ஒற்றைப்பார்வை என்றைக்கும் பயன்படாது. எந்த ஒன்றையும் பன்முகப் பரிமாணப் பார்வையில் நாம் பார்க்க வேண்டும். இராமன் கதையை வால்மீ கியோ, கம்பரோ சொல்லும் அதே வடிவில் இன்று நாம் ஏற்பதற்கில்லை. அகலிகை பற்றிக் காலம்தோறும் பார்வைகள் மாறுபட்டு வருகின்றன. தர்மன், துரியோதனன், கர்ணன் குறித்தும் மாறுபட்ட பார்வைகள் எழுந்துள்ளன.

உண்மை என்பது முதலாளிக்கு ஒன்றாகவும்,

தொழிலாளிக்கு இன்னொன்றாகவும் இருக்கமுடியும். குடும்பம், தனிவுடமை, அரசு என்ற நிறுவனங்கள் ஒருகாலத்தில் இல்லை. இவை தோன்றிய பிறகும் காலம்தோறும் மாறுதலோடு வருகின்றன. இவை இன்னொரு காலத்தில் இல்லாமல் போகக்கூடும். தனிவுடமை செய்யும் தீமைகளை நாமும் உணர்கிறோம். ஆதிக்கங்கள் எந்த வகையில் இருந்தாலும் நமக்குத்தீங்கு செய்யும் இவற்றை எல்லாம் நமக்குள்ளிருந்து வெளியேற்ற வேண்டும். மனிதர் தமக்கிடையில் சுதந்திரமாக உறவு கொள்ள வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் தேவையில்லை. சாதியோ, மதமோ மனிதர்களை எதிர்நிலையில் நிறுத்தவேண்டியதில்லை. சிலப்பதிகாரத்தின் கதையை இன்றுவரை மீண்டும், மீண்டும் புதிய வடிவத்தில் எழுதிப்பார்க்கின்றனர். கதைகள் காலந்தோறும் புதிய வடிவங்கள், புதிய அர்த்தங்கள் பெறுகின்றன. மரபென்பதைத் தொடர்ந்து புதிய வகைகளில் பொருள் படுத்துகிறோம். வரலாறென்பதையும் இப்படித்தான் பொருள் படுத்துகிறோம். நம் வாழ்வு, தததுவம், கல்வி, இயற்கை முதலிய அனைத்தையும் புதிய பொருளில் இன்று பார்க்கவேண்டும். ஆதிக்கங்கள் நெடுங்காலமாக நம்மை, நம் அறிவை, பண்பாடு முதலியவற்றைக் கட்டமைத்திருக் கின்றன. நாம் இவற்றிலிருந்து நம்மை மீட்டுக் கொள்ள வேண்டும். இதற்காக புதியவகைத் திறனாய்வுகள் தேவை. இவ்வகையில் நாம் வளர்ந்துள்ளோம்.

5. தமிழில் திறனாய்வு இலக்கியம் என்று பேசும்பொழுது திறனாய்வையும் இலக்கியம் என்று கருதுவதற்கான காரணத்தையும் ஆராய வேண்டும். ஒரு குறிப்பிட்ட படைப்பை ஆய்வுக்குட்படுத்தும் பொழுது படைப்பின் உள்ளாழங்களை நோக்கி நாம் பயணம் செய்கிறோம். வரலாறு, மெய்யியல் படைப்பியக்கம் எனப் பலவற்றையும் ஒரு திறனாய்வாளன் கண்டு சொல்லமுடியும். படைப்பை இவை மேலும் விளக்குகின்றன. இவ்வகையில் திறனாய்வென்பது தனித்துறையாகிறது. குறிப்பிட்ட படைப்புக்கு சேவை செய்வதோடு திறனாய்வு தன்னைச் சுருக்கிக் கொள்ள இயலாது. தமிழ்த்திறனாய்வில் வளர்ச்சி உண்டா என்பது பற்றியும் நமக்குள் ஒரு தெளிவு தேவை.

1980களுக்கு முன்பு இருந்த ஆய்வு முறை/திறனாய்வுப் பார்வை என்பது வேறு. 1980க்கு பிறகு ஏற்பட்ட ஆய்வுமுறைத் திறனாய்வென்பது வேறு. முன்னைய அணுகு முறையைக் காட்டிலும் பின்னைய அணுகுமுறை இலக்கியம் குறித்துப் புதிய விளக்கங்களைத் தருகிறது. திறனாய்வென்பது இலக்கியத்தையும் கடந்து வாழ்வியலுக்குள் செல்லுகிறது. வாழ்வின் முன்னைய ஆதாரங்களைக் கேள்விக்கு உட்படுத்துகிறது. மனித விடுதலைதான் இலக்கியத்திற்கும், திறனாய்வுக்கும் நோக்கமாக இருக்க முடியும். இலக்கியத்திற்கு ரசனை முதலியவை தேவை என்றாலும் மனித விடுதலை நோக்கி இயங்கும் முறையிலேயே இலக்கியமும் மரியாதை பெறும்.

இலக்கியம் என்பதன் உள்ளியக்கம் நமக்கு முக்கியமானது. உள்ளியக்கம் என்பது படைப்பியக்கம் அன்றி வேறு இல்லை. மனிதனை, அவனது வாழ்வை, வரலாற்றைப் புதியதாகப் படைப்பது படைப்பியக்கம்.

இத்தகைய நோக்கில் தமிழில் திறனாய்வு வளர்ச்சி பெற வில்லை என்ற உண்மையை ஒப்புக் கொள்ளலாம். பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் தமிழிலக்கிய ஆய்வும் திறனாய்வும் மேம்படவில்லை. சிற்றிதழோடு உறவுடையவர் தான் திறனாய்வைச் சிறப்பாகச் செய்கிறார்கள். கல்லூரி வட்டாரத்தில் பணிபுரியும் ஒரு சிலர் சிற்றிதழோடு உறவு வைத்துக்கொண்டு இருப்பதனால் தரமான ஆய்வுகளில் ஈடுபடுகிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்பொழுது 1980களுக்குப் பின்பு புதிய திசைகளில் தமிழில் திறனாய்வு வளர்ச்சி பெறுகிறது என்றே கருதமுடியும்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இலக்கிய வாசிப்பில் சமய நோக்கம் மேம்பட்டிருந்தது. புராணவியல் நோக்கும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் தேச விடுதலை, சமூக விடுதலை, மக்களாட்சி நோக்கு முதலியவை வளர்ச்சி பெறுகின்றன. இந்தச் சூழலில்தான் இலக்கியத்தை மக்களோடும் வாழ்வியலோடும், சமூகவியலோடும் தொடர்புபடுத்திப் புரிந்து கொள்ளும் போக்கு ஏற்பட்டது. பகுத்தறிவு முதலிய பார்வைகள் இவ்வகைப்பட்டவை. 1980க்குப்

பிறகு இன்னும் சில புதிய பார்வைகள் முன்னுக்கு வருகின்றன. மனித விடுதலை குறித்து இப்பொழுது கூடுதலாகப் பேசுகிறோம். இலக்கியம், மெய்யியல் முதலியனவும் நம்மை ஆதிக்கங்களுக்கு வசப்படுத்துகின்றன என்று கண்டு மனித விடுதலை நோக்கில் இலக்கியம் உள்பட எல்லாவற்றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்துகிறோம். ஆதிக்கத்தை வெளியேற்றும்போது சூனியத்தைச் சந்திப்பதுகூட ஒரு வகையில் ஆரோக்கியமான பார்வையாக அமையமுடியும். ஆதிக்கமற்ற மனநிலை நமக்கு விடுதலையைத் தரும். இது தேவையான விடுதலை. இலக்கியம் மட்டுமே நமது இலக்காக இருக்க முடியாது. மனித விடுதலைதான் நமக்கு இலக்கு. இலக்கியத்தின் இலக்கும் இதிலிருந்து வேறுபட முடியாது.

குறிப்பு

தமிழில் திறனாய்வு இலக்கியம் வளர்ந்திருக்கிறதா? என்னும் பொருளில் கோவை வானொலியில் நடைபெற்ற கலந்தாய்வுக்காக எழுதிய குறிப்புரைகள்.

4. பின் தொடரும் நிழலின் குரல்

"விஷ்ணுபுரம்" நாவலுக்குப் பிறகு குறுகிய கால அளவில் ஜெயமோகன் எழுதிய இன்னொரு மகா நாவல் "பின் தொடரும் நிழலின் குரல்". கட்சி சார்ந்த மார்க்சியராலும், மற்றவர்களாலும் கடுமையான விமர்சனங்களுக்கு இந்த நாவல் உள்ளானதில் வியப்பில்லை. தம் கட்சிகளின் குறைபாடுகள் பற்றி விமர்சனம் எதையும் இவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டர்கள். வளமான மார்க்சியத்தை கட்சி சார்ந்தவர்கள் கைவிட்டது பற்றியும், புரட்சிகர இயக்கமாகத் தொடங்கிய பொதுவுடமைக் கட்சி உலகளவில் மட்டுமல்லாமல், இந்தியாவிலும்/தமிழகத்திலும் எவ்வாறெல்லாம் சிதைவுகளுக்கு உள்ளானது என்பது பற்றியும் இவர்களுக்கு சுய விமர்சனம் இல்லை. இதன் காரணமாக மார்க்சியத்திற்கு எதிரி என்றும், இரஷ்ய அனுபவங்கள் முதலியவை பற்றித் தெரியாதவர் என்றும் ஜெயமோகனை இவர்கள் சாடினார்கள். மறைமுகமான ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தவர் என்றும், பார்ப்பனியத்திற்குச் சேவை செய்பவர் என்றும் இவர்மீது குற்றச் சாட்டுகளும் கூறப்பட்டன. இவை பற்றியெல்லாம் விரிவாக ஆராய்வதற்கு இங்கு இடம் இல்லை எனினும், மார்க்சிய இயக்கத்தோடு முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு உடையவன் என்ற முறையில் சிலவற்றை இந்தக் கட்டுரையில் நான் கூறமுடியும்.

நாவல் என்ற இலக்கிய வகையைப் பொறுத்தவரை ஜெயமோகன் விரிவாக எழுதிஉள்ளார். நாவலுக்கு அவர் கூறும் வரையறைகள் விஷ்ணுபுரம் நாவலைப் பொறுத்தவரை சிறப்பாகப் பொருந்துகின்றன. நாவல் என்ற கலை வடிவத்திற்குள் கவிதைகள் இடம் பெறலாம். நாவலில் கட்டுரைகளுக்கும் இடமுண்டு. இப்படி நாவலுக்கு இவர்தரும் வரையறைகளை நாம் மறுப்பதற்கில்லை. "பின் தொடரும் நிழலின் குரல்" நாவலிலும் இவை எல்லாம் இடம் பெறுகின்றன. இவை இடம்பெறுவதன் காரணமாக நாவல் வாசிப்பில் சுவை உணர்வு குன்ற வேண்டும் என்பதில்லை. "பின் தொடரும் நிழலின் குரல்" நாவல் பெரும்பாலான வாசகர்களுக்கு சலிப்பைத்தான் ஏற்படுத்துகிறது. அன்றியும் இரண்டு அல்லது மூன்று நாவல்களாக எழுத

வேண்டியதை ஒரு மகாநாவலுக்குள் அடக்குவதும் தேவையில்லை.

நாவல் குறித்து ஜெயமோகன் முன் வைக்கிற வரையறைகள் இந்த நாவலில் தோற்றுவிடுகின்றன. இந்த நாவலின் வடிவம் நமக்கு என்னதான் சிரமத்தை ஏற்படுத்தினாலும், நம் காலத்தின் மிக முக்கியமான கதையை மிக விரிவான முறையில் கூறுவதன் காரணமாக இந்த நாவலை நாம் பெரிதும் போற்றமுடியும்.

சமதர்மம் என்ற கோட்பாடு எவ்வளவுதான் மரியாதைக்குரிய தாக இருந்த போதிலும், இந்தக் கோட்பாட்டினுள்ளும் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அன்றியும் சமதர்ம நோக்கில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில் உருவாக்கப்படும் கட்சியின் செயல்திட்டம், நடைமுறைகளுக்கு, வரலாற்றுச் சூழல் காரணமாகவும் கோட்பாடு பற்றிய தெளிவின்மை காரணமாகவும் ஏராளமான தவறுகள் நேர்ந்துவிடுகின்றன. தவிர மார்க்சியம் என்பது எந்த ஒரு நாட்டின் வரலாறு, சமூகம், சமயம், கலாச்சாரம், கலை, இலக்கியம் முதலியவை குறித்து தொடர்ந்து தன்னை வளப்படுத்திக் கொண்டே சென்றால் ஒழிய மக்களோடு இணைந்து சமூக மாற்றத்தைச் செயல்படுத்துவதற்கு இயலாது.

மாறிவரும் வரலாற்றுச் சூழலுக்கு ஒத்தமுறையில் மார்க்சியம் தன்னை வளர்த்துக் கொள்வதற்கும் தேவை இருக்கிறது. இவை பற்றியெல்லாம் அக்கறை இல்லாமல் மார்க்சியத்தை ஒரு வேதம் போலப் பயிலமுடியாது. கட்சிக்குள் வந்தவர்கள் மார்க்சியத்தைச் சார்ந்திருப்பதன் காரணமாகவே தம்மைப் புனிதர்கள் என்று கருதிக் கொள்ளவும் முடியாது. மார்க்சியத்தினுள் சில குறைகள் என்று விமர்சனங்களை முன் வைப்பவர்களை மார்க்சியத்தின் பகைவர்கள் என்று குற்றம் சாட்டிக் கேவலப்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் மார்க்சியம் மரியாதை இழக்கவும் செய்கிறது.

“பின் தொடரும் நிழலின் குரல்” நாவலுக்குள் நாம் என்னவெல்லாம் பார்க்கிறோம். மார்க்சியக் கட்சியின்

தலைமையில் நீண்ட காலமாக இருந்து, தற்காலச் சூழலில் தீவிரமாகச் செயல்பட்டவர் மாதவ நாயர். இவர் ஒரு ஸ்டாலினியவாதி. இரஷ்யாவில் குருச்சேவை அடுத்து வந்த காலத்தில் முதலாளியத்தின் கை ஓங்குவதோடு ஸ்டாலினியம் மரியாதை இழக்கிறது. நீண்டகாலம் சிறப்பாகப் பணியாற்றிய மாதவ நாயரைக் கீழ் இறக்குவதற்காக கட்சி செய்கிறசதிக்கு அருணாசலம் உடன்படுகிறான். கீழ் இறக்கப்பட்ட தோடு கட்சியை விட்டு மாதவநாயர் வெளியேறினார்/ வெளியேற்றப் பட்டார். கட்சியோடு தன் வாழ்க்கையை ஆழமாக பிணைத்துக் கொண்டிருந்தவர் மாதவ நாயர். வெளியேறிய நிலையில் தனக்குள் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்து போனார். கட்சியில் இருந்த பொழுதே தான் தொடர்பு கொண்டிருந்த பெண்ணைத் தேடிச் சென்று அவரோடு வாழத் தொடங்கினார். கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்று வரவும் செய்தார்.

நாவலில் இடம்பெறும் இன்னொருவர் வீரபத்திரபிள்ளை. இவரும் கட்சிக்குள் முக்கியமான பொறுப்பில் இருந்தவர். பொதுவுடமைக் கட்சியின் வரலாற்றை எழுத வேண்டும் என்று கட்சி கேட்டுக்கொண்ட பொழுது, சோவியத் பொதுவுடமைக் கட்சிக்குள் புகாரின் எவ்வாறு எல்லாம் ஸ்டாலினால் கொடுமைகளுக்கு உள்ளானார் என்று அறிந்தபோது இவர் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார். மிகச்சிறந்த தத்துவவாதியாகவும், செயலாற்றல் மிக்கவராகவும், இலெனினோடு இணைந்து புரட்சியில் பங்கு பெற்றவராகவும் இருந்தவர் புகாரின். ஸ்டாலினோடு முரண்பட்ட நிலையில் கடுமையான விசாரணைகளுக்கும், தண்டனைகளுக்கும் உள்ளானவர் இவர். புகாரினைக் கண்டுபிடித்த பிறகு கட்சிக்குள் வீரபத்திரபிள்ளை நிம்மதியாக இருக்க முடியவில்லை. நாளடைவில் இவரும் கட்சியிலிருந்து வெளியேறினார்/வெளியேற்றப்பட்டார். தன் வாழ்வுக்கு அர்த்தம் தந்த கட்சிக்குள் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் வீரபத்திர பிள்ளை குடிப்பழக்கத்துக்கு ஆளானார். சில மூடநம்பிக்கைகளுக்கு இரையானார். ஒருசமயம் எம்.என். ராயின் கருத்தியலை இவர் ஆதரித்தார். கதைகள், கவிதைகள் எழுதினார். தனக்குள் சிதைவுற்று அழிந்து போனார்.

மாதவ நாயரை கீழ் இறக்குவதற்கு கட்சி செய்த சதியில் ஒரு உறுப்பாகச் செயல்பட்ட அருணாசலம் நாளடைவில் மனவுறுத்தலுக்கு ஆளாகி மனநிலை பிறழ்ந்தவரானார். கட்சிக்குள் என்ன நடைபெறுகிறது என்பதைத் தம் மனைவியிடம் கூட அவர் மறைத்தபோதிலும் அவரது அன்பான மனைவிதான் அவருக்கு இறுதிவரை ஆதரவாக இருந்து அவரைக் காப்பாற்றினார்.

நாவலில் இவர்களைத்தவிர இன்னும் சில பாத்திரங்கள் உண்டு. உலகளவில் முதலாளியத்தின் செல்வாக்கு மேம்பட்டு வருவதைக் கட்சியும் மெல்ல ஏற்கத் தொடங்கியதோடு வாழ்க்கை வசதிகளைக் கட்சி சார்ந்தவர்களும் அனுபவிப்பதில் என்ன தவறு இருக்க முடியும் என்றெல்லாம் தலைவருக்கு ஆதரவாகப் பேசுகிற அறிவாளிகளையும் பாத்திரங்களாக ஜெயமோகன் வடித்திருக்கிறார். ஸ்டாலினியம் பற்றி விரிவான ஆதாரங்களோடு ஜெயமோகன் எழுதுகிறார். புகாரின் வாழ்க்கை, வழக்கு, சிறைத் தண்டனை முதலியவை பற்றி நிறைய எழுதுகிறார்.

ஜெயமோகன் நாவலில் படைத்திருக்கிற பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக நாமும் பார்த்திருக்கிறோம். படித்திருக்கிறோம். கட்சி செய்த சதிகள் பற்றி ஏராளமான விவரங்களை நாமும் அறிந்திருக்கிறோம். இவை எல்லாம் கற்பனையானவை அல்ல. மார்க்சிய இயக்கம் எந்த ஒரு மனிதனையும் முழு அளவில் தனக்குள் கவருகிற இயக்கம். இயக்கத்திற்குள் வந்தவர்களும் புதிய உலகத்தைத் தனக்குள் பெறுகிறார். தனிவுடமை அரசதிகாரம் முதலிய சுமைகளோடு சில ஆயிரமாண்டுகளாகத் தொடர்ந்து வருகிற வரலாற்றை முழு அளவில் புரட்டித்தள்ள தங்களால் முடியும் என்று நம்புகிறார்.

கடவுளை ஒரு சமயவாதி கண்டு வியப்பதைப்போல மார்க்சியமும் இவருக்குள் கடவுள் காட்சியைத் தருகிறது. எந்த ஒரு தியாகத்திற்கும் இவர் தன்னை உட்படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லை. உண்மையில் வரலாறு, சமூகம், இயற்கை முதலிய எல்லாவற்றையும் தனக்குள் இவர் காண்கிறார்.

வரலாற்றின் புதிர்கள், சிக்கலகள் இவருக்குள் தெளிவுபெறுகின்றன. இத்தகைய விரிவான/ஆழமான பார்வையைத் தனக்குள் தாங்கி இருக்கும் இவர் வரலாற்றில் ஒரு புதிய மனிதர். இவருக்குள் புத்தர் / இயேசு முதலியவர்கள் தற்காலத்திற்கு ஒத்தமுறையில் வாழ்கிறார்கள்.

கடந்தகால வரலாற்றின் செழுமையிலிருந்து இவர்கள் தம்மைப் படைத்துக் கொள்கிறார்கள். இத்தகைய புதிய வாழ்க்கையைக் கட்சிக்குள் கண்டவர்கள் கட்சியைவிட்டு வெறியேறுவது/வெறியேற்றப்படுவது குறித்து இவர்களால் சந்திக்க இயலாது. வெளியேற்றப்பட்ட நிலையில் இவர்கள் தனக்குள் முழு அளவில் சிதைந்து போகிறார்கள். தனக்குள்ளிருந்து வெளியேற்றிய கடவுளும், மதமும், சடங்குகளும் மீண்டும் இவர்களைப் பற்றிக் கொள்கின்றன. மார்க்சியத்திற்கு வெளியிலும் இவர்கள் செல்லக்கூடும். குடிவெறி முதலியவற்றுக்கும் இடம்கொடுத்துத் தம்மையே அழித்துக் கொள்கிறார்கள்.

பொதுவுடமைக் கட்சி புரட்சிகரமான இயக்கமாக செயல்பட்ட காலத்தில் அற்புதமான மனிதர்களைத் தோற்றுவித்தது என்பதில் ஐயமில்லை. புரட்சியைக் கைவிட்டபிறகு அரசதிகாரத்தோடும், முதலாளியத்தோடும் கூட்டுச்சேர்ந்த நிலையில் கட்சிக்குள் மனிதர்கள் எவ்வாறெல்லாம் விதைத்தனர் என்பதையும் நம் கால வரலாற்றில் நாம் அறிந்திருக்கிறோம். ஏற்றத்தை மட்டுமல்லாமல் இறக்கத்தையும் நாம் கண்டு இருக்கிறோம். இவற்றை எல்லாம் பதிவு செய்வதில் தவறு காண்பதற்கில்லை. ஜெயமோகனை இதற்காகப் பாராட்டுவதில் தவறு காண்பதற்கில்லை. கட்சி எவ்வாறு தனக்குள் சிதைந்தது என்பதைப் பதிவு செய்வதன்மூலம் ஒரு வகையில் மார்க்சியத்திற்கு ஜெயமோகன் நன்மை செய்கிறார்.

புகாரினைப் போன்றவர்களை வரலாற்றுக்குள் நாம் உயிர்ப்பித்து வைத்திருக்கவேண்டும். ஸ்டாலினியத்தின் வேர்கள் நம் வரலாற்றினுள்ளும் நமக்குள்ளும் இருக்கத்தான் செய்கின்றன. நெடுங்காலமாக சமூகத்தில் நிலவுகிற எத்தனையோ குறைகள் முதலியவற்றோடுதான் நாமும்

கட்சிக்குள் வருகிறோம். வர்க்கச் சமூகம் நமக்குள் எத்தனையோ காயங்களை, சிதைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது. கட்சிக்குள் வந்தவுடன் இவையெல்லாம் நம்மை விட்டு வெளியேறி விடுவதில்லை.

நமக்குள்ளும் நாம் போராடுகிறோம். நம்மைத் திருத்திக் கொள்ள முயற்சி செய்கிறோம். தன்னலம், ஆணவம், சாதி உணர்வு, பணத்தின் மேல் பற்று முதலியவற்றிலிருந்து விடுபடத்தான் விரும்புகிறோம். தோழர்களோடு இணைந்து நம்மை நாமே திருத்திக் கொள்ள முயல்கிறோம். கட்சி நமக்குத் துணை செய்ய வேண்டும். வர்க்க எதிரிகளோடு போராடுவதற்கு ஏற்றமுறையில் நம்மை நாமே தகுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தன்னலம் முதலியவற்றை நமக்குள்ளிருந்து வெளியேற்றியாக வேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்யவில்லை என்றால் வர்க்க எதிரிகளை நம்மால் வெல்ல முடியாது. எதிரிகளை எத்தனையோ வடிவங்களில் நமக்குள்ளே வைத்துக் கொண்டு சமதர்மம் என்றும், புரட்சி என்றும் பேசுவதன்மூலம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். கட்சிக்குள் தோழமை உணர்வு நிலைத்திருக்க வேண்டும். தலைவர், ஊழியர்களை அதிகாரம் செய்வதோ, ஏமாற்றுவதோ இறுதியில் கட்சியையும், ஊழியர்களையும் நாசமாக்கும்.

இவற்றையெல்லாம் சொல்வதற்கு ஜெயமோகன் தேவையில்லை. ஓர் அசலான மார்க்சியன் இந்த உண்மைகளை தானே அறிந்துகொள்ள முடியும். ஜெயமோகனைப் போன்ற ஒருவர் இத்தகைய தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக உண்மையான கட்சி அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இதற்கு மாறாக ஜெயமோகனைக் காய்கிற கட்சி தன்னைத்தானே அழித்துக் கொள்கிற கட்சி. ஜெயமோகனைப் பற்றி அவதூறு பரப்புவதன் மூலம் கட்சி தன்னையும் கேவலப்படுத்திக் கொள்கிறது.

நாவலில் இடம்பெறுகிற இரண்டு கடிதங்கள் பற்றி இங்கு

குறிப்பிட வேண்டும். மார்க்சியனுக்கு இந்தியச் சூழலில் மதம் பற்றியும், கலாச்சாரம் பற்றியும் ஆழமான புரிதல் தேவை. அடிக்கட்டுமானம் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்று வலியுறுத்துவதன்மூலம் மேல் கட்டுமானத்தின் பகுதிகள் என்று கூறப்படுகிற மதம், கலாச்சாரம் ஆகியவற்றின் இடத்தை நாம் மறுக்க வேண்டியதில்லை. அடித்தளம், மேல்கட்டு பற்றிய இறுக்கமான வரையறைகளும் விரிவான ஆய்வுக்குரியவை. மதம் மற்றும் கலாச்சாரத்தினுள்ளும் மார்க்சியம் தனக்குள் செரித்துக் கொள்ள வேண்டிய கூறுகள் உண்டு. சமூக மாற்றம் என்ற நோக்கில் இவற்றை நம்மால் பயன்படுத்தவும் முடியும். மதம் பற்றியும், கலாச்சாரம் பற்றியும் நாவலில் இடம் பெறும் ஜோனியின் கடிதங்கள் அற்புதமானவை. ஜெயமோகனின் அறிவாற்றலுக்கு இந்தக் கடிதங்கள் சான்றாகின்றன. டால்ஸ்டாய் பற்றியும், தாஸ்தாவெஸ்கி பற்றியும் நாவலில் இடம்பெறும் நாடகங்கள் சிக்கலானவை. எனினும் ஆழ்ந்து வாசிக்கத் தக்கவை.

இறுதியாக ஒன்றைச் சொல்லலாம். இந்த நாவலை வைத்து ஜெயமோகனை மார்க்சியத்திற்கு எதிரானவர் என்று மெய்ப்பிக்க இயலாது. சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலின் காலத்தில் நடந்த தவறுகளை ஜெயமோகன் சரியாகத்தான் பட்டியலிடுகிறார். புகாரின் போன்ற அறிவாற்றல் மிக்கவர்களை கட்சி இன்றைக்கும் தான் அழித்துக் கொண்டிருக்கிறது. முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியம் சமூக மாற்றத்தைச் சாதிக்க முடியாது என்பது மட்டுமல்ல சமூகத்தை மேலும் நாசப்படுத்தவும் செய்யும். மாதவ நாயர் முதலியவர்களின் வேதனைகள் மற்றும் அனுபவங்களை இன்னும் விரிவாக மார்க்சியரும் பதிவு செய்யத்தான் வேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்வதன்மூலம் வளமான மார்க்சியத்தை இந்த நாவலில் ஜெயமோகன் பதிவு செய்கிறார். மதம், கலாச்சாரம் பற்றி மார்க்சியத்திற்குள்ளிருந்து புதிய வெளிச்சங்களை வெளிப் படுத்துகிறார். மார்க்சியத்தினுள்ளும் இன்று நிலவுகிற பலவகைப் போக்குகளில் எந்தப் போக்கை ஜெயமோகன் ஆதரிக்கிறார் என்பது நாவலில் இருந்து அறிய இயலவில்லை; எனினும்

எஸ்.என்.நாகராசன், எம்.என். ராய் ஆகியவர்களைப் பற்றி அவர் குறிப்பிடுவதைக் கொண்டு ஜெயமோகனை ஓரளவுக்கு நம்மால் புரிந்து கொள்ள இயலும். மார்க்சியத்திற்குள்தான் ஜெயமோகன் இருக்கிறார் என்பதை நாம் உறுதியாகச் சொல்லமுடியும். அவருக்குள் மார்க்சியத்தின் எதிரி என ஒருவரைக் கண்டுபிடித்துக் காய்வதன் மூலம் ஒரு மார்க்சியன் தன்னை இழிவுபடுத்திக் கொள்ள வேண்டாம்.

குறிப்பு

தர்மபுரி, அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றும் திரு.கண்ணன் குமார் அவர்களின் முனைவர் பட்டத்திற்கான ஆய்வேட்டைப் படித்தபிறகு நான் அவருக்கு எழுதிய மடல்.

5. யுரேகா என்றொரு நகரம்

(நாவல் திறனாய்வு)

பெறுதல் : திரு. எம்.ஜி. சுரேஷ், சென்னை
மதிப்புக்குரிய நண்பருக்கு வணக்கம்,

"யுரேகா" நாவல் படித்து முடித்தேன். உங்களுடைய முந்திய நாவல்களைப் போல இந்த நாவல் சிக்கல் உடையதாக இல்லை. அன்றியும்இந்த நாவலில், நாவல் என்ற கலைப் படைப்பு என்பது இரண்டாம் இடத்திற்குச் சென்றுவிட பன்னாட்டு நிறுவனங்கள் என்ன செய்கின்றன என்ற அரசியல் முன்னிலைக்கு வந்திருக்கிறது. நாவல் என்பதோடு இந்த அரசியல் ஒத்துச் செல்லவில்லை.

நாவலுக்கான களம் என்பதற்காக அந்தமான் தீவுகளைத் தேர்ந்துள்ளீர்கள். தமிழ் நாவலுக்கு இதுஒரு புதிய சூழல். 'யுரேகா' நகரத்தை ஆய்வு செய்வதற்காக வந்துள்ளவர்கள் அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், அர்ஜென்டினா, இந்தியா ஆகிய பல நாடுகளையும் சேர்ந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கே உரிய வாழ்வியல் பின்புலம் இருக்கிறது. அந்தமான் தீவுகளில் பல இடங்களுக்கு இவர்கள் பயணம் செய்கிறார்கள். தங்களுக்கிடையில் நல்லுறவு கொள்கிறார்கள். இவர்களில் சிலர் காதல் வயப்படுகிறார்கள். இருவர் கொல்லப்படுகின்றனர். தேடலில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் குறித்து விவாதிக்கிறார்கள். அமெரிக்கனைத் தவிர மற்றவர்களுக்கு இந்தத் தேடலின் நோக்கம் தொடக்கத்தில் புலப்படவில்லை. எனினும், ஒவ்வொருவரின் ஆய்வு நோக்கத்தையும் மீறி வேறு நோக்கங்களை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற வற்புறுத்தலுக்கு இடம் தருவதில் அமரிக்கனைத் தவிர மற்றவர்கள் சங்கடத்திற்கு உள்ளாகின்றனர். இறுதியில் உண்மை வெளிப்படுகிறது.

இவ்வகையான கூறுகள் யுரேகாவை ஒரு நாவல் என்று நமக்குச் சொல்லுகின்றன.

ஆனால் நாவல் என்பது மேற்குறிப்பிட்ட கூறுகளையும் மீறி மனிதனின் வாழ்வியலுக்கு அர்த்தம் சொல்லவேண்டும். அல்லது அர்த்தம் தேடுதலில் நாவல் முனைப்பாக இருக்கவேண்டும். தேடலில் ஈடுபடும் ஒவ்வொருவரின் பின்புலத்தையும் முதலிலேயே தொகுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் தனக்கேயான வாழ்வியலோடும் அதன் முரண்களோடும் நாவலின் இறுதிவரை அலைந்தாக வேண்டும். 'யுரேகா' என்ற நகரம் பற்றிய தேடலில் இவை வெளிப்பட வேண்டும். அவரவர்க்குள் மாற்றங்கள் நிகழ வேண்டும். மாற்றங்கள் முன்னோக்கியதாகவோ, பின்னோக்கியதாகவோ அமையலாம். இப்படி மனிதர்களையும் அவர்களின் வாழ்வியலையும் நாவல் தன் மையத்தில் வைத்திருக்க வேண்டும். இதற்குள்தான் மையத்தை அழித்தல் முதலியனவும் நேர வேண்டும். ஆனால் யுரேகா நாவல் இந்த மையத்திலிருந்து விலகி அரசியலுக்குள் போய்ச் சேருகிறது. அரசியலை மையத்தில் வைத்து நாவல் எழுதும் போதும் மனிதர்களைப் பின் நிலைக்குத் தள்ள முடியாது. நக்குத் தேவை அரசியலோடு நாவல் என்ற கலைப் படைப்பு. முந்திய உங்கள் நாவல்களில் இந்த அம்சத்தில் பெருத்த சாதனை செய்திருக்கிறீர்கள். இத்தகைய சாதனை 'யுரேகா' நாவலில் நிகழவில்லை.

இனி அரசியலுக்கு வருவோம். 'யுரேகா' நகரத் தேடலில் ஈடுபடும் ஒவ்வொருவரும், தொன்மையான வரலாற்றைத் தேடுவதில் அக்கறை உடையவர்களாகத்தான் இருக்கின்றனர். கி.மு.9000 வரை வரலாற்றுக்கான சான்றுகள் கிடைக்கின்றன. 'யுரேகா' நகரம் இதற்கும் முற்பட்டது என்ற முறையில் அனைவருக்கும் ஆர்வம் அதிகரிக்கிறது. கிடைக்கும் ஒவ்வொரு சான்றையும் ஆய்வுக்கு உட்படுத்துகிறார்கள். வரலாற்றில் எந்தக் கட்டத்து நாகரிகம் இது என்று ஆராய்கிறார்கள். அந்த மக்களின் மொழி என்னவாக இருக்க முடியும் என்றும் ஆராய்கிறார்கள். கிடைக்கும் சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது அங்கு இரண்டு இனமக்கள் வாழ்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்களுக்கு இடையிலும் மோதல் நிகழ்ந்திருக்க வேண்டும். யார் வென்றார்கள் என்பது தெரியவில்லை.

இந்தியாவிலிருந்து சென்ற அழகிய சிங்கரை முதலில் சோழ ராஜனும், பிறகு ஆர்.டி. சிங்கும் சந்திக்கின்றனர். யுரேகா என்பது திராவிட நாகரிகம் தான் என்று சாதிக்க வேண்டும் என்பது சோழராசனின் விருப்பு. இதற்கு மாறாக 'யுரேகா' என்பது ஆரிய நாகரிகம் தான் என்று சாதிக்க வேண்டும் என்று ஆர்.டி.சிங்கரின் விருப்பம். அழகியசிங்கருக்கு இந்த வகையில் "சாதிப்பதில் ஆர்வமில்லை". நிகழ்கால அரசியல் தேவைகளுக்கு முன்னைய வரலாற்றைத் திருத்தி உருவாக்க வேண்டியதில்லை. இந்தளவுக்கு அழகியசிங்கரின் கருத்தோடு வாசகர்களாகிய நாமும் உடன்படுகிறோம்.

பி.பி.சி வானொலிக்கு வேறு வகையான நோக்கம் இருப்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம். ரோஸ் தீவுகளை ஒரு சுற்றுலாத் தலமாக உருவாக்க வேண்டும் என்று ஆங்கிலேயன் விரும்புகிறான். அர்ஜென்டைனாவில் செயல்படும் மர்பியா கும்பலுக்குத் தங்கள் சரக்குகளை மறைத்து வைப்பதற்குச் சில தீவுகள் தேவை என்பது இன்னொரு ஆய்வாளனின் நோக்கம். ஜியார்ஜியனுக்குத் தனிப்பட்ட நோக்கம் எதுவும் இல்லை என்று நாம் அறிகிறோம்.

காலந்தோறும் யார், யார் எந்தந்தத் தேவைகளுக்காக வரலாறென்பதைக் கட்டமைக்கிறார்கள் என்ற புரிதலோடும் இவர்களை நாம் அறிந்து கொள்கிறோம். இவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு ஆதிக்கத்திற்கு மக்களை உள்ளாக்கவே விரும்புகிறார்கள். மக்களைச் சுரண்டுவதற்கும் ஒடுக்குவதற்கும் இவ்வகையான வரலாறு குறித்த கட்டமைப்புக்கள் இவர்களுக்குத் தேவைப்படுகின்றன. ஆதிக்கங்கள் காலந்தோறும் இப்படித்தான் தம்மைத் தக்கவைத்துக் கொள்கின்றன. இவற்றையெல்லாம் நீங்கள் மிகச் சரியாகவே நாவலில் வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். இவ்வகையான அரசியலை தமிழ்ச் சூழலில் பலர்முன்வைத்துள்ளனர். இவர்களோடு நீங்களும் சிறப்பாகவே சேர்ந்துள்ளீர்கள்.

நம் காலத்தில் உலகளவிலான வரலாற்றை மறு உருவாக்கம் செய்வதில் அமெரிக்கரும் அவர்கள் உருவாக்குகிற

பன்னாட்டு நிறுவனங்களும் சேர்ந்துள்ளன. பிரிட்டன் உட்பட எவருடைய நோக்கத்தையும் பின் நிலைக்குத் தள்ளிவிட்டு அமெரிக்கன் தன்னை இப்பொழுது முன்னிலைக்குக் கொண்டுவருகிறான். அமெரிக்கனின் ஆதிக்கத்திற்கு முன்னால் திராவிடனும் ஆரியனும் நிற்க முடியாது. அர்ஜென்டினா கடத்தல் பேர்வழிகள் அமெரிக்கனுக்கு எதிராகவும் நீண்டகாலம் செயல்படுவதற்கில்லை. இரஷ்யன் ஏற்கனவே முன்னிலையில் இல்லை. அமெரிக்கனோடு பிரிட்டீஸ்காரன் ஒத்துழைக்கிறான். இந்நிலையில் உலகளவிலான ஆதிக்கத்தை தன்னால் நிறுவமுடியுமென்று அமெரிக்கன் இப்பொழுது முன் செல்கிறான்.

'யுரேகா' என்ற நகரம் என்றைக்கும் இருந்ததில்லை. இப்படி ஒரு புனைவை அமெரிக்கன் படைத்திருக்கிறான். அமெரிக்கன் தன் தேவைக்காக இப்படியும் செய்கிறான் என்ற அறிவை இந்த நாவல் மூலம் நீங்கள் சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளீர்கள். அமெரிக்கனுடைய நோக்கம் என்ன? தொல் பழங்காலம் என்ற ஆய்வில் அநேகமாக பொருளியல் வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட எல்லா நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. புதிய உலகச் சூழலில் அந்நியர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தம்மை நிறுவிக் கொள்ள வேண்டும் என்பது இவர்களுடைய நோக்கம். இந்த நோக்கம் சரியா? தவறா? என்ற ஆய்வைத் தள்ளி வைத்து விட்டு மேலே செல்லலாம்.

தொல் பழங்கால ஆய்வுக்குள் பொருளியல் வளர்ச்சி குன்றிய நாடுகளின் மக்களைத் தள்ளிவிட்டு, அவர்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்கி, அவர்களுக்கு நிகழ்கால உணர்வு இல்லாமல் செய்துவிடுவதன்மூலம் பன்னாட்டு நிறுவனங்களோடு கூடிய அமெரிக்கன் தன் ஆதிக்கத்தை நிறுவிக்கொள்ள முடியும். பொருளியல் வளர்ச்சியில் பின்னடைந்த நாட்டு மக்கள் தங்களின் தொன்மையான வரலாறு, பண்பாடு, பாரம்பரியம், மொழி முதலியவற்றோடு இணைந்து, இறுகிக் கிடக்கிறார்கள். இவர்களை நிகழ்காலம் பற்றிய உணர்வுக்குச் செல்லவிடாமல் அந்தந்த நாடுகளில் உள்ள பிற்போக்கு முதலாளியம், பெரும் தேசிய இனம் முதலியவைகளும் செயல்படுகின்றன. இப்படி ஒரு

புதைகுழிக்குள் அவர்களை மேலும் தள்ளி விடுவதுதான் அமெரிக்கனின் நோக்கம். இதற்காகத் தான் 'யுரேகா' என்ற கற்பனை நகரத்தை அமெரிக்கன் கடலுக்கு அடியில் படைத்து வைக்கிறான். இனி மக்கள் மோதிக் கொள்ள முடியும்.

இதுவரையிலான அரசியலைத் தமிழகச் சூழலில் ஒரு நாவல் வடிவில் சிறப்பாக வெளிப்படுத்துகிறீர்கள். அமெரிக்கரின் ஆதிக்கம் குறித்துத் தமிழ் இலக்கியவாதிகளுக்குப் பெருத்த அக்கறைகள் இல்லை. உலகமயமாதல் முதலிய போக்குகள் எந்தளவுக்கு நமக்குப் பேராபத்து விளைவிக்கக் கூடியவை என்பது குறித்து, மக்கள்நலனை முன்னிலைப் படுத்தவேண்டிய தமிழ் இலக்கியவாதிகள் அக்கறை இல்லாமலிருப்பது ஒரு அவலம். இவர்களுக்கு மத்தியில் உங்களது அக்கறை பெரிதும் கொண்டாடப்பட வேண்டும் என்பதில் நானும் உடன்படுகிறேன். இதற்காக உங்களை நானும் பாராட்டுகிறேன்.

இந்தியாவில் பிரிட்டனின் ஆதிக்கத்தை எதிர்க்கும் நோக்கில் விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெற்றன. மேற்கத்தியரின் நாகரிகம் ஆதிக்கம் முதலியவற்றிற்கு எதிராக மக்களைத் திரட்டும் நோக்கில் இந்திய நாகரிகம், பண்பாடு, இந்தியாவின் அறிவியல் மேன்மை, தொழில்வளம், மருத்துவம் என்றெல்லாம் நம்மவர் பேசினார்கள். இந்து மதம் என்பதனுள்ளிருந்தும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு எதிரான சில கூறுகளைத் திரட்டினார்கள். எங்களுக்கும் உயர்வகையான நாகரீகம் உண்டு, வாழ்வியல் உண்டு, பண்பாடு முதலியனவும் உண்டு. எங்கள் வரலாற்றையும், மரபையும் நாம் இழக்க முடியாது. இப்படி விடுதலை இயக்கத்தினர் பேசினார்கள். இவர்களின் விடுதலை இயக்கம் பற்றி நமக்கும் சில விமர்சனங்கள் உண்டு. இருந்த போதிலும் மக்களைத் திரட்ட வேண்டும் என்ற இவர்களது நோக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இவர்களும் ஒரு வகையான வரலாற்றைக் கட்டமைக்கத்தான் செய்தனர். இதில் தவறில்லை. இப்படித்தான் முன் செல்ல முடியும்.

தொடக்க நிலையிலேயே இதில் பிற்போக்கான கூறுகள் உண்டு என்று பேசுவதில் பொருள் இல்லை. வேறொரு கட்டத்தில் இது பற்றிப் பேசுவதில் தவறில்லை. இத்தகைய

புரிதல் இல்லாமல் விடுதலைக்குச் சார்பான போராட்டக்காலம் முழுவதுமே ஒரே வகையான பிற்போக்கு இயக்கம்தான் உருவாயிற்று என்று பேசுவதில் பொருளில்லை.

இந்து மதம் என்பதை இன்று எதிர்மறை நிலையில் வைத்துப் பார்ப்பவர்கள் இப்படித்தான் செய்கின்றனர். இவர்களிடமிருந்து காந்தி மட்டுமல்லாமல், இன்று பாரதியும் தப்பவில்லை.

இதே போலத்தான் தமிழகச் சூழலிலும் தமிழியக்கம், திராவிட இயக்கம் முதலியவை செயல்பட்டன. இந்திய நாகரிகம் என்பது ஆரிய நாகரிகம்தான் என்ற பேச்சு எழுந்தபோது இதை மறுக்கும் முறையில் திராவிட நாகரிகத்தின் தொன்மை முதலியவை பேசப்பட்டன. சிந்துச்சமவெளி நாகரிகம், குமரிக்கண்டம் என்றெல்லாம் நாம பேசினோம். இதிலும் தவறில்லை. நம் காலத்திற்கு ஒத்தமுறையில் வரலாற்றை நாமும் கட்டமைத்தோம்.

இன்று இந்துத்துவவாதிகள் சிந்து நாகரிகம் ஆரிய நாகரிகம் தான் என்று சாதிக்க முனைந்திருக்கின்றனர். இந்த இடத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? இவர்களின் கூற்றை நாம் மறுப்பதோடு நம் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியாக வேண்டும். இந்துத்துவ வாதிகளை எதிர்த்து நிற்க இந்த வகையில் நம் மக்களை அணியப் படுத்த வேண்டும். இதைப் பிற்போக்கென்று நாம் கூறமுடியுமா?

உடனடியாக ஒன்றைச் சொல்லிவிடலாம். பழைய நாகரீகத்தைத் தோண்டித்துருவி ஆராய்வதிலேயே சிலர் மூழ்கி விடுகின்றனர். இவர்களுக்கு நிகழ்கால உணர்வு முதலில் குறைந்து நாளடைவில் அற்றுப் போகிறது. முன்னைய வரலாறு அற்றுப் போகிறது. முன்னைய வரலாற்று ஆய்வையும், நிகழ்கால உணர்வையும் இணைத்தாக வேண்டும் என்ற கவலை நம் போன்றவர்களுக்கு இருக்கிறது.

மார்க்சியராகி நாம் திராவிட இயக்கத்தவரைப் போல, பண்டிதர்கள் எனக் கூறப்படும் புலமையாளர்களைப் போல்

செயல்பட முடியாது. இத்தகையவர்களோடும் நாம் போராடத்தான் வேண்டும்.

இதற்காகத் தொன்மைக் காலம் பற்றிய ஆய்வில் நம்மவர் ஈடுபடக்கூடாது என்று சொல்லிவிடலாமா? சோழ ராஜனுக்கு இருக்கும் நோக்கம் நமக்குச் சிறிதளவும் இல்லை. அதைப் போல ஆர்.டி.சிங்கின் நோக்கத்திற்கும் நாம் எதிரானவர்கள். இடையில் அமெரிக்கனும் வரலாம். ஏற்கனவே தமிழகத்திற்குள் அமெரிக்கனின் ஆதரவோடு சிலர் செயல்படுகின்றனர். இவர்களும் சில சாதனைகளையும் செய்திருக்கின்றனர். இதைச் சாதனை தானா என்று பிறகு நிதானமாக நாம் பேசிக் கொள்ளலாம். இவர்களின் செயல்பாடுகள் குறித்தும் நமக்குத் திறனாய்வுகள் இல்லாமல் இல்லை. சிந்துச் சமவெளி நாகரிகம் என்பது யாரோ அங்கே நிலத்தைத் தோண்டிப் புதைத்து வைத்த நாகரிகம் இல்லை. குமரிக்கண்டம் குறித்து இன்னும் ஆராய்ச்சி செய்தாக வேண்டும். எனினும் தமிழகம் சார்ந்த பகுதியில் இருந்து கிழக்கிலும் மேற்கிலும் நம் தொன்மையான நாகரிகம் பரவியது என்ற சான்றுகளும் நமக்குக் கிடைத்துவருகின்றன. இவற்றை முழு அளவில் புனைவுகள் என்று சொல்வதற்கும் இடமில்லை. கட்சி சார்ந்த மார்க்சியரைப் போல நாம் நிலைப்பாடு எடுக்க வேண்டியதில்லை. திராவிட இயக்கத்தோடும், தமிழ் இயக்கத்தோடும் அரசியல் ரீதியாக முரண்பட்ட மார்க்சியர் கடுமையான நிலைப்பாடு எடுத்த வரலாறும் நமக்குத் தெரியும்.

நாவலில் இடம்பெறும் அரசியலின் மையத்திற்கு இப்பொழுது வருகிறோம். பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கங்கள் இன்று பொருளியலில் மட்டுமல்லாமல் கல்வி, மருத்துவம், பண்பாடு என்று எத்தனையோ களங்களில் நம்மை ஊடறுப்பதாக வந்திருக்கிறது. முதலாளிகளும் அரசியல்வாதிகளும் இந்த ஆதிக்கத்தோடு ஒத்துழைக்கிறார்கள். திராவிட இயக்கங்களும், தமிழியக்கங்களும் ஒத்துழைக்கின்றனர். மார்க்சியர், தீவிரமான எதிர்நிலை எடுக்கவில்லை. இவர்களுக்கு மேற்கத்தியரின் அறிவியலும், தொழில் நுட்பமும், கல்வியும், இல்லாமல் முடியாது. அரசு அதிகாரத்திற்கு இவர்களும் மக்களை உட்படுத்துகின்றனர்.

இந்த வகையான ஆதிக்கத்தை நம்மைப் போன்றவர்கள் எவ்வாறு எதிர்ப்பது? அரசியல் முதலிய அரங்குகளில் நமக்கான நிலைப்பாட்டை வகுத்துக் கொள்வதில் சிரமங்கள் இருந்த போதிலும் நாம் செய்தாக வேண்டும். பண்பாட்டுத் தளத்தில் என்ன செய்வது என்று ஆராய்கிற போதுதான் தமிழ் மக்களின் தொன்மை முதலியவை குறித்து நாம் பேசுகிறோம். தொன்மை முதலியவை அதே வடிவில் ஆதிக்கத்திற்கு எதிரான களன் ஆக முடியாது. ஆனால் தொன்மை முதலியவற்றை நம் காலத்தேவைகளுக்கு ஒத்த முறையில் பொருள்படுத்துவதன் மூலம், ஆதிக்கத்திற்கு எதிரான சக்தியாக இதை ஆக்க முடியும்.

தமிழர் மெய்யியல் குறித்துத் தொடர்ந்து நாம் ஆராய்கிறோம். தமிழ் மக்களின் ஆதிப்பொதுமைச் சமூகத்திலிருந்து தொடங்கு கிறோம். சமத்துவமும், சமதர்மமும் தமிழர்களின் மெய்யியல் என்று காண்கிறோம். சமத்துவம் இல்லாமல், சமதர்மம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை. ஆதிக்கங்களோடு எந்த வகையிலும் நம்மால் ஒத்துச் செல்ல முடியாது. திராவிடம் என்ற பெயரில், இந்துத்துவம் என்ற பெயரில் வேறு எந்தப் பெயரிலும் உருவாகும் ஆதிக்கம் நம்மை அழிக்கும்.

இத்தகைய புரிதலோடு உங்கள் நாவல் இல்லை. இத்தகைய புரிதலுக்கு அழகிய சிங்கர் வந்திருக்க வேண்டும். சோழ ராஜனை, ஆர்.டி.சிங்கை மறுக்கிற அளவில் அவர் நின்று விடுகிறார். இன்னும் தொன்மையான நாகரிகம் குறித்து ஏராளமான ஆய்வுகளுக்குத் தேவை இருக்கிறது. சில வாய்ப்புக்களும் கூடி வருகின்றன. இவற்றைத் தொடரத்தான் வேண்டும். அமெரிக்கன் என்ன செய்வான் என்ற எச்சரிக்கை உணர்வோடும் நாம் செயல்படத்தான் வேண்டும். கட்சி மார்க்சியருக்கு ஏனோ இம்மாதிரி அக்கறையில்லை. நாம்தான் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தி யாக வேண்டும். மற்றபடி நீங்கள் மீண்டும் ஒருபுதியவகை நாவலைப் படைத்திருக்கிறீர்கள். இதற்காக என் பாராட்டுக்கள்.

9.5.2003

6. இன்றைய தமிழ் இலக்கியம் — வாழ்வும் வளர்ச்சியும்

மதிப்பிற்குரிய நண்பர்களே வணக்கம். உடல்நலக் குறைவு காரணமாக நேரில் வர இயலாமைக்கு அனைவரது மன்னிப்பையும் வேண்டுகிறேன். சாகித்திய அகாதெமி ஈரோடு வரை வந்தமைக்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈரோட்டுக்குக் கொண்டு வந்தவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுக்கு ஒரு முறையேனும் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தும் முறையில், அந்தப் பகுதி எழுத்தாளர்களை சாகித்திய அகாதெமி ஊக்குவிக்க முடியும். ஈரோடு வட்டாரம் என்றால் நவீன இலக்கியத்தில் துடிப்போடு செயல்படும் நண்பர்கள் தேவிபாரதி, கவுதம சித்தார்த்தன், கா.சி.சிவக்குமார் ஆகியவர்களை எப்படி முன்னிலைப் படுத்தாமல் இருக்க முடியும்? இது குறித்து அகாதெமியினர் சிந்திக்குமாறு வேண்டுகிறேன்.

இலக்கியத் திறனாய்வாளன் என்ற முறையில் வெளிப்படையாகப் பேசுவது என்பதை ஒரு கடமையாக மேற்கொண்டுள்ளேன். மார்க்சியச் சார்பு உடையவன் என்ற போதிலும், மார்க்சியத்தை ஆழ்ந்து கற்றதன் விளைவாக வறட்டுச் சூத்திரவாதங்களை நான் பயன்படுத்துவது இல்லை. மார்க்சியத்தைத் தழுவிக் கொண்டவர் என்பதற்காக நான் எந்த எழுத்தாளரையும் உச்சிமேல் வைத்துக் கொண்டாடவில்லை. நவீனத் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய சக்திகளைச் சேர்த்த தமிழ் எழுத்தாளர்களைச் சாதி என்றும், இனம் என்றும் பாராமல் கொண்டாடுவதில் நான் தவறவில்லை.

தமிழில் இலக்கியத் திறனாய்வு வளரவில்லை என்று திரும்பத் திரும்ப சிலர் சொல்வதை என்னால் ஏற்க இயலவில்லை. பிரமிள், வெங்கட் சாமிநாதன், சுந்தர ராமசாமி, தமிழவன் முதலியவர்களின் திறனாய்வுப் பார்வையை நான் என்றும் மதிக்கிறேன். இவர்களில் ஒரு சிலரை ஓரம் கட்டுவதையோ, இவரைப் போல இன்னொருவர்

இல்லை என்று தூக்குவதையோ என்னால் செய்ய இயலாது. நமது பல்கலைக் கழகங்களும் அரசும் ஆரோக்கியமாகச் செயல்பட்டிருக்குமென்றால், கா.ந.சு.வுக்குப் புதுவைப் பல்கலைக் கழகம் இடம் கொடுத்ததைப் போல, இலக்கியத் திறனாய்வு என்ற இருக்கையை ஏற்படுத்தி இவர்களின் அறிவுத் திறனைத் தமிழ் இலக்கியத் திறனாய்வின் மேன்மைக்குப் பயன்படுத்தி இருக்கமுடியும்.

புதுமைப்பித்தனை இன்னும் தொடர்ந்து கற்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதனாலேயே மௌனியையோ, கு.பா.ரா.–வையோ, பிச்சமூர்த்தியையோ கீழ் இறக்கிப் பேசுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. புதுமைப்பித்தனுக்குப் பிறகு இவர் தான் என்று ஒரு பெரியவரைச் சுமப்பதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. என்னதான் ஒருவர் மேதை என்ற போதிலும் சமூகமும் வரலாறும் தமக்குள் வைத்திருக்கும் ஆற்றல்களில் கூடியவரை அதிக அளவில் இவர் செரித்துக் கொண்டவர் என்பதால், இவரை மட்டுமே போற்றி இலக்கியத்தில் மட்டுமல்லாமல் சமூகத்தின் களங்கள் பலவற்றில் புதியவை படைத்தவர்களை நாம் மறைத்துவிடக் கூடாது. இலக்கியத்தினுள்ளும் சிலர் நுழைந்து செய்யும் ஆர்ப்பாட்டங்களில் இவ்வகைப் போக்குகளை நாம் கண்டறிய முடியும்.

இலக்கியப் பரிசுகள், விருதுகள் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். இலக்கியம் படைக்காமல் இருக்க முடியாது என்று இலக்கியத்திற்குள் வந்தவர் புகழையோ, பரிசுகளையோ பொருட்படுத்துவதற்கு இல்லை. இலக்கியம் என்பது ஒரு பணி கூட இல்லை. எனக்கு ஏன் இந்தத் துயரங்கள். எனக்கு மட்டுமா இந்தத் துயரங்கள். சமூகத்தில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது. எனக்குள்ளும் உள்ள முரண்பாடுகளை நான் எப்படி விளங்கிக் கொள்வது. என்னை எப்படிப் படைத்துக் கொள்வது – இம்மாதிரிச் சில கேள்விகளோடு இடையறாது தமக்குள் போராடி, இவ்வகைத் துயரங்களின் வேர்கள் என்ன? கிளைகள் என்ன? என்பதை ஆராய்ந்து இதற்கு மேலும் செல்ல இயலுமானால் இந்த வேர்களின் வரலாற்றைத் தேடி, தத்துவத்தில் செறிவு பெற்றுத் தனக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமான சமூகத்தின் விடுதலை என்ற

உள்ளுணர்வோடு தீவிரமாகத் தனக்குள் செயல்படும் ஒருவரை இலக்கியத்திற்குக் கிடைத்த பேறு என நாம் கொண்டாட முடியும். இதற்காக மற்றவர்களை, மக்களைத் தாழ்த்துவது ஒரு மாபெரும் குற்றச்செயல் ஆகும். இவர்களுக்குப் பரிசுகளும், விருதுகளும் தேவை இல்லை என்ற போதிலும், ஒரு வேளை கிடைக்குமானால் இவரோடு சேர்ந்து நாமும் மகிழ்ச்சி அடைய முடியும். இத்தகைய படைப்பாளிகள் மூலம்தான் ஒரு மொழி இலக்கியத்தின் வாழ்வும், வளமும் நிலைபெறும்.

தமிழகச் சூழலில் எத்தனையோ இலக்கிய அமைப்புகள் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்குகிறார்கள். வேண்டியவர்களைக் கொண்ட நடுவர் குழு ஒன்றை வைத்துக்கொண்டு வேண்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்குகிறார்கள். பழி வந்துவிடக் கூடாதே என்பதற்காக ஏதாவது ஒரு ஆண்டில் தகுதி உள்ளவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்கள். தமிழகத்தில் கட்சிசார்ந்த இயக்கங்களும் இதே திருப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்கள். இப்படிச் செய்வதற்கு இவர்கள் வெட்கப்படு வதில்லை.

கிடைத்த பரிசை எழுத்தாளர்களும் ஆசையோடு பெற்றுக் கொள்கிறார்கள்.

“தெருவில் சென்றபொழுது அங்கே ஏதோ கலவரம் நடந்து கொண்டிருந்தது. காவல் துறையினர் மக்களை ஓட ஓடத் துரத்தி அடித்தனர். நான் இடையில் மாட்டிக் கொண்டேன். இப்பொழுது தியாகிகளுக்கான ஓய்வூதியம் எனக்கும் கிடைக்கிறது”. இப்படி வேடிக்கைகளும் இங்கு இலக்கிய உலகிலும் நடைபெறுகின்றன. இலக்கியம் செய்வதற்காக இவர்கள் இறங்கியபொழுது ‘எதையோ இழந்து விட்டோம். இழப்பீடாக இந்தப் பரிசு எனக்கு வாய்த்திருக்கிறது’ – இப்படிக் கருதும் ஒரு எழுத்தாளனை நம்மால் எப்படி மதிக்கமுடியும்? இவரால் எந்த மொழி ஆற்றல் பெற்றிருக்கும்? மாபெரும் சமூகம் நமக்கு வழங்கியவை அதிகம். இவற்றைத் திருப்பித் தருவதில் 5/10 விழுக்காட்டையேனும் நாம் செய்தாக வேண்டும்.

இப்படிக் கருதும் ஒரு எழுத்தாளன் பரிசைத் தனக்கென

அபகரித்துக் கொள்வதில் எந்த வகையில் நியாயம் ஆகும். ஒரு மொழி இலக்கியத்தின் வளத்திற்கு எனத் தன்னை ஒப்புக் கொடுத்த ஒரு எழுத்தாளர் அந்த மொழியைக் காப்பதற்கும், வளர்ப்பதற்குமான சில நற்பணிகளுக்கு அந்தத் தொகையை ஒப்படைப்பார் என்றால் அவர் நம் மரியாதைக்குரியவர். தமிழில் இப்படி ஒரு அற்புதம் இதுவரை நடந்ததில்லை. காலமெல்லாம் விருதுகள் வேண்டாம் என்று ஓயாமல் மறுத்து வந்த சி.சு.செல்லப்பா அவர்களுக்கு இப்பொழுது பரிசு வழங்குவது அவரைக் கேவலப்படுத்துவது அன்றி வேறு என்ன.

நண்பர்கள் இப்பொழுது புதிய சர்ச்சை ஒன்றைக் கிளப்பி இருக்கிறார்கள். சாகித்திய அகாதெமியின் பரிசுகள் தகுதி உடைய பலருக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். 1980–க்கு முன்னர் தமிழ் இலக்கியத் துறையில் ஈடுபட்டுச் சாதனை புரிந்த பலருக்கு இப்பரிசு கிடைக்கவில்லை. இவர்களின் தொகை சுமார் முப்பது என்ற எண்ணைத் தொடுகிறது. இவர்களுக்கெல்லாம் பரிசு வேண்டாமா? என்று இவர்கள் கேட்கிறார்கள். இந்த முப்பது எழுத்தாளர்களுக்கும் தொடர்ச்சியாகப் பரிசு கிடைக்கும் என்று வைத்துக் கொண்டாலும் 2030க்குப் பிறகுதான் மற்றவர்களுக்குப் பரிசு கிட்டும். இப்படி ஒரு மதிப்பீடு, மூத்த மகனுக்கே சொத்து முழுவதும் என்ற காலத்திற்கு ஒவ்வாத விதிமுறை ஆகிவிடும். பரிசுகளைக் கொண்டா இலக்கியத்தை மதிப்பிட வேண்டும்? இது முதலாளிய மனப்பான்மையின் ஒரு கூறு அல்லவா?

இதுவரை பரிசு பெறாத நாஞ்சில் நாடன், இன்குலாப், தமிழன்பன், வண்ணதாசன், வண்ணநிலவன், பா.செயபிரகாசம், சிற்பி, கலாப்ரியா, ஞானக்கூத்தன், வைத்தீஸ்வரன் முதலியவர்களுக்கு இந்தப் பரிசு என்ன மரியாதையைச் சேர்க்க முடியும். தமிழ் இலக்கியம் இத்தகையவர்களை இனம் கண்டறிந்து பாராட்டியிருக்கிறது. பரிசு பெறுவது என்பதே கூட இப்பொழுது ஒரு மரியாதை என நாம் மதிக்க வேண்டியதில்லை. நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அழிக்க முடியாத இடங்களைப் பெற்றுள்ள இத்தகையவர்களுக்கு இதற்கு மேல் என்ன மரியாதை வேண்டும். பரிசு பெற்றவர்களையும் சிலசமயம் கீழ்நோக்கிப் பார்க்கவும் வேண்டி இருக்கிறது. இவர்களை யார் எத்தனையோ காலத்திற்குத் தாங்க

முடியும். குழு மனப்பான்மை உடையவர்களோ, கட்சி சார்ந்தவர்களோ எதை எதையோ செய்து கொண்டிருக்கட்டும், நாம் கவலைப்படவேண்டியதில்லை.

1980–க்குப் பிறகு புதிய பார்வை மற்றும் புதிய ஆற்றல்களோடு நவீனத் தமிழ் இலக்கியத்திற்குள் வீரியத்தோடு வந்துள்ள இளைஞர்களுக்குத்தான் பரிசு வழங்குவது பொருத்தமாகவும், சிறப்பாகவும் இருக்கமுடியும். மூத்தவர்கள் ஏற்கனவே நமக்குக் கிடைத்த மரியாதைகளோடு நிம்மதியாக இருப்பதே நல்லது. இளைஞர்கள் தான் இலக்கியத்தின் எதிர்காலத்தையும் உருவாக்கும் தகுதி உடையவர்கள். இவர்களைப் போற்றி முன் நிறுத்தாத எந்தச் சமூகமும் வளர்ச்சி பெறுவதிற்கில்லை. பழமைக்கே பரிசுகளும் பாராட்டுக்களும் என்றால் இலக்கியமும் நாறித்தான் போகும். சாகித்திய அகாதெமி இப்படி ஒரு விதி செய்வதற்கு இயலாது என்றபோதிலும் நடுவர்கள் இத்தகைய கருத்தோடு செயல்பட முடியும்.

சாகித்திய அகாதெமி அரசின் சார்பில் இயங்கும் இலக்கியக் கழகம் என்பதால், இது தரும் விருதுகள் குறித்து நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. தனியார் வழங்கும் பரிசுகள் பற்றி நாம் எதுவும் சொல்வதற்கு இல்லை. அவர்களும் எந்த எந்தத் தேவைகளுக்காகவோ பரிசு வழங்குகிறார்கள். அவர்களைப் பற்றி இங்கு விவாதிப்பதுகூட அவர்களுக்குச் செய்யும் ஒரு மரியாதை ஆகிவிடும். அவர்களை விட்டுவிடலாம். சாகித்திய அகாதெமி அரசு நிறுவனம். இதன் தேர்வுகள் அதிகளவில் நியாயம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

நடுவர்கள் குறித்தும் நாம் பெரியதாகச் சொல்வதற்கில்லை. ஓர் உரிமையை நாம் கேட்டுப் பெறவேண்டும். பரிசுக்கென இறுதிப்பட்டியலில் யார் யார் இடம் பெறுகின்றனர்? நடுவர் மூவரும் பட்டியலில் இடம்பெற்ற எழுத்தாளரின் படைப்பு பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள். நடுவர்களுக்கிடையில் நடைபெற்ற விவாதங்களில் இறுதியில் என்ன முடிவுக்கு வந்தார்கள். இப்படி ஒரு விவரத் தொகுப்பை வெளியிடுவது அரசு நிறுவனம் என்ற முறையில் நாம் எதிர்ப்பார்க்கும் ஒரு நேரிய செயல். நடுவர் குழுவின் முடிவுகள் சிலசமயம் குறைந்த அளவுக்கேனும் மரியாதை

பெறுவதில்லை. விவரத் தொகுப்பை வெளியிடுவது என்றால் நடுவர் மூவரும் நமக்கு வந்து சேரும் எல்லாப் படைப்புகளையும் பழுதறப் படித்து சில மதிப்பீடுகளுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நடுவர் குழு ஒன்றில் நானும் பணி புரிந்தவன் என்ற முறையில் என்னால் இதை உறுதியாகச் சொல்லமுடியும். தமிழ் இலக்கியத்தின் தாழ்வுக்கு சாகித்திய அகாதெமி துணைபோவது ஒரு கேவலமான அரசியல். இன்றைய ஊழல் மிகுந்த சமூகச் சூழலில் இப்படியெல்லாம் எதுவும் நடைபெற்று விடும் என்று கனவு காண்பது நம் அறிவீனத்தையே வெளிப்படுத்தும்.

சாகித்திய அகாதெமி பரிசுக்கே அன்றி, ஞானபீடப் பரிசுக்குத் தகுதி உடைய இலக்கியவாதிகள் இங்கு இருக்கத்தான் செய்கின்றனர். நகுலன், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, லா.சரா., அம்பை நீலப்பத்மநாபன் ஆகியவர்களுக்கு இதற்கான தகுதி உண்டு. இராமானுசருக்குப் போய்ச்சேரவேண்டிய பரிசை இடையில் இந்திரா பார்த்தசாதி பெற்றுக் கொண்டது ஒரு விநோதம். இவர்களை நாம் கற்றதோடு, தமிழ் மக்களுக்கும் இவர்கள் படைப்புகள் போய்ச்சேரும் முறையில் பணிபுரிவது நம் கடமை. திறனாய்வாளர்களுக்கு இது முதற் பெருங்கடமை என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

சாகித்திய அகாதெமியின் கிளைகள் மாநிலம் தோறும், ஏதோ ஒரு பெயரில் செயல்படுவதை நாம் வரவேற்க முடியும். தமிழக அரசு இந்த வாய்ப்பை இது நாள்வரை தவறவிட்டிருப்பது, தமிழ் இலக்கியத்திற்கு நன்மை செய்வதாக இல்லை. நாங்களே எங்களுக்கு வேண்டிய ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்ற முறையில் உருவாக்கப்பட்டதுதான் குறள் பீடம். நமக்கு வேண்டியவர்களுக்கே பரிசுகளை, விருதுகளை வாரி வழங்குவதில் தேர்ச்சி பெற்ற தமிழக அரசு, குறள் பீடத்திற்கான பரிசு வழங்குவதிலும் ஊழல் செய்யாமல் இல்லை. தமிழ் இலக்கியம் இப்படியும் தமிழ் அறிஞர்களைக் கொண்டே தண்டிக்கப்படுகிறது. இத்தகைய போலித் தமிழ் அறிஞர்களால் அனைத்திந்திய அளவில் தமிழ் இலக்கியத்திற்கு என்ன மரியாதை கிடைத்துவிடும். கேரளாவையும், கர்நாடகத்தையும் நினைத்துப் பார்க்கும்பொழுது நாணித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

இனி தற்கால இலக்கியம் பற்றிச் சில சொல்ல வேண்டும். 1980-க்குப் பிறகு தமிழ் இலக்கியத்திற்குள் நுழைந்து இன்று சாதனையாளர்களாகத் திகழ்பவர் பற்றிச் சொல்லவேண்டும். தமிழ் பயிற்சிமொழியாக, ஆட்சிமொழியாக இல்லை என்பது ஆறு கோடி மக்களைக் கொண்ட ஓர் இனத்திற்கு எத்தனை பெரிய அவமானம். தமிழை அழிப்பதன் மூலம் தம் வாழ்வை வளர்த்துக் கொண்ட அக்கிரமக்காரர்களைப் பற்றி நாம் மரியாதையோடு சொல்வதற்கு என்ன இவர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள்.

ஆங்கிலத்திற்கே முதன்மை தந்து தமிழைத் தாழ்த்தப்பட்ட இனத்தோடு சேர்த்து அழிக்கும் நிகழ்ச்சி இன்று உச்சம் பெற்றுள்ளது. தமிழ் வரலாறு என நாம் இனியும் எத்தனை காலத்திற்குப் பெருமை பேசமுடியும். தமிழை வைத்து வணிகம் செய்பவர் தொகை இன்று எத்தனை ஆயிரங்களுக்குள் அடங்கும். தமிழகத்தின் இயற்கை வளங்களை அழிப்பதன் மூலமும், தமிழ் மக்களுக்குள் சாதிப் பார்வையைத் தூண்டி வளர்ப்பதன் மூலமும், பணம், பதவி, வெளிநாட்டில் குடியிருப்பு முதலிய தேவைகளுக்காகத் தமிழை ஓரத்திற்கு ஒதுக்குவதன் மூலமும் தமிழ் வாழ்வு என்ன ஆகும்? இப்படி நூறு கேள்விகளைப் பதற்றத்தோடு நாம் எழுப்புகிறோம். தமிழ் அழிந்து கொண்டிருப்பதைக் காண நம்மால் பொறுக்க இயலவில்லை.

தமிழ்ச் சான்றோர் என ஒருவர் என்ன தகுதி வைத்துத் தன்னைத் தானே பெருமைப்படுத்திக் கொள்ள முடியும். தமிழ் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் தமிழை எப்படி அழிக்க நேர்ந்தது. இது பொறுப்பதற்கில்லை என்ற கனல் தான் நமக்குள் ஏறுகிறது. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், பாரதியும், பாரதிதாசனும் வளர்த்த தமிழை நம்மால் எப்படி இழக்க முடியும்? தமிழைப் போற்றாத இனம் அயலவனுக்கு அடிமைப்பட்டு அழிவதைத் தவிர வேறு என்ன விதி நமக்கு இருக்கிறது. இப்படியெல்லாம் எப்படி நேர்ந்தன. யார் இதற்குப் பொறுப்பாளிகள்? நாம் சீற்றத்தோடுதான் கேட்கிறோம்? யார் நமக்குப் பதில் சொல்வார்கள்? அவர்கள் பதிலுரையில் எத்தனை சதம் உண்மை இருக்கும்.

மீண்டும் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கு வருவோம். உண்மையில் தமிழை, தமிழ் இலக்கியத்தை இன்றைய ஆற்றல்

மிக்க படைப்பாளிகள் காத்துவருகின்றனர். அரசியல்வாதிகளும், வணிகர்களும் தமிழை அழிப்பதில் முனைந்திருக்க, இலக்கியத்துறையில் தமிழின் ஆக்கத்திற்கென இவர்கள் பாடுபடுகின்றனர். இவர்களில் பலருக்கு நமக்குள் இருப்பதைப் போன்ற தமிழ்ப்பற்று இல்லை என்று இவர்களைக் குறை சொல்ல முடியும் என்றாலும் தமிழில்தான் இவர்கள் எழுதுகிறார்கள். நுட்பமாகவும், அழகியல் உணர்வோடும், அர்த்தச் செறிவோடும் எழுதுகிறார்கள். இவர்கள் படைப்புகளுக்குள் இடம் பெறுவது தமிழகத்து மக்களின் வாழ்வுச் சிக்கல்கள் தான். இவர்களின் பார்வை குறித்து விமர்சனம் செய்ய இடம் உண்டு என்ற போதிலும் இவர்களின் ஆக்கத் திறன்களை நம்மால் மறுக்க முடியாது. இவர்களுக்குள் செயல்படும் கவித்துவம் தமிழை மிகச்சிறந்த முறையில் அழகுபடுத்தி இருப்பதோடு நவீனப்படுத்தவும் செய்திருக்கிறது. இவர்கள் சிலரிடம் வெளிப்பட்டுள்ள அழகிய தமிழ் நடை எந்தப் பேராசிரியருக்கு வசப்பட இயலும்?

புதுமைப்பித்தனைத் தோளில் ஏற்றித் துதிபாடிக் கொண்டாடும் பெரியவர்களையும் மீறி இந்த இளைஞர்கள் உயிர்த்துடிப்போடு படைக்கிறார்கள். இவர்களைப் புதுமைப்பித்தன் பிறவிகள் எனப் பெயரிட்டு அழைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சிலரை இங்கு குறிப்பிடுகிறேன். கோணங்கி, ஜெயமோகன், பிரேம்–ரமேஷ் தற்பொழுது சு. வேணுகோபால் இவர்களை இப்படிக் குறிப்பிடுவதில் எனக்குத் தயக்கம் இல்லை. பெரியவர்கள் ஏதோ இவர்களைக் கண்டு கொள்வதற்கும், வாழ்த்துவதற்கும் தயங்குகிறார்கள். பெரியவர்கள் தம் மகுடங்களை இறக்கி வைப்பதற்கு ஏன் தயங்க வேண்டும்? தந்தையைக் காட்டிலும் ஆற்றல் பெறும் மகனை முன் சென்று வாழ்த்தாத தந்தையை நாம் மதிக்க முடியுமா?

1980–க்குப் பிறகு தமிழ் இலக்கியத்தில் புதிய போக்குகள் தோன்றி உள்ளன. தமிழுக்கு இவை புதிய ஆற்றலை வழங்குகின்றன. யதார்த்தவாதம் செத்துவிட்டது என்ற குரல் தீவிரமாக எழுந்தபோதிலும், யதார்த்தவாதம் மடிந்து விடவில்லை. மார்க்சிய வரையறைகளோடு கூடிய யதார்த்தவாதம் கேள்விக்குள்ளாகியதில் தவறு இல்லை. இலக்கியத்தின் பன்முகப் பரிமாணங்களை இவைகட்டவிழ்த்து விட முடியும்.

நண்பர்கள் தலித்தியம் என்றும், பெண்ணியம் என்றும், அமைப்பியல் என்றும், பின்–நவீனத்துவம் என்றும் உரத்துப் பேசுவதோடு, கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் எனத் தொடர்ந்து படைக்கிறார்கள். புதிய படைப்புக்களில் ஈடுபட்டவர்கள் எனச் சிறப்பாக சுமார் 20 பேர்களையாவது குறிப்பிட முடியும். என்.டி. ராஜ்குமார், யூமா, வாசுகி எனத் தொடரும் ஒரு பத்துப்பேர் கொண்ட பட்டியலில் இறுதியாகப் பாலை நிலவனையும் உள்ளடக்க முடியும். சிறுகதை நாவல் என்று வரும்பொழுது பாவண்ணன், கடைசியாக தமயந்தி எனப் பலரைக் குறிப்பிட முடியும். நாவல் ஆக்கத்தில் ஜெயமோகனின் சாதனை வியப்புக்குரியது. கல்கியின் வரலாற்று நாவல்களைப் படித்தவர்கள் ஜெயமோகனின் விஷ்ணுபுரத்தைப் படிக்கும் பொழுது வரலாறு குறித்து ஆற்றல் மிக்க பார்வையை யார் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடியும். இமயம், சோ.தர்மன், விசாலம் கடைசியாக எம்.ஜி. சுரேஷ் புதிய பார்வைகளோடு வந்திருக்கிறார்கள்.

மொழி பெயர்ப்புகளும் இங்கு வந்து குவிகின்றன. என்.கே. மகாலிங்கம் மொழிபெயர்த்த "சிதைவுகள்" அமரந்தா மொழி பெயர்த்த "சிலுவையில் தொங்கும் சாத்தன்" – தமிழுக்குப் புதிய பார்வையைத் தரக்கூடிய நாவல்கள். இன்றைய நம் அரசியல் மற்றும் பொருளியல் சூழலை 1980களில் கென்யாவின் கதையை இந்த நாவலில் காணமுடியும். எம்.ஜி.சுரேஷின் நாவல்கள் நமக்குள் விரிவான பார்வையை எழுப்பக்கூடியவை. ஆதிமனிதன் நமக்குள் சாகவில்லை. மரபணு மாற்றத்தோடு வரும் எதிர்காலம், ஏற்றத்தாழ்வை மேலும் பெருக்குவதாகத்தான் இருக்கமுடியும். போர் வெறியனாகத் திரிந்த அலெக்சாண்டருக்குள்ளும் ஓர் எதிர் மனிதன் இல்லாமல் முடியாது.

கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் நடந்த களை எடுப்புக்கள், தலைமையிலிருந்து ஒருவரைப் பிடித்து வெளியேற்ற நடைபெறும் சதிகள், வெளியேற்றப்பட்ட நிலையில் கட்சியையே நம்பி வாழ்ந்த அந்த மனிதன் தனக்குள் சீர்குலைந்து சிதைந்து போகிற சோகம். இவ்வகைக் கொடுமைகள் இரஷ்யாவில் மட்டும் நடைபெறவில்லை. இங்கும் தான் நடைபெற்றன என்பதைச் சரியாகவே ஜெயமோகன் பின்தொடரும் நிழலின் குரல் நாவலில்

சித்தரிக்கிறார். குறுகத் தரித்த மார்க்சியத்தைக் கொண்டாடும் கட்சிகளுக்கு இந்தப்படைப்பு உவப்பாக இருக்க முடியாது. பிரேம்–ரமேஷின் கவிதைகள், கதைகள், நாவல்கள் மற்றும் திறனாய்வுகள் அனைத்துமே ஆற்றலோடு புனைவு என்னும் தளத்தில் இயங்குகின்றன. இவர்களது படைப்புக்களில் வெளிப்படும் பன்முகப் பரிமாணங்கள் இதுவரை தமிழ் இலக்கியம் எதிர்கொள்ளாதவை.

இப்படியே மேலும் பலவற்றைச் சொல்வதை நிறுத்திக் கொள்கிறேன். தலித் இலக்கியவாதிகள் ஓர் இயக்கம் போல் செயல்படுவதை நாம் வரவேற்கிறோம். தொடக்க காலத்தில் மார்க்சிய இலக்கியவாதிகள், மார்க்சியர் அல்லாத பிற இலக்கியவாதிகளைக் காய்ந்ததைப் போல் இவர்களும் மற்றவர்களைக் காய்கின்றனர். இவர்களுக்குள்ளும் நிதானம் ஏற்படும் என்று நாம் நம்புகிறோம். இதன் காரணமாக தலித் மக்களின் வாழ்வியல் குறித்து இவர்கள் எழுதுவதை நான் மறுக்கவில்லை. இந்தச் சமூகத்தில் மேல்தட்டு மக்களைப் போலவே நடுத்தர மக்களாகிய நாமும் நாறித்தான் போயிருக்கிறோம் என்பதைத்தான் தலித்தியப் படைப்புகள் நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. இவர்களும் பிற மொழிகளிலிருந்து தலித் படைப்புகளை இறக்குமதி செய்கிறார்கள். இங்கும் தான் தலித் மக்கள் பேரவலத்தோடு வாழ்கிறார்கள். இவர்களின் கதையை, சுயசரிதைகளை ஆழ்ந்த அக்கறையோடு பதிவு செய்வதில் தலித் படைப்பாளிகள் முனைப்புக் கொள்ள வேண்டும். ஒரு படையெடுப்புப்போல் தமிழ் இலக்கியத்திற்குள் வரும் இவர்களை இருகரம் நீட்டி நாம் வரவேற்க முடியும். இன்று பெருகி வரும் சமூக அவலங்களுக்கு மத்தியில் நமக்குள்ளும் தலித் வாழ்க்கை வந்து கொண்டிருக்கிறது என்ற புரிதலோடு இவர்களின் வருகையை நாம் கொண்டாட முடியும். தலித் இலக்கியவாதிகள் தமக்குள் ஒரு இயக்கமாக செயல்படுவதைப் போல பெண்ணியலாளர் இலக்கிய இயக்கம் எனத் தம்மைத் திரட்டிக் கொள்வதன்மூலம் தமிழ்ச் சமூகத்தின் பெண்களின் அவலம், கலகம் எனப் பலவற்றைப் பலர் எழுத ஊக்குவிக்க முடியும். பெண்களின் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், திறனாய்வுகள் தனித்தனித் தொகுப்புக்களாக வெளிவர வேண்டும்.

பெரியதாகப் பேசப்படும் பகுத்தறிவு இயக்கமோ, தமிழியக்கமோ, பாரதிதாசன், கண்ணதாசன் முதலிய ஒருசிலரைத் தவிர நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு எதையும் தந்துவிடவில்லை. அறிவுமதி, தியாகு ஆகியவர்கள் சில அரிய விதிவிலக்குகள். மார்க்சிய இயக்கத்தவர்கள் இலக்கியம்/படைப்புக் கொள்கையில் சில கடுமையான தவறுகள் இருந்தபொழுதிலும் இவற்றையும் மீறி மிகச்சிறந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். பூமணி, செயப்பிரகாசம், பொன்னீலன், இன்குலாப் என்று தொடங்கி இன்னும் பலரைச் சொல்லமுடியும். இலக்கியத்தின் நவீனத்துவம் குறித்து இவர்களின் பார்வை விரிவு பெறத்தான் வேண்டும்.

அமைப்பியலோ, பின்–நவீனத்துவமோ மரபான தமிழிலக்கியத்திற்குக் கேடு எதுவும் செய்துவிடவில்லை. பழைய இலக்கியங்களை உடைத்துப் பார்ப்பதன்மூலம் புதிய வாசிப்புகளுக்கு இவர்கள் வழி திறக்கிறார்கள். இதனால் தமிழ் இலக்கியத்திற்கு உள்ளிருந்து புதிய வெளிச்சங்கள் கிளம்புவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இறுக்கம் அடைந்து எதுவும் தகர்க்கப்பட்டுப் புதியதற்கு வழிவிடத்தான் வேண்டும். காலந்தோறும் புதிய போக்குகளைப் படைத்து வரும் தமிழ் இலக்கியத்திற்கு உள்ளிருந்தே நாம் இதைச் செய்யமுடியும்.

எந்த இலக்கியத்திற்குள்ளிருந்தும் நம்மை, நம் காலத்தைக் கண்டறிந்து வாசிக்க முடியும். கண்ணகிக்கு என்றும் அழிவில்லை. மாதவியும், மணிமேகலையும் தமிழ் வாழ்விலிருந்து பிரிக்க முடியாதவர்கள். கோவலன் மீண்டும் மீண்டும் நமக்குள் உயிர்த்தெழுகிறான். இராவணர்களின் ஆதிக்கம் ராமனால் அழிக்கப்படத்தான் வேண்டும். அப்புறம் ராமனுக்குள்ளும் ஓர் ஆதிக்கவாதி தலையெடுக்கத்தான் செய்கிறான்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். முன்னைய பெரியவர்களும் சரி, இன்றைய இளைஞர்களும் சரி – இவர்களுக்குள் மார்க்சியம் குறித்து அக்கறை இல்லை. மனிதர்களை, அவர்களுக்குள் செயல்படும் முரண்பாடுகளை, வெற்றிகளை, தோல்விகளை ஆதிக்க உணர்வை, அடிமைத்தனத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு

மார்க்சியம் தவிர வேறு எங்கிருந்து பார்வையைப் பெறமுடியும். மார்க்சியத்தை ஒதுக்கிய நிலையில் தமிழ் வாழ்வை எப்படித் தோண்டித் துருவி ஆராயமுடியும். தமிழன் அகப்பட்டுள்ள நெருக்கடிகளைத் தமக்குள்ளும் கண்டுணராமல் தீவிரமான எந்தப் படைப்பை உருவாக்க முடியும். நமக்குள் டால்ஸ்டாய் இல்லையே, தாஸ்தாவெஸ்கி இல்லையே என்ற ஒப்பாரி பாடுவதில் அர்த்தம் இல்லை. உலகத் தரங்களை முன்னிறுத்தி உள்ளூர்த் தரங்களை நாம் எப்படி இழக்க முடியும்? நடுத்தர வர்க்க வாழ்க்கை வசதிகளைக் குறைந்த அளவிலேனும் அனுபவித்துக் கொண்டு மக்கள் வாழ்வில் உள்ள சிக்கல்களை எப்படி உணரமுடியும்? வரலாற்றில் எங்கே எப்படித் தமிழன் வீழ்ந்தான் என்ற கதையைக் கண்டறிந்து சொல்ல வேண்டாமா? ஆங்கில ஆதிக்கம் படைப்பாளிகளுக்குள்ளும் செயல்படத்தானே செய்கிறது? காலனி ஆதிக்கம் நமக்குச் செய்த கொடுமைகளை, நம்மைக் கூறுபோட்டதை மக்கள் வாழ்வுக்குள்ளிருந்து கண்டறிந்து எழுதவேண்டாமா?

மக்கள் விடுதலைக்கெனத் தோன்றிய பொதுவுடைமை இயக்கம், பிறகு எப்படித் தனக்குள்ளே சிதைந்து ஆதிக்கங்களுக்கு இடம் கொடுத்து, அரசு அதிகாரத்தில் இடம் பெறத் துடித்து – இப்படியெல்லாம் செய்வதன் மூலம் மக்கள் விடுதலைக்கு எதிராகச் சென்ற நாசம் பற்றி எத்தனை ஆயிரம் கதைகளை இங்கு எழுதமுடியும். மார்க்சிய இயக்கம் போலவே, திராவிட இயக்கமும் தமிழ் மக்களின் விடுதலைக்குக் குறைந்த அளவுக்கேனும் பாடுபட்டு – அப்புறம் அதிகாரம், பதவி செல்வம் எனச் சேர்த்துக் கொண்டு, வெற்றுத் துதிபாடிகளை உருவாக்கி மக்களின் அற உணர்வை அழித்து – இதன் மூலம் மக்கள் சக்தியை சின்னாபின்னம் ஆக்கி – இனி இவர்களை வைத்து எதுவும் செய்யலாம் என்ற நிலைக்கு எப்படி வந்தது. இந்தக் கதைகளை யார் சொல்வார். தனக்குள் மட்டும் தேடலை நிகழ்த்துவதாகக் கருதி, தொடர்ந்து கவிதைகளை, கதைகளை ஆயிரம் ஆயிரமாய் உற்பத்தி செய்யும் படைப்பாளிகளை நாம் எப்படிப் பாராட்ட முடியும்? வணிகச் சக்திகளுக்கு சிற்றிதழ்களும் பலியாகி அப்புறம் குழுச் சண்டைகளில் ஈடுபட்டுச் சிற்றிதழ் இயக்கத்தின் பன்முகப் பரிமாணங்களைத் தொடர்ந்து அழிப்பவர்களை எப்படிப் பாராட்ட முடியும். இந்தக் கதைகளை எல்லாம் மக்களிடமிருந்து திரட்ட

வரலாற்றுக்குள் செல்ல வேண்டும். ஊர் ஊராக அலைய வேண்டும். உழவர்கள் கைவினைஞர்கள், திருடர்கள், வேசிகள் என்று ஓர் ஆயிரம் பேரையாவது எழுத்தாளர்கள் சந்திக்க வேண்டும்.

சென்னையிலேயே முடங்கி அவ்வப்பொழுது சொந்த ஊருக்குச் சென்று சிலநாள் தங்கி, சிலருடைய கதைகளைச் சேகரித்துக் கொண்டு, அப்புறம் உணர்ச்சிமயமாக எழுதுபவர்கள் என்னவகை எழுத்தாளர்கள். இவர்களுக்குள் செயல்படுவது முதலாளியப் பார்வை அன்றி வேறு என்ன? தன்னைத் தொலைத்துவிட்டு நாயாய்ப் பேயாய் அலைந்து தனக்குள் ஆயிரம் கேள்விகளை எழுப்பி விடைதேடும் ஒருவனுக்குள் தான் ஞானம் பிறக்கும். உலகமயமாதல் முதலிய கொடுமையான சூழலில் தேசத்தையும் மக்களையும் தலைவர்கள் கைவிடும் சூழலில் ஆயிரம் தலைகள் விரித்து அசுரத்தனமாக முதலாளியம் நமக்குள் வருகையில் இந்த ஞானத்துக்கான தேட்டமும் உச்சளவில் தீவிரப்பட வேண்டும். ஓர் அசலான மார்க்சியவாதிக்கு அன்றி இந்த ஞானம் சாத்திய மில்லை. இவனுக்குள் டால்ஸ்டாயும், தாஸ்தாவெஸ்தியும் இயங்கத்தான் செய்வார்கள். அப்பொழுதுதான் தமிழ்ச் சமுதாயம் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளும் நெடுங்காலத் தமிழ் இலக்கியத்திற்குள் இத்தகைய ஆற்றல உண்டு. இதைக் கண்டறிந்து வளர்க்கத்தான் வேண்டும். வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பனையும் தோற்றுவித்த தமிழ்ச்சமூகம் பாரதி கருதியதைப் போல அமரத்துவம் பெறும்.

ஏற்றத்தாழ்வு வாழ்வை அழிக்கும்: சமத்துவமும் சமதர்மமும் வாழ்வை உயிர்ப்பிக்கும்.

நன்றி.

பன்முகம் – 3 – 2002

7. தமிழன்பன் கவிதைகளின் உள்ளியக்கம்

கவிஞன் என்பவன் தனக்குள் தேடி தன்னைப் பற்றி, தன் உள்ளியக்கத்தோடு கவிதைகள் எழுதுகிறான். புறத்தில் இருப்பது தனக்கு ஓயாமல் நெருக்கடிகளைத் தருகிற ஒரு சிக்கலான சமூகம். இந்த நெருக்கடிகள் கவிஞனுக்குள்ளும் நுழைந்து அவனை அலைக்கழிப்பதோடு அவனைப் புரட்டிப் போடுகின்றன. இந்தப் புரட்டலின்போது தன்னை நிலைப்படுத்திக்கொள்ள, நிறுவிக்கொள்ள தனக்குள் தேடி புதிய ஆற்றலை, புதிய வெளிச்சங்களை, புதிய பார்வையைப் பெறுகிறான். இதன்மூலமே தனக்கு நெருக்கடிகளைத் தந்த சமூகத்திற்கு எதிர்நிற்கின்றான். எதிர்வினை தருகிறான். இவ்வகையில் கவிஞன் தனக்குள் இருந்து படைக்கும் கவிதைகள் புதியவை. வாழ்வுக்குப் புதிய அர்த்தங்களையும், அழகையும் தரக்கூடியவை. இவை நமக்குத் தேவையான கவிதைகள். இவை ஒரு மொழிக்கு ஆற்றல் தரக்கூடிய அசலான கவிதைகள். இவ்வகைக் கவிதைகள் பலவற்றை உள்ளடக்கியது தமிழன்பனின் "என் வீட்டுக்கு எதிரில் ஒரு எருக்கஞ்செடி" என்ற கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பை முதன்மையாகக் கொண்டு இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். தமிழன்பனின் எல்லாத் தொகுப்பினுள்ளும் இவ்வகைக் கவிதைகள் அங்கங்கே இடம்பெறுகின்றன என்பது பற்றியும் பிறகு நான் பேசமுடியும்.

தமிழன்பன் கவிதைகளில் உள்ளியக்கத்திற்குள் செல்லும் முன் பொதுவாகக் கவிதையின் இயக்கம் குறித்துச் சுருக்கமாகப் பார்த்துக் கொள்வோம். கவிதை, கதை, பாடல், இலக்கியம் முதலியவை இல்லாமல் மனிதனுக்கு வாழ்வு இல்லை. கவிதை என்பதை மனிதனின் உள்ளூறுப்பு என்று கூடச் சொல்லலாம். எந்தஒரு மனிதனுக்குள்ளும் ஒரு கலைஞன் படைப்பாளி இருக்கிறான்; இயங்குகிறான். படைப்பியக்கம் தான் மனிதனை வரலாற்றில் முன்னோக்கித் தள்ளுகிறது. கவிதை இலக்கியத்தில் மட்டு மல்லாமல் அறிவியல் முதலிய பலவற்றினுள்ளும் செயல்படுவது இந்தப் படைப்பியக்கம். கவிதை என்பது இதன் ஒரு கூறு.

மெய்யியலும் இதன் ஒரு கூறுதான். கவிதைக்கு இலக்கணம் என்று வரையறைகள் கூறுவது சாத்தியமில்லை. கவிதை பல தளங்களில் இயங்குகிறது. கவிதை சொற்களைக் கொண்டு இயங்கும் எனினும், சொற்களைக் கடந்தும் கவிதை இயங்குகிறது. உவமை, உருவகம் முதலியவற்றின் மூலம் அல்லாமல் குறியீடு, படிமம் என்பதன் மூலம் கவிதை இயங்குகிறது. ஓசை நயம் இல்லாமல் கவிதை இல்லை. மரபுமுறை ஆற்றலில் சிலகூறுகள் கவிதைக்குள் எப்பொழுதும் உண்டு. மரபுக்கவிதை, புதுக்கவிதை என்றெல்லாம் வேறுபாடு கூறப்பட்டாலும் மரபுக்கவிதைதான் தன்னைப் புதுமையாய் புதுப்பிக்கொண்டு புதுக்கவிதையாகிறது.

கவிதையின் உள்ளியக்கத்தினுள் அறிவியலுக்கும், ஆன்மீ கத்திற்கும் முக்கிய இடமுண்டு. வாழ்வின் உள் சூழல்களில் தன்னைத் தேடுகிற கவிதை எல்லாக் காலங்களிலும் சமூக உணர்வின்றிக் கவிதை செயல்படுவதில்லை. எவ்வகை ஆதிக்கங்களுக்கும் எதிராக மக்கள்சார்பைக் கவிதை மேற்கொள்கிறது. கவிதை கதை சொல்லும். தன்னை நாடகப்படுத்திக் கொள்ளும். இசையாய்ப் பொங்கும். உரைநடையிலும் தன்னை வெளிப்படுத்தும். காவியமாகவும், புராணமாகவும் வடிவம் கொள்ளும். வேடிக்கை விளையாட்டுக்களிலும் கவிதை ஈடுபடும். கற்பனை இன்றிக் கவிதை இல்லை. இயற்கையோடு எப்போதும் உறவாடுவது கவிதை.

கவிதை இப்படிப் பலதளங்களில் இயங்கினாலும் கவிதை தன் உள் ஆழத்தில் இயங்குவது குறித்து இனிச் சொல்லலாம். ஒரு மொழிக்கு வளம் சேர்ப்பவை இவ்வகைக் கவிதைகள். இவ்வகைக் கவிதையைப் புரிந்து கொள்வதற்குக் கீழே ஒரு எடுத்துக்காட்டு தருகிறேன். சில நாட்களுக்கு முன்பு என்னைச் சந்தித்த ஒரு நண்பர் "கல்கி" இதழில் வெளிவந்த ஒரு கவிதையை எனக்குப் படித்துக்காட்டினார். இந்தக் கவிதையை எழுதியவர் அம்சப்பிரியா. கவிதையின் தலைப்பு "பிஞ்சுப்பாடம்". கவிதை இவ்வாறு செல்கிறது.

பள்ளியில் வைக்கப்படுகிற ஒரு குழந்தையின் அனுபவம் ஒன்றைச் சொல்கிறார் கவிஞர்.

“பட்டாம்பூச்சியை வரை என்று வற்புறுத்தினார் ஆசிரியர். நான் என் சிறகுகளை இழந்தேன். மதியை வரையச் சொன்னார் எனக்குள் ஈரம் இழந்தேன். சூரியனை வரையச்சொன்னார் என்னுள் இருள் கவிந்தது”

குழந்தையை வற்புறுத்தி எதையும் கற்பிக்க முடியாது. வற்புறுத்தும் போது குழந்தை தனக்குள் நசுங்கிவிடுகிறது. கவிதையின் வெளிப்பாட்டு வடிவம் இதைச் சொல்லுகிறது. கவிதைக்கு இது ஒரு வடிவம் மட்டுமே. நான் தொடர்ந்து சிந்திக்கிறேன். கவிதையின் இந்த வடிவம் நமக்கு மனநிறைவு தரவில்லை. காரணம் எந்த ஆசிரியரும் குழந்தைக்கு இப்படிக் கற்றுக் கொடுக்கமாட்டார். இப்படிக் கற்பிக்கவும் முடியாது. இந்தக் கவிதையை எழுதிய கவிஞருக்கும் இந்த உண்மை தெரிந்திருக்கத்தான் வேண்டும். அப்படியானால் இப்படி ஒரு கவிதையைக் கவிதை என்று கருதி அவர் ஏன் எழுதுகிறார்.

நம் வாழ்வுகுறித்து நாம் சிந்திக்கிறோம். இளமை முதற்கொண்டு இன்றுவரை நமக்குள் யார்யாரோ, என்னென்னவோ கற்பிக்கிறார்கள். அரசியல்வாதிகள், மதவாதிகள் என்று எத்தனையோ பேர். இப்படிக் கற்பிப்பதன் மூலம் நம்மை அவர்கள் என்ன செய்கிறார்கள். அவர்கள் தேவைகளுக்கு ஏற்ற முறையில் நம்மை உருவாக்குகிறார்கள். நம் சுதந்திரம், ஆளுமை வளர்ச்சி முதலியவை குறித்து அவர்களுக்கு அக்கறையில்லை.

தம் ஆசைகளை, ஆதிக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முறையில் நமக்குக் கற்பிக்கிறார்கள். அவர் நம் தலைவர். அவர் சொல்வதை நாம் நம்ப முடியும். அவர்தான் நம்மை ஈடேற்றுபவர். அவர் சொல்வதை நாம் கேட்பதே போதும். நமக்காக அவர் சிந்திக்கிறார், செயல்படுகிறார். இப்படி நம்பி நம்மை நாமே குறுக்கிக் கொள்கிறோம். நம் சிறகுகளை நாமே வெட்டிக் கொள்கிறோம். நமக்குள் ஈரமில்லை. இருளே நிறைகிறது. இப்படித்தான் மற்றவர்களின் கருவிகளாக நாம் மாறுகிறோம்.

இதைச் சொல்வதற்குத்தான் இப்படி ஒரு கவிதை, கவிஞர் எழுதியிருக்கிறார். நம்மையும் குழந்தைகள் எனப் பாவித்துத்தான் நமக்குள் பலரின் ஆதிக்கங்களைத் திணித்திருக்கிறார்கள். இப்படிப் புரிந்து கொள்ளும்போது கவிதைக்குள் நாம் இருக்கிறோம். நம் அனுபவங்களைக் கவிதை சொல்லுகிறது. குழந்தையைப் பற்றியது போன்ற கவிதை அதற்குள் ஆழ்ந்து செல்லும்போது, பல தளங்களில் நமக்கு அர்த்தப்படுகிறது. இப்பொழுது இந்தக் கவிதையே முழுமையான படிமமாகிறது. குழந்தைக் கவிதை என்று எழுதியிருப்போம் என்றால் கொஞ்சம் இரசனையோடு அகன்றிருப்போம். நம் உள்ளாழங்களில் தேடும்பொழுது, நம்மைக் கண்டடைகிறோம். இப்படி ஒரு வாழ்வு நமக்கு வாய்த்திருப்பது கண்டு வருத்தப்படுகிறோம். இதிலிருந்து நாம் விடுபட விரும்புகிறோம். கவிதையின் உள்ளியக்கம் என்பது இப்படி நம்மை உள்ளிழுத்துக் கொள்ளவேண்டும். இன்றைய வரலாறு பொருளியல், அரசியல் முதலிய பல்வேறு நெருக்கடிகளுக்கிடையில் சிக்கித்தவிக்கும் நமக்கு இப்படிக் கவிதைகள் தேவைப்படுகின்றன.

இத்தகைய புரிதலோடு தமிழன்பன் கவிதைக்குள் இனி செல்லலாம்.

மனிதன் தனக்குள் சிதைவு பட்டுக்கிடக்கிறான். இன்றைய தமிழக/இந்திய உலகின் அரசியல், பொருளியல் முதலிய சூழல்களில் நகரவாழ்க்கைச் சூழல் அவனை மேலும் சிதைவுகளுக்கு உள்ளாக்குகிறது. நாளடைவில் இதைப்பற்றி இவனுக்குள் உணர்வும் மரத்துப்போகிறது. ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் இரண்டு நண்பர்கள். ஒரே பேருந்தில் அலுவலகத்திற்குச் சென்று திரும்புகிறார்கள். மதிய வேளையில் உணவைப் பகிர்ந்துக் கொள்கிறார்கள். தேவைப்படும் பொழுது ஒருவரிடமிருந்து மற்றவர் கடன்வாங்கிக் கொள்கிறார்கள். கொடுக்கல் வாங்கலில் கராராகவும் இருக்கிறார்கள். இவ்வளவுதான் இவர்களுக்கு இடையில் நட்பு. இதற்குமேல் இதயங்கள் கலப்பதில்லை. ஒருவருக்காக இன்னொருவர் கண்ணீர் விடமுடியாது. அலுவலகங்களில் எசமானர்களுக்கு இதமாக நடந்து கொள்ளவேண்டும். அவன் கோபிக்கலாம். நாம்

கோபிக்க முடியாது. அவன் நம்மைத் தண்டிக்கலாம். உள்ளே நமக்குச் சினம் ஏற்பட்டாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். திரைப்படம் பார்க்கச் செல்கிறோம். கதாநாயகன் தன் ஆத்திரம் தீர எதிரியை அடிக்கிறான், உதைக்கிறான். நமக்குள்ளும் இருக்கிற ஆத்திரம் ஓரளவு தணிகிறது. நாளடைவில் என்னாகிறது. நமக்குள் இருக்கிற மனிதனை இழக்கிறோம். போலி மனிதனாகி அதையே வாழ்க்கை என்று கருதி வாழ்ந்துவிட விரும்புகிறோம். நமக்குள் இருக்கிற கவிதையை நாமே கிள்ளி எறிகிறோம். எனினும் மனம் கேட்பதில்லை. அவ்வப்போது நம்மோடு முரண்படுகிறது. நம்மைத் துன்புறுத்துகிறது.

காலமெல்லாம் நாடகங்களில், திரைப்படங்களில் எத்தனையோ வேடம் தாங்கி யார்யாருக்கோ கத்திக் கதறிக் கண்ணீர் விட்டு நடித்த வாழ்க்கை. இந்த நடிகன் இப்பொழுது மரணத் தருவாயில் இருக்கிறான். இவன் இப்பொழுது தன்னைப் பற்றிச் சிந்திக்கிறான். தனக்காக இவன் வாழவில்லை. எவரெவர் வாழ்க்கையையோ தன்மேல் இட்டுக்கொண்டு நடித்திருக்கிறான். தனக்குள் தேடவில்லை. தன்னைக் கண்டுகொள்ளவில்லை. மரணத் தருவாயில் தன் இழப்புக்காக வருந்துகிறான். இவன் வாழ்ந்தது போலி வாழ்க்கை. அசலான வாழ்க்கை பற்றி இவன் அறியவே இல்லை.

இவனோடு சேர்ந்து நாமும் நம் வாழ்க்கை குறித்துச் சிந்திக்கிறோம். நாமும்தான் யார்யாருடைய ஆசைகளுக்கோ கட்டுபபட்டு யார்யாருடைய தேவைகளையோ நிறைவேற்றி, யார்யாரிடமோ நடித்து, போலித்தனமாக புன்னகை செய்து நட்பென்பதை அறியாமல் இயற்கையோடு உறவுகொள்ளாமல், பேருந்தில் மோதி தெருவில் அடிப்பட்டு நாறிக்கிடக்கும் ஒரு நாய்போல நம்மை நாமே அழித்துக்கொண்டு நமக்குள் இருக்கிற கவிதைகளை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்க்கை நம்மைத் தண்டித்திருக்கிறது. எனினும் ஏதோ ஒரு உணர்வு துடிக்கிறது. நமக்குள் நம்மால் அடிமையாக இருக்க முடியவில்லை. ஏனிந்த வாழ்க்கை, எதற்கிந்த வாழ்க்கை என்று கேட்டுக் கொள்கிறோம்.

நகரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு மனையில்

நான் வாழ்கிறேன். என் வீட்டுக்கு எதிரில் ஒரு எருக்கஞ்செடி. அதைப் பொருட்படுத்துவார் யாருமில்லை. வானம் தவறிப் பெய்கிற மழையில் அது தளிர்க்கிறது. இயற்கை கொஞ்சம் அதற்குப் பசுமையை வழங்கியிருக்கிறது. பட்டாம்பூச்சிகள் கூட வந்து அமர்வதில்லை. நகரத்தில் யாருக்கும் வேண்டாத ஓர் இடத்தில் அந்தச் செடியும் வளர்ந்து இருக்கிறது. அதுவும் மொக்கு விடுகிறது. பூக்கிறது. அதன் அழகை ரசிப்பதற்கு யார் இருக்கிறார்கள்? உண்மைதான். ரோஜாவை நேசிக்கிற மக்கள் எருக்கஞ்செடியை மதிக்கமாட்டார்கள். எருக்கம்பூ யாருக்கும் கிளர்ச்சி ஊட்டுவதில்லை. மணம் பரப்புவதில்லை. எனினும் அதுவும் ஓர் உயிர். இயற்கையில் தவிர்க்க முடியாத ஓர் உறுப்பு. கிடைக்கிற இடத்தில் அதுவும் வேர்பிடித்துக் கிளைபரப்பி மலர் பூத்து வாழத்தான் செய்கிறது.

ஒரு கவிஞன் கண்ணிலிருந்து இந்த எருக்கஞ்செடி தப்புவதில்லை. நகரச் சூழலில் இவன் தனக்குள்ளும் ஒரு எருக்கஞ்செடியாய் உணர்கிறான். இவனுக்குள் இன்னும் ஓர் மனிதனாக இருக்கிறான். மனிதனாக இருப்பவன் தனக்குள் இயற்கையோடு உறவுகொள்ளாமல் இருக்க முடியாது. இவன் தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக் கொள்கிறான். இவன் தன் வயிற்றுப்பாட்டிற்காக மற்றவர்க்கு அடிமையாக இருக்கமுடியாது. இவனுக்குள்ளும் கனல் இருக்கிறது. அதை ஊதிப்பெருக்க வேண்டும். தனக்குள் சுடரவேண்டும். சுடரும்போது இவன் தன்னை உணரமுடியும். வானத்தோடு, நட்சத்திரங்களோடு இவன் உறவுகொள்ள முடியும். மண்ணோடு இவன் மக்கி மடியவேண்டிய தில்லை. இவன் தன்னை உணரத் தொடங்கியிருக்கிறான். இவனுக்குள் கவிதைகள் பூக்கின்றன.

இவன் தன்னை ஓவியரைக்கொண்டு அழகுபடுத்தி ஒரு ஓவியனாய் வரைந்து கொள்ள விரும்புகிறான். இரவிவர்மா வாளி நிறைய வண்ணங்களோடு வந்து வண்ணங்களை நிறைத்து இவனை ஓவியமாய் அழகுபடுத்தி வரைகிறார். ஓவியத்தைப் பார்த்த இவனது தாய் சொல்லுகிறாள். இவன் என் மகன் இல்லை. நான்தந்த இரத்த சிகப்பு இந்த ஓவியத்தில் இல்லை. புகழ்பெற்ற சிற்பி ஒருவர் இவன் உருவத்தை, முகத்தைச் செதுக்குகிறார்.

கூர்மையான மூக்கு. இதைப்பார்த்த தந்தை சொல்கிறார். "எங்கள் முன்னோர்களின் அடையாளம் இந்த மூக்கில் இல்லை". பிகாசோ வருகிறார். அங்கும் இங்கும் சில கோடுகளில் இவனை வரைகிறார். இந்த ஓவியம் இவனுக்கு அழகியதாக இல்லை. முனுமுனுக்கிறான். பிகாசோ சொல்கிறார், "உன்னை நான் அழகுபடுத்தி என்னால் வரையமுடியாது. உனக்குள் உள்ள மனிதனைத்தான் என்னால் வரையமுடியும். அழகுபடுத்தி வரைவதற்கு வேறு ஆளைப்பார்". இப்படிச் சொல்லிவிட்டு பிகாசோ நகர்ந்தார். உள்ளே இருக்கிற மனிதனை மறைத்து, புறத்தில் அவனை அழகுபடுத்துவது போலித்தனம். உண்மை நமக்கே வெளிப்படவேண்டும்.

இவன் ஒருசமயம் தெய்வத்தை நம்பி இருந்தான். இவன் ஆத்திகனாக இருந்தான். புரோகிதனை நம்பினான். தெய்வம் இவனைக் காப்பாற்றவில்லை. எத்தனையோ பேர் வந்து தெய்வத்திடம் தம் குறைகள் சொல்லி முறையிடுகிறார்கள். கோவிலுக்கு வெளியில் இருக்கும் மரத்தில் தம் குறைகள் தீர்வதற்கென முடிச்சிட்டு வைக்கிறார்கள். மரத்தின் கிளைகள் முழுவதும் முடிச்சுக்கள். கோவிலில் இருக்கிற ஆத்தாளுக்கும் மனம் நோகிறது. என் குறையை யார் தீர்ப்பார்கள். யார் குறையை என்னால் தீர்க்கமுடியும். மரத்திற்கும் தான் பெரும் சுமை, பெரும் வேதனை. ஒரு நாள் அடித்த பெரும் காற்றில் மரம் சாய்கிறது. இப்பொழுதேனும் மரம் நிம்மதியாக இருக்க முடியுமோ? என்னமோ! இப்படித்தான் ஒருநாள் கடவுளும் தற்கொலை செய்துகொண்டார். யார்யாரோ வந்து தம் குறை தீர்க்க வேண்டிக் கண்ணீர் விட்டு அழுவதை எத்தனைநாள் எதுவும் செய்யமுடியாமல் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கமுடியும். ஆகவே கடவுளும் ஒருநாள் தற்கொலை செய்து கொள்கிறார்.

மதம் மனிதனைக் காப்பாற்றவில்லை. கடவுள் மனிதனைக் காப்பாற்ற வில்லை. மதமோ கடவுளோ தோன்றிய காலத்தில் நான் உன்னைக் காப்பாற்றத்தான் வந்திருக்கிறேன் என்று முழங்கின. வேகம் கொண்ட யானையைப் போலப் பிளிறின. யானையின் ஆற்றலும் அழகும் பெருமிதமும் கண்ட மக்கள் வியந்தனர்.

யானை மதர்ப்போடு இருளை, எதிரிகளை, தடைகளை தகர்ப்பதெனக் கிளம்பியது. நம் கட்சிகளைப்போல, தலைவர்களைப் போல, புதிய புதிய தத்துவங்களைப் போல யானையும் தான் ஆரவாரத்தோடு நடையிட்டது. கடைசியில் என்ன ஆயிற்று? யார் யாரோ பழங்கள் தந்தனர். மாலைகள் இட்டனர். யானைக்கு வேண்டியதை நிறைவாகவே கொடுத்தனர். அவர்களுக்கு யானையும் கட்டுப்பட்டு மதர்ப்படங்கி தரையில் கிடந்தது. மதங்கள் இப்படி மாய்ந்து போயின. மதங்களுக்குள் அகப்பட்ட மனிதன் வெளியில் வரவேண்டும். வெளியில் வராமல் இருக்க முடியாது. இவனைக் காப்பாற்ற யாரும் கை கொடுக்க மாட்டார்கள். தன் கையைத் தானே ஊன்றி நிமிர்ந்து நிற்க வேண்டும். இவனால் முடியும். நிமிர்ந்து நிற்க முனைந்தால் இவனுக்கு வானகம் வசப்படும். இவன் கூனிக்குறுகி, அடிமைப்பட்டு, தனக்குள் சிதைந்து, தன்னை நொந்து கொண்டு வாழ வேண்டியது இல்லை. இவனுக்குள்ளும் ஒரு விசுவரூபம் உண்டு. வரலாற்றின் வழியே வளர்ந்து வந்தவன் இவன். இயற்கையோடு இணைந்தவன் இவன். பிரபஞ்சத்தின் முழுப்பரப்பையும் இவன் தழுவிக் கொள்ள இயலும்.

இந்த மனிதன் தனக்குள் கடல் போன்றவன். எந்தப் புயல் காற்றையும் கண்டு கலங்காதவன். எத்தனை திமிங்கலங்கள் தனக்குள் உலவினாலும் தன்னிலை திரியாதவன். தனக்குள் இருக்கும் பேரமைதியையும், பெருமிதத்தையும் யாராலும் குலைக்க முடியாது. ஆனாலும் கடல் கரையில் மோதும் போது இதன் அலைகள் கரையில் நெடுந்தொலைவு செல்லுகின்றன. கடலோடு இந்த அலைகள் பின்வாங்குவதில்லை.

கரையேறிய அலைகள் கூரிய கற்களால் கிழிபடுகின்றன. தம் வேகம் இழக்கின்றன. சிறுபுள்ளும் கூட இந்த அலைகளைக் கிழிக்கிறது. கதிரவன் காயும்போது இந்த அலைகள் காய்ந்து வற்றி விடுகின்றன. மனிதனும் இப்படி தன் வரலாற்றை, தன் சமூக வாழ்வை, பிரபஞ்சத்தோடு தனக்கிருக்கிற ஒத்திசைவை, இழந்து விட்டுத் தனித்துத்தன் ஆற்றல் இழந்து சிறுமைகளுக்கு இடம் கொடுத்து சிதைந்து அழிந்துவிட முடியாது. இவன் தன்னை உணர வேண்டும். தன்னைத் திரட்டிக் கொள்ள வேண்டும்.

தன்னை உணர்ந்த மனிதன் தன் கரங்களை உயர்த்தி வானத்தை, விண்மீன்களைத் தழுவ முடியும். கடல் ஆழத்தினுள் கைநீட்டி, தன் ஆழம் காணமுடியும். கடலும் இவனைத் தழுவிக் கொண்டு ஒளியாய் இவனைப் பிறப்பிக்கும். அப்புறம் மவுனங்களில் இவன் ஆழ்வான். இனி இவனுக்கு மரணமில்லை.

இனி, மீனோடு மீனாக இவனால் உலவ முடியும். வானத்தில் பறவையோடு இவனும் பாடிச் செல்ல முடியும். இவன் தனக்குள் இசையாக இருக்கிறான். வீணையில் நரம்புகளில் எழும் இசையோடு இவன் இயைந்து செல்வான். மழையோடு பேச இவனுக்குள் ஈரம் இருக்கிறது. கிழக்கில் வெளுக்கும் போது, இவனும் ஒளியாய் உதிப்பான். இவனுக்குள் இனிப் பொய்மை இல்லை. உண்மையைத் தவிர வேறு எதுவும் இவனுக்குள் இல்லை. இனி இலக்கு என்று எதையாவது வைத்துக்கொண்டு இவன் பயணம் செய்ய மாட்டான். பயணமே இவனுக்கு முக்கியம். வாழ்வைப் புரிந்து கொண்டான். ஆகவே மரணத்தையும் நேயத்தோடு இவனால் ஏற்க முடியும்.

கவிதையும் மெய்யியலும் இங்கு கைகோர்த்துக் கொள்கின்றன. கவிதை என்றோ மெய்யியல் என்றோ இங்கு வேறுபாடு இல்லை. மனத்தின் உள் ஆழங்களுக்குச் செல்லும்போது கவிதை பொங்குகிறது. வாழ்வு இப்பொழுது அர்த்தம் பெறுகிறது; அழகு பெறுகிறது. இங்குதான் மனிதன் விடுதலை பெறுகிறான். இனி இவனுக்குள் அடிமைத்தனம் இல்லை. இனி இவனால் எவருக்கும் ஊழியம் செய்ய இயலாது. இவன் உயிர்களோடு, இயற்கையோடு ஒன்றியவன். ஒரு கைப்பிடி அளவு விதைகளைச் சேகரித்து மீண்டும் பயிரிடுவதற்காக இனித் தன் உயிரைக் கூட இவன் துச்சம் என மதிப்பான். நிலத்தில் விழுந்த விதைகளோடு இவன் சேர்ந்து முளைப்பான். இப்படித் தன்னை மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்வான்.

நகரத்தில் வாழ்கிறபோது, இவன் நரகத்திற்குள் வசப்படமாட்டான். இவனுக்கு அன்பு செய்யத் தெரியும். கொடுத்து வாங்குவது என்ற உணர்வு இனி இவனுக்குள் இல்லை. எதற்காகவும் இனி அவன் தனக்குள் முடிச்சுக்கள் போட்டுக்

கொள்ள மாட்டான். கடவுளுக்கு இவன் இனி சுமையாக மாட்டான். இவனுக்குள் இனி கடவுளுக்கும் விடுதலை உண்டு. இவன் ஒரு வகையில் நாத்திகன். இன்னொரு வகையில் ஆத்திகன். மரங்களை வெட்டித் தன் தேவைக்காக இவன் நாற்காலிகள் மேஜைகள் செய்து கொள்ள மாட்டான். வாழ்க்கை இவனுக்குள் வெற்றிடமாய், அதே சமயம் நிறைவாய் இருக்கிறது. கவிதை என்று தனக்குள் ஒருவன் தேடிக் கொண்டே போனால் இறுதியில் இவன் கவிதையாகவே மாறுகிறான். தமிழன்பனும் இந்த வகையில் ஒரு அசலான கவிஞர்.
17.7.2003

"எருக்கஞ்செடி" கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் கவிஞர் தமிழன்பரின் பார்வையை ஒரு வகையில் விசுவரூப தரிசனம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். கவிஞனுக்கு மட்டுமே தட்டுப்படுகிற பார்வை இது என்று சொல்ல முடியாது. சமயங்களில் இந்தப் பார்வை பதிவு பெற்று இருக்கிறது. பகவத் கீதையில் இந்த விசுவரூப தரிசனம் இடம் பெறுகிறது. ஒரு மார்க்சியன் என்ற முறையில் இதை என்னால் விளக்க முடியும் என நம்புகிறேன். அதாவது மனிதனுக்குள் தேடிச் சென்றால் பல்லாயிரம் ஆண்டுக்கால வரலாற்றை மாபெரும் சமூக இயக்கத்தை, இயற்கையின் பெரும் வீச்சை, இவற்றையெல்லாம் உள்ளடக்கிய பிரபஞ்சத்தின் பேரியக்கத்தை மனிதன் தனக்குள் காண முடியும். மாபெரும் பிரபஞ்சம் என்ற பேரியக்கத்தினுள் ஒருதுளி இந்த மனிதன். இவ்வகையில் பிரபஞ்ச இயக்கத்தோடு இவன் கலந்தவன் என்பது மட்டுமல்ல மறைந்தவனுமாவான். இவனுக்குள் மண்ணும் வானமும் இணைகின்றன. கடலும் காற்றும் இவனுக்குள் இயங்குகின்றன. இவனுக்குள் காலம் இல்லை, எல்லைகள் இல்லை. இந்த மனிதன் தான் சமயங்கள் சொல்லும் கடவுளுக்கும் கருவாய் அமைபவை. இவனுக்குள் கடவுளும் கரைந்து விடுகிறார்.

பிரபஞ்ச இயக்கத்தைத் தனக்குள் கண்ட மனிதன் இயற்கையிடம், உயிர்களிடம் பேரன்பு கொள்ள முடியும். இவனுக்கு மரணம் இல்லை. குறுகிய எல்லைகளுக்குள் இவன் சிறைப்பட மாட்டான். தர்க்கங்களுக்குள், சாதி மதம்

முதலியவற்றுக்குள் இவன் அடங்குவதில்லை. இவன் தனக்குள் வர்க்கம் கடந்தவன். சாதி மதங்களைக் கடந்தவன். சாதி மதங்களுக்குள் இவனைச் சில ஆதிக்கங்கள் முடக்க முயன்ற போதும் இவன் அவற்றைத் தகர்த்துக் கொண்டு முன் செல்வான். இவன் பேரழகும் பேராற்றலும் உடையவன்.

சமயங்களில் சொல்லப்படும் விசுவரூபம் என்பது மனிதனைக் குறித்த பார்வை என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது. வரலாற்றுச் சூழலில் இயற்கையோடு, பிரபஞ்சத்தோடு தன்னைக் கண்ட மனிதனின் இந்தப் பார்வையைத்தான் சமயங்கள் தனக்குள் பதிந்து வைத்திருக் கின்றன. உண்மையில் சமயங்களில் இருந்து இந்தப் பார்வையை நம்மால் விடுவிக்க முடியும். இந்தப் பார்வையைப் புனிதப்படுத்தி மாயைகளுக்குள் முடக்கி வைத்திருந்த சமயங்களின் ஆதிக்கத்தி லிருந்தும் மனிதனை நம்மால் விடுவிக்க முடியும். இவ்வகையில் சமயங்களோடு நம்மால் உரையாட/உறவாட முடியும். கடவுளர்களோடு கைகோர்த்துக் கொள்ள முடியும். சமயங்கள் சொல்லும் புனிதர்களை நாம் மனிதராக்க முடியும். சங்கரர் மட்டும்மல்ல, புத்தரையும் நம்மால் புரிந்து கொண்டு போற்ற முடியும். ஜே.கே., ஓசோ முதலியவர்களும் நமக்கு நெருக்கமாக முடியும்.

"எருக்கஞ்செடி" கவிதைத் தொகுப்பில் தமிழன்பன் வெளிப்படுத்தும் இந்தப் பார்வையை எங்கிருந்து பெற்றார், எப்படிப் பெற்றார் என்பது ஒரு கேள்வி. ஒரு கவிஞனாக இருந்து மட்டும் இந்தப் பார்வையை அவர் பெற்றிருக்க முடியாது. ஒரு மனிதனாகத் தன்னை உணர்வதன் மூலம் இந்தப் பார்வையைப் பெற முடியும். எந்த ஒரு மனிதனுக்குள் இருக்கும் ஒரு கவிஞன் இந்தப் பார்வை நோக்கில் எளிதாக இயங்க முடியும். மதம், கடவுள் முதலியவற்றை மறுத்த நிலையில் தமிழன்பன் பெற்றிருக்கிற இந்தப் பார்வையை புறத்திலிருந்து அகம் நோக்கிய தேடலில் பெறுகின்ற பார்வை என்று நான் கருதுகிறேன். இதன் காரணமாக இந்தப் பார்வையை எத்தனை அழுத்தத்தோடு, எவ்வளவு காலம் இவரால் நிலைத்திருக்க முடியும் என்பதும் கூட எனக்குள் ஒரு கேள்வி.

என்னைப் பொறுத்தவரை புறத்திலிருந்து இந்தப் பார்வையைப் பெற்றதைவிடவும், அகத்திலிருந்து உள் நோக்கிய தேடலில் இந்தப் பார்வையை நான் பெற்றேன் என்பது தான் சரியாக இருக்கமுடியும். இதை இங்கு சுருக்கமாக நான் சொல்ல வேண்டும்.

சமயம் பற்றிய எனது அனுபவமும், மார்க்சியம் பற்றிய புரிதலும் இத்தகைய பார்வைக்கு என்னை இட்டுச் சென்றன. கல்லூரி வாழ்வின்போது விவேகானந்தர் முதலியவர்களை ஆழ்ந்து கற்றதன் விளைவாகச் சிலகாலம் தியானத்தில் ஈடுபட்டு என்னை நானே பிரம்மம் என்று உணர்ந்தேன். உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் தியானத்தை என்னால் தொடர இயலவில்லை. எனினும் பிரம்மம் என நான்கண்ட காட்சியைப் புரிந்துகொள்ளப் பெரிதும் முயன்றேன்.

எனக்குள் ஆழமாக இடம் பெற்றிருந்த கடவுள் பற்றிய உணர்வில் இருந்தே இந்தக் காட்சி எழுந்திருக்கமுடியும். என் அறிவுக்குப் புலப்பட்ட ஒன்று எனக்குள் வெளியில் இருந்து வந்திருக்க முடியாது. அதன் பிறகு மார்க்சியத்தை ஆழமாகக் கற்றேன். மாபெரும் மனித வரலாற்றில், சமூகத்தில் நான் ஒருதுளி. இயற்கை இல்லாமல் நான் இல்லை. இவற்றிலிருந்து என்னை நான் சேகரித்துக் கொள்கிறேன். வேறு எங்கிருந்து என்னை நான் தேட முடியும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் இயற்கையோடும், சமூகத்தோடும், தன்னோடும் ஒன்றியிருந்தான் என்பதை மார்க்சு விளக்கியிருக்கிறார். வர்க்க ஏற்றத் தாழ்வுகள் தனிவுடமை, அரசு முதலியவை தோன்றிய வரலாற்றுக் காலத்தில் மனிதன் இயற்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும், தன்னிலிருந்தும் பிரிந்தான். பிளவுபட்டான். தனக்குத்தானே அந்நியமானான். இக்காலச்சூழலில் எத்தனையோ துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் உள்ளான போதிலும் வரலாற்றுக்கு முற்பட்ட அந்த ஆதிப் பொதுமையைத் தனக்குள் அவன் இழக்கவில்லை. எல்லாவற்றோடும் அவன் ஒன்றியிருந்த அந்த ஆதிகாலத்தில் தான் வாழும் இனக்குழுவில் போர் இல்லை, பகை இல்லை. எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டான்.

இவ்வகைச் சமூகம் வரலாற்றுக் காலத்தில் இவனுக்கு இல்லை எனினும் இந்த ஆதிப் பொதுமை இந்த மனிதனின் கனவுகளில், கற்பனையில், கதைகளில், இலக்கியங்களில் தொடர்ந்தன. இவன் படைத்த கடவுளர்க்குள் இந்த ஆதிப் பொதுமைச் சமயம்தான் கருவாய் இருந்தது. காலத்தில் சமூகத்தில் என்னதான் ஏற்றத் தாழ்வுகள் பெருகினாலும் ஆதிப் பொதுமைச் சமூகத்தின் கருவை இவன் இழக்கவில்லை, அதைப் போற்றினான், வழிபட்டான்.

உண்மையில் இந்தக்கனவை மார்க்சிய நோக்கில் பொருள் படுத்தும்போது இதைச் சமத்துவம் என்றும், சமதர்மம் என்றும் நம்மால் காணமுடியும். தர்க்கங்களாக, சாதி மதங்களாக சமூகம் பிளவுபட்ட நிலையிலும் அந்தப் பொதுமை என்ற கனவை இவனால் இழக்க முடியாது. இந்தக் கனவை எதிர்காலத்திலேனும் இவன் நனவாக்க வேண்டும். வர்க்கங்களைக் கடந்தும் இந்த உணர்வோடு அவன் ஒன்றியிருக்கிறான். வரலாறு, சமூகம், இயற்கை, பிரபஞ்சம் முதலிய எல்லாவற்றையும் இவற்றோடு தன்னையும் இணைத்துப் பார்க்கிற இந்த மனிதனின் பார்வைதான் விசுவரூப தரிசனம். மார்க்சியத்துக்குள் வந்து, அதனுள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவன் இந்தப் பார்வையை என்றும் இழக்க முடியாது.

“எருக்கஞ்செடி” கவிதைத் தொகுப்பில் தமிழன்பன் அவர்களிடம் வெளிப்படும் பார்வையை நம்மால் இப்படி ஆழமாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. அவரும் மார்க்சியத்திற்கு நெருக்கமாக இருப்பவர். பெரியாரிடத்தோடு, பலவற்றின் அரசியலோடு அவர் தன்னை முடக்கிக் கொள்ள வில்லை. மதம் குறித்தும், கடவுள் குறித்தும் இன்னும் ஆழமான பார்வையை அவராலும் பெற முடியும். அந்த நிலையில் இந்தப் பார்வையை அசலான பார்வை என்று தனக்குள் வளர்த்துக் கொள்ள இயலும். தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கிற பார்வை இது. பாரதிக்குள் இயங்கிய இந்தப் பார்வையை நம்மால் எளிதாக வரித்துக் கொள்ளவும் இயலும். பாரதிதாசனுக்குள்ளும் இயங்கிய தமிழ் உணர்வினுள் இதனை நாம் காணமுடியும்.

8. பாரதி—இன்னும் ஒரு பார்வை

பாரதி குறித்து ஆய்வுகள் இன்றுவரை தொடர்கின்றன. பாரதி இலக்கியம் என்று தனித்துச் சொல்லத்தக்க அளவில் தமிழில் ஒரு தனிவகை இலக்கியம் தோன்றியிருக்கிறது. பாரதியின் கட்டுரை, கவிதைகள் முதலிய படைப்புக்கள் இன்றும் தொடர்ந்து கண்டறியப்பட்டு காலவரிசையிலும் தொகுக்கப்படுகின்றன. பாரதி மகாகவியா இல்லை? என்று சென்ற நூற்றாண்டு முப்பதுகளின் இறுதியில் தொடங்கிய விவாதத்தில் கு.ப.ரா., சிட்டி, செல்லப்பா, பாரதிதாசன், ஜீவா முதலியவர்கள் கலந்து கொண்டதோடு இன்னும் விரிவாகத் தொடர்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

பாரதிஅன்பர்கள் என்று தமிழகத்தில் ஒரு பெரும் தொகையினர் தொடர்கின்றனர். பாரதி ஆய்வாளர்கள் என்ற முறையிலும் பலரைக் குறிப்பிடலாம். பாரதியின் ஆளுமை தமிழகத்தில் பெரும் மரியாதைக் குரியதாக நிலைபெற்று வருகிற சூழலில் அண்மைக்காலத்தில் சில கடுமையான விமர்சனங்களும் எழுந்துள்ளன. பெரியார் பாரதியோடு முரண்படுவதற்கு உள்ள காரணங்கள் புரிந்து கொள்ளக்கூடியவை. ஆனால் இப்பொழுது தலித்தியச் சார்பிலிருந்து எழுந்துள்ள தாக்குதல் குறித்து நாம் இங்கு ஆராய வேண்டும். இவற்றிலும் சில கூறுகளைத் திறனாய்வுகள் என்று நாம் மரியாதையோடு அழைக்கலாம். இவற்றோடு தொடரும் கடுமையான தாக்குதல்தான் பாரதி ஆய்வாளர்களைக் கலங்க வைக்கக் கூடியவை.

அண்மையில் "தலித் முரசு" இதழில் தொடர்ச்சியாக வந்த தன் கட்டுரைகளைத் தொகுத்து மதிமாறன் பாரதிய ஜனதா பார்ட்டி என்ற நூலை வெளியிட்டுள்ளார். இந்த நூல் குறித்து சில எதிரிடையான கட்டுரைகளும் சில நூல்களும் வெளி வந்திருக்கின்றன. இவை குறித்தெல்லாம் அக்கறையோடு படித்து ஆய்வதன் தேவையை நாம் மறுக் முடியாது. மதிமாறன் நூலில் அங்கங்கே சில சொற்கள் கடுமையாக இருந்த போதிலும் பாரதி ஆய்வாளர் அல்லது பற்றாளர் எவர் பெயரையும் வெளிப்படையாகக் குறிப்பிட்டுத் தாக்கவில்லை. பாரதியின்

கவித்துவம் பற்றி அவரும் ஒப்புக் கொள்கிறார். பாரதியின் கவித்துவம் தருகிற போதையில் பாரதி பற்றிய சரியான மதிப்பீட்டுக்குப் பலர் வர இயலாமை குறித்து மதிமாறன் நியாயமாகவே குறிப்பிடுகிறார்.

'தலித் முரசு' இதழில் வெளிவந்த கட்டுரைகளில் தான் குறித்த இந்துத்துவம் என்ற சொல்லை நூலாக வெளிவரும் கட்டுரைத் தொகுப்பில் இந்து மதம் என்று மாற்றிக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். இதற்கான காரணத்தையும் சொல்லுகிறார். இந்துமதம் வேறு, இந்துத்துவம் வேறு என்று தமிழகத்தில் சிலர் குறிப்பிடுவதன் காரணமாக, இந்து மதமும் இந்துத்துவமும் ஒன்றுதான் என்ற தன் கருத்தை வலியுறுத்தும் நோக்கில் இப்படி எழுதி இருக்கிறார். இப்படி வேறுபடுத்திச் செல்பவர் என்று இரவிக்குமாரையும், என்னையும்தான் குறிப்பிடமுடியும். வேறுயார் இப்படி எழுதுகிறார்கள் என்று தெரியவில்லை.

பாரதி குறித்த மதிமாறன் தொடுக்கும் தாக்குதல்களில் சிலவற்றை இங்குத் தொகுத்துக் கொள்ளலாம். தமிழகச் சூழலில் தேவதாசி ஒழிப்பு முதலிய செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க சாதனை செய்த முத்து இலட்சுமி ரெட்டியை யாரும் மறக்க இயலாது. பாரதி தாம் நடத்திய இதழ்களில் விடாப்பிடியாக நாளும் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்துத் தம் கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தார். முத்து இலட்சுமி ரெட்டி குறித்து இவர் எதுவும் எழுதவில்லை. தென்னிந்திய நல உரிமைச் சங்கம், அதன்பிறகு நீதிக் கட்சி ஆகியவற்றில் தீவிரமாகச் செயல்பட்ட டி.எம். நாயரை தேசவிரோதி என்று பாரதி குறிப்பிடுகிறார். பெரியாரின் நாத்திகவாதத்தோடு பாரதியாருக்கு உடன்பாடில்லை.

திலகரின் மதவாத அரசியலை பாரதி ஏற்றுக் கொண்ட நிலையில், மொகலாயர், இசுலாமியருக்கு எதிராகச் சிவாஜியின் வீர உரையை, உணர்ச்சிகரமான கவிதைநடையில் பாரதி எழுதி இருக்கிறார். ஆரியரை இடைவிடாமல் மேன்மைப் படுத்துகிறார். தமிழ் மொழியைத் தொடர்ந்து பாராட்டும் பாரதியார், இந்தியாவின் தேசிய மொழியாகச் சமஸ்கிருதம் இருக்கலாம் என்கிறார். இந்திக்கும் இந்தத் தகுதியை வழங்குகிறார். குமாரிலபட்டரோடும்,

இராம.கோபாலனோடும் பாரதியை இணைத்துப் பேசுகிறார் மதிமாறன்.

பிரிட்டிசார் தன்னைச் சிறைப்படுத்துவார் என்று அஞ்சி புதுச்சேரிக்கு ஓடியதாகச் சொல்லுகிறார். கடலூரில் பாரதி எழுதித் தந்த கடிதம் குறித்தும் பேசுகிறார். இறுதிக் காலத்தில் பாரதியை இந்து சமயம் முழுமையாகப் பற்றிக் கொண்டது பற்றிக் குறிப்பிடுகிறார். பாரதியின் தலித் சார்பை அறவே மறுத்து விடுகிறார். சாதி ஒழிப்பு, பெண்உரிமை பற்றி எல்லாம் பாரதிக்கு முன்னரே நிறையப் பேர் பேசி இருக்கிறார்கள். இதில் பாரதியிடம் புதுமை எதுவும் இல்லை. நினைவில் இருந்த அளவிற்கு மதிமாறனின் கருத்துரைகளை இங்கு தந்துள்ளேன்.

குறிப்பாக ஒன்றை இங்கு நான் சொல்லவேண்டும். மதமாற்றம் தேவையில்லை என்பது பாரதியின் அழுத்தமான கருத்து. இதற்காகக் கிறித்துவப் பாதிரிகளைப் பாரதி கடுமையாகத் தாக்கியிருக்கிறார். மதிமாறனின் கருத்துக்களின் சிலவற்றை நாம் எளிதாக ஏற்றுக் கொள்ள முடியும். மரியாதைக்குரிய முத்து இலட்சுமி ரெட்டி அவர்களை பாரதி குறிப்பிடவில்லை. முத்து இலட்சுமியின் தேவதாசி ஒழிப்பு முதலிய செயல்பாடுகளில் பாரதிக்கு மறுப்பு ஏதும் இருந்திருக்க முடியாது. மரியாதைக்குரிய டி.எம்.நாயரைத் தேச துரோகி என்று பாரதி குறிப்பிடுவது பெருந்தவறு. இந்தியாவின் விடுதலை என்பது அரசியல் துறையில் மட்டுமல்ல பொருளியல், சமூகம் என்று பலதுறைகளிலும் செயல்பட வேண்டும்.

அரசியல் விடுதலை என்பது மட்டுமே ஒரே குறிக்கோளாக இருக்கவும் முடியாது. அரசியல் விடுதலைதான் எங்களுக்கு இலக்கு என்று ஒரு கட்சியார் இயங்கும்பொழுது, சமூக விடுதலைதான் எங்களுக்கு இலக்கு என்று இன்னொரு கூட்டத்தார் இயங்குவதில் தவறு இல்லை. ஒன்றுபட்டு இயங்க வேண்டிய இவ்வகை இயக்கங்கள் இந்தியச் சூழலில் முரண்பட்டு இயங்கியதன் மூலமும் இன்று வரையிலும் மக்கள் முழுமையான விடுதலையைப் பெற இயலவில்லை என்பதையும் நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். பாரதிக்கு இந்த உண்மை

புரியவில்லை. உணர்ச்சிகரமான சூழலில் ஒருவர் எதிர்நிலை எடுப்பது இயல்புதான். உணர்ச்சி தணிந்த நிலையில் சரியான முடிவுக்கு ஒருவர் வரக்கூடும். பாரதி இப்படி வரக்கூடியவர் தானா? என்று கேள்வியோடு நிறுத்திக் கொள்வோம்.

சமூகத்தை பிராமணர் என்றும்/பிராமணர் அல்லாதவர் என்றும் பிரிப்பதில் பாரதிக்கு உடன்பாடு இல்லை. பார்ப்பன சமூகத்தின் சில தீய போக்குகளை பாரதி கடுமையாகக் கண்டிப்பதில் தயங்கவில்லை. பூணூலை அவர் துறந்தார், மீசை வைத்துக் கொண்டார் என்பதற்காகப் பாரதியைப் பார்ப்பண சமூகம் ஏற்க முடியாது. இன்னும் எத்தனையோ காரணங்களுக்காகப் பார்ப்பணச் சமூகத்தின் புறக்கணிப்புக்கு பாரதி ஆளானார். தலித் ஒருவருக்குப் பூணூல் அணிவித்த செயலில் பாரதியிடம் செயல்பட்ட எதிர்ப்பு மனப்பான்மையை எப்படி நம்மால் கண்டுகொள்ளாமல் புறக்கணிக்க முடியும். பூணூலில் எந்தப் புனிதமும் இல்லை. பூணூல் தரிப்பதனாலேயே ஒருவன் தன்னை மேலானவன் என்று ஆணவம் கொள்வதை நம்மால் மதிக்க முடியாது.

விநாயகர் சிலையைப் பெரியார் உடைக்கச் சொன்ன மாதிரி, இதுவும் ஒரு அடையாளம் குறித்த விமர்சனம் என்பதைத் தவிர வேறு இல்லை. இதே போலத்தான் ஆரியர் என்ற சொல்லை பாரதி பயன்படுத்தினார். ஆரியர் என்பவர் மேன்மையானவர். மேற்கத்தியவரை நோக்கி இந்தியமக்கள் மேன்மையானவர் என்ற பொருளில்தான் இந்தச் சொல்லை பாரதி பயன்படுத்துகிறார்.

இப்பொழுது பாரதியின் இந்துமதச் சார்பு குறித்துப் பார்க்கலாம். இந்துமதம் என்பது பற்றி பாரதி தன் கட்டுரைகளில் தரும் விளக்கத்தை நாம் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர் உட்பட அனைத்து உயிர்களும் ஒன்று என்று குறிப்பிடுவது இந்து மதம். இந்தியாவின் நெடுங்காலப் பண்பாடு இது. இந்தியாவுக்குள் வந்து வாழ்கிற எவருக்குள்ளும் இந்தப் பார்வை இயல்பாகவே வந்து சேரும். இதன் காரணமாக வேறு எந்தப் பெயரில், எந்த மதத்தைச் சார்ந்தவர் இந்தியாவில் இருந்த போதிலும், எல்லோரும் ஒன்று என்ற அடிப்படையில் அனைவரும்

ஒன்றுபட்டவர். இந்தியரைப் பொருத்தவரை அல்லது இந்துவைப் பொருத்தவரை அல்லாவும், புத்தனும், இராமனும் ஒன்றின் பல பெயர்கள். இந்து என்பவன் தன்னிலிருந்து வேறு எவரையும், எந்த உயிரையும் பிரித்துப் பார்க்கமாட்டான்.

இப்படிச் சொல்லுகிறது பாரதியின் ஞானம். பாரதியின் இந்தப் பார்வை அத்வைதம்தான் என்று நம்மால் புரிந்து கொள்ள இயலும். தேடிப் பார்த்தால் எந்த ஒரு சமயத்தினுள்ளும் இந்தப் பார்வையை, அல்லது இந்தப் பார்வையின் சில இழைகளை யேனும் நம்மால் காண முடியும். மெய்யியல் நோக்கில் நாம் சற்று ஆழமாகப் பார்க்க இயலுமானால், இறைவனும் நானும் ஒன்று. அதே போல இறைவன் வேறு, நான் வேறு. இன்னும் ஒன்று இறைவன் இல்லாமல் நானில்லை. நான் இல்லாமல் இறைவன் இல்லை. இப்படி எந்த ஒரு மெய்யியலானுள்ளும் குறைந்த அளவுக்கு மூன்று நிலைப்பாடுகள் சாத்தியம். பாரதிக்குள்ளும் தேடிச் சென்றால் இவ்வகை நிலைப்பாடுகளைக் காணமுடியும்.

ஒன்றை மற்றது மறுப்பது போலத் தோன்றும். இந்த நிலைப்பாடுகள் எவருக்குள்ளும் தவிர்க்க இயலாமல் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கும். இறைவனையே மறுத்துப் பேசக்கூடிய இடத்திற்கும் செல்வதற்கு இதில் வாய்ப்பு உண்டு. பாரதிக்குள்ளும் இத்தகைய சிந்தனைகள் உள்ளன. எல்லா உயிர்களும் ஒன்றின் வெளிப்பாடுகள் என்ற கருத்தளவிலேயே ஒருவர் எப்பொழுதும் நிலையாக இருக்கமுடியும் என்றும் தோன்றவில்லை. பாரதியும் கிறித்துவர் முதலியவர்களை வேறுபடுத்திப் பார்ப்பது இதன் காரணமாகத்தான். அன்றைக்கு இருந்த கிறித்துவப் பாதிரிகளும் இந்துக் கடவுளர், புராணங்கள் இந்துச் சாத்திரங்கள் முதலியவற்றைப் பற்றிக் கடுமையாக மக்கள் மத்தியில் இழிவாகப் பரப்புரை செய்ததையும் நாம் மறுப்பதற்கில்லை.

எல்லா உயிர்களும் இறைவனின் வடிவங்கள் என்ற கருத்தில் ஆழ்ந்திருக்கும் ஒருவர் இப்படிப் பேச முடியாது. எல்லாம் ஒன்று என்ற கருத்தில் நம்பிக்கை உடைய இந்துவுக்கு மதமாற்றம் தேவையில்லை. இந்து சமயத்தின் உச்சத்திலிருந்த

பிராமணரைச் சாடி அந்த உச்சத்திலிருந்து தள்ளுவதன் மூலம் கீழிருக்கும் மக்களை எளிதாகத் தங்கள் சமயத்தில் இணைத்துக் கொள்ள முடியும் என்ற நோக்கிலும் கிறித்துவப் பாதிரிகள் செயல்பட்டார்கள். பாரதியை எதிர்நிலைக்குத் தள்ளுவதற்கு முன்பு இப்படிப் புரிந்து கொள்ளும் வாய்ப்பை நாம் தவற விடக்கூடாது.

தேச விடுதலையை முதல் கடமையாக நீதிக் கட்சியினர் ஏற்கவில்லை. பிராமணர் அல்லாதார் என்ற பாகுபாடு பாரதிக்கு உடன்பாடில்லை. பிராமணியம் என்பது குறித்து பாரதியின் புரிதல் தனிவகைப்பட்டது. வேதம் புதுமை செய் என்பது பாரதியின் கூற்று. கிருதயுகம் என்பது பாரதியின் கருத்தின்படி சமதர்மம். பெண்களும் சக்தியின் வடிவங்கள். பாரதம், பராசக்தியின் திருவுருவம். ஆயிரந்தெய்வங்கள் இல்லை. அறிவே தெய்வம். நந்தனைப் போல் ஒரு பார்ப்பணன் இல்லை. பொய்ச் சாத்திரங்கள் சொல்லும் பிராமணர் மூடர்கள். புராணங்கள் பொய்யானவை. எனினும் அவற்றின் கற்பனைகளை நாம் இரசிக்க முடியும்.

இப்படி எல்லாம் கருத்துரைத்ததோடு வாழ்ந்தவன் பாரதி. பார்ப்பணியத்தில் இவன் இடதுசாரிப் போக்கைக் கடைபிடித்தவன். வலதுசாரிப் போக்கைக் கடைப்பிடிக்கும் பார்ப்பணியத்தோடு பாரதி பெருமளவில் முரண்பட்டவன்.

ஒன்றை இங்கு நமக்குள் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். சமயம் பற்றி, இறைவன் ஆன்மா முதலிய கருத்தாக்கங்கள் பற்றி நமக்குள் ஆழ்ந்த புரிதல் இல்லை. மதம் என்பதனுள் செயல்படும் புரோகிதம் வெறுக்கத்தக்ககது. மதத்தினுள்ளும் மக்கள் சார்பில் பொருள் படுத்தக்கூடிய மெய்யியல் உண்டு. இறைவனை அன்பின் வடிவம், அறிவின் வடிவம் என்றெல்லாம் சொல்வதோடு இறைவனை எந்த வடிவத்திலும், எந்தப் பெயரிலும், எந்த முறையிலும் வழிபடலாம். இறைவன் எங்குமிருக்கிறான். நமக்குள்ளும் இருக்கிறான். மக்களுக்குப் பணிபுரிவதே இறைவனுக்குச் செய்யும் பணி. இறைவனை வழிபடலாம், வழிபடாமலும் இருக்கலாம்.

இப்படியும் சமயங்களுக்கு உட்பொருள் காணமுடியும்.

மக்கட் சார்பை முன்னிறுத்தி புரோகிதத்துக்கு எதிராக நம்மால் செயல்பட முடியும். இந்துமதம் என்ற தொகுப்பினுள் இத்தகைய போக்கு அழுத்தமாகவே இருக்கிறது. பிராமணியம் என்ற வலதுசாரிப் போக்கை கடுமையாக நம்மால் இந்த அடிப்படையிலிருந்து எதிர்க்க முடியும்.

தமிழகச் சூழலில் பெரியாரியம் மேலுக்கு வந்தநிலையில் மதம் என்பது முற்றாக மூடத்தனம். பார்ப்பணியப் படைப்பு என்று மட்டுமே பரப்புரை செய்யப்பட்டது. இதன் காரணமாக தமிழின் பக்தி இலக்கியம் முதலியவற்றை நாம் மதிக்கத் தவறினோம். மெய்யியல் என்பதே கூட மதம் என்று சாடப்பட்டதன் மூலம் வாழ்வியல் குறித்த ஆழ்ந்த பார்வை நமக்கு இல்லாமல் போயிற்று. மதம் என்பதே மூடத்தனம் என்ற பகுத்தறிவின் மூலம் நாம் இழந்தவை பல.

பார்ப்பணியத்தை ஒற்றை முகத்தோடு பார்த்துச் சாடியதன் விளைவாக பாரதியைப் போன்ற இடதுசாரிப் பார்ப்பணர்களையும் நாம் எதிர்நிலைக்குத் தள்ளுகிறோம். இந்துத்துவம் என்ற மதவாத அரசியலையும் இந்துமதம் என்பதையும் வேறுபடுத்திப் பார்க்கிற பார்வை நமக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இப்படி இல்லை என்பதனால் தெரிந்தோ தெரியாமலோ தம்மையும் இந்துக்கள் என்று கருதும் பெரும்பான்மை மக்களை இந்துத்துவ அரசியலுக்கு நாம் பலியாக்குகிறோம்.

இங்கு இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். சமயம் என்பது வாழ்வில் ஓரளவுக்கு வசதி உடையவர்களுக்கு உரிய ஒன்று. இதை இங்கு விளக்க வேண்டியதில்லை. சமூக வாழ்வில் அடிமட்டத்தில் இருக்கும் மக்களுக்கு சிறு தெய்வங்கள் இருக்கலாம். கதைகள் இருக்கலாம். கோவில் வழிபாடு இருக்கலாம். இதற்குமேல் இந்து சமயம் முதலியவை கூறும் பெரும் தெய்வங்கள் முதலியவற்றோடு அவர்களுக்கு உறவில்லை. இறைவன் என்றும், ஆன்மா என்றும் வினைகள் என்றும் பல பிறப்புக்கள் என்றும் விரிவாகப் பேசுகிற தர்க்கங்களோடு அவர்களுக்கு உறவு இல்லை. புனிதம், தூய்மை என்றெல்லாம் இவர்கள் பேச முடியாது. இவர்களுக்குத் தெரிந்தது

தம்மளவில் குடும்பம், ஆண் பெண் உறவு, மண்ணும் நீரும், உழைப்பும் கூலியும் இவற்றோடு உயர் சாதியினரின் கொடுமைகளுக்கும், அவமானங்களுக்கும் உள்ளாகித் தம்மை இழக்கும் நிலை இத்தகைய அடித்தளமக்களுக்கு அத்வைதம், துவைதம் என்ற ஆய்வுகளுக்கு வாய்ப்பில்லை.

ஒரு வகையில் தலித்திய நோக்கில் பாரதியைப் பற்றிய விமர்சனம் என்று வருகின்றபொழுது இத்தகைய பார்வையிலிருந்து பாரதியைப் பற்றி எப்படி மரியாதையோடு பேசமுடியும். அதுவும் பெரியாரியத்திற்கு இடம் கொடுத்த நிலையில் தலித்திய பார்வை என்பது தன்னை விரிவு படுத்திக் கொள்ள இயலும். நாத்திகம் என்பதே கூட இந்துமதம் என்ற தொகுப்பினுள் அடங்கக் கூடியதுதான். அறிவே தெய்வம் என்று பாரதி சொல்வதும் நாத்திகத்திற்கு நெருக்கமானதுதான். நாத்திகம் என்பதே கூட எப்படித் தன்னளவில் தலித்திய பார்வையாக இருக்க முடியும்.

இனி பாரதியின் அரசியல் நிலைப்பாடு பற்றிப் பார்க்கலாம். ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தினுள் மத நம்பிக்கை உடையவர்களும் இடம்பெறுவதை யாரும் மறுப்பதற்கில்லை. வங்காளத்தில் தோன்றிய இளைஞர் இயக்கம் இப்படித் தீவிரமான மத உணர்வோடும் செயல்பட்டது. ஆன்மாவுக்கு அழிவில்லை என்று கூறும் கீதையைக் கையிலேந்தி இவர்கள் உயிர்க்குத் துணிந்து போராடினர். திலகர் முதலியவர்களும் மத நம்பிக்கையோடு ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர். எங்கள் தெய்வங்களை, எங்கள் நாகரிகத்தைக் காப்பாற்றி ஆகவேண்டும் என்ற உணர்வோடு இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதற்காகவே முன்னைய வரலாற்றுக்குள்ளும் செல்கின்றனர்.

விவேகானந்தர் போன்றவர்களுக்கும் இத்தகைய மத உணர்வு உண்டு. அரவிந்தருக்கும் இப்படி மத உணர்வு உண்டு. காந்தியடிகள் கூட இப்படி மதஉணர்வின் வயப்பட்டவர்தான். மதஉணர்வை அறவே விலக்கி வைத்துவிட்டுத்தான் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்திற்கு வரவேண்டும் என்று எவரையும் யாரும் நிர்பந்திக்கமுடியாது. மத நம்பிக்கை

உடையவர்களும் கம்யூனிஸ்டு கட்சிக்குள் இருக்கலாம் என்ற லெனினிய நிலைப்பாட்டை நாம் குற்றம் சொல்ல முடியாது. கைலாசபதி அவர்கள் விளக்கியதைப் போல விடுதலைப் போராட்டக்காலத்தில் தேசமும் தெய்வமாகக் காட்சி அளிக்க முடியும். மதஉணர்வு என்பதையே அடிப்படையான குற்றம் என்ற கருத்தோடு பார்ப்பதென்றால் வரலாறு நம் கண்ணுக்குத் தெரியாது. மதம் என்பதே மூடத்தனம் என்று கருதுவதில் உள்ள பிழை பற்றி நாம் சிந்திக்கவும் தவறக்கூடாது.

பாரதியின் விடுதலை உணர்வில் மதஉணர்வும் இரண்டறக் கலந்திருந்தது என்பதை விளக்க வேண்டியதில்லை. விடுதலைப் போராட்டம் சிலசமயம் உயர்ந்தும், சில சமயம் தாழ்ந்தும் நடைபெற்றது என்ற உண்மையை முன் வைத்து பாரதியை நாம் பார்க்க முடியும். புதுச்சேரியில் பாரதி இருந்த காலத்தில் வறுமையும், நோய் நொடிகளும் அவரைக் கடுமையாகப் பற்றிக் கொண்டன. விடுதலைப் போராட்டமும் தாழ்நிலையில் இருந்தது.

விடுதலைப் போராட்டத்தில் காந்தி இடம்பெற்றாலும் அவரது வீச்சு வெளிப்படவில்லை. அரவிந்தரோடும் பாரதி முரண்பட்டார். நேசக்கட்சியார் வெற்றிபெற்ற நிலையில் பிரிட்டிஷ் அரசு தன்னைச் சிறைப்படுத்தாது என்று பாரதி நம்பினார். புதுச்சேரிச் சூழலிலிருந்து வெளியேறுவது என்று பாரதி முடிவு செய்து புறப்பட்டார்.

பாரதியை மதிப்பிடும் பொழுது அவரைக்குறித்த இரண்டு தோற்றங்கள் முன் வருகின்றன. தீவிரமான சிந்தனையாளர், கவிஞர் என்பது பாரதியின் ஒரு தோற்றம். அரசியலில் திலகரோடும், வ.உ.சி. முதலியவர்களோடும் அவர் ஒத்த கருத்துடையவராய் இருந்தார் என்பது இன்னொரு தோற்றம். பத்திரிகைகளில் தன் அரசியலைப் பெரிதாகவே வெளிப்படுத்தினார். பாரதியும், அரசியலும், கவிதையும் நெடுந்தொலைவுக்கு இணைந்து இயங்கின. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அரசியலிலிருந்து பாரதி ஒதுங்கினார் என்று சொல்வதில் தவறில்லை. கவிதைக்காக, இலக்கியத்திற்காக அவர் அரசியலைக் கைவிட்டார் என்று சொல்ல முடியவில்லை. புதுச் சேரிக்கு பாரதி ஏன் சென்றார் என்பதற்குச் சிலர் இப்படிக்

காரணம் கூறுகின்றனர். சுதேசமித்திரன் தலையங்கம் காரணமாக பிரிட்டீஸ் அரசு கைது செய்ய நேரலாம் என்ற பெரிய மனிதர் அறிவுரைப்படி, பாரதி புதுச்சேரிக்குத் தப்பிச் சென்றார்.

வ.உ.சி. போல ஆளுமை உடையவராக பாரதி இல்லை. வ.உ.சி.யின் மனஉறுதி, செயல்வீரம் பாரதிக்கு இல்லை. பலரோடு பாரதியார் சேர்ந்து இயங்க முடியும். தனித்தியங்குவது பாரதியின் ஆளுமை என்று தோன்றவில்லை. வ.உ.சி. என்ற பாண்டியனுக்கு பாரதி ஒரு கவிஞன். அரசவைக் கவிஞன் மாதிரி பாரதி. இவனால் ஆயுதம் ஏந்திப் போரிட முடியாது. ஆயுதம் ஏந்தச் சொல்லி இவனால் கவிதைபாட முடியும். அரவிந்தரைப் போலத் தம்மையும் தத்துவ ஆய்வில் மூழ்கடித்துக் கொண்டவன். கவிதை உணர்வின் வட்டங்களில் தோய்ந்தவன். ஒரு அரசியல்வாதி இவனிடமிருந்து பெரிதும் வேறுபட்டவன். இந்த இரண்டு கூறுகளும் ஒரு மனிதனிடம் சரியாகப் பொருந்தி யிருக்கும் என்று கூற முடியாது.

கடலூர் சிறையில் இருக்கும்பொழுது கவர்னருக்குத் தன்னை விடுதலை செய்ய வேண்டிக் கடிதம் எழுதினான். பெரிய மனிதர்கள் கூறிய அறிவுரையை பாரதி ஏற்றான். அரசியல் இயக்கம் தீவிரமாக இல்லை என்பது சூழல். 'இனி அரசியலில் ஈடுபட மாட்டேன். என்றைக்கும் பிரிட்டீஸ் அரசுக்கு எதிராக இல்லை' என்று எழுதிக் கொடுத்தான். இப்படி எழுதிக் கொடுத்தால்தான் விடுவிக்கப்படுவோம் என்ற நிர்பந்தம் பாரதிக்கு இருந்திருக்க வேண்டும்.

இந்த அளவுக்கு எழுதிக் கொடுத்திருக்க வேண்டியதில்லை என்று விவாதிக்கலாம். 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்குப் பிறகு தம்மை விடுவிக்க வேண்டி வைஸ்ராய்க்கு கம்யூனிஸ்ட்கள் கடிதம் எழுதினர். இப்படி யார் யாரோ வெவ்வேறு சந்தர்ப்பங்களில் செய்திருக்கின்றனர். தீவிரமான அரசியல் இயக்கத்திலிருந்து அரவிந்தர் கூட வெளியேறுகிறார். சிறையிலிருந்து வெளியேறிய பிறகு வ.உ.சி. இலக்கிய ஆய்வில் ஈடுபட்டார். இவைபற்றி எல்லாம் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கடலூரில் இருந்து வெளிவந்த பாரதி இறுதிவரை மதஉணர்வோடு வாழ்ந்து வந்தார். மதம் அவரைப் பற்றிக் கொண்டது. பார்த்தசாரதி கோயில் யானை தன்னை எப்படித் தாக்க முடியும் என்ற பெரும் நம்பிக்கையோடு யானைக்கு அருகில் சென்றார். உடல்நிலை பாதிக்கப்பட்ட போது, தெய்வம் தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் மருந்து உண்ண மறுத்தார். பாரதியின் மனச்சோர்வை நம்மால் புரிந்து கொள்ள இயலும். இப்படிச் சில சந்தர்ப்பங்களில் மத உணர்விற்கு ஒருவர் இடம் கொடுப்பதை நம்மால் மறுக்கமுடியாது. ஆன்மா அற்ற உலகில் ஆன்மாவாக மதம் இருக்கிறது என்பதை மார்க்ஸ் கூறியுள்ளார்.

இத்தகைய மனநிலையும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பது இல்லை. பாரதிக்கு இந்த வாய்ப்பு இல்லை. பாரதி இன்னும் வாழ்ந்திருந்தால் முழு அளவில் மதவாதியாகத்தான் மாறி இருப்பார் என்று எப்படி உறுதியாகச் சொல்லமுடியும். அப்படியே இருக்க நேர்ந்தாலும் இதற்காக பாரதியை நாம் எந்த அளவில் குற்றம் சொல்லமுடியும். அரவிந்தர், வ.உ.சி. முதலியவர்களையும் இங்கு நினைவு கொள்ளலாம்.

புதுச்சேரியில் பாரதி இருந்த பொழுது தமிழில் மிகச்சிறந்த இலக்கியப் படைப்புக்கள் சிலவற்றைச் செய்தார். பாரதியை என்றும் நம் நினைவில் நிறுத்தக்கூடியவை இவ்வகைப் படைப்புக்கள். தன் அரசியல் உணர்வை பாரதி இழந்து விடவில்லை என்பதற்கு "பாஞ்சாலி சபதம்" ஓர் அற்புதமான சான்று. கண்ணன் பாட்டு என்பது ஓர் அசலான காவியம். எல்லா மனிதருக்குள்ளும் கண்ணனைக் காண்கிறார் பாரதி. எந்த ஒரு படைப்புச் செயலினுள்ளும் துவங்குவது தெய்வம். கண்ணன் பாட்டு கவிதைக்கு மட்டுமல்ல, ஆன்மீகத்திற்கும் ஓர் அற்புதமான விளக்கம். குயில்பாட்டு இன்றும்கூட தன் பன்முகப் பார்வையினால் நம்மைக் கவரக்கூடிய படைப்பு.

பாரதியை ஓர் அரசியல்வாதி என்று மதிப்பீடு செய்வதில் உள்ள சிக்கல்கள் சிலவற்றை நாம் பார்த்தோம். பாரதி ஓர் பெருங்கவிஞன் என்பதில் நமக்கு ஐயமில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் வள்ளுவரோடும், இளங்கோவோடும், கம்பனோடும்

ஒரு பெருங்கவிஞன் என வைக்கத்தகுந்தவன் பாரதி. ஒரு சீரிய சிந்தனையாளன் என்ற முறையில் தன் காலச் சூழலில் உலகத்தோடு நம்மை இணைத்தவன் பாரதி. பெல்ஜியம் என்றும், பிஜித்தீவுகள் என்றும், இரஷ்யா என்றும், ஹைக்கூ கவிதை என்றும் இப்படி எண்ணற்ற நாடுகளை, இயக்கங்களை நமக்கு பாரதி அறிமுகப்படுத்தினான். ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராக அவன் பேரியக்கம் தொடங்கினான். சமதர்மம் என்றும், பொதுவுடமை என்றும் அவன் ஆழ்ந்த அக்கறையோடு பேசினான். தமிழில் நமக்குப் புதுவகைக் கவிதைகள் தந்தான். தமிழை நவீன காலத்திற்கு ஒத்தமுறையில் புதுப்பித்தான். சமயத்தையும், சமுதாயத்தையும் இணைத்துப் பார்க்கிற பொதுப்பார்வையை நமக்குத் தந்தான். இலக்கியம் குறித்தும் சமூகம், சாதி குறித்தும் வளமான திறனாய்வுப் பார்வைகளை பாரதி முன்வைத்தான். பாரதி தொடாத துறையும் இல்லை. தொட்டுத் துலக்கம் பெறாத துறையும் இல்லை.

பாரதியின் நம் காலத்து வாரிசு என்று முன்பு ஜீவாவையும், இன்று ஜெயகாந்தனையும் நாம் மரியாதையோடு குறிப்பிடு கின்றோம். பாரதியின் நம் காலத்து வெளிப்பாடு என்று இராம.கோபாலனைக் குறிப்பிடும்பொழுது பாரதிக்கு அவமரியாதையும், இராம.கோபாலனுக்கு மரியாதையும் நாம் செய்கிறோம். பாரதி ஒரு தலித் கவிஞன் இல்லை, தலித்தியச் சிந்தனையாளன் இல்லை என்று மதிமாறனோ, மற்றவர்களோ குறைபட்டுக் கொள்வதில் தவறில்லை. பாரதி தமிழுக்கு வாய்த்த பெருங்கவிஞன். தமிழ் வரலாற்றைத் தலித்திய பார்வை கொண்டு ஆராய்வதற்கான தேவையை நாம் மறுக்கவில்லை. பாரதி குறித்து மதிமாறன் செய்வது போன்ற ஆய்வை வள்ளுவர் முதலியவர் நோக்கியும் செய்யும் பொழுது என்னவெல்லாம் நேரும் என்பதை இப்பொழுதே சிந்தித்துப் பார்க்க வேண்டி இருக்கிறது. தமிழ் உணர்வையும், தலித்திய உணர்வையும் வேறுபடுத்திப் பார்ப்பதைக் கூட நம்மால் வரவேற்க முடியும். ஆனால் முரண்படுத்தி, மோதவிட்டுப் பார்க்க வேண்டாம் என்பது கூட நம் வேண்டுகோள்.

27.5.2003

9. தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதியின் இடம்

1. தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதியின் இடம் என்னவென்று சிந்திக்கும் பொழுது பாரதியால் நாம் எவ்வாறு பாதிக்கப்பட்டோம் என்று ஆராய்வது தேவை. பாரதி இல்லாமல் நாம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு பாரதியால் நாம் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறோம். பாரதியை ஒரு வேளை நாம் கற்கவில்லை என்றால் நவீன உலகத்துக்குள் இன்னும் காலம் கடந்தே வந்திருப்போம். எவ்வளவு காலம் என்பதை உறுதியாகச் சொல்வதற்கில்லை.

தமிழ்க் கவிதையில் மட்டுமல்லாமல் நம் வாழ்வுக்குள்ளும் நவீனகால உணர்வைக் கொண்டுவந்தவர் பாரதியார். இந்தியா முழுவதும் தன் பார்வையை பாரதி வீசினார் என்பது மட்டுமல்ல, இந்தியாவுக்கு வெளியிலும் பாரதியின் பார்வை விரிந்து சென்றது. இரஷ்யா என்றும் பெல்ஜியம் என்றும் பிரிட்டன் என்றும் அமெரிக்கா என்றும் ஜப்பான் என்றும் பிஜித்தீவுகள் என்றும் இங்கு பலவற்றை நினைவு கூரலாம். இந்தியாவின் தேச விடுதலை இயக்கத்தில் பாரதி தன் நெஞ்சைப் பறி கொடுத்தது போலவே, இரஷ்யாவில் ஜார்ஆட்சியின் வீழ்ச்சி, லெனின் செய்த புரட்சி முதலியவற்றிலும் பாரதி தன் நெஞ்சைப் பறி கொடுத்தார்.

சமதர்மம் நமக்கும் வேண்டும் என்றார். அமைதி வழியில் வர வாய்ப்பில்லை என்றால் வன்முறை வழியிலும் சமதர்மம் வரலாம் என்று கருதினார். பாரதியின் பார்வையில் தேச விடுதலை என்பது பிரிட்டனிடமிருந்து இந்தியா அரசியல் விடுதலை பெறுவது மட்டும் இடம் பெறவில்லை. பொருளியல் விடுதலை, சமுதாய விடுதலை முதலிய பலவும் பாரதியின் பார்வைக்குள் அடங்கி இருந்தன.

பாரதி மூலம் தான் நவீன காலக் கவிதைக்குள்ளும் நாம் வந்து சேர்ந்தோம். மரபுகளைக் கவிதையிலிருந்து பாரதி பலவற்றைச் செரித்துக் கொண்டார், புதுமைப்படுத்தினார்

என்பதோடு, வால்ட்விட்மன் முதலியவர்கள் தோற்றுவித்த புதுக்கவிதை முறைக்குள்ளும் பாரதி இயங்கினார். தமிழ்க் கவிதையை நவீன காலத்திற்கு உரிய வடிவமாகப் பாரதியார் செய்தார். தேச விடுதலை முதலிய பல்வேறு வகைப்பட்ட உள்ளடக்கங்களோடு பாரதியின் வழியில் தமிழ்க்கவிதை வீரியம் பெற்றது. நாட்டார் கவிதையையும் பாரதியார் தங்கு தடையில்லாமல் தனக்குள் உயிர்ப்பித்துக் கொண்டார்.

பாரதியாருக்கு முன்னோடிகள் என்று வள்ளலாரையும், கோபாலகிருஷ்ண பாரதியாரையும், வேதநாயகரையும் குறிப்பிடக் கூடும் என்றாலும் அவர்களிடமிருந்து ஒரு பாய்ச்சல் என்ற முறையில் பாரதி தன் கவிதையைப் படைத்தார்.

இதற்கு முதற்காரணமாக மேற்கத்திய கவிதைகளை, குறிப்பாக ஷெல்லி முதலியவர்களை பாரதி தனக்குள் வரித்துக் கொண்டார் என்று சொல்வது பொருந்தும். இன்னும் ஒன்றை இங்கு குறிப்பிடலாம். பாரதி இல்லாமல் பாரதிதாசன் இல்லை. அப்புறம் பாரதிதாசன் பரம்பரையும் இல்லை.

வரலாற்றுச் சூழல்தான் தவிர்க்க இயலாதபடி பாரதி முதலிய மேதைகளைத் தோற்றுவிக்கிறது என்பதை நாம் மறுப்பதற் கில்லை. ஒருவேளை பாரதியார் இல்லை என்றால் இன்னொருவர் இந்தப் பணியைச் செய்திருக்கக்கூடும் என்று இங்கு விவாதிக்கலாம். ஆனால் அப்படித் தோன்றும் ஒருவர் பாரதியைப் போலவே வீரியத்தோடு செயல்பட்டிருப்பார் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. பாரதியின் தனித்தன்மைகள் பலவற்றையும் அவர் வரலாற்றுச் சூழலிலிருந்து பாரதிக்குள் இருந்ததைப் போல ஒருங்கிணைந்த வடிவில் பெற்றிருப்பார் என்று சொல்வதற் கில்லை. பாரதியின் தனிநபர் ஆளுமை என்பது வரலாற்றுச் சூழலில் வியக்கத்தகு ஒரு வெளிப்பாடு.

பாரதி மூலம்தான் நாம் நவீன காலத்திற்குள் வந்தோம் என்று சொல்லும் பொழுது எச்சரிக்கை உணர்வோடுதான் இப்படிச் சொல்ல வேண்டி இருக்கிறது. 1950களில் நாம் பாரதியை கூடியவரைச் சரியாகவே இனங்கண்டு கொண்டோம். வ.ரா. தொடங்கி ஜீவா வரை பாரதியை நமக்குள் பதித்தார்கள்.

பாரதியை இனம்கண்டு கொண்டு உள்வாங்கிக் கொள்வதற்கு ஒத்த முறையில் நமக்குள்ளும் தேச விடுதலை, சாதிமத வெறிகளிலிருந்து விடுதலை, அறிவியலின் மீது அக்கறை, சமதர்மத்தின் மீது நாட்டம் முதலிய கருத்தினங்கள் நாம் வாழ்ந்த சூழலில் நமக்குள் தளிர்த்தன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. நவீன உலகத்தை அதன்சில அடையாளங் களிலேனும் நாம் ஒப்புக் கொண்டிருந்தோம். ஆகவே தான் பாரதி நமக்குள் வந்து, நம்மை உணர்வுக் கிளர்ச்சிக்கு உள்ளாக்கி, நம்மை மேலும் புதியவராக்கி நமக்குள் ஒரு விக்ரகம் போல பாரதி இடம் பெற்றார். அதன் பிறகு இந்த பாரதியார் இன்னும் பன்முகப் பரிமாணங்களில் நமக்குள் விரிவு பெற்றாரே ஒழிய எந்த ஒரு அம்சத்திலும் நம்மைவிட பாரதியாரை இளைத்தவராக நாம் கருதுவதற்கு இடம் ஏற்படவில்லை. இதன் காரணமாகவும் சொல்லுகிறோம் – அன்றும் இன்றும் பாரதியார் நமக்கு இன்றியமையாதவர்.

2. தமிழின் நெடுங்கால இலக்கியம் பாரதியை எந்தளவில் பாதித்தது என்பது பற்றியும் இப்பொழுது பார்ப்போம். வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பரையும் பாரதி பலமுறை குறிப்பிடுகிறார். அவ்வையாரையும், ஆழ்வார்களையும் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியம் குறித்து பாரதியாரிடம் குறைந்தளவுக்கேனும் குறிப்புக்கள் இல்லை.

பாரதியாரும் ஒரு புலவராக, தமிழ் இலக்கியம் கற்றவராக வாழ்வைத் தொடங்குகிறார். எட்டையபுரம் மன்னர் அரண்மனையில் தன் வயதிலும் மூத்த புலவர்கள் பலரிடம் பழகுகிறார். அவர்கள் யமகம் என்றும் திரிபு என்றும் கவிதைகள் சொல்பவர்கள். எட்டயபுர மன்னருக்கு அடிபணிந்து சேவகம் செய்பவர்கள். தமிழ்ப் புலவர்கள் மரபில் மன்னர் முதலிய பெரியவர்களுக்குப் பணிவோடு சேவை செய்வதும் செய்யுட்களை ஒருவகையில் தொழில் நுட்பத்துடன் இயற்றுவதும் பாரதிக்கு வெறுப்பைத் தூண்டியது. தொடக்கத்தில் இவரும் மரபுமுறைச் செய்யுட்களைப் படைத்தவர் என்றபோதிலும் அதிலிருந்து விரைவில் விடுதலை பெற்றார். ஆசிரியத் தொழிலை விட்டு விலகும் பொழுதே தேசம் என்ற விரிந்த எல்லைகளுக்கு அவர்

வசப்பட்டார். பழையன கழித்தல் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

பழையன கழித்தல் என்பதில் வள்ளுவர் முதலிய பெரும் புலவர்களை அவர் கழிக்கவில்லை. கூடியவரை தன் உணர்வுகளுக்கும் காலச்சூழல்களுக்கும் ஏற்ற முறையில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலியவர்களைத் தமக்குள் புதுப்பித்துக் கொண்டிருந்தார். அதாவது நவீன காலத்துக்குள்ளும் வள்ளுவர் இளங்கோ முதலியவர்கள் வாழ்வதற்கு ஆன வீரியம் உண்டு என்று பாரதியார் கண்டு கொண்டார். வள்ளுவர் முதலியவர்களைத் தோற்றுவித்த தமிழ்ச் சாதிக்கு அழிவு இருக்க முடியாது என்று கருதினார். பாரதியாரால் வள்ளுவர் புதுமை பெற்றார், வள்ளுவரைக் கொண்டு பாரதி தன்னைப் புதுப்பித்துக் கொண்டார்.

தமிழ் மரபென்பது இப்படித்தான் பாரதிக்குள் ஒரு புதிய விளைச்சலைப் பெற்றது. பாரதிக்குள் சாதிப்பற்று இல்லை. மதவெறி என்பது சிறிதளவும் இல்லை. அவர் கடைசிவரை இந்துவாக வாழ்ந்தார் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக மனுநீதி முதலியவற்றை அவர் சிறிதளவும் ஏற்கவில்லை. கண்ணனும், புத்தரும், இயேசுவும், அல்லாவும் அவருக்குள் ஒருதெய்வத்தின் பல்வேறு வடிவங்கள். ஏழைகளோடும், தலித் மக்களோடும், இஸ்லாமியரோடும் அவர் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். பெண்ணை மதித்தார். தெய்வம் என வணங்கினார்.

சமதர்மம் என்ற புதிய வேதத்தை அவர் தழுவிக் கொண்டார். வேதங்களைப் புதுமை செய்ய வேண்டினார். புராணங்கள் பொய்க் கதைகள் எனினும் அவற்றுக்குள் நன்னெறிகள் பல உண்டு என்று நம்பினார்.

பாரதியாருக்கு இந்தப் பண்புகள் அனைத்தும் நவீன காலத்திற்குரியவை என்பதில் அய்யமில்லை. நவீன காலப் பண்புகள் என்று நாம் சொல்லத்தக்க இந்தப் பண்புகளின் வேர்கள் நெடுங்காலத் தமிழ் மரபில் உண்டு என்பதை நாம் காண முடியும். பாரதிக்குள் தமிழ்ச் சித்தர் மரபு ஆற்றலோடு விளங்கியது. இந்தச்

சித்தர் மரபென்பதைத் தமிழ் இலக்கிய வரலாறு முழுவதும் நாம் காண முடியும். கணியன் பூங்குன்றன் தொடங்கி வள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற பலருக்குள்ளும் இந்த மரபை நாம் காணலாம்.

இவர்கள் சாதியை ஒப்புக் கொள்ளவில்லை. இவர்களின் கடவுளர் மனிதம் என்பதன் அருள் வடிவங்கள், அன்பு வடிவங்கள். இவர்கள் மனிதனுக்குள், மனிதனோடு நெருக்கமாக இருந்தவர்கள். சடங்குகள் கொண்டுதான் இவர்களை வழிபட வேண்டும் என்பதில்லை. திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறுகிறபடி எந்த மரத்தடியிலும் அமர்ந்து நினைத்தவுடன் நெஞ்சில் வருபவன் இந்த முருகன். திருமூலர் கூறுகிறபடி அன்பே சிவமாய் அமர்ந்திருப்பவன். இப்படிச் சித்தர் மரபை தமிழின் ஆற்றல்மிக்க மரபென்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும். வள்ளுவரின் ஒப்புரவு இந்தச் சித்தர் நெறிக்கு இயல்பான உள்ளடக்கம் ஆக முடியும். ஒப்புரவு என்பது சமத்துவம்/சமதர்மம் அன்றி வேறில்லை.

தமிழ் மரபின் இந்த வேர்கள் பாரதிக்குள்ளும் நவீன காலத் தூண்டுதலுடன் புதிய விளைச்சல் கண்டன. இடைக் காலத்திலும் இந்த மரபை ஓரத்திற்கு ஒதுக்கும் போக்குகள் இருக்கத்தான் செய்தன. இந்தப் போக்கை மண்மேடிட்டு தூர்க்கவும் செய்தனர். எனினும் இந்த மரபு சாவதில்லை. மனிதனுக்குள் அவன் உள் மனத்தில் ஆழ்ந்த நீரோட்டமாக இந்த மரபு அழிவு இல்லாமல் வாழத்தான் செய்கிறது. ஆழ்மனத்தோடு உறவு கொண்ட பெரும் கவிஞனுக்குள் இந்த மரபு மீண்டும் வெடித்துக் கிளம்பும்.

கம்பனுக்குள் இந்த மரபு வீரியத்தோடு செயல்பட்டது. வள்ளலாருக்குள்ளும் இந்த மரபு வளமாகச் செயல்பட்டது. சமயங்களின் உள் ஆழங்களில் இந்த மரபின் இயக்கத்தை நாம் காணமுடியும். இத்தகைய மரபு உள்ள, இந்த மரபை இனம் கண்டு கொள்கிற தமிழ்ச் சாதிக்கு அழிவு இருக்க முடியாது. பாரதியும் இந்த மரபில் விளைந்தவர்.

3. தமிழ் என்றும், தமிழ் மரபு என்றும், தமிழ்ச்சாதி என்றும் இங்கு நாம் தொடர்ந்து குறிப்பிடும் பொழுது பாரதியிடம் பற்றுக்

கொண்டவர்களுக்கு ஒரு ஐயம் எழக்கூடும். பாரதி தன்னைத் தமிழன் என்று கண்டது போலவே, இந்தியனென்றும் கண்டார். இப்படிச் சொல்வதை நாம் மறுப்பதற்கில்லை. தமிழ் மரபு மட்டுமல்லாமல் இந்தியாவின் நெடுங்கால மரபென்று இனம் காணத் தக்க ஆற்றல் மிகுந்த ஒரு நீரோட்டமும் பாரதிக்குள் வந்து இணைந்தது. தேச விடுதலைப் போராட்டம் என்பது பாரதி காலத்தில் பல்வேறு தேசிய இனங்களையும் ஒரு புள்ளியில், ஒரு இயக்கத்தினுள் இணைப்பதாக இருந்தது. தேச விடுதலைதான் முதல் பெரும் கடமை. பாரதியைப் பொருத்தவரை விடுதலை என்ற பேரியக்கத்தினுள் அனைத்து விடுதலைகளும் அடக்கம். சாதியிலிருந்து விடுதலை, பெண்ணுக்கு விடுதலை தொழிலாளிகளுக்கு விடுதலை என்று தொடங்கிப் பலவகைப்பட்ட விடுதலைகளும் விடுதலையில் உள்ளடக்கம்.

இந்திய தேசியம் என்று அன்று பெயர் சொல்லப்படா விட்டாலும், இந்தியா முழுவதையும் இணைத்துக் காணுகிற தேசியம் என்ற பேரியக்கத்தினுள் எண்ணற்றவர் சில கோடிப்பேர் இணைந்திருந்தனர். இதை இந்து தேசியம் எனப் பொருள்படுத்தக் கூடியவர்களும் இதற்குள் இணைத்திருந்தனர். இந்த முரண் அன்று வெளிப்படையாக, வெடிப்பதாக இல்லை. 1947க்குப் பிறகு இந்த வெடிப்பு யாரால், எத்தகைய காரணங்களோடு ஏற்பட்டது என்பதை இப்பொழுது நாம் விரிவாகச் சொல்வதற் கில்லை. இதுபற்றி நமக்கு நன்கு தெரியும்.

இந்தியாவை ஒரு தேசியம் என்ற கண்ணியில் இணைக்க முடியுமா என்ற கேள்வி ஒரு புறமிருக்க இணைப்பதற்கான சீரிய முயற்சிகள் விரைவில் கைவிடப்பட்டன. மதத்தின் பெயரால், மைய அரசு என்ற பெயரால் முதலாளியம் என்ற பெயரால், சாதியம் என்ற பெயரால் இணைப்புக்கள் தகர்க்கப்பட்டன. இன்றைய சூழல் மிகக் கடுமை மிக்கதாக இருக்கிறது என்பதையும் இந்தச் சூழலை மாற்றக்கூடிய சக்திகள் இன்று இல்லை என்பதையும் இங்கு குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொள்வோம்.

பாரதிக்கு தமிழ்நாடும் தேவை. இந்தியாவும் தேவை. பாரதியின் கருத்தின்படி வேதகாலம் என்பது கிருதயுகம். அதில்

ஏற்றத் தாழ்வுகளுக்கு, வருண வேறுபாடுகளுக்கு, பெண் அடிமைத் தனத்திற்கு இடமில்லை. கண்ணனை பாரதி நேசித்தது போலவே புத்தனையும் நேசித்தார். இராமனிடம் குறை கண்டார். கண்ணனின் பன்முகப் பரிமாணங்கள் பாரதியைப் பெரிதும் கவர்ந்தன.

தருமன் சூதாடி நாட்டை மட்டுமல்லாமல் தன் தம்பிகளையும், மனைவியையும் இழந்திருக்க வேண்டியதில்லை. பாஞ்சாலியின் சபதம் நிறைவேறுவதற்குக் கண்ணன் உதவி செய்தான். இப்படித்தான் பாரதியின் பார்வை விரிவு பெற்றது. காளிதாசன், வியாசர் என்று பலரை பாரதி போற்றினார். ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை வெறுத்தார். தேச மொழிகளை அவர் நேசித்தார். கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் அவர் நேசத்திற்கு உரியவை. கங்கையும் காவிரியும் அவருக்குள் இணைந்தன. சிங்களத்திரோடு அவருக்குள் பகைமை இல்லை. ஆதிக்கங்களை அவர் வெறுத்தார்.

இந்த வகையில்தான் இந்திய நாகரிகம், பண்பாடு, சமயங்கள் அவருக்குள் செறிவு பெற்றிருந்தன. எல்லாவற்றின் உள்ளடக்கமும் பாரதியைப் பொறுத்தவரை சமதர்மம். பாரதியின் அத்வைதம் என்பது விவேகானந்தரின் கொடை என்று சொல்ல முடியும். ஏற்றத்தாழ்வை எந்த வடிவத்திலும் விவேகானந்தரைப் போலவே பாரதியும் ஏற்கவில்லை. பாரதி கண்ட இந்தியா மீது நாம் வெறுப்புக் கொள்வதற்கில்லை. உலகளவிலான வரலாற்று இயக்கத்திலிருந்து இந்தியா தன்னை விடுவித்துக் கொள்ள இயலாது. தொழில் நாகரிகம் இந்தியாவுக்குத் தேவை. அறிவியல் மற்றும் கல்வி வளர்ச்சி பழங்கால இருட்டிலிருந்து நம்மை விடுவிக்கும். அண்டம் தழுவிய அளவில் அறிவியல் பார்வை நமக்குத் தேவை.

இத்தகைய அறிவியல் பார்வைதான் எல்லாக் கடவுளரையும், எல்லா மதங்களையும் அவற்றின் சாரம் கண்டு பாரதி தனக்குள் இணைத்துக் கொண்டதைப் போலவே ஆதிக்கங்கள் எந்த வடிவில் செயல்பட்டாலும் அவற்றை எதிர்ப்பதிலும், ஆதிக்கத்திற்கு எதிரான போர்க் குணத்திலும் பாரதி தன்னை இணைத்துக் கொண்டார்.

இந்த பாரதி நமக்குள் இணைந்திருக்கிற பாரதி. நம் நெடுங்கால மரபுக்குள்ளிருந்து, நவீன காலத்தின் தூண்டுதலோடு நமக்குள் நாம் எழுப்பிக் கொள்கிற பாரதி. இவருக்கு மரணம் இல்லை. இவர் நமக்குள் என்றும் வாழ்வார். இவர் தரும் புதிய வெளிச்சத்தின் வழியே வள்ளுவர், இளங்கோ முதலியவர் களையும், சித்தர்களையும், புதிய வேத மரபுகளையும், புத்தரையும் நமக்குள் வரித்துக் கொள்ள முடியும். எல்லாவற்றையும் புதியதாக தரிசிப்பதற்குப் பாரதியே நமக்கு கைவிளக்கு, கலங்கரை விளக்கு.

4. பின்னுரையாக மேலும் சிலவற்றைச் சொல்லி இந்தக் கட்டுரையை நிறைவு செய்யலாம்.

பாரதி கண்ட இந்தியாவோடு தமிழ் மக்களாகிய நமக்கு முரண்பாடு இல்லை. மதங்களை இன்று ஒழிக்கமுடியாது என்ற நிலையில் மதங்களுக்கு இடையில் இன்று நல்லிணக்கம் தேவைப்படுவதைப் போல இந்தியாவினுள்ளும் தேசிய இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை நாம் வேண்டுகி றோம். அப்படியானால் ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை அழிக்கவோ, ஆதிக்கம் செய்யவோ எத்தகைய முயற்சியும் செய்ய முடியாது. அதைப் போல ஒருமொழி இன்னொரு மொழியை ஆதிக்கம் செய்வதில் அர்த்தம் இல்லை. ஒரு கட்சியினர் அல்லது ஒருசில கட்சியினர் இந்திய தேசத்தின் மீது தங்கள் ஆளுகையைத் திணிப்பதை நாம் ஏற்பதற்கில்லை.

சீர்கெட்ட முதலாளியத்தோடோ, அந்நிய வல்லரசுகளோடோ தம்மை இணைத்துக் கொண்டு நம் தேச நலன்களை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதையோ, நம் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான நிலம், நீர் முதலியனவற்றை அழிப்பதையோ நாம் எந்த வடிவத்திலும் ஏற்க முடியாது. மக்களின் இறையாண்மையை எந்த வடிவத்திலும் யாரிடத்திலும் நாம் ஒப்படைக்க முடியாது.

இத்தகைய இந்தியாவோடு நாம் எந்த முரண்பாடும் கொள்வதற்கில்லை. பாரதி காண விரும்பிய இந்தியா என்பது இத்தகையதாகத்தான் இருக்க முடியும். இப்படி ஒரு இந்தியா இன்று இல்லை. எந்தக் காலத்தில் இப்படி ஒரு இந்தியா

உருவாகும் என்றும் சொல்வதற்கான ஆதாரங்கள் இன்று இல்லை. சில நல்லவர் நெஞ்சில் இப்படி ஒரு இந்தியா இருக்க முடியும். இவர்களெல்லாம் இன்று ஓரத்திற்கு ஒதுக்கப்பட்டிருக் கிறார்கள். இவர்கள் கவிஞர்களாக இருக்கலாம், சிந்தனையாளர் களாக இருக்கலாம். இவர்கள் செயல் வீரர்களாக இல்லை. இன்று இவர்களுக்கு ஆதாரமான இயக்கங்களோ, சக்திகளோ இல்லை.

பாரதி தன் நெஞ்சில் கண்ட இந்தியாவை தம் ஆதிக்க வெறி காரணமாக அடிமைப்படுத்தி ஒன்றுபடுத்தலாம் என்று கனவு காண்கிற இந்துத்துவம் இன்று மூர்க்கத்தனமாகச் செயல்படுகிறது. இவர்களோடு இணைந்து மக்கள்மீது ஆதிக்கத்தைப் பகிர்ந்து கொள்ளவிரும்பும் சக்திகளையும் இன்று பார்க்கிறோம்.

இந்தியாவை இவர்கள் இணைப்பதற்குப் பதிலாக, இந்தியாவைத் தகர்க்கிற செயல்களையே இவர்கள் செய்கிறார்கள். மக்கள் நலன்கள் மீது பற்றுக் கொண்ட சக்திகளை, சட்ட முறையிலும், சட்டத்திற்குப் புறம்பான முறையிலும் அழித் தொழிக்கவே முனைந்திருக்கிறார்கள்.

இந்திய நாகரிகம், இந்தியப் பண்பாடு முதலியவற்றை இவர்கள் கூறுபோட்டு, குறைத்து, சிறுமைகளுக்கு உள்ளாக்கி சிதைப்பதன்மூலம் இந்தியாவை, இந்திய நாகரிகத்தை தாங்களே தாங்கி நிற்பதாக இவர்கள் வெறித்தனமாகப் பேசுகிறார்கள். பண்பாடு, சமயம் முதலியவற்றை இவர்கள் குறுகத் தரிக்கிறார்கள். கடவுளை இவர்கள் தமக்குள் சிறைப்படுத்துகிறார்கள். சமயம் முதலியவற்றை அவற்றின் ஆழ்ந்த உள்ளடக்கம் கண்டு பொருள் படுத்துவதன் மூலம் சமதர்மம் போன்ற புதிய பண்பாடுகளை வளர்ப்பதற்கு மாறாக இவர்கள் போலிக் கடவுள்கள் முதலியவற்றையே நிறுவ முயற்சிசெய்கிறார்கள். தெய்வத்தை ஒப்புக் கொள்ளும் மதவாதிகளும் சரி, தெய்வத்தை மறுக்கும் நாத்திகவாதிகளும் சரி மக்களுக்கு எதிராகவே செயல்படுகிறார் கள். பாரதியைக் கூட இவர்களின் ஒரு சார்பினர் இந்துத்துவவாதி என்றும், மறுசார்பினர் பார்ப்பனர் என்றும் சொல்லி பாரதியைக் கறைப்படுத்தி, கூறுபோட்டுப் பாரதியின் ஆற்றலைக் குறைக்கவே செய்கிறார்கள்.

இடைக்காலத்தில் எதுவும் நேரலாம். கலவரங்களோடுதான் இனி நமக்கு வாழ்வு. சமதர்ம அடிப்படையில் என்றேனும் உருவாகும் இந்தியாவில் நாம் பாராதியோடு இணைந்திருக்க முடியும். அதுவரை பாரதியை நெஞ்சில் தாங்கியிருப்போம். மாணவர்கள் நெஞ்சிலும், மக்கள் நெஞ்சிலும் பாரதியைக் குடி வைப்போம். நெடுங்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு இறுதிக்கட்டத்தில் தோன்றிய பாரதி, நமக்கு என்றைக்குமான தமிழ் இலக்கிய மரபின் நீட்சியோடு விளங்குவார். தமிழ் மரபையும், இந்திய மரபையும் சமதர்மம் என்ற கண்ணியில் இணைத்துக் கண்டதன் மூலம் பாரதியின் பேரெழுச்சி சாத்தியம் ஆயிற்று. நவீனகால உலகின் பல்வகைத் தூண்டுதல்களோடு இந்த மரபைப் புதுப்பித்த பாரதிக்குள் நாம் இணைந்திருப்போம்.

குறிப்பு

"தொடரும்" – 2002 இதழுக்காக எழுதிய கட்டுரை.

10. வள்ளுவரின் அறிவியல் பார்வை

இலக்கியமும் அறிவியலும் வேறு வேறு துறைகளைச் சார்ந்தவை. எனினும் இலக்கியத்தில் அறிவியல் கருத்துக்கள் இயல்பாகவே இடம் பெறுகின்றன. தமிழ் இலக்கியத்திலும் தொன்றுதொட்டு அறிவியல் கருத்துக்கள் இடம்பெறுவதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு ஈறான மனிதர்வரை உயிரினங்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்தி உள்ளார். நிலம், நீர் முதலிய ஐந்து பூதங்கள் கலந்த மயக்கம் இந்த உலகம் என்றும் அவர் கூறியுள்ளார். வானவியல் குறித்த சில உண்மைகள் புறநானூற்றில் இடம் பெறுகின்றன. புல்லாகிப் பூடாகி என்று தொடங்கும் சில வரிகளில், டார்வின் கண்டுரைத்த பரிணாமக் கோட்பாடு மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் இடம்பெறுகிறது. எண்ணிறந்த கோள்களும், நட்சத்திரங்களும் விண்வெளியில் உலவுவது பற்றியும் மாணிக்க வாசகர் குறிப்பிடுகிறார்.

இவை அன்றியும் தமிழர்களின் கணிதவியல், அணுக்கோட்பாடு, மருத்துவம் பற்றிய அறிவியல் உண்மைகளும் பலரும் அறிந்தவை. கட்டிடக்கலை, கடல் வணிகம், நீர்ப்பாசனம், வேளாண்மை முதலிய துறைகளில் தமிழர் பழங்காலத்திலேயே சிறந்திருந்தனர் என்ற உண்மை, அவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேன்மையை நமக்குத் தெளிவு படுத்துகின்றது.

இலக்கியங்களைப் பொருத்தவரை அறிவியல் கருத்துக்கள்/ உண்மைகள் இடம்பெறுவதைக் காட்டிலும் இவற்றின் ஆதாரத்தில் உருவாகக் கூடிய அறிவியல் பார்வைதான் முக்கியம் பெறுகிறது. எந்த ஒரு நிகழ்வையும் காரணகாரியத் தொடர்ச்சியில் வைத்துப்பார்ப்பது அறிவியல் பார்வை. [காரண காரியம் என்பதை ஏது நிகழ்ச்சி என்று மணிமேகலை குறிப்பிடுவதை இங்கு நினைவு கூரலாம்]. இலக்கியங்களில் தனி மனிதர் மற்றும் சமூகம் சார்ந்த உண்மைகள் அழுத்தம் பெறுகின்றன. இலக்கியத்தில் கற்பனைக்கு இடம் உண்டு

எனினும் இத்தகைய கற்பனைகளுக்கும் அடியில் இயங்குகிற அறிவியல் பார்வையில் நாம் காணத் தவறுவதற்கில்லை. திருக்குறளை முன்வைத்து இலக்கியத்தில் இடம்பெறும் அறிவியல் பார்வையில் நாம் காணத் தவறுவதற்கில்லை. திருக்குறளை முன்வைத்து இலக்கியத்தில் இடம்பெறும் அறிவியல் பார்வையை இக்கட்டுரையில் சுருக்கமாக எடுத்துரைக் கலாம்.

வெளிப்படையாகத் தெரியவரும் தோற்றங்கள் பல சமயங் களில் உண்மையை மறைக்கும். இந்நிலையில் தோற்றங்களை ஊடுருவிப் பார்ப்தன் மூலம் உண்மையில் காண்பது அறிவியல் பார்வை. மழித்தலும் நீட்டலும் துறவியரின் புறவேடம். பசுத்தோல் போர்த்த புலியாகவோ அல்லது புலித்தோல் போர்த்து பயிர்களை மேயும் பசுவாகவோ போலித்துறவிகள் இருப்பதை வள்ளுவர் கண்டறிந்து கூறியுள்ளார். குன்றிமணி போல புறத்தில் சிவந்து இருந்த போதிலும் அகத்தில் கரியராய் இருப்பவர் குறித்தும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். குன்று போலத் தோற்றம் தரும் பெரிய மனிதர்களும் தவறிழைப்பதன் மூலம் குன்றி விடுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றார். தக்க சமயத்தில் ஒருவர் தினையளவு நன்மை செய்வதன் மூலம் நம் உயிரையும் மானத்தையும் ஒருவர் காப்பாற்ற முடியும். இத்தகையவர் செய்யும் நன்மையும் சரிவர அறியமுடியுமானால் இந்த உதவிக்கு ஈடாக உலகையே தந்தாலும் ஈடாகாதென்கிறார் வள்ளுவர். இப்படி எத்தனையோ உண்மைகளை வள்ளுவர் தன் அறநூலில் எடுத்துக் காட்டுகிறார்.

இளையதாக இருக்கும் பொழுதே முள் மரத்தைக் களைய வேண்டும் என்கிறார். மயில்தோகை கனம் குறைந்தது எனினும் அளவு கடந்து ஏற்றினால் உறுதியான வண்டியின் அச்சு முறியும் என்கிறார். பகலில் வெல்லும் காக்கையைக் கூகை இரவில் வெல்லும் என்கிறார் – கடலில் விரைந்து செல்லும் நாவாய் கரையில் ஓடமுடியாதென்கிறார். வலிமையுடைய யானையை, அது புதை சேற்றில் தவிக்கும்பொழுது நரிவெல்லும் என்கிறார். இவையெல்லாம்அறிவியல் கருத்துக்கள். சமூகத்தில் நடைபெறும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் மற்றும்

போராட்டங்களை இத்தகைய அறிவியல் கருத்துக்கள் மூலம் நமக்குப் புலப்படுத்துகிறார்.

எப்பொருள், எத்தகைய தன்மை உடையதாக இருந்த போதிலும் அல்லது யார்யார் வாய்க்கேட்ட போதிலும் அதன் தோற்றத்தைக் கடந்து மெய்ப்பொருள் காண வேண்டும் என்பது வள்ளுவரின் அறிவியல் பார்வை.

வள்ளுவரின் அறிவியல் பார்வையை இன்னும் ஆழமாக நாம் பார்க்க முடியும். இங்குதான் வள்ளுவரின் மேன்மையை நம்மால் அறிய முடியும். வானத்திலிருந்து மழை பெய்யவில்லை என்றால் பசும்புல்லின் நுனியையும் காணமுடியாது என்று ஓர் எளிய உண்மையைக் கூறத்தொடங்கிய வள்ளுவர், வானம் மழையை வழங்கவில்லை என்றால் உலகில் தானம் நடைபெறாது, தவமும் இல்லையாகும் என்று அதிர்ச்சிதரும் உண்மையை வெளிப்படுத்து கிறார். உண்மைதான். மழை இல்லை என்றால் நாளடைவில் வள்ளல்கள் இருக்க மாட்டார்கள். துறவிகளுக்கும் வாழ்வில்லை. வள்ளுவரின் பார்வையில் உலக மக்களைக் காப்பாற்றும் வல்லமை உடைய மழையும் ஒரு தெய்வம். இயற்கையினுள்ளும், சமூகத்தினுள்ளும் செயல்படுவதாகிய அறம் என்பது இன்னொரு தெய்வம். தமக்குவரும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு உலகத்திற்கு நன்மை செய்யும் துறவிகளும் தெய்வங்கள். தெய்வம் என்பதே கூட மனிதர்கள் தம்மிடம் காணும் பேருணர்வுகளின் இலட்சிய வடிவங்கள்.

தூய்மையான அறிவு, விருப்பு வெறுப்பற்ற பண்பு முதலியவை தெய்வீகப் பண்புகள். பிற உயிர்களைக் கொல்வதை மறுப்பதோடு பிறரால் கொல்லப்பட்ட உயிர்களின் ஊனையும் உண்ணாதவனை எல்லா உயிர்களும் தொழும். இத்தகையவன் வாழ்வாங்கு வாழ்பவன். இவன் வையகத்தில் இருந்த போதிலும் வானுலகத்துத் தெய்வமாக மதிக்கப்படுவான்.

இத்தகைய மனிதன் விதியையும் வெல்லக்கூடியவன். பிரளயம் நேர்கின்ற காலத்திலும் தூணைப்போல உறுதியாக நின்று மக்களைக் காப்பாற்றுவான். இப்படிச் செல்லுகின்றன

வள்ளுவரின் அறவியல் கருத்துக்கள். இங்கெல்லாம் நாம் என்ன பார்க்கிறோம்? வள்ளுவரின் வீரியம் மிக்க சிந்தனை இயக்கத்தினுள், நெடுந்தொலைவு செல்ல முடியும். இங்கெல்லாம் காரண காரியத் தொடர்பைக் கூர்மையாக நம்மில் காணமுடியும்.

தீயவன் செல்வத்தில் பெருகுகிறான். நல்லவன் அழிவுக்குள்ளாகிறான். சமூகத்தில் இந்த முரண்பாடு ஏன் ஏற்பட்டது என்ற கேள்வியைத் தானே கேட்டுக்கொண்டு இந்த முரண்பாட்டை ஆராய வேண்டும் என்கிறார் வள்ளுவர். இஃது அறிவியல் பார்வை உடையவரின் கேள்வி. பேரறிவாளனிடம் சேர்ந்திருக்கும் செல்வம் ஊர் நடுவிலுள்ள ஊருணியைப் போல எல்லோருக்கும் பயன்படும் என்கிறார் வள்ளுவர். ஒருவர் உழைப்பினால் பெருஞ்செல்வம் ஓரிடத்தில் திரள முடியாது. பலரும் பலகாலம் உழைத்ததன் விளைவே ஓரிடத்தில் சேர்ந்திருக்கும் பெருஞ் செல்வம். இந்த உண்மையை அறிந்து கொள்ளும் பேரறிவாளன் அந்தச் செல்வம் தனக்கு மட்டுமே உரிமை உடையது என்று கருதாமல் பலரோடும் பகிர்ந்து கொள்வான். இப்படியும் அறிஞர் பார்வை செயல்பட முடியும். நெடுங்காலமாகத் தனிவுடமையும் அரசு அதிகாரமும் சமூகத்தைத் தடம் புரள வைத்துள்ளன. இதன் காரணமாகவே நம் சமூகத்தில் தீமைகளும், கொடுமைகளும் மலிந்துள்ளன.

இவை குறித்தெல்லாம் நுட்பமான கருத்துக்களை வள்ளுவர் தன் குறளில் வெளிப்படுத்தி உள்ளார். பொறாமைப்படுபவன் செல்வம் அழியும் என்கிறார். பிறருக்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் என்கிறார். மக்களுக்குக் கொடுமை செய்யும் அரசன் அழிவான் என்கிறார். கொடுங்கோலனின் நாட்டில் மழை பெய்யாது என்கிறார். அற நெறிகள் தவறும் என்கிறார். இப்படி வள்ளுவர் எவ்வளவோ, சொல்லுகிறார். தீயவர்களைக் காய்கிறார். சான்றோரின் வறுமையைப் பாராட்டுகிறார். தன் குடியை உயரச் செய்வதற்காகப் பாடுபடுபவனுக்குத் தெய்வம் ஓடிவந்து உதவி செய்யும் என்கிறார்.

இவ்வாறெல்லாம் வள்ளுவர் சொல்லும்பொழுது வள்ளு

வரின் சமூக உணர்வை, அற உணர்வை நாம் தொடர்ந்து கவனத்தில் கொள்கிறோம். உலகச் சூழலைத் தாறுமாறாகத் தடம் மாற்றி வைத்த பிறகு என்னவெல்லாம் தீமைகளும் இழிவுகளும் குழப்பங்களும் நேரும் என்பதை வள்ளுவரின் உணர்வுகள் வழியே நாம் காண்கிறோம். அறம் பிறழ்ந்த சமூகச்சூழலை மீண்டும் நேரிய வழிக்கு மாற்ற வேண்டும் என்பது வள்ளுவரின் அறிவியல் பார்வை. இவ்வகைச் சிந்தனைக்குள்ளும் வள்ளுவரின் அறிவியல் பார்வையை நாம் கவனிக்கமுடியும்.

இவ்வாறே கண்ணகி மதுரையை அழித்ததையும், மணிமேகலை அமுதசுரபி பெற்றதையும் இப்படித் தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ காட்சிகளை நாம் அக்கறையோடு பார்க்க இயலுமானால் இலக்கியத்தினுள்ளும் செயல்படும் அறிவியல் பார்வையை நம்மால் தொகுக்கமுடியும். சமூக இயலும், அறிவியலும் தமக்குள் ஒன்றிணைவதையும் நாம் காணமுடியும்.

குறிப்பு

சேலம் மாவட்டம் கல்வித்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட அறிவியல் கண்காட்சியின் போது வெளியிட்ட மலரில் இடம்பெற்ற கட்டுரை – 2003.

●

11. தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருங்கதை

தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் அவற்றில் முழு அளவில் கிடைத்துள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றைச் சேர்த்துச் சொல்வதில் பொருளுண்டு. சிறுசிறு அளவில் கிடைத்துள்ள வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றை அறிஞர்கள் நீக்கி விடுகின்றனர். முதலிலும் இறுதியிலும் சில பகுதிகள் கிடைக்கவில்லை. என்றாலும், இன்றளவும் பாரிய வடிவில் மட்டுமல்லாமல் பல்வேறு காப்பியப் பண்புகளோடும் கிடைத்துள்ள பெருங்கதையை நியாயமாகவே சேர்த்துக் கொள்ளலாம். ஐந்தாவதாக சூளாமணியைச் சேர்த்துக் கொள்வது பற்றிக் கருத்து வேறபாடுகளுக்கு இடமுண்டு. கம்பரது காவியம் தமிழிலக்கியத்தில் உச்சம் என்ற வகையில் இந்தப் பட்டியலில் இணைத்துக்கொள்வது பற்றி அறிஞர்கள் ஆராயலாம். பெரிய புராணமும் ஒரு காப்பியம்தான் என்று சிலர் கூறுவது உண்மையாயினும் காப்பியத்திற்குத் தேவையான மையம் இந்த நூலில் உறுதியாய் அமையவில்லை. இவை பற்றியெல்லாம் தமிழ் அறிஞர்கள் ஆராய்வதற்குத் தேவையிருக்கிறது.

பைசாசம் என்ற பழங்குடி மக்களின் மொழியில் குணாட்டியர் இயற்றியது உதயணன் கதை. இதன் பிறகு கங்க நாட்டு அரசன் துர்விநீதன் இந்தக் கதையை உள்ளடக்கிப் பிரகத்கதா என்ற பேரிலக்கியத்தை வடமொழியில் [பிராகிருதம் என்று சொல்வது பொருந்தும்] இயற்றினான் என்று அறிஞர் கூறுகின்றனர். பழங்குடிகள் என்பவர்களுக்குச் சொல்லப்படும் கதையில் அரசர்கள் பற்றிய விவரிப்புகள், காதல் வர்ணனைகள், பல்மனைவியர் திருமணம், பல நுட்பங்களோடு கூடிய போர்த்தொழில் ஆகியவற்றிற்கு இடம் இருக்கும் என்று நாம் கருதுவதற்கில்லை. துர்விநீதன் என்ற அரசன் சொல்லும் கதையில் இத்தகைய கூறுகளுக்கு இடம் இருக்க முடியும். கொங்குநாட்டுக் குறுநில மன்னன் என்று கூறப்படும் கொங்கு வேளிர், துர்விநீதனிடமிருந்து எடுத்துக்கொண்ட ஒரு கதையை தமிழ் இலக்கிய மரபுகள்

பலவற்றை உள்ளடக்கி ஒரு பாரிய காவியமாக இயற்றினார் என்று நாம் கருத முடியும். தமிழகத்தில் கொங்கு வேளிரின் சமகால நிலவரங்கள் பற்றி இந்தக் காவியத்தில் இருந்து நாம் எவற்றையாவது கண்டறிய இயலும் என்றும் தோன்றவில்லை.

பெருங்கதையில் இடம்பெறும் காப்பியக்கூறுகளை இங்குத் தொகுத்துக் கொள்ளலாம். தந்தையின் அரசை இழந்த உதயணன், பிரச்சோதனன் முதலிய மன்னர்கள், யூகி முதலிய மதி அமைச்சர்களின் துணையோடு போராடித் தனக்குரிய நாட்டைப் பெறுகிறான். ஒரு காப்பியம் என்று சொல்வதற்கான ஒரு முக்கியக்கூறு என்று இதனைக் கொள்ளலாம். வாசவதத்தை என்ற பேரழகியை, அறிவாற்றல் மிகுந்தவளை எத்தனையோ சாகச நிகழ்ச்சிகளுக்குப் பிறகு முதலில் காதலியாகவும் பிறகு துணைவியாகவும் பெறுகிறான்.

வாசர்களின் நெஞ்சைப் பெருமளவில் கவரத்தக்க நிகழ்ச்சி என்று இதைச்சொல்ல முடியும். வாசவதத்தையோடு காமமே கதியாகி, அரசன் என்ற முறையில் தனக்கான பொறுப்புக்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட உதயணனை யூகி, சாங்கியத்தாய் முதலியவர்கள் திரும்பவும் அவனது மதிமயக்கம் தீர்த்து நேர்வழிக்குக் கொண்டு வந்தனர். மன்னனிடம் பேரன்போடும் மரியாதை சிறிது குறையாத அளவிலும் யூகி முதலியவர்கள் மனமாசு இன்றியும் உறுதியோடும் செயல்படுகின்றனர். யூகியைப் போன்ற மதிநலம் மிக்க ஒரு அமைச்சரை தமிழ் இலக்கியப் பரப்பில் காணமுடியாது. அதைப்போலவே சாங்கியத்தாய் என்ற பேருருவத்தைத் தமிழ் இலக்கியப்பரப்பில் நிறுத்தியவர் என்ற முறையில் கொங்கு வேளிரை நாம் மன்மாரப் பாராட்டலாம்.

அநேகமாக வாசவதத்தைக்கு நிகரானவள் என்று பதுமாவதியும் சிறப்பான முறையில் சொல்லப்பட்ட போதிலும் காப்பியத்திற்கு இவற்றை முக்கியமான கூறுகள் என்று சொல்வதற்கில்லை. உதயணன் மகன் நரவாணனைப் பற்றிய விரிவான கதை, சில கூறுகளால் சிறப்பானதெனினும் உதயணன் கதையின் இன்றியமையாத பகுதி என்று சொல்வதற்கில்லை.

இந்தக் காப்பியத்தின் கதைக்கூறுகள் இவ்வாறு அமைய, இன்னும் சில குணங்கள் பற்றியும் நாம் கவனிக்க முடியும். உதயணன் யாழ் இசையில் வல்லவன். மதம் பிடித்த யானையின் மதம் நீக்கும் முறையில் யாழை இவன் இசைக்கிறான். வாசவதத்தை மட்டுமல்லாமல் பதுமாவதி, மானனீகை ஆகியவர்கள் அவர்களுடைய உரிய கலைத்துறையில் உச்சத்தை எட்டியவர்கள். ஆடல், பாடல் ஆகியவற்றோடு பந்தாட்டம் முதலிய கலைகளிலும், பன்மொழி அறிவிலும் தேர்ந்தவர்கள். இவ்வகைக் கலைகள் மற்றும் கருவிகள் பற்றிய விரிவும் நுட்பமும கொண்ட வர்ணனைகள் காவியம் நெடுகிலும் இடம்பெறுகின்றன. இவற்றோடு போர்த்தொழில் பற்றிய பல்வேறு வகை விவரங்கள் சிலம்பு முதலிய காப்பியங்களில் கூட இத்தகைய விரிவான நுட்பங்கள் இடம்பெறவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். காப்பியத்திற்கே உரிய செம்மாந்த தமிழ்நடை பற்றியும் இங்கு நாம் குறிப்பிடலாம்.

நம் காலத்திற்கு நெருக்கமான ஒன்றிரண்டு கூறுகளை பெருங்கதை கொண்டுள்ளது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. பெருங்கதை ஆசிரியர் சமண சமயத்தவர் எனினும் சமயப்பார்வை அக்காப்பியத்தில் மேலோங்கவில்லை. கணவன் இல்லாத நிலையில் சாங்கியத்தாய் செய்த தவறு காரணமாக சாங்கியத்தாய் இகழப்படவில்லை. காப்பியத்தில் பரத்தையர் குலம் மரியாதைக்குரியதாகச் சித்தரிக்கப்படுகிறது. பல தேசங்களை உள்ளடக்கிய கதை காவியப் பரிமாணத்திற்கு ஒத்தது எனினும் சிலம்பு அல்லது மணிமேகலையைப் போல தமிழகத்தின் கதைக்கருவை இக்காவியம் சொல்லவில்லை. அளவு என்று கருதும் பொழுது சிலம்பு, மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் அளவில் பெருங்கதை பாரிய நூல்.

இத்தகைய சிறப்புகள் பலவற்றைப் பெருங்கதை கொண்டிருந்த போதிலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிலம்பும், மணிமேகலையும் பெற்ற செல்வாக்கைப் பெருங்கதை பெறவில்லை. இதற்கான காரணங்களை முன்வைத்துப் பார்க்கும் பொழுது பெருங்கதைக்கு ஏன் சிறப்பிடம் கிடைக்கவில்லை என்று

நாம் ஒரு முடிவுக்கு வரலாம். இருபதாம் நூற்றாண்டு, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான நூற்றாண்டு. நவீன கால உலகம் மற்றும் வாழ்வியல் குறித்துத் தேவையான புரிதலை இந்த நூற்றாண்டில் தான் நாம் பெற்றோம். மேற்குலகின் தாக்கம் நமக்குள் சில தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இதன் சாதகம் மற்றும் பாதகம் குறித்து நாம் இங்கு ஆய்வதற்கில்லை.

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்கள் நாயகம் என்பது இந்த நூற்றாண்டில்தான் நமக்கு அறிமுகமாயிற்று. அதனோடு கூடவே சமதர்மம் என்ற பார்வையும் நமக்கு வந்து சேர்ந்தது. மன்னர்கள் இல்லாமலும் உலகியல் நடைபெற முடியும். நவீன கால நோக்கில் சமயங்கள் முதலியவற்றை நாம் மதிப்பிட இயலும். இலக்கியம் பற்றியும் விரிவான திறனாய்வுப் பார்வை நமக்குள் வளர்ச்சி பெற்றது. உலகளவில் வைத்து நாம் பலவற்றைக் கணிக்கவும், உள்வாங்கிக் கொள்ளவும் இயலும். ஒரு வகையில் இடைக்காலக் கட்டுக்கள் பலவற்றிலிருந்து நாம் விடுபட்டதோடு, சுதந்திரமான சிந்தனைகளையும் நாம் பெற்றோம்.

இருபதாம் நூற்றாண்டு நமக்குத் தந்த புதிய பார்வையின் வழியேதான், நாம் நமது பழங்காலத்தை, இலக்கியங்களை வாசிக்கிறோம் மற்றும் உள்வாங்கிக் கொள்கிறோம். சங்க இலக்கியம் தொடங்கிப் பல்வேறு கால இலக்கியங்கள் இப்படித்தான் நமக்கு நெருக்கமாயின. அநீதிக்கெதிராகக் கண்ணகி போராடினாள். வறுமை தீர்க்கும் முறையில் மணிமேகலை அமுதசுரபியோடு அலைந்தாள். பரத்தையர் குலம் தன்மீது சுமத்தப்பட்ட இழிவிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. சமணம், பவுத்தம் ஆகியவற்றின் வழியே சங்க காலத்தின் அறங்கள் சில புதுப்பிக்கப்படுகின்றன. ஒப்புரவு முதலிய அறங்கள் நமக்கு இன்றியமையாதவை ஆகின்றன. சித்தர் நெறியைத் தமிழர்களின் முதன்மை நெறி என்று நாம் காணமுடியும்.

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் எத்தகைய வாழ்வியலை, அரசியலை, பொருளியலை, பண்பாட்டை நாம் படைத்துக் கொள்ள விரும்புகிறோமோ அல்லது விரும்பிப் போராடுகிறோமோ அதன்

தேவைக்காகத்தான் பண்டைய இலக்கியங்களை நாம் ஆழ்ந்து அக்கறையோடு கற்றுப் பொருள்படுத்துகிறோம். சிலம்பும், மணிமேகலையும் இம்முறையில் நமக்கு முதன்மையாகின்றன. சங்க இலக்கியங்கள், திருக்குறள் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை, கம்பர் காவியமும் இம்முறையில் நமக்கு நெருக்கமாகிறது. கொடுங்கோல் மன்னனாகிய ராவணன் இன்றும் ஆயிரம் பெயர்களில் உலவுகிறான். இவர்களோடு நாம் போராடுகிறோம். இராமன் நமக்குத் துணையாக வந்தால் நல்லதுதான்.

இவ்வகை அளவீடுகளை முன்வைத்துப் பார்க்கும் பொழுது சிந்தாமணியும், பெருங்கதையும் நமக்கு இன்று இலக்கியம் என்ற முறையில் பல்வேறு நுட்பங்களோடு வாசிப்பதற்கான வாய்ப்புகளைத் தருகின்றனவே ஒழிய, இந்த இலக்கியங்கள் இன்று நம் நெஞ்சைக் கவரவில்லை. இவற்றின் இலக்கியத் தகுதியை நாம் சிறிதளவும் குறைத்துச் சொல்வதற்கில்லை.

இலக்கியம் பற்றிய மதிப்பீட்டில் காலமும், சமூகமும் உள்நுழைவதை நாம் தவிர்ப்பதற்கில்லை. பேரிலக்கியங்கள் என்பவை காலங்கள் மாறும்பொழுதும், கால மாற்றங்களைக் கடந்தும் தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் சக்தி பெற்றவை. சிலம்புக்கும், மேகலைக்கும் இவ்வகைத் தகுதி உண்டு. பெருங்கதை தன் மையத்தில் அரசனைப்பற்றிய கதை. அரசிகளின் மேட்டிமையான வாழ்வு பற்றிய கதை, காதலை அற்புத நவிற்சியோடு சொல்லும் கதை. போர்ச் சாகசங்கள் என்று பலவற்றைச் சொல்லும் கதை. ரொமான்டிக் உணர்வோடு இந்தக் கதைகளை கல்கி, சாண்டில்யன் வாசர்கள் வாசிக்க முடியும், நமக்கு முடியவில்லை.

காப்பியம் பற்றிப் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. குறிப்பிட்ட கால வரலாற்று நெருக்கடி எதுவோ அதனோடு தொடர்புப்படுத்திக் காப்பியத்தைப் பற்றி ஆராய்கின்றனர். தேசம் தழுவியது காப்பியம் என்கின்றனர். காப்பியம் படைத்தவனை மகாகவி என்கின்றனர். நிரந்தரமான வாழ்வியல் சிக்கல்கள் மற்றும் பேரறங்கள் காப்பியங்களில் இடம்பெறுவது பற்றிக் கூறுகின்றனர்.

இவ்வகை வரையறைகளுக்குப் பெருங்கதை இடம் தருமா? என்பது குறித்து அறிஞர்கள் ஆராய்வதற்கு இடம் உண்டு.

இறுதியாக இப்படிச் சொல்லலாம். தமிழ் இலக்கியம் என்ற முறையில் தமிழ்க் கல்வியாளர்கள் மிகுந்த அக்கறையோடு பயிலத்தக்க பேரிலக்கியம் பெருங்கதை என்பதில் ஐயமில்லை. இலக்கியத்தின் நுட்பங்கள் பல்வற்றை வேறு எந்த இலக்கியத்திலும் இல்லாத அளவிற்குத் தன்னுள் கொண்டுள்ள பெருங்கதையை புலமைநெறியின் ஆக்கத்திற்காக ஆழ்ந்து கற்பதில் பெரும்பயன் உண்டு.

அடியார்க்கு நல்லாரின் பெருமிதமான பாராட்டைப் பெற்றவர் கொங்குவேளிர். தொல்காப்பியர் குறிப்பிடும் தொடர்நிலைச் செய்யுள், தொன்மை, தோல் ஆகிய குறிப்புரைகள், காப்பியம் என்ற பேரிலக்கியத்தை உள்ளடக்கும் என்று தோன்றவில்லை. தொல்காப்பியர் காலத்திலோ முன்போ தமிழில் காப்பியம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை, அல்லது கிடைக்கவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய தமிழ்க் காப்பியங்களை உள்ளடக்கி, தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை விரிவுபடுத்தி இருப்போமானால், தமிழ் நெறி சார்ந்த காப்பியக் கோட்பாட்டை நம்மவர் படைத்திருக்க முடியும். இத்தகைய படைப்பியக்கம் இல்லாத சூழலில் தான் தண்டியின் கோட்பாட்டை நாம் தலையில் வைத்துச் சுமக்க வேண்டிவந்தது. தண்டியின் கோட்பாடு காப்பிய ஆக்கத்தில் மக்கள் சமுதாயத்தைக் கருத்தில் கொள்ளவில்லை. தண்டியின் இலக்கணத்திற்குப் பெருங்கதை பொருந்திவரலாம். அடியார்க்கு நல்லாரும் பாராட்டலாம். நமக்கு இயலவில்லை. எனினும் பெருங்கதையைத் தொடர்ந்து கற்பதில் நாம் குறை வைத்துக் கொள்வதற்கு நியாயம் இல்லை.

குறிப்பு

பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியும், பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும், பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரியும் இணைந்து நடத்திய 'பெருங்கதை' பற்றிய கருத்தரங்கில் இடம்பெற்ற கட்டுரை – சனவரி 2003.

12. தமிழியல் ஆய்வுகள் இதுவரை — இனி

1. 21ஆம் நூற்றாண்டுக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். இருபதாம் நூற்றாண்டை நமக்குள் எந்தளவுக்குச் செரித்துக் கொண்டோம் என்பது பற்றி உறுதியாகச் சொல்வதற்கில்லை. இருபத்தோராம் நூற்றாண்டு எத்தகைய நெருக்கடிகளை நமக்குள் திணிக்கும் என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இடையில் பதற்றத்தோடுதான் நாம் நிற்கிறோம். தமிழ்தான் நமக்கு உயிர் என்று சொல்கிறோம். உண்மையில் தமிழ் நமக்கு உயிர்தானா? என்று கேட்டுக் கொள்வதில் தவறு இல்லை. தமிழை வைத்துப் பிழைப்பவர்களில் நாமும் சேர்ந்து கொள்ள முடியாது. பெயரளவுக்குத் தமிழாசிரியர்கள் என்று சொல்லிக் கொள்வதிலும் அர்த்தம் இல்லை. தமிழ் மக்களுக்கும் கடுமையான நெருக்கடிகள் நேர்ந்துள்ளன.

தமிழ் என்று சொல்லும் பொழுதே, தமிழ்நிலம் மற்றும் தமிழ் மக்கள், தமிழக வரலாறு மற்றும் பொருளியல், தமிழ்க்கல்வி, தமிழ் மருத்துவம், இயற்கை வேளாண்மை என்றெல்லாம் சிந்திக்காமல் முடியாது. தமிழ் மெய்யியல், தமிழ் அரசியல், பொருளியல் என்றெல்லாம் சிந்திக்கவும் கடமைப்பட்டுள்ளோம். ஒற்றைப் பரிமாணத்தில் இனி வாழமுடியாது. வாழ்வின் பன்முகப் பரிமாணங்கள் தான் நம் வாழ்வுக்குள் அர்த்தமும், அழகும், ஆற்றலும் தரமுடியும். தமிழியல் ஆய்வுகளும் இப்படிப் பன்முகப் பரிமாணங்கள் கொண்டவை. வரலாறு, மானுடவியல், உளவியல், இன்னும் தலித்தியம், பெண்ணியம், பின் நவீனத்துவம், நாட்டார் கலை என்றெல்லாம் தமிழியல் ஆய்வைச் செய்தாக வேண்டும்.

2. சங்க இலக்கியம் குறித்து நாம் பெருமைப்பட்டுக் கொண்ட அளவுக்கு இதுவரை ஆய்வுகள் இல்லை. சங்க இலக்கியத்திற்கான இலக்கணம் தொல்காப்பியம்தான் என்று நாம் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தொல்காப்பியத்தில் இருந்துகூட இன்றைய இலக்கியத்திற்கு வரையறைகள் வகுத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம். மேற்கத்திய இலக்கியக்கூறுகள் மற்றும் புதிய

அணுகுமுறைகள் தொல்காப்பியத்தினுள்ளும் இருக்கின்றன என்று புதிய உரைகள் சொல்கிறோம். மரபைப் போற்றுவது தேவை என்பது உண்மைதான். மரபை விரித்துக் கொள்வதும் தேவைதான். ஆனால் மரபுக்குள்ளிருந்தே இன்றும் நமக்குத் தேவையானவற்றை வருவித்துக் கொள்வது இயலாது. இடைக்காலத்தில் எவ்வளவோ நாம் தவற விட்டிருக்கிறோம். பழம்பெருமை இனி நம்மைக் காப்பாற்ற முடியாது. 21–ஆம் நூற்றாண்டு நம்மைக் கடுமையாகவே தாக்கும் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியம் கூறுகிறபடி, அகம் என்பதையும், புறம் என்பதையும் பிரித்துப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால் பிரித்துப் போடுவதிலும் உண்மை இல்லை. உரிப்பொருள் என்பதை அக இலக்கியத்திற்கே உரியது எனக் காண வேண்டியதில்லை. திருக்குறளில் அறம் என்பது உரிப்பொருள். இந்த உரிபொருளின் எழுச்சிக்கு ஆதாரமான முதற்பொருளையும் கருப்பொருளையும் குறளுக்குள்ளிருந்தே காண்பதோடு, வரலாற்றுக்குள்ளும் தேடமுடியும். முதலும் கருவும் மேலும் மேலும் விரிவு பெறக்கூடியவை.

“காதா சப்த சதி” நமக்குக் கிடைத்த பிறகும் நாம் அமைதியாக இருக்க முடியாது. சங்க இலக்கியத்தினுள்ளும் நாம் இன்னும் தேட வேண்டும். புறநானூறு நமக்கு ஒரு பேரிலக்கியம். இதற்கு நிகராகத் தமிழ் இலக்கியத்தில் கம்பர் காவியம் உட்பட எந்த இலக்கியத்தையும் சொல்ல முடியாது. தொல்காப்பியம் கூறும் செய்யுள் இலக்கணம், உள்ளுறை, இறைச்சி முதலியவற்றை உள்ளடக்கியதெனினும் இன்றைய கவிதை இலக்கியத்தை அதனுள் அடக்கமுடியாது. உள்ளுறைதான் படிமம் என்று இன்று சாதிக்க முடியாது.

சங்க இலக்கியத்திற்குரிய திணைக்கோட்பாடென்பதை இன்னும் ஆழமான மற்றும் விரிவான ஆய்வுக்குட்படுத்த இன்று நமக்கு வழிமுறை கிடைத்திருக்கிறது. தொடர்வதற்கு நமக்கு ஆழ்ந்த அக்கறை தேவை. நாம் குறுந்தொகையைக் கற்றளவுக்கு, நற்றிணையையோ, அகநானூறு முதலிய பிற தொகுதிகளையோ கற்கவில்லை. பரிபாடலும், பதிற்றுப்பத்தும் நம்மோடு இன்னும் ஒட்டாமல் உள்ளன.

3. திருக்குறளை நாம் தொடர்ந்து கற்பதற்குத் தேவை இருக்கத்தான் செய்கிறது. அறம் என்ற உணர்வு நம் வாழ்வுக்குள்ளிருந்து எழுவதாக இருந்தால் திருக்குறள் நமக்கு ஆற்றல் தரமுடியும். தமிழ் இலக்கியத்தை மேடைகளில் வைத்து மலினப்படுத்துவதில் நம்மை இழந்திருக்கிறோம். தமிழ் இலக்கியத்தின் உள்ளிருக்கும் ஆற்றல்களை நமக்குள் திரட்டிக் கொள்ளத் தவறி இருக்கிறோம். இந்த வகையில் வள்ளுவரையும், இளங்கோவையும், சாத்தனாரையும் நாம் கேவலப்படுத்தி இருக்கிறோம். இவ்வகை இலக்கியங்களுக்குள் தமிழனின் அமரத்துவத்தை பாரதி கண்டார். இவற்றை உள்வாங்கிக் கொண்ட தமிழனுக்கு அழிவில்லை என்றார் பாரதி. நாமோ அழிந்து கொண்டிருக்கிறோம்/நமக்குள் வரலாற்று உணர்வு இல்லை.

தமிழ் மக்களின் வாழ்நிலை குறித்துநமக்கு அக்கறை இல்லை. அறம் அழிவது குறித்து நமக்குள் சினம் இல்லை. வறுமையை ஒழிக்க நமக்குள் முயற்சிகள் இல்லை. தவம் பற்றி அக்கறை இல்லை. இந்நிலையில் வள்ளுவரோடும், இளங்கோவோடும், சாத்தனாரோடும் நமக்கு என்ன உறவு இருக்க முடியும். இலக்கியம் கற்பதென்பது, வாழ்வைக் கற்பது எனத் தொடங்கி பிறகு பல முனைகளிலும் நமக்குள் நாம் விரிவடைய வேண்டும். வள்ளுவர் மற்றும் இளங்கோவுக்குள் தான் எத்தனை விரிவுகள், எத்தனை பரிமாணங்கள். சொற்களைச் சுவைத்துக் கொள்வதில் அர்த்தம் இல்லை. வள்ளுவர், இளங்கோ வாழ்வு நமக்குள் வசப்பட வேண்டும். மணிமேகலையின் தவம் நமக்கு அந்நியமில்லை. கம்பர் காவியம் பட்டிமன்றங்களில் மற்றும் மேடைகளில் முழங்குகிறது. நமக்குள்ளும் இராமனும் இருக்கிறான், இராவணனும் இருக்கிறான். நம் தேசத்தில் எத்தனை இராவணர்கள், இப்படி எல்லாம் நாம் சிந்திப்பதில்லை. பக்திப் பரவசம் நமக்குப் போதாது.

4. தமிழில் மூன்றில் இரண்டு பகுதிகள் சமயங்கள் சார்ந்தவை. சமயம் குறித்த பகுத்தறிவுக் கண்ணோட்டம் நம்மைப் பற்றி இருக்கிறது. பகுத்தறிவுப் பார்வை காரணமாக மெய்யியல் பார்வையை நாம் இழந்திருக்கிறோம். அதிகாரத்தோடு சமயங்கள் இணக்கம் கண்டபொழுது தமக்குள் இறுகின. என்னதான்

இறுகினாலும் சமயங்களுக்குள் ஓடும் தத்துவ நீரோட்டத்தை நாம் மறுக்க இயலாது.

கடவுள், ஆன்மா முதலிய கருத்தினங்கள் வரலாற்றுச் சூழலுக்கு ஒத்த முறையில் தோன்றி வளர்ந்த கருத்தாக்கங்கள், இவ்வகைக் கருத்துக்களுக்கு இடையில் முரண்பாடுகள் இருப்பதோடு மாற்றங்களும் தொடர்ந்து நேர்கின்றன. காலத்திற்கு ஒத்தவாறு கருத்தாக்கங்கள் வேறுபடுகின்றன. கடவுளையும் தோற்றுவித்தவன் மனிதன்தான். கடவுளின் கருணை மனிதன் வேண்டிய கருணை.

உயிர்களின் தோற்றம் மற்றும் பிரபஞ்ச இயக்கம் குறித்து மனிதன் அன்றும் இன்றும் சிந்திக்கிறான். இவை குறித்து மனிதன் சிந்திக்காமல் முடியாது. தத்துவங்கள் இப்படித்தான் தோன்றுகின்றன. அன்றியும் தத்துவ அடிப்படை இல்லாத அரசியல் எதுவும் நம்மைப் பொருளியல் முதலிய ஆதிக்கங்களுக்கு அடிமைப்படுத்தும்.

பக்தி இலக்கியங்கள் குறித்து நமக்கு ஆழமான பார்வை தேவை. திருமந்திரம் தொடங்கி சித்தர் இலக்கியங்களை நாம் ஆழ்ந்து கற்க முடியும். சமத்துவமும், சமதர்மமும் தமிழ் மெய்யியலின் அடிப்படைக் கூறுகள்.

கணியன் பூங்குன்றன் தொடங்கி வள்ளுவர், இளங்கோ வழியாக இந்தக் கூறுகளை நாம் சிறப்பாக இனம் காண முடியும். இந்த மெய்யியலின் விளைச்சல் என்று சித்தர் இலக்கியத்தைக் குறிப்பிட முடியும். சமணமும் பௌத்தமும் தமிழ் மக்களுக்கு அறம் வகுத்த சமயங்கள். இந்த அறத்தோடு சித்தர்களை உறவுபடுத்த முடியும்.

சித்தர்கள் பொருளையும் அதிகாரத்தையும் புறக்கணித்தவர்கள். அன்பே கடவுள் என்று கூறியவர்கள். சாதி, மதம், சடங்குகள் முதலியவற்றை ஒதுக்கியவர்கள். வள்ளலார், பெரியார், பாரதியார், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் இவர்களுக்குள்ளும் சித்தர்களின் இயக்கத்தை நாம் காணமுடியும்.

தொன்மங்கள் என்ற முறையில் புராணங்கள் குறித்துப் புதிய

பார்வைகளை நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். சைவத்தையும், வைணவத்தையும் ஆழமாகக் கற்கமுடியும். எல்லாச் சமூகங்களும் தொன்மங்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்கின்றன. இன்றும் நமக்குத் தொன்மங்கள் உண்டு. காந்தியும், எம்.ஜி.ஆரும் இப்படித் தொன்மங்களாக உருவாகி உள்ளனர். இவர்களுக்கு அழிவில்லை. வெட்ட வெட்ட இவர்கள் தழைக்கிறார்கள்.

5. வள்ளுவரையும் இளங்கோவையும் கற்ற அளவுக்கு நாம் இன்னும் கொங்கு வேளிரையும், திருத்தக்க தேவரையும், கம்பரையும் கற்கவில்லை. 20–ஆம் நூற்றாண்டில் சமூக இயக்கம் முன்னுக்கு வந்த நிலையில் வள்ளுவர் மற்றும் இளங்கோவுக்கு வாய்ப்புப் பெருகியது. ஒருவகையில் இது சமூகம் மற்றும் அரசியல் உணர்வின் விளைச்சல்.

இலக்கிய மாணவர்கள் என்ற முறையில் நமக்குள் இன்னும் விரிவு தேவை. பெருங்கதையும், சிந்தாமணியும் தமிழில் பேரிலக்கியங்கள். சேக்கிழாரை நாம் குறைத்துச் சொல்வதற்கில்லை. குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்றவர்களும் தமிழின் பேரிலக்கியவாதிகள். 96 வகை எனச்சொல்லப்படும் பிரபந்தங்களை அவற்றின் உள்ளடக்கத்தோடு நாம் ஏன் வாசிக்கத் தவறினோம். இலக்கியம் என்று மட்டுமே இவற்றை நம்மால் வாசிக்க இயலாது என்பது உண்மைதான்.

வாழ்வியக்கத்தோடு இவற்றுக்கும் உறவு இருக்க முடியும். இறைவனைப் பல்வகைப் பாவங்களில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் கொண்டாடினார்கள். கண்ணனைக் குழந்தையாகக் கொண்டாடுவது போலக் குழந்தை என்ற வடிவில் முருகனும் கொண்டாடப்படுகிறான். ஏன் பிற தெய்வங்களை இப்படிக் கொண்டாட முடியாது. எந்த மனிதனுக்குள்ளும் குழந்தைமை இருப்பதை நாம் ஏன் காணத்தவற வேண்டும். பிள்ளைத்தமிழை இப்படிக் காணமுடியும். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் எந்த வயதிலும் இன்னொரு பாலினர் இடத்து ஆர்வம் கொள்வது இயல்பு. தலைமகன் அரசனாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. கைக்கிளையும், பெருந்திணையும் மனத்தில்

ஓயாமல் எழும் உணர்வுகள். சில எல்லைகளைக் கடப்பது கூடாது. இவ்வகையில் உலா இலக்கியங்கள் வாழ்வியலோடு உறவுடையவை. கலம்பகத்தின் வீச்சை வேறு எந்த இலக்கியத்திலும் காணமுடியாது. இப்படி எல்லாம் கற்பதற்கு இலக்கிய மாணவன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள முடியும்.

6. தற்கால இலக்கியம் குறித்து இனிக் காண முடியும். மேற்கத்திய இலக்கியத் தாக்கம் நமக்குள் விரிவாக இடம் பெற்றுள்ளது. செவ்வியல் என்றும், புனைவியல், யதார்த்தவியல் என்றும் நாம் இன்று பேசுகிறோம். மு. வரதராசனார், அ.ச.ஞானசம்பந்தன் இலக்கியக் கலை பற்றி நமக்கு அறிமுகம் தந்தனர். இவை எல்லாம் மேற்கின் வரவுகள்.

கிறித்துவத்தின் மூலம் மேற்குலகின் பாதிப்புக்களையும் இன்றைய வாழ்வில் நாம் காண்கிறோம். நவீன காலனி ஆதிக்கம் நம்மைக் கடுமையாகவே பாதித்திருக்கிறது. நம்முடைய சிந்தனைகள், வாழ்முறை, தொழில்கள், பொருளியல், அரசியல், நாகரிகம், நுகர்வு என்ற எல்லா வகைகளிலும் மேற்குலகத்திற்கு நாம் ஆட்பட்டிருக்கிறோம். தமிழ் இலக்கிய ஆய்வுகள் முதலியவற்றையும் மேற்கத்திய முறைகளைக் கொண்டே செய்கிறோம். நவீனத்துவம், பின் நவீனத்துவம் என்று தீவிரமாகப் பேசுகிறோம். மேற்கு, கிழக்கை வெற்றி கொள்வதற்கு நாமும் ஊடகமாக இருக்கிறோம். தமிழ் இலக்கியத்திற்குரிய திறனாய்வுக் கோட்பாட்டைத் தமிழ் இலக்கியத்திற் குள்ளிருந்தே வகுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் பெரிதும் விரும்பினாலும் இதுவரை அது செயல்படவில்லை. மேற்குலகைக் காட்டிலும், கலை, பண்பாடு, இலக்கியம், மெய்யியல், சிற்பம், கட்டிடம், இசை முதலிய களங்களில் நாம் தேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. மேற்குலகம் நம்மை வெற்றி கொண்ட வரலாற்றை நாம் நமக்குள்ளிருந்து இன்னும் கற்கவில்லை. இந்தச் சிக்கல் மிகக் கடுமையான சிக்கல்.

நமக்குரிய தேசம், நமக்குரிய வரலாறு, நம் மொழி என்று நமக்குள் தெளிவும் உறுதியும் பெறவேண்டும். பகுத்தறிவு, மார்க்சியம் என்பனவெல்லாம் மேற்கிலிருந்து வந்தவை. நமக்குள் நெடுங்கால மரபுகளிலிருந்து இவற்றை நாம் பயிலமுடியும்.

பண்பாடு இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பது போல சமயம் இல்லாமலும் இங்கு வாழ்க்கை நடைபெறவில்லை. சமயத்தினுள்ளும் திருமூலர் முதலியவர்களைக் காண்கிறோம்.

மேற்குலகைக் காட்டிலும் தமிழ் வரலாறு, இலக்கியம் முதலியவை நெடுங்காலத்தை உள்கொண்டவை, ஆற்றல் மிக்கவை. மேற்குலக அறிவின் மூலம் நமக்குள்ளும் சில புதுமைகளை விளைத்துள்ளோம். புதுமைகள் என்ற பெயரால் நமக்குள்ளும் அடிமைப்படுவதும் நேர்ந்திருக்கிறது. இவை குறித்து நாம் விரிவாக ஆராய வேண்டும்.

7. இலக்கிய மாணவர்கள் என்ற முறையில் படைப்பிலக்கியப் பயிற்சி இல்லாமல் இலக்கியங்களை நாம் கற்றுக் கொள்வதும் இயலாது. திறனாய்வு செய்வதற்கும் படைப்பிலக்கியப் பயிற்சி சிறப்பாகப் பயன்படும். நிகழ்காலத்தோடு நாம் கொண்டுள்ள பலவகைப் பரிமாணங்களோடு கூடிய உறவின்மூலமே நம்காலப் படைப்பிலக்கியங்களை நாம் வாசிக்க முடியும், அன்றியும் படைக்கவும் முடியும். படைப்பியக்கம் என்பது ஒரு அற்புதமான ஆற்றல். எந்த ஒரு மனிதனுக்குள்ளும் படைப்பியக்கம் செயல்படுகிறது. இலக்கிய மாணவன் தானும் படைக்கும்பொழுதுதான் இதைத் தனக்குள் புரிந்து கொள்ள முடியும்.

எல்லாக் காலத்து இலக்கியங்களையும், நிகழ்வில் வைத்துத்தான் வாசிக்கிறோம். சிலப்பதிகாரத்தையும், மணிமேகலை யையும் நம் காலத்தில் வைத்து நம் அனுபவங்களோடு வாசிப்பதைப் போல் சேக்கிழாரையும், திருத்தக்கத்தேவரையும் வாசிக்க வேண்டும். ஒரு நல்ல கவிதை நமக்குள் கவிதை உணர்வைத் தோற்றுவித்து நம்மைக் கவிஞனாக்குகிறது. சிலம்பின் நாயகர்களை நமக்குள்ளும் காண முடியும். எந்த இலக்கியமும் காலாவதியாவதில்லை. ஆதிக்க உணர்வுகளை நமக்குள் இருந்து களைந்து கொள்வதன்மூலமே இலக்கியத்தோடு நாம் சரியான உறவு கொள்ள முடியும்.

இது மக்கள் நாயகத்துக்குரிய காலம். சமத்துவமும், சமதர்மமும் இல்லாமல் நமக்கு இங்கு வாழ்வு இல்லை. உலகம் நம்மை ஒவ்வொரு நாளும் பாதிக்கிறது. வரலாற்றுணர்வும், மெய்யியல் உணர்வும் நம் ஆளுமைக்கு வளம் சேர்ப்பவை. தமிழ்

இலக்கியக் கல்வி நம்மைச் சிறந்த மனிதனாக்க முடியும். மனித விடுதலை நோக்கி நம்மை இயக்க முடியும். தமிழ் நமக்கு உயிர் என்று சொல்வதன் அர்த்தம் இதுவாகத் தான் இருக்கமுடியும்.

குறிப்பு

தமிழ் நேயம் – 4 – 2002

13. தமிழ் இலக்கிய ஆய்வுக்கு ஒடுக்கப்பட்டோர் நிலைகுறித்த அணுகுமுறை

தமிழ் இலக்கிய ஆய்வுக்கு ஆய்வாளர்கள் பல்வேறு அணுகுமுறைகளை இந்நாள்வரை பயன்படுத்தி வருகின்றனர். அண்மைக்காலத்தில் தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம் ஆகிய அணுகுமுறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கான காரணங்கள் குறித்து இங்கு சுருக்கமாகச் சொல்லலாம்.

இலக்கிய ஆய்வுக்குப் பகுத்தறிவு, பண்பாடு, மார்க்சியம் என்ற அணுகுமுறைகளை தமிழியல் ஆய்வாளர்கள் என்ற முறையில் நாம் பயன்படுத்தி வந்தோம். இத்தகைய ஆய்வு முறையில் தற்காலச் சூழலில் போதுமானவை என்று நம்மால் கருத இயலவில்லை. இலக்கிய ஆய்வுக்கு ஏதாவது ஒரு வகையில் சமூகவியல் சார்ந்த கண்ணோட்டத்தைப் பயன்படுத்துகிறோம். இலக்கியம் என்பதுகூட தற்காலச் சூழலில் ஆய்வுக்குரிய முதன்மைப் பொருளாக நமக்குத் தோன்றவில்லை. சமூகச் சிக்கல்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் சமூக நலத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்ற நோக்கம் நமக்கு முதன்மையாகி வருகிறது. இதுநாள்வரை தமிழிலக்கிய ஆய்வில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையோர் மேன்மக்களாக இருந்தனர். ஒரு காலத்தில் சமயம் சார்ந்த கண்ணோட்டம் இவர்களுக்குள் முழுமைப்பட்டிருந்தது. அதன்பிறகு பண்பாடு சார்ந்த கண்ணோட்டம். பகுத்தறிவு, மார்க்சியம் போன்ற கண்ணோட்டங்களும் வாழ்நிலையில் சற்று மேம்பட்ட படிப்பாளிகளின் கண்ணோட்டமாக இருந்தது. சமூகத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர், பெண்கள் முதலியவர்களை உள்ளடக்கிய அடித்தள மக்கள்மீது இவர்கள் கருணையோடுகூடிய கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தனர். சமூக நெருக்கடிகள் கடுமையாகி வரும் சூழலில் அதுவும் அடித்தள மக்கள்மீது நெருக்கடிகள் கூடுதலாகி வரும் சூழலில் கருணை சார்ந்த கண்ணோட்டங்கள் பயன்படுவதில்லை. வாழ்க்கையில் அடிமைத்

தனம், ஒடுக்குமுறை, மரியாதைக்குறைவு, வறுமை, அறியாமை முதலிய நெருக்கடிகளோடு வாழ்ந்து வரும் கணிசமான மக்களுக்கு மேன்மக்களின் சுவைக்கு உரிய இலக்கியம் உவப்பாக இருக்கமுடியாது. அன்றியும் தமிழிலக்கியப் பரப்பின் பெரும்பகுதியை இவ்வகை மக்கள் சுவைக்கவும் இயலாது. இந்த இலக்கியத்தில் அடித்தள மக்களின் வாழ்க்கை போதுமான அளவில், சரியான பார்வையில் இடம்பெறுதல் இல்லை. நவீனகால தமிழ் இலக்கியத்தில்தான் இம்மக்களுடைய வாழ்க்கை தொடர்ந்து கூடுதலாக இடம்பெறுகிறது. அடித்தள மக்களின் பார்வையில் இலக்கியத்தை ஆய்வதற்கான புதிய அணுகுமுறையை நாம் தேடிக் கண்டறிய வேண்டியிருக்கிறது. நெருக்கடிகள் கடுமையாகி வரும் சூழலில் முதலில் வாழ்நிலை சார்ந்த சிக்கல்கள் தீரவேண்டும். அதே சமயம் வாழ்வியல் சார்ந்த சிக்கல்களை உள்ளடக்கிய இலக்கியங்கள் தேவை.

இவ்வகையான ஆய்வில் ஈடுபடும்போது ஆய்வாளர்களாகிய நாம் சார்ந்த சமூகப்பிரிவு என்பது குறித்தும் நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்' என்று வள்ளுவர் கூறியதை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். அறம் என்றால் என்ன என்பதற்கு இந்தக் கூற்றைவிட சரியான இலக்கணம் வேறு இருக்க முடியாது என்றும் நாம் கொள்ளுகிறோம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் போன்றவை மனத்தில் உற்ற மாசுகள் என்றும் இவற்றைக் களைந்துகொள்ள வேண்டுமென்றும் வள்ளுவர் கூறிய அறநெறியை வகுத்துரைக்கிறோம். சாதிப்படி நிலையில் அல்லது சமூகத்தளத்தில் மேற்பட்ட கல்வி அறிவுக்கான வாய்ப்பைப் பெற்றுள்ள நாம் நம் மனத்தில் மாசு இல்லை என்றும் மக்களின் வாழ்வை வேண்டுகிறோம் என்றும் கருதிக் கொள்கிறோம். நம்மைப் பற்றி நாமே சற்றுக் கூடுதலான சுய ஆய்வை செய்துகொள்ளவேண்டும். சமூகத்தில் நம்மைவிட மேம்பட்ட வாழ்வுடையவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். அவர்களைப் போல நாம் அதிகாரம் செய்யவில்லை, கொள்ளையடிக்கவில்லை, ஊழல் செய்யவில்லை என்பதும்கூட உண்மைதான். ஆனால் அதேசமயம் சமூகத்தில் உள்ள பெரும்பான்மையினரான அடித்தள மக்கள்மீது நாம் அமர்ந்து இருக்கிறோம். மத்திய தர வர்க்கம் என்பதன் ஒரு பகுதியிலோ

அல்லது கீழ்நிலையிலோ நாம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் தாழ்த்தப் பட்டவர்கள் முதலியவர்கள் மீதுதான் நாம் அமர்ந்து இருக்கிறோம். அவர்களுக்குக் கிட்டாத கல்வி வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. நகரத்தில் வசதியான வீடுகளில் சுகாதாரமான சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய குழந்தைகள் தரமான பள்ளிகளில் படிக்கிறார்கள். வங்கிகள் கணக்கு வைத்திருக்கிறோம். எதிர்காலத் திற்கான பாதுகாப்பு நமக்கு இருக்கிறது. நிரந்தரமான வேலை நமக்கு வாய்த்திருக்கிறது. தரமான இலக்கியம், இசை, கலை ஆகியவற்றை நாம் தேர்ந்து சுவைக்க முடியும். இந்த வகையான வசதி வாய்ப்புகள் சமூகப் படிநிலையில் நம்மைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு இல்லை. இது மட்டுமல்ல, நமக்கான வசதி வாய்ப்பு முதலிய அனைத்தையும் நாம் அவர்களிடமிருந்து பறித்திருக்கிறோம் அல்லது நமக்கு முன்னவர்களோ, அரசோ, முதலாளிகளோ அவர்களிட மிருந்து பறித்து நமக்கு அளித்திருக்கிறார்கள். நமக்குள்ள கல்வி அறிவு அவர்களை அறியாமையில் தள்ளி, நாம் பெற்றது. நம்மிடம் சேர்ந்துள்ள அழகும், ஆற்றலும், பண்பாடும் அவர்களிடமிருந்து அவர்களை அழகற்றவர்களாக்கி, ஆற்றல் குறைந்தவர்களாக்கி நாம் பறித்தது. அவர்களில்லாமல் வாழ்க்கையில் நாம் நலமாக, வசதியாக வாழ முடியாது. அவர்கள்தான் நம் வீடுகளில், அலுவலகங்களில், தோட்டங்களில் கூலிகளாகச் செயல்படுபவர்கள். நமது இருப்பிடங்கள் தூய்மையாக இருப்பதற்கு அவர்கள்தான் காரணம். ‘தம் சுகாதாரத்தைப் பேணாமல் நம் சுகாதாரத்தைப் பேணுபவர்கள் அவர்கள்’ இப்படி எண்ணிப் பார்க்கும்போதுதான் நம்மிடம் சேர்ந்துள்ள மாசுகள், குற்றங்கள் நமக்குப் புரிய வரும். நம்மிடம் சேர்ந்துள்ள அழுக்காறு, அவா, வெகுளி முதலியவை குறித்து நாம் சிந்திக்க நேரும். நாம் தூய்மையானவர்களாக இல்லை, மனமாசு அற்றவர்களாக இல்லை, நமக்கு மேலுள்ளவர்கள் நம்மைக் காட்டிலும் மாசுள்ளவர்கள் என்று சொல்லி நம்மை நல்லவர்கள் என்று சொல்லிக்கொள்ள இயலாது. தமிழிலக்கிய ஆய்வில் இதுநாள்வரை ஈடுபட்ட மேன்மக்கள், அறிஞர்கள், சான்றோர்கள் குறித்து நாம் இவ்வாறெல்லாம் சிந்திப்பது தவறு இல்லை.

இப்பொழுதெல்லாம் நாம் நம் சமூகத்தில் வறுமையோ, அறியாமையோ, மாசுகளோ, குற்றங்களோ, குறைகளோ எந்த வடிவத்திலும் இருக்கக்கூடாது என்று விரும்புகிறோம். ஆதிக்கமும் வேண்டாம், அடிமைத்தனமும் வேண்டாம், கல்வி வாய்ப்புகள் அனைவருக்கும் தேவை. இப்படித் தொடங்கி சமூகத்தை முற்றிலும் புதிய அடிப்படைகளில் படைக்கவேண்டுமென்று கருதுகிறோம். சுரண்டலும் ஒடுக்குமுறையும் எந்த வடிவத்திலும் இனியும் தொடர்வது கூடாது என்று நம்புகிறோம். நெருக்கடிகள் உலக அளவில் அதிகரித்து வரும் சூழலில் நாம் இவ்வாறெல்லாம் கருதுவது தவிர்க்க இயலாது ஆகிவிடுகிறது.

2

இப்பொழுது வரலாற்று நோக்கிலிருந்து இந்தச் சிக்கல் குறித்து சிலவற்றைச் சொல்லலாம். வரலாற்றில் ஆதிமனிதன் என்ற நிலையிலிருந்து நாம் எவ்வளவோ முன்னேறி நவீனகால நாகரிகத்திற்குள் வந்திருக்கிறோம். அறிவியல், தொழில், வணிகம், போக்குவரத்து, செய்தித்தொடர்பு, கல்வி, மருத்துவம், கலை, இலக்கியம் ஆகிய எத்தனையோ தளங்களில் முன்னேறிய வாழ்வியல் தரத்தோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகளவிலான நாகரிகம், முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றில் நாம் எந்தத் தளத்தில், தரத்தில் இருக்கிறோம் என்பதும் நமக்குத் தெரியும். இது குறித்தெல்லாம் தீவிரமான சிந்தனைகள், கருத்துகள் நமக்குண்டு. வரலாற்றில் ஏற்பட்ட மாபெரும் வளர்ச்சியில் கூடுதலான பங்கை அபகரித்துக் கொண்டவர்கள் யாரென்றும், உலக நாகரிக வளர்ச்சிக்கு நம்முடைய பங்களிப்பு என்ன, நாம் பெற்றவை என்ன, கற்றவை என்ன என்றும் சிந்திக்கிறோம். உலகளவிலான ஏற்றத்தாழ்வுகள் ஆதிக்கங்கள், புதிய வகை அடிமைத்தனங்கள் பற்றியும் நாம் சிந்திக்கிறோம். வளர்ச்சி என்பது உண்மையில் வளர்ச்சிதானா, நாகரிகம் என்பது உண்மையில் நாகரிகம்தானா, என்றெல்லாம் சிந்திக்கிறோம். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க ஆதிமனித நிலையில் நாம் இன்று இல்லை. பிரபஞ்சம், வரலாறு, தேசங்கள், மொழிகள், அறிவியல் நுட்பங்கள், கலை நுட்பங்கள் என்று எவ்வளவோ நாம் அறிந்திருக்கிறோம். இயற்கையின் நுட்பங்களை நாம் அறிந்திருக்கிறோம். பேரறிவு

வாய்த்திருக்கிறது. வாழ்க்கை என்பது எத்தனையோ பரிமாணங்களில் நமக்கு வாய்த்திருக்கிறது. விலங்கு நிலையிலிருந்து மேம்பட்டு மனிதத் தரத்தில் நாம் பிரிந்திருக்கிறோம். நமக்குள் நுட்பங்கள் ஏராளமாகக் கூடி இருக்கின்றன. நம்மைப்பற்றி நாம் தொடர்ந்து ஆராய்கிறோம். பிரபஞ்சத்திலிருந்து, இயற்கையிலிருந்து, வரலாற்றிலிருந்து நம்மை நாமே படைத்திருக்கிறோம். தெய்வங்களை நாம்தான் படைத்தோம். தத்துவங்கள், சமயங்கள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றைப் படைக்கிறோம். நம் வாழ்வை நாம் தொடர்ந்து வளப்படுத்திக் கொண்டும் இருக்கிறோம். பல்லாயிரமாண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட இந்த வளர்ச்சிகள், முன்னேற்றங்கள் முதலியவை எவ்வளவு தான் சிக்கல்கள் கொண்டதாக இருந்தபோதிலும், அவற்றிலிருந்து நாம் எந்த நிலையில் இருந்தபோதிலும், பெற்றுக் கொள்ளாமல் இல்லை. சிலர் கூடுதலாகப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலருக்கு மிகக் குறைவாகத்தான் கிடைக்கிறது. சில நாடுகள் கூடுதலாகப் பெற்றுக் கொள்கின்றன. போர்கள் இன்றும் ஒழிந்தபாடில்லை. கொடுமைகள் இன்னும் குறைந்த பாடில்லை.

இவை எப்படி இருப்பினும் இவற்றை நாம் மறுப்பதற்கு இல்லை. எல்லாவற்றையும் மறுபங்கீடு செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். கொடுமைகள் தீரவேண்டுமென்று விரும்புகிறோம். எல்லோருக்கும் எல்லா வாய்ப்பும் கிடைக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம். அமைதியான, அழகான, நிறைவான வாழ்க்கை எல்லோருக்கும் வாய்க்க வேண்டுமென்று விரும்புகிறோம். இயற்கை அழியக் கூடாது. ஒரு புதிய உலகம் நமக்குத் தேவை. போர் இல்லாத உலகம், சமதர்மம் நிலவுகிற உலகம்.

இந்த இடத்தில் காரல்மார்க்சின் 'கோதா திட்டம்' என்ற சிறிய நூல் நம் நினைவுக்கு வருகிறது. ஜெர்மனியில் 'கோதா' என்ற இடத்தில் 'லங்கஸ் வே' என்ற சமதர்மக் கட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி னார்கள். தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தம் உழைப்புத் திறனைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியாகும் உபரி மதிப்பைத்

தொழிலாளர் அனைவருக்கும் முதலாளிகள் பங்கிட்டுத் தரவேண்டும் என்பது அந்தத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தை மார்க்சின் பார்வைக்கு லங்கஸ் வே முன்வைக்கிறார். மார்க்ஸ் இந்தத் தீர்மானத்தை பெரிதும் விரும்புவார் என லங்கஸ் வே கருதுகிறார். தீர்மான வாசகத்தைப் படித்த மார்க்ஸ் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். லங்கஸ் வே அதிர்ச்சி அடைந்தார்.

'கோதா திட்டம்' என்ற சிறுநூலில் மார்க்ஸ் தம் கருத்தை விளக்கியுள்ளார். ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஒரு நகரத்தில் பல்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். உபரி மதிப்பு உற்பத்தியாகிறது என்பதும் உண்மைதான். இவர்கள் ஒரு நகரத்தில் வாழ்கிறார்கள். நகரத்தை நிர்வாகம் செய்யும் மாநகராட்சி, நகரத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள், சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வசதி என்று ஏராளமான பொறுப்புகளை மேற்கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் அன்றி நகரத்தில் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பணிபுரிய முடியாது. இவர்களின் குழந்தைகள் கல்வி கற்கவேண்டும். மருத்துவ வசதிகள் இவர்களுக்கு வேண்டும். குடியிருப்புகள் தேவை. தேய்மானம் அடையும் இயந்திரங்களுக்கு மாற்று இயந்திரங்கள் வேண்டும். தொழில்நுட்பங்கள் கூடுவதற்கு ஏற்பப் புதியவகை இயந்திரங்கள் தேவை. தொழிற்சாலைகள் தேவை. மக்கள்தொகையும் கூடுகிறது. இவை எல்லாவற்றையும் அரசோ, நகராட்சிகளோ செய்தாக வேண்டும். தொழிற்சாலைகளில் உற்பத்தி ஆகும் மதிப்பை முதலாளிகள் பறித்துக் கொள்கிறார்கள் என்பது உண்மைதான். உபரி மதிப்பை முழு அளவில் தொழிலாளர்களே நமக்குள் மறுபங்கீடு செய்து கொள்வது என்றால் மாநகராட்சி அல்லது அரசு நகர மக்களின் தேவைகளை எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

மார்க்ஸ் என்ன சொல்கிறார்? தொழிலாளிகளே எல்லாவற்றையும் தின்று தீர்க்க முடியாது. மறுஉற்பத்தி முதலியவை தொடர்ந்து நடைபெறவேண்டும். கல்வி வாய்ப்பு, மருத்துவ வசதி முதலியவற்றை மாநகராட்சியோ, அரசோ ஏற்படுத்துவதற்குத் தேவையான தொகையை அவர்கள் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். எதிர்காலத்தில் தொடர்ந்து வளர்ச்சி

நடைபெற வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் தேவையான தொகையைத் தந்த பிறகு மீதமிருப்பதைத்தான் தொழிலாளிகள் நமக்குள் பகிர்ந்துகொள்ள முடியும். சமூகம் இயங்க வேண்டும். இந்த இயக்கம் நடைபெறும்போதுதான் எல்லோருக்குமான வாழ்க்கை கிடைக்கும். மாநகராட்சி ஊழல் செய்யலாம். முதலாளிகள் கூடுதலாக எடுத்துக் கொள்ளலாம் எனினும் வேறு வழியில்லை.

இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்கிறோம்? வரலாற்றில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்றால் தனியுடைமை இல்லாமல், அரசு அதிகாரம் இல்லாமல், முதலாளியம் இல்லாமல் முடியாது. இயந்திரங்கள் இல்லாமல், மொழி இல்லாமல் முடியாது என்பதைப் போல, தனியுடைமை இல்லாமலும் வளர்ச்சி இல்லை. வரலாற்றில் மனிதன் வாழமுடியாது. உற்பத்தியாகும் அனைத்தையும் தின்று தீர்ப்பது என்றால் எதிர்காலமில்லை. இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். சுரண்டல், ஒடுக்குமுறை இல்லாமல் வரலாற்றில் வளர்ச்சி இல்லை.

சுரண்டலும் ஒடுக்கு முறையும் உழைக்கும் மக்கள் மீது கூடுதலாக, கடுமையாகத் திணிக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆதிக்கத்தில் இருந்தவர்கள் கூடுதலாக எடுத்துக் கொண்டார்கள் என்பதும் உண்மைதான். அதே சமயம் ஆதிக்கங்களை உழைக்கும் மக்கள் முழுமனதாக எப்போதும் ஒப்புக்கொண்டதும் இல்லை. மக்கள் கலகங்களில் தவிர்க்க இயலாமல் ஈடுபடுகிறார்கள். நாகரிக வளர்ச்சி என்பது இதன் மூலமாகவும் நடைபெறுகிறது. வரலாற்று இயக்கம் என்பதே எப்பொழுதுமே முரண் இயக்கமாகத்தான் இருக்கிறது. நேர்கோட்டுப் பாதையில் வரலாறு இயங்குவது இல்லை. அழிவும் ஆக்கமும் இணைந்தே நடைபெறுகின்றன. அழிவு இல்லாமல் ஆக்கமும் இல்லை. ஒன்றை இழந்துதான் இன்னொன்றைப் பெற முடியும். வரலாற்று இயக்கத்தின் கடுமையான முரண்களோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் நம் வாழ்க்கையும் வேறு வகையில் அமைய முடியாது. இலக்கிய ஆய்விலும் இதே முரணைத்தான் நாம் இன்று எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தொல்காப்பியரையும், வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பரையும் நம் காலநோக்கிலிருந்து

கூர்மையாகத் திறனாய்வு செய்யும்போது நம்மை நாமே மேம்படுத்திக்கொண்டோ அவர்களைத் தாழ்த்தியோ செய்துவிட முடியாது. மார்க்ஸ் கூறியது போல வரலாற்று மாயையிலிருந்து யாரும் தப்புவதற்கில்லை. வரலாற்று இயக்கம் குறித்து இன்று கூடுதலான பார்வை நமக்கு வாய்த்திருக்கிறது என்பதும் உண்மைதான். இந்த எச்சரிக்கையோடு ஒடுக்கப்பட்டோர் பார்வை யிலிருந்து தமிழிலக்கிய ஆய்வை நாம் செய்ய வேண்டும்.

3

நெடுங்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒடுக்கப்பட்டோர் நிலை குறித்த விவரங்கள் சிலவற்றை இங்குத் தொகுத்துக் கொள்ள வேண்டும். இதன் தொடர்பாக ஒடுக்கப்பட்டோர் யாவர் என்பது குறித்தும் சில தெளிவுகள் முக்கியம். தலித் மக்களும், பெண்களும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற தொகுப்பில் முதலிடத்திற்கு உரியவர். ஒடுக்கப்பட்டோர் என்பது சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர் அனைவரையும் குறிக்கும் என்றபோதிலும் தமிழகச் சூழலில் பட்டியல் சாதியினரையே குறிக்கும் சொல்லாகப் பொருள்படுத்தப்படுகிறது. பட்டியல் சாதியினரிலும் தங்களைச் சேர்க்க வேண்டாம் என்று மள்ளர் இனத்தில் ஒரு பகுதியினர் கருதுகின்றனர். இந்தியச் சமூகம், சாதியச் சமூகம் என்ற கருத்தில் பட்டியல் சாதியினரைத் தவிர பிற்பட்ட சாதியினர் பலரும் சாதிய முறையில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். ஆதிவாசிகளை நாகரிக சமூகத்திற்குள் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தில் வாழ்விடங்கள் முதலியன மறுக்கப்படும் நிலையில் அவர்களும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். பொருளியல் படிவத்தில் மட்டுமல்லாமல் நம்முடைய மக்கள் சமூகத்தில் உள்ள உயர்சாதியினரின் கலாச்சார ஒடுக்குமுறைக்கும் உள்ளாகின்றனர். ஒடுக்குமுறை வடிவத்தில் மதத்திற்கு முக்கியமான பங்குண்டு.

ஒடுக்குமுறை தவிர முதலாளிய ஒடுக்குமுறை, அரசமைப்பு ஒடுக்குமுறை முதலியவற்றையும் இங்குச் சேர்த்துச் சொல்ல வேண்டும். உலகமயமாதல் சூழலில் சமூகத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் எத்தனையோ வகைகளில் ஒடுக்குமுறைகள் திணிக்கப் படுகின்றன. மேற்கத்திய நாகரிகம் மருத்துவம், நுகர்வியம் முதலிய வடிவங்களிலும் பெரும்பான்மையான மக்கள்

மீது ஒடுக்குமுறைகளைத் திணிக்கிறது. குடிநீர் முதலிய எவ்வளவோ தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான மக்கள் போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்றன. சட்டத்தின் பெயரிலும், சட்டத்திற்குப் புறம்பாகவும் ஒடுக்குமுறைகள் அதிகரிக்கின்றன. இவ்வகையான விவரங்களைத் தொகுத்துச் சொல்வதுகூட இப்போதைக்குச் சாத்தியமில்லை. இத்தகைய கண்ணோட்டத்திற்கு இந்தச் சிக்கல் குறித்து நம் கவனத்தைச் செலுத்துவது என்றால் வரலாறு நெடுகிலும் எத்தனையோ வடிவங்களில் மக்கள்மீது ஒடுக்குமுறைகள் செயல்படுவதைக் காணமுடியும். சுரண்டலும் ஒடுக்குமுறையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். சுரண்டல் இல்லாமல் வரலாறு, வாழ்க்கை இல்லை என்பதை இங்கு மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

காவிரி ஆற்றுப்படுகையில் மாபெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் அதே காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பெரிய கோவில் முதலியன எழுந்தன. ஒரு பக்கத்தில் ஒடுக்குமுறையும் மறுபக்கத்தில் நாகரிக வளர்ச்சியும் ஏற்படுகின்றன. ஒரு மாணவனின் இயல்பான சில உணர்வுகளை ஒடுக்குவதன் மூலமே கணிதம் முதலிய அறிவுத்துறையில் அவனது அறிவை மேம்படுத்துவதைப் போன்றதுதான் இதுவும். மாணவனுக்குக் கணிதம் முதலியவற்றைத் திறம்படக் கற்பித்தல் என்பதுகூட முதலாளியம், அரசதிகாரம் ஆகியவற்றின் தேவைக்காக நடைபெறுகிறது. முதலாளியமும் அரசு அதிகாரமும் நம் தேவைக்கு ஒத்த முறையில் மாணவர்களை மட்டுமல்லாமல் மாணவர்களைத் தம் தேவைக்காகச் செயல்படுத்துகிறது. இறுதியில் எல்லாமே இயல்பானவை, தேவையானவை என்ற உணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது. ஒடுக்குமுறையை இவ்வாறுதான் அரசு, மதங்கள் முதலியவை நியாயப்படுத்துகின்றன. இவ்வகை நியாயத்தை மக்களும் ஏற்பதன்மூலம் எல்லாமே இயல்பானவை என்ற நம்பிக்கை நிலைபெறுகிறது.

இனி, தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள ஒடுக்கப்பட்டோர் சார்ந்த சில விவரங்களை இங்குப் பார்க்கலாம். தொல்காப்பியர் கூற்றுப்படி வினைவலரும் அடியவரும் ஐந்திணைக்கு உரியவர் அல்லர் என்ற கருத்தை ஆய்வாளர் பலரும்

சுட்டிக் காட்டுகின்றனர். கலித்தொகையில் இடம்பெறும் சில பாடல்களை இந்த உண்மைக்கு ஆதரவாக இருப்பதை ஆய்வாளர் எடுத்துக்காட்டுகின்றனர். குறிஞ்சி முதலிய நிலங்களில் ஐந்திணைக்குரியவர் தலைமக்கள். அதேசமயம் நிலமக்கள் இந்தத் தகுதியைப் பெறவில்லை. தலைவனுக்குப் பலவகையான பரத்தையரோடு உறவு கொள்ளும் உரிமை சங்க இலக்கியத்தில் குறைத்துச் சொல்லப்படவில்லை. பரத்தையருக்கு இல்லற உரிமை இல்லை. தலைவன் எடுத்துக்கொள்ளும் உரிமையைத் தலைவி எடுத்துக் கொள்ள முடியாது. குலம் முதலிய குணங்களில் தலைவன் மிக்கோனாக இருக்கலாம். இக்குணங்களில் தலைவி மிக்கோளாக இருக்க முடியாது. இவை மட்டுமல்லாமல் இதே கால அளவில் எழுந்த காதா சப்த சதியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது சங்க இலக்கியத்தைச் சான்றோர் இலக்கியமெனத் தொகுத்துக் கொண்டதன் நெறி நமக்கும் புலப்படுகிறது. சான்றோர் எனப்படும் தொல்காப்பியர் முதலிய புலவர்கள் மேன்மக்கள் என்ற முறையில் இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளனர். லட்சிய வாழ்க்கைதான் உள்ளடக்கமாகக் கருதப்பட்டது. தோழி தலைவிக்குப் பணிபுரிய வேண்டும். செவிலித்தாய் அவள் இடம்பெறும் குடும்பத்திற்கு ஓத்து நடக்க வேண்டும். செல்வம் முதலியவை காரணமாக தலைவன் தலைவியின் களவொழுக்கம் பெற்றோரரோல் மறுக்கப்படுவதையும் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

மூவேந்தர்கள், பாரி முதலிய குறுநில வேந்தரை ஒடுக்கினர். மருத நில நாகரிகத்திற்கு மற்ற நில நாகரிகங்கள் இடங்கொடுத்தாக வேண்டும். வேந்தர்கள் படையெடுப்பின்போது நகரங்கள் முதலியவை அழிந்தன. பாணர்கள் ஆதரவிழந்து தவித்தனர். வேந்தர்களால் எத்தனையோ குறுநிலத் தலைவர்கள் ஒடுக்கப்பட்டனர். இந்த நிலை தமிழகத்தில் வரலாற்றுச் காலம் முழுவதும் தொடர்ந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களில் எத்தனையோ வகை வகையான ஒடுக்குமுறைகள் காணப்படுகின்றன. மாதவி மட்டுமல்லாமல் மாதவியின் தோழி வசந்தமாலையும் கடுமையான ஒடுக்கு முறைகளுக்கு உள்ளானவள். இளவரசன் என்ற முறையில் உதயகுமரனுக்கு மணிமேகலை இடம்கொடுத்தாக வேண்டும். இவளுக்கு என்ன

கற்பு வேண்டியிருக்கிறது? சோழ நாட்டு அரசி அவளைச் சிறைப்படுத்திக் கொடுமைக்கு உள்ளாக்குவாள். வறுமை காரணமாக கொலை, களவு முதலிய தீய செயல்களில் ஈடுபட்டவர்கள் சிறையில் வாட நேர்ந்தது. கண் இல்லாதவர், கால் இல்லாதவர் நகரத் தெருக்களில் ஆயிரக்கணக்கில் பிச்சைக்காக அலைந்தனர். ஒடுக்குமுறைக்கு உள்ளாகியவர்களில் ஆபுத்திரனும் ஒருவன்.

பக்தி இலக்கிய காலத்தில் ஒடுக்குமுறையின் வடிவங்கள் பற்றி நாம் அறிய முடியும். "ஊரிலேன் காணி இல்லை, உறவு மற்றொருவர் இல்லை" என்று இறைவனைத் தேடி அலைந்தவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும். இவர்களுக்கு இந்த நிலை எப்படி நேர்ந்தது என்று புரியவில்லை. சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். மாற்றுச் சமயத்தினர் வதைக்கப்பட்டனர். மரபு முறையில் நிலத்தை உரிமையாகப் பெற்றவரிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன. கம்பர் காப்பியத்தில் கூனியும், பெரியபுராணத்தில் திருநாளைப் போவாரும் நம் நினைவுக்கு வருகின்றனர். அப்புறம் அயல்நாட்டின் படையெடுப்பு கள். ஐரோப்பியர் வருகையையொட்டி எத்தனையோ ஒடுக்கு முறைகள். தேவதாசி முறை, ஜமீன்தார்கள், பாளையக்காரர்களின் கொட்டங்கள் இப்படியாகத் தமிழக மக்கள் வாழ்வில் எவ்வளவோ நடைபெற்றதை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துரைக்கிறார்கள். இறுதியாகத் தமிழ் மக்களுக்கு நாடு இல்லை. பொருளியல் உரிமை இல்லை. மரியாதை இல்லை. மொழி உரிமைகூட இல்லை. தமிழன் தன் முகத்தை, தன்மானத்தை, இழந்தாக வேண்டும். கட்சிக்குத் தன்னை விட்டுக்கொடுக்க வேண்டும். எவ்வகை ஊழலையும் ஏற்க வேண்டும். வரலாற்றிலிருந்து தமிழன் ஒடுங்கி வெளியேற வேண்டும்.

4

கட்டுரையின் இறுதிப் பகுதிக்கு இப்போது வந்துள்ளோம். தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோர் என்ற சொல் பட்டியல் சாதியினரை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவர்களினுள்ளும் எங்களை இப்பிரிவில் சேர்க்க வேண்டாமென்று மள்ளர்களில் ஒரு பகுதியினர்

உரத்துக் கூறுகின்றனர். இவர்களை நீக்கியோ உள்ளடக்கியோ தலித் மக்களின் விடுதலை அல்லது மேம்பாடு உடனடியாகத் தேவை என்ற போதிலும் இதற்கான சாத்தியப்பாடுகளும் குறைவாகவே தோன்றுகின்றன. சாதி இழிவிலிருந்து தம்மை மீட்டுக் கொள்வதற்கு இவர்கள் போராட்டங்கள், கலகங்கள் என ஈடுபடுவதன் நியாயத்தை நாம் புரிந்து கொள்ளமுடியும். இதையும் தனித்து நின்று சாதிக்க முடியும் என்று தோன்றவில்லை. இன்றைய சாதியமைப்பையும் பொருளியல் அமைப்பையும் தனிமைப்படுத்தி பார்க்கவே முடியாது. உலகமயமாதல் என்ற சூழலில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினர் மீதும் ஒடுக்கு முறைகள் அதிகரிக்கின்றன. மைய அரசின் பிடியில் மாநில அரசுகள் சிறைப்பட்டுள்ளன. முதலாளிய ஆதிக்கமும் தொடர்ந்து அதிகரிக்கிறது. தமிழும் தமிழக மக்களும் கடுமையான ஒடுக்கு முறைக்கு உள்ளாகியுள்ள நிலையில் ஒடுக்கப்பட்டோர் மேம்பாடு என்பதைச் சமூகத்தினரின் ஒருசில பகுதியினரின் செயல்பாடாகப் பார்க்க முடியாது. இத்தகைய சிக்கல் குறித்து விரிவாக இங்கு சொல்வதற்கு இடமில்லை. நடுத்தர மக்கள் என்ற முறையில் நாமும் பலவற்றை விட்டுக் கொடுத்தாக வேண்டும். இப்படி எவ்வளவோ பலரும் செய்தாக வேண்டும். ஆதிக்கங்களுக்கு எதிராக நாம் கடுமையாகப் போராட வேண்டும். நமக்குள்ளும் பதிந்திருக்கும் ஆதிக்க உணர்வை வெளியேற்றிக் கொள்ளவும் வேண்டும். சுதந்திரம் என்பது பிரிவு படாதது என்று மார்க்ஸ் கூறியது இங்கு நூற்றுக்கு நூறு விழுக்காடு பொருந்தும். முதலாளி, அரசு அதிகாரி, மதவாதி உட்பட அனைத்துப் பகுதியினரும் மற்றவர்மீது ஆதிக்கம் செய்யும் அதே சமயம், தாமும் பொருளியல் முதலிய சூழல்களுக்கு அடிமைப்பட்டு மனித மாண்பையும் வாழ்வின் அர்த்தங்களையும் அழகுகளையும் இழந்தே வாழ்கின்றனர். தம் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்ட மக்களின் விடுதலையோடு சேர்ந்து தான் தமக்கும் விடுதலை கிட்டும் என்று இவர்கள் உணரவேண்டும். இதைப்போலத்தான் அடிமைப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களும் ஆதிக்கவாதிகளின் விடுதலையோடு ஒத்தியங்கவேண்டும்.

இன்றைய உலகச் சூழலில் பல்லாயிரமாண்டுகளுக்கு மேற்பட்ட மனிதனின் வரலாற்று வளர்ச்சி கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகி உள்ளது. இயற்கையின் பேரழிவு

எல்லோரையும் அச்சுறுத்துகிறது. வல்லரசுகளை ஒழித்தாக வேண்டும் அல்லது கட்டுப்படுத்தியாக வேண்டும். இறையாண்மை என்பது இறுதியில் மக்களுக்கு உரியதே அன்றி அரசுகளுக்கு உரியது அன்று. மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள் முதலிய அனைத்து உயிர்களுக்கும் இந்த உலகில் வாழ்வதற்கு உரிமையுண்டு. நிலமும், நீரும், காடுகளும், வானமும், மனிதர் உட்பட அனைத்து உயிர்வகைகளுக்கும் உரிமைப்பட்டவை. அரசுகளும், முதலாளியம் முதலிய நிறுவனங்களும் மக்களிடமிருந்து இவற்றைப் பறிப்பதற்கான உரிமை கொண்டவை அல்ல. அனைத்து மக்களுக்குமான சமதர்ம நெறிப்பட்ட வாழ்க்கைதான் இனி உலகத்தைக் காப்பாற்ற முடியும். உலகத்தை நாம்தான் நமக்காக மீட்டுக் கொள்ளவேண்டும். உரிமையற்ற, பிறகு சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் உள்ளாகிற வாழ்க்கையில், எந்த அர்த்தமும் மரியாதையும் இல்லை. வள்ளுவர் முதலிய தமிழ்ச் சான்றோர்கள், போற்றிய ‘ஒப்புரவை’ நிலை நிறுத்துவதன் மூலமே தமிழ் மக்கள் மேம்பாடு பெறமுடியும்.

குறிப்பு

‘திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி – தமிழ்த்துறையின் சார்பில் 16.8.2004 அன்று ‘தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர் நிலை’ குறித்து நடைபெற்ற கருத்தரங்கின் முன் வைக்கப்பட்ட கட்டுரை.

14. தொல்காப்பியப் பூங்கா

கலைஞர் அவர்களைத் தமிழ் அறிஞர் என்று தயக்கம் இல்லாமல் கூறமுடியும். இந்நாள் வரையிலும் தமிழின் ஆக்கத்திற்காகக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள் ஆகியவற்றோடு குறளோவியம்., திருக்குறள் உரை, சங்க இலக்கியம் பற்றி எல்லாம் அவருக்கே உரிய நடையில் நிறையவே எழுதிஉள்ளார். இந்தப் படைப்புக்களின் தரம்பற்றிய கேள்வி நம் சிந்தனையில் இப்பொழுது எழ வேண்டியதில்லை. எல்லாவற்றையும் அவருக்கே உரியமுறையில் எழுதி உள்ளார். அவருடைய மேடைத் தமிழ் பற்றியும் இங்கு குறிப்பிடலாம்.

தமிழ் மொழியை வளப்படுத்தியதில் கலைஞருக்கும் பங்குண்டு. கடைசியாக "தொல்காப்பியப் பூங்கா" என்ற பெரிய நூலை எழுதி உள்ளார். இதுவரை 8 பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல பதிப்புக்கள் வெளியாகக் கூடும். ஒவ்வொரு பதிப்பும், வெளியிட்டவுடன் விற்றுத் தீர்ந்து விடுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 500/1000 எனக் கொடுத்து வாங்கி வைத்துக் கொள்கின்றனர். கலைஞர் எழுதிய நூல்களிலேயே அதிக அளவில் விற்பனையாகிற பெருமை இந்த நூலுக்குத்தான் வாய்த்திருக்கிறது. தமிழில் ஒரு சாதனை என இந்த நூலைச் சொல்ல முடியாவிட்டாலும் கலைஞருடைய சாதனை எனக்குறிப்பிடுவதில் தவறில்லை.

தொல்காப்பியம் என்ற தமிழின் முதல் இலக்கண நூல் எத்தனையோ பெருமைகளை உடையது. இளம்பூரணர் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், கல்லாடனார் போன்ற உரையாசிரியர்கள் இடைக்காலத்தில் தொல் காப்பியத்திற்கு உரை எழுதி, தொல்காப்பயித்தைக் காப்பாற்றி வைத்தனர். 19/20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மறுமலர்ச்சி அடைந்த பொழுது தொல்காப்பியம் பெருமளவில் கொண்டாடப்படுகிறது. தொல் காப்பியத்தைத் தமிழ்அறிஞர் பலர்

தொடர்ந்து ஆராய்ந்து எழுதுகின்றனர். தமிழ் அறிஞர் என்பவர் அனைவரும் தொல்காப்பியம் குறித்து மரியாதையோடும், பெருமையோடும் எழுதுகின்றனர். அறிஞர் இலக்குவனார், வ.சுப. மாணிக்கனார், சோமசுந்தர பாரதியார், வெள்ளை வாரணனார் தொடங்கிப் பலரும் தொல்காப்பியத்தை நம் காலத்திற்கு ஒத்த முறையில் ஆய்வு செய்தனர். மொழியியல் அறிஞர்களும் தொல்காப்பியத்தை ஆய்வுக்குட்படுத்துகின்றனர். தொல் காப்பியத்தின் தொன்மையை மட்டுமல்லாமல் இலக்கண நுட்பங்களையும் விதந்து கூறுகின்றனர். இலக்கண நூல் என்ற வகையில் தொல்காப்பியம் உலகளவில் மொழியியல் அறிஞர்களின் பாராட்டுக்குரியதாக விளங்குகிறது. எழுத்திற்கும், சொல்லுக்கும் இலக்கணங்களை வரையறை செய்வதோடு இலக்கியத்திற்கும் வாழ்வியலுக்கும் கூடத் தொல்காப்பியம் வரையறை செய்கிறது என்றும் அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

தமிழ்த் தொன்மை, மேன்மை முதலிய எத்தனையோ சிறப்புக்களை உடைய தொல்காப்பியத்தைக் கலைஞர் தனக்கே உரிய முறையில் எடுத்துச் சொல்வதை நாம் ஏற்க முடியும். இப்படிச் சொன்னவுடன் நமக்குள் பல கேள்விகள் எழுகின்றன. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை முழு அளவில் எடுத்துச் சொல்வது இயலாதென்பதை நாம் ஏற்க முடியும். கலைஞர் நம் காலத்து உரையாசிரியர்கள் சிலரைச் சிறப்பாக மேற்கோள் காட்டுகிறார். குறிப்பாக இலக்குவனார், வெள்ளைவாரணர் முதலியோர்களை மேற்கோள் காட்டுகிறார். இடைக்காலத்து உரையாசிரியர் சிலரையும் அங்கங்கே குறிப்பிடுகிறார்.

தமிழ்க் கல்லூரியில் ஒருசில ஆண்டுகளேனும் மிகச் சிறந்த பேராசிரியர்களிடம் தொல்காப்பியத்தை அதன் உரை வளங்களோடு கற்பதற்குக் கலைஞருக்கு வாய்ப்பில்லை. ஒருசில ஆண்டுகள் மட்டுமல்ல, தொடர்ந்து 20/30 ஆண்டுகள் தொல்காப்பியத்தை ஆய்வதற்கான தேவையும் இருக்கிறது. நிறையக் கேள்விகளோடு தொல்காப்பித்தை ஆய்வுக்கு உட்படுத்தவும் வேண்டும். சமஸ்கிருதம் முதலிய மொழிகளின் இலக்கணங்களோடு ஒப்பிட்டும் ஆய்வு செய்ய வேண்டும். இலக்கியம் மற்றும் வாழ்வியல் குறித்த பழங்காலத்திலும் சரி இன்றைய நவீன

யுகத்திலும் சரி, ஏராளமான கேள்விகளோடு தொல்காப்பியத்தை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். சங்க இலக்கியம் தொடங்கித் தமிழின் இலக்கிய, இலக்கண வரலாற்றில் வைத்தும் தொல்காப்பியத்தை ஆய்வு செய்ய வேண்டும்.

தொல்காப்பியத்தினுள்ளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய எத்தனையோ அறிவுத்துறைகளும் உள்ளன. மெய்பாடு என்று ஒரு இயல், மரபு என்று இன்னொரு இயல், பொருள் என்று ஒரு தனி இயல், களவு, கற்பு என்பனவும் சில இயல்கள். சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், எழுத்ததிகாரத்தில் புணரியல். இவை பற்றியெல்லாம் விரிவான ஆய்வுகளுக்கு இடம் இருக்கின்றன. இவை போல இன்னும் பல கேள்விகள். தொல்காப்பிய ஆய்வென்பது தொல்காப்பியத்தில் தொடங்கி அதற்குள்ளேயே முற்றுப் பெறவும் இயலாது. தொல்காப்பியம் தமிழ்ச் சிந்தனைக்கு ஒரு கருவூலம். தமிழின் இலக்கிய வளத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கருவூலம். இப்படி எல்லாம் தொல்காப்பியத்தை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பு கலைஞருக்கு இல்லை. அப்படியானால் தொல்காப்பியத்தை வைத்து அவர் என்ன செய்கிறார் என்ற கேள்வி நமக்கு எதிர்ப்படுகிறது.

தொல்காப்பியம் குறித்துத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்குக் கலைஞர் ஒரு அறிமுகம் செய்ய விரும்புகிறார் என்று நாம் கருத முடியும். தொல்காப்பியம் குறித்த ஓர் அறிமுகநூல் என்று இந்த நூலைக் குறிப்பிடுவதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. ஓர் அறிமுக நூல் என்றால் தொல்காப்பியம் பற்றிக் குறைந்தளவுக்கு அறிமுகம்; தொல்காப்பியத்தின் உள்ளடக்கம், எழுத்ததிகாரம், சொல்லதி காரம், பொருளதிகாரம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்கள். இவைபற்றிச் சுருக்கமாக ஒரு குறிப்புரை தேவை. தமிழின் இலக்கணம் என்ற வகையில் தொல்காப்பியத்திற்குப் பிறகும் நன்னூல் முதலிய எத்தனையோ இலக்கண நூல்கள் இருக்கின்றன. இவைபற்றியும் குறைந்தளவுக்கேனும் சில குறிப்புக்கள் தேவை. தொல்காப்பியத்தில் 1610 நூற்பாக்கள் இருக்கின்றன. அறிஞர் திரு.ச.வே. சுப்பிரமணியம் மிக அழகான முறையில் தொல்காப்பிய நூற்பாக்களுக்கு எளிய முறையில் ஒரு

தெளிவுரை எழுதியிருக்கிறார். இந்த நூல் பற்றியும் கலைஞர் குறிப்பிடுகிறார். தன் இயக்கத்தவர் இந்த நூலைப் படிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆக, தொல்காப்பியம் குறித்துக் குறைந்தளவுக்கேனும் தேவையான ஒரு அறிமுகத்தைக் கலைஞர் இந்த நூலில் தரவில்லை.

இந்த நூலில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றில் இருந்து சுமார் 30 நூற்பாக்களை மட்டுமே எடுத்துக் கொள்கிறார். பொருளதிகாரம் பற்றித்தான் கலைஞர் இந்த நூலில் விரிவாக எழுதுகிறார். எழுத்தையும் சொல்லையும் எடுத்து விளக்கும் முறையில் நிறையக் கதைகள் சொல்லுகிறார். தனது நாடக பாணியில் சிலவற்றை விளக்குகிறார். உயிரெழுத்து பன்னிரெண்டு, மெய்யெழுத்து பதினெட்டு என்பதைக் கதைகள் சொல்லித்தான் மனத்தில் பதிய வைக்க வேண்டும் என்பதில்லை.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கூட இப்படியெல்லாம் கதை சொல்ல மாட்டார்கள். கலைஞர் சொல்லும் கதைகளில் காதல் கதைகளும் வந்துவிடுகின்றன. காம உணர்வைத் தூண்டுகிற காட்சிகளும், வரிகளும் கூட கலைஞர் தரும் விளக்கங்களில் இடம்பெறுகின்றன. இவை பற்றிய இரசனையோடுதான் இளைஞர்கள் குறிப்பாக கழகத்தைச் சார்ந்த இளைஞர்கள் படிக்க வேண்டுமா என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. எதையும் கலைஞர் இப்படித்தான் செய்வார் என்ற வசைச் சொல் கலைஞர்க்கு இந்த வயதிலும் தேவைதானா?

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றை ஒருமுறை புரட்டிப்பார்க்க வாய்ப்பிருக்குமானால் வேறொருவரும் கலைஞர் என்ன செய்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இப்படி எல்லாம் செய்யக்கூடாது என்பதை ஒருவர் அழுத்தமாக உணர முடியும்.

தமிழ் நாட்டில் கடந்த சில பத்தாண்டுகளாகத் தமிழ் உணர்வு குறைந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலும் மூத்த தலைமுறையினருக்கு இருந்த வளமான தமிழ் உணர்வு இன்றுள்ள தலைமுறையினருக்கு இல்லை என்பதை உறுதியாகச் சொல்லமுடியும். இவர்களுக்கெல்லாம் தமிழ் உணர்வைக்

கலைஞர் ஊட்ட விரும்புகிறார் என்று நாம் கருத முடியுமா? என்பதையும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

கடந்த சில பத்தாண்டுகளில் தமிழின் ஆக்கத்திற்குக் கலைஞர் செய்தவை மிகவும் குறைவு. தமிழ் மக்களுக்கு எதிராகச் சில செயல்களை அரசியல் தேவைக்காகத் துணிந்து செய்திருக்கிறார். அரசியல் அதிகாரத்தை மீட்டுக் கொள்வதற்கு இயலாத நிலையில், தமிழ் பற்றி இன்று கூடுதலாகப் பேசுகிறார். இப்படிப் பேசுவதை நாம் புறக்கணிக்க விரும்பவில்லை. தமிழுக்கு எதிராகத் தான் செய்தவற்றை இப்பொழுதேனும் கலைஞர் வாய்திறந்து சொல்வார் என்று நாம் கருதவில்லை. அரசியல் பீடத்தில் அமர்ந்திருக்கிற அவரால் இப்படிப் பேச முடியாது.

உண்மையில் தொல்காப்பியம் பற்றி எழுதுவதற்கு இவரைக் காட்டிலும் இந்த நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் அன்பழகன், அணிந்துரை எழுதிய பேராசிரியர் நன்னன் ஆகியவர்களுக்குக் கூடுதலான தகுதிகள் உண்டு. ஆனால் இவர்கள் எழுதினால் நூல் விற்பனையாகாது. கலைஞருக்காக நூல் விற்கிறது. நூலை வாங்குகிறவர்களில் எத்தனைபேர் இந்த நூலைப் படிப்பார்கள். படித்த பிறகு விரிவான மூலநூலை யார் தேடிப்படிப்பார்கள்? படிக்கவேண்டும் என்று கலைஞர் தொடர்ந்து சொல்லவேண்டும் என்பது நம் வேண்டுகோள்.

பொருளதிகாரம் பற்றிக் கலைஞர் எழுதுவதில் குறைகளும் பல, நிறைகளும் பல. அகத்திணை இயல், களவியல், கற்பியல், புறத்திணையியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், மரபியல் ஆகியவற்றிலிருந்து அங்கங்கே பல நூற்பாக்களை எடுத்து விளக்குகிறார். சில இயல்கள் குறித்து விரிவாக எழுதுகிறார். முழு அளவில் தனக்குரிய கவிதைநடையில் சில "மலர்களை"த் தொடுக்கிறார். கலைஞருடைய உரைநடையைக் காட்டிலும் இவருடைய கவிதை நடை கவர்ச்சியாகத்தான அமைகிறது. உரைநடை என்பதிலிருந்து வேறுபடுத்தும் முறையில் கவிதை நடை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இவை கவிதைகள் அல்ல, கவிதைக் கூறுகளோடு கூடிய வளமான உரைநடை.

பொருளதிகாரத்தில் தலைவன் தலைவிக்கு இடையில் களவியல் பற்றிக் கலைஞர் விரிவாக எழுதுவதை நாம் புரிந்து கொள்கிறோம். கற்பியலில் ஊடல் புரிந்து கொள்கிறோம். கற்பியலில் ஊடல் பற்றி விரிவாக எழுதுகிறார். புறத்திணை என்று வரும்பொழுது தமிழரின் வீரம் பற்றி இரண்டொரு இடங்களில் குறிப்பிடுகிறார். வடநாட்டில் இருந்து வந்த பார்ப்பனரால் தமிழரின் மொழியும், வாழ்வியலும் குன்றியது பற்றி அங்கங்கே குறிப்பிடத்தவறவில்லை. பார்ப்பனர் பற்றித் தொல் காப்பியத்தில் இடம்பெறும் சில நூற்பாக்கள் இடைச்செருகலாக இருக்க முடியுமென்று கலைஞர் கருதுவதோடு வெள்ளை வாரணனாரை மேற்கோள் காட்டுகிறார்.

பார்ப்பணருக்கு எதிரான உணர்வைக் கலைஞர் இந்த நூலில் வெளிப்படுத்துவதை நாம் புரிந்து கொள்கிறோம். தமிழர்களின் களவு மணத்தை வடவரின் கந்தர்வ மனத்தோடு ஒத்தது என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதோடு வடவர்களின் எட்டுவகை மண முறையைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதைக் கலைஞர் கண்டித்திருக்க வேண்டும். களவுக்காலத்தில் தலைவனோடு உடலுறவு கொண்ட குற்றத்திற்காக, கற்புக் காலத்தில் தலைவி கடவுளை வேண்டுவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவதை அப்படியே கலைஞர் எடுத்துச் சொல்லுகிறார். புறத்திணை வகைகளில் போர்த்திணைகள் பற்றித் தொல்காப்பியர் தன்கால நிலைக்கு ஒத்த வகையில் விரித்துச் சொல்லி இருப்பதை இப்பொழுது விரிக்க வேண்டியதில்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் வாகைத்திணையும், காஞ்சித்திணையும் அற்புதமான திணைகள். இன்றைக்கும் இவை குறித்த சிந்தனைகள் நமக்குத் தேவை. மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் கூறிய முறையிலேயே இவரும் விரிக்கிறார். மரபியலில் சில பகுதிகள் அற்புதமானவை எனக் கலைஞர் பாராட்டுகிறார். முதல், கரு, உரி பற்றிச் சொல்லவில்லை. பெரியாரையும், அண்ணாவையும் அடிக்கடி நினைவு கூர்கிறார். முன்னர் தான் எழுதிய கதைகள் பற்றியும் இடையிடையே குறிப்பிடுகிறார். திறனாய்வுணர் வில்லாமல் படிக்கிற வாசகர்கள் கலைஞரை இரசிக்க முடியும்.

கலைஞருக்குத் தற்பொழுது எண்பது வயது. அரசியலில்

மட்டுமல்லாமல் வாழ்வியலிலும் விரிவாக அனுபவங்கள் உடையவர். இத்தகைய பின்புலத்தை உடைய ஒருவர் எந்த ஒரு நூலையும் தன் வாழ்வியல் அனுபவங்களோடும், புரிதலோடும் வாசிக்க முடியும். கலைஞர் இப்படிச் செய்யவில்லை. நேரு முதலியவர்கள் சிறையில் இருந்தபோது தந்த படைப்புக்களை இங்கு நினைவு கூரலாம். தொல்காப்பியத்தை முழு அளவில் தன் பார்வையில் செரித்துக் கொண்டு கலைஞர் எழுதியிருக்க வேண்டும். தொல்காப்பியம் உள்ள அளவும் கலைஞரையும் நாம் வாசிக்க வேண்டிய தேவையை கலைஞர் நமக்குத் தந்திருக்க வேண்டும். சுயசிந்தனையின் தொடுதல் கூட இல்லாமல் ஒருவரால் இப்படி ஒரு பெரிய நூலை எப்படி எழுதமுடியும்? நினைவுகளிலிருந்து சிலவற்றைக் குறிப்பிடுவதில் தவறில்லை. இன்றைக்கும் களவும் கற்பும் பற்றி நாம் சிந்திப்பதற்கான தேவை என்ன? இன்றைக்கு அறம் என்றால் என்ன? மறம் என்றால் என்ன? இன்றைக்கு எது கவிதை? எது இலக்கியம்? எது மரபு என்ற சிந்தனை இல்லாமல், தொல்காப்பியரை அப்படியே எடுத்துச் சொல்ல முடியுமா என்ன? தொல்காப்பியம் என்ன பூங்காவா? இலக்கிய நூலைப் பூங்கா என்று பொருத்தமாகச் சொல்லலாம். இலக்கண நூலிலிருந்து நாம் பறிக்க வேண்டியவை மலர்களல்ல. கட்டுரை தோறும் வண்ண ஓவியங்கள்–தேவைதானா? கலைஞர் தமிழ் அறிஞர் மட்டுமே. தமிழை ஆய்வு செய்பவராக இல்லை.

26.4.2003

●

15. தமிழின் கவிதை வரலாறு

தமிழின் கவிதை வரலாறு நமக்கத் தேவைப்படுகிறது. தமிழ் இலக்கிய வரலாறு எனப் புலவர்கள் வரலாறுகளைத் தொகுத்துப் பலர் பாடநூல் எழுதி உள்ளனர். இரண்டாயிரமாண்டுக் காலத்தில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களின் உருவம் மற்றும் உள்ளடக்கம் இவை தோன்றிய காலச்சூழல் பற்றிய விவரங்கள் இந்தப் பாடநூல்களில் அடங்கியுள்ளன. இவை இலக்கியத்தின் வரலாறு சொல்வதில்லை. தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுத்துச் சொல்வதைக்கூட இலக்கிய வரலாறு என்று ஒருசிலர் கருதுகின்றனர். இலக்கியங்களில் கற்பனைக்குப் பெரும் இடம் இருக்கிற நிலையில் இவற்றிலிருந்து வரலாற்றை எடுக்க முடியாது.

வரலாற்றின் சில கூறுகள் இலக்கியங்களில் பதிவாகலாம். ஆனால் இவை வரலாறுதானா என்று முடிவு செய்வதற்கு வேறு ஆதாரங்களைத் தேடிச் செல்லவேண்டும். இலக்கியத்தின் வரலாறு என்பது இலக்கிய இயலின் வரலாறு அதாவது இலக்கியத் தன்மையின் வரலாறு. உலகளவில் எல்லா மொழிகளிலும் இலக்கியங்கள் இருக்கின்றன. இலக்கிய உணர்வென்பது எல்லா மனிதர்களுக்கும் உரிய உணர்வு. எல்லா மனிதனுள்ளும் ஒரு கவிஞனும்/படைப்பாளியும் இருக்கிறான் என்ற தொடக்கப் புள்ளியில் இருந்துதான் நாம் நகர வேண்டும். கவிஞன் என்பவன் தனிப்பிறவி இல்லை என்றாலும் கவிதை உணர்வில், கவிதை ஆக்கத்தில் இவன் பயிற்சி பெற்றவன்.

எல்லா மனிதருக்குள்ளும் உறைந்திருக்கிற கவிதையை இவன் தனக்குள் முழு அளவில் உயிர்ப்பித்துக் கொள்கிறான். கவிதைநயமாக மாற்றுகிறான். குறிப்பிட்ட எந்தவொரு வரலாற்றுச் சூழலிலும் சமூக முரண்பாடுகள், நெருக்கடிகள் என்பன இயல்பாக உள்ளன. இவற்றை அதே அளவில் ஏற்றுக்கொண்டு அல்லது இவற்றோடு சமரசம் செய்துகொண்டு வாழ்பவன் ஒரு மனிதனாகக் கூட இருப்பது சிரமம். இவனுக்கு மாறாகச் சமூக நெருக்கடிகளுக்குத் தனக்குள்ளிருந்து

எதிர்வினை தருபவன்தான் சிறந்த மனிதன். இவனுக்குள்ளிருந்து தான் சிறந்த கவிஞன் உருப்பெறுகிறான். தனக்குள்ளிருந்து எதிர்வினை மற்றும் கவிதையைத் தேடித்தொகுக்கும் பொழுது வரலாற்றின் வழியே நெடுங்காலமாக இயங்கிவரும் இலக்கிய மரபு மட்டும் அல்லாமல் அற உணர்வு, அழகியல் உணர்வு முதலியனவும் மேலுக்கு வருகின்றன.

வரலாற்றுச் சூழலிலிருந்தும் மனித மரபு மற்றும் கலை இலக்கிய மரபிலிருந்தும் எந்த ஒரு கவிஞனையும் பிரித்துப்பார்க்க முடியாது. ஒரு மொழியில் உன்னதமான கவிஞன் தோன்றிய பிறகு அதுவரை தொடர்ந்து வந்த கவிதை மரபை இவன் புதியதாகப் படைக்கிறான். இப்படித்தான் காலந்தோறும் கவிதைகள், இலக்கியங்கள் புதியன ஆகின்றன.

உலகளவில் எந்தஒரு மொழியிலும் பேரிலக்கியங்கள் தோன்றி யுள்ளன. நமக்குத் தெரிந்த மொழிகளில் உள்ள பேரிலக்கியங்களோடு தமிழ் இலக்கியத்தையும் ஒப்பிட்டும் உரசியும் பார்க்கிறோம். ஒவ்வொரு மொழி இலக்கியத்தினுள்ளும் சில தனித்தன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. தமிழில் உள்ள இலக்கியத்திற்கும் தனித்தன்மைகள் இருக்கவே செய்கின்றன. தனித்தன்மைகளை மீறி எல்லா மொழிகளுக்குமி டையில் இயங்குகின்ற பொதுத்தன்மை மிகமிக முக்கியமானது. இந்தப் பொதுத் தன்மையை மதிப்பீடு செய்வதற்குப் பலமொழி இலக்கியங்களைப் பற்றிய அறிவு நமக்குத் தேவை. இத்தகைய அறிவு இல்லாத நிலையில் தமிழின் ஒவ்வொரு இலக்கியத்தையும் தமிழுக்கே உரிய இலக்கியம், தமிழன் படைத்த இலக்கியம் என்று நம்மவர் பெருமிதப்படுகின்றனர்.

திருக்குறளைப் போல உலகில் வேறு எந்த மொழியிலும் அறஇலக்கியம் இருக்க முடியாது என்று சிலர் சாதிக்கின்றனர். சங்க இலக்கியம் தமிழனுக்கே உரிய தனி இலக்கியம் என்று நாம் நம்புகின்றோம். தமிழில் எழுந்துள்ள பக்தி இலக்கியத்திற்கு நிகரான இலக்கியம் வேறு மொழிகளில் இல்லை என்றும் நாம் நம்புகிறோம்.

இவ்வாறெல்லாம் சொல்வதன்மூலம் தமிழனைப் பெருமைப்

படுத்துகிறோம். வீழ்ந்து கிடக்கும் தமிழன் வீறுபெற்று எழுந்து நிற்க வேண்டும் என்பதற்காக இப்படிக் கூறுகிறோம். ஆனால் இந்த உணர்வு பெருமிதமாகத் தொடங்கித் தற்பெருமையாகவும் ஆணவமாகவும் மாறும்பொழுது நமக்குள் நாம் சிறுத்து விடுகிறோம். விரிந்த உலகில் இருந்து நம்மை வெட்டிக்கொள்கிறோம். இந்த நிலையில் நாம் அழிந்து போகிறோம். இத்தகைய அழிவு தற்காலத்தில் நமக்கு நேர்ந்திருப்பதை நம்மில் பலரும் உணர்கிறோம்.

உலகளவில் உள்ள நூற்றுக்கணக்கான மொழிகளைப் பற்றி நாம் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு நமக்கு இல்லை என்பது உண்மைதான். எனினும் குறைந்த அளவுக்கேனும் தமிழகத்துக்கு வெளியில் இந்திய அளவில், உலகளவில் உள்ள சில மொழிகளோடாவது நமக்கு உறவு தேவை. இவ்வகையில் மொழிபெயர்ப்புகள் நமக்குப் பேருதவியாக இருக்கலாம். நாம் விரும்பும் அளவுக்குப் பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்து சேரும் இலக்கியங்களின் எண்ணிக்கையும் குறைவாகத் தான் இருக்க முடியும். இத்தகைய குறைபாடுகளை நம் மனத்தில் இருத்திக்கொண்டு பல்வேறு மொழிகளில் உள்ள இலக்கியங்களின் பொதுத் தன்மை குறித்து நமக்குப் பார்வை தேவை. அதன் பிறகுதான் தமிழ் இலக்கியங்களின் தனித்தன்மை குறித்து நம்மால் பேச முடியும்.

2. இலக்கியம் என்பதையும், கவிதை என்பதையும் பெயரளவில் நாம் இதுவரை வேறுபடுத்திப் பேசவில்லை. இலக்கியம் என்றாலே கவிதை இலக்கியம் என்ற கருத்தில்தான் நாம் பேசி இருக்கிறோம். தமிழைப் பொறுத்தவரை கடந்த இரண்டொரு நூற்றாண்டுகளைத் தவிர நெடுங்காலமாகவே இலக்கியம் என்பது கவிதை வடிவத்தில்தான் இருந்து வந்திருக்கிறது. மேலும் சிலவற்றை நாம் இங்குத் தெளிவு படுத்திக் கொள்ளவேண்டும்.

இலக்கியம் என்ற உணர்வு கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் நமக்கு ஏற்பட்ட உணர்வு. ஒரு நூற்றாண்டளவில் இப்படியொரு உணர்வு நமக்கு ஏற்பட்டதென்றே வைத்துக்கொண்டாலும்

இலக்கியம் என்று இன்று தனித்துப் பார்க்கிற உணர்வு முந்தைய நூற்றாண்டுகளில் நமக்கு இல்லை. சமய உணர்வு நெடுங்காலமாக நமக்குள் மேலோங்கி இருந்தது. அறம் கூறுவது என்பது இலக்கியத்தின் முதல் நோக்கம் என்று கருதி வந்தோம். இலக்கியம் என்பது மனிதச் சார்புடையது. வரலாற்றோடும் சமூகத்தோடும் உறவுடையது என்றெல்லாம் அந்தக் காலத்தில் நாம் கருதவில்லை. காவியம் என்பது கூடத் தொடர்நிலைச் செய்யுள் என்று கருதினோம். காப்பியத்திற்குத் தண்டி கூறிய இலக்கணம் மன்னர்களை மையப்படுத்துவதாக இருந்தது.

மனிதர்களின் வாழ்வின் இறுதிநோக்கு, பிறவியிலிருந்து விடுதலை பெறுவது. இதற்காகப் புலன்களை அடக்கித் தவம் மேற்கொள்வது என்றுதான் நம்மவர் நம்பினர். பெரிய புராணம் போன்ற இலக்கியங்களில் தெய்வத்திற்கே முதன்மை அல்லது சிவனடியாருக்கே முதன்மை. இவ்வகை இலக்கியங்கள் மனிதனை விட்டு மேலும் மேலும் விலகிப் புராணங்களாக வடிவம் பெற்றதில் வியப்பில்லை. இவ்வகைப் புராணங்களினுள் மனிதனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

19/20ஆம் நூற்றாண்டுகளில் கடவுள், ஆன்மா, மறுபிறப்பு, மேலுலகம் ஆகிய மையத்திலிருந்து விலகி மனிதனை மையப்படுத்துகின்ற நிலைப்பாட்டுக்கு வந்து சேர்ந்தோம். இப்பொழுது கடவுள் மட்டுமல்லாமல் மன்னர்களுக்கும் முதன்மை இல்லை. அரசியல், பொருளியல் முதலிய வாழ்வியல் யதார்த்தம் நமக்கு முக்கியமாயிற்று. மக்கள்நாயகம் என்பதைக் குறைந்த அளவுக்கேனும் நாம் கடைப்பிடிக்க முயன்றோம். அரசியல் விடுதலை என்று தொடங்கிப் பொருளியல் விடுதலை, சமூக விடுதலை என்னும் நம் தேவைகள் பற்றிப் பேசினோம். மக்கள்தாம் வரலாற்றின் நாயகர்கள் என்று உணர்ந்தோம். சமத்துவம், சமதர்மம் என்பன அன்றி மனித வாழ்வுக்கு வேறு பேறு இல்லை என்ற முடிவுக்கும் வந்தோம்.

இப்பொழுதுதான் நமக்கு வேறு எதனோடும் சார்பில்லாத இயற்கையின் அழகு தெரிந்தது. பிரபஞ்சத்தின் பேரழகு பெரியதாயிற்று. மனிதனுக்குள் இயங்கும் மாபெரும் வரலாற்றின்

நீரோட்டம் தெரியத் தொடங்கியது. மனிதன் மகத்தானவன், வேதனைகளில் இருந்து தடைகளைத் தகர்த்துக்கொண்டு உலகப் பரப்பில் பேரழகுடன் தன்னை நிறுவிக் கொள்ள வேண்டியவன் என்ற கருத்து நமக்கு ஏற்பட்டது. கடவுள் கூட மனிதனின் படைப்புத் தான். கடவுள் என்ற பெருவடிவத்திற்குள் கூட மனிதன் தன்னைத் தான் விரித்துப் பார்த்திருக்கிறான். பெண் என்பவள் மரியாதைக் குரியவள். நீரும் நிலமும் மரியாதைக்குரியவை. உழைப்பும் பகிர்வும் உன்னதமானவை. அன்பில்லாமல் மனித வாழ்க்கை அர்த்தம் பெற முடியாது.

இத்தகைய பார்வை தமிழ் மக்களாகிய நமக்குப் புதியது என்பதில் ஐயமில்லை. இடைக்காலத்தில் இவ்வகைப் பார்வையை நாம் இழந்திருந்தோம். சமயங்கள் நம்மை மூடிக் கொண்டன. சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபட்டபோது சங்க காலத்தின் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் மீது நாம் பார்வை செலுத்தினோம். நமக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவில்லை. சங்க இலக்கியம் முதலியவற்றினுள் மனிதர்தான் மையத்தில் இருந்தனர். சமயங்கள் உள்வந்தன எனினும் மனிதனின் அன்பும் ஆற்றலும் அங்கு மங்கிவிடவில்லை. கடவுளோடு மனிதர் கைகோர்த்துக் கொண்டிருந்தனர். காதலும் வீரமும் மனிதரின் மாண்புகளாக இருந்தன. மனித வாழ்வுக்கு அறம் மையமாக இருந்தது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று தொடங்கி மனித வாழ்வியலின் விரிவையும் ஆழத்தையும் அழகையும் வெளிப்படுத்தக்கூடிய பாடல்களும் கதைகளும் அங்கு எவ்வளவு செழித்திருந்தன.

சிலம்பிலும் மனிதனே—பெண்ணே முதன்மையாக இருந்தாள். மணிமேகலை தவம் செய்தாள். வறுமையைத் தீர்க்க என அலைந்தாள். உதயகுமாரனை அவள் நேசித்தாள். அவன் இறக்க நேர்ந்ததால் தவத்தினுள் ஆழ்ந்தாள். இத்தகைய வாழ்க்கைதான் இன்றைக்கும் நம்மைத் தூண்டுகிறது. அந்தப் பழைய வரலாறு இன்று நமக்குத் தேவை என்று கருதுகிறோம்.

இப்படி இயங்குவதைத்தான் இலக்கியம் என்று கூறுகிறோம்.

இத்தகைய பார்வையோடுதான் இன்று எல்லாவகை இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் முதலிய எல்லாவற்றினுள்ளும் மனிதனை, அவன் சார்ந்த அழகியலை, அவனுக்குள் செயல்பட்டிருக்கின்ற அற உணர்வை, ஆதிக்கங்களோடு அவன் நடத்துகின்ற போராட்டங்களை, அவனது தேவைகளைத் தேடித் தொகுத்து இலக்கியம் என நாம் கற்கிறோம். இதைத்தான் இலக்கியத்தன்மை, இலக்கிய இயல்பு என்றும் சொல்கிறோம்.

3 இப்பொழுது கவிதை பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். தமிழில் புதுக்கவிதைகள் என்ற பேரியக்கம் தோன்றிய பிறகுதான், கவிதை குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்கிறோம். கவிதைக்குக் குறைந்த அளவுக்கே யாப்பு தேவை. ஓசை நயம் இல்லாமல் கவிதை இல்லை. கவிதை உரத்த குரலில் அறிவுரை சொல்ல வேண்டியதில்லை. கவிதைக்குக் குறைந்தளவு சொற்களே போதும். சொற்களைக் கடந்தும் கவிதை இயங்கும். கவிதை பேச்சு நடையிலும் இருக்கலாம். கவிதை கதைசொல்லும் நாடக வடிவம் பெறும்.

உவமை, உருவகம் முதலிய அணி நயங்கள் கவிதைக்கு இன்றியமையாதவை இல்லை. படிமம் கவிதையின் அற்புதமான ஒரு உத்தி. படிமமேகூடப் பன்முகப் பொருள்பட்டு உயர்வகைக் கவிதையாக இருக்கிறது. கவிதை மனிதனின் மேல் மனத்தோடு இயங்கலாம் என்ற போதிலும் உயர்வகைக் கவிதைகள் மனிதனின் ஆழ்மனத்தோடு உறவுடையவை. நம் மனத்தினுள் ஆழ்ந்து செல்லும் பொழுது பலவற்றையும் ஒன்றுதிரட்டிப் பார்க்கும் பார்வையைப் பெறுகிறோம். வாழ்க்கை பற்றிய முழுமையான காட்சியைப் பெறுகிறோம். வாழ்நாளில் இதுவரைப்பட்ட வேதனைகள் நமக்குள் இன்பமாக, பரவசமாக மாறுகின்றன. இங்கிருந்து நாம் வள்ளுவரோடும் இளங்கோவோடும் உரையாட முடியும். நமக்குள்ளிருந்து தொன்மங்கள் புத்தொளி பெறுகின்றன. நமக்குள் காலம் இல்லை. பிரபஞ்சம் நமக்குள் ஒரு புள்ளியில் குவிகிறது. பிரபஞ்ச இயக்கத்தினுள் நாம் கரைந்து போகிறோம்.

கவிதைக்கு இப்படி ஒரு உள்ளியக்கம் சாத்தியம். கவிதைக்குள் செயல்படும் இந்த உள் இயக்கம் நவீன கவிதைக்கு மட்டும் சாத்தியம் என்பதும் உண்மையில்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்ட அளவில், பேரிலக்கியங்களில் செயல்படுகிற இவ்வகைப் பார்வையை உடனடியாக நாம் புரிந்துகொள்கிறோம். கண்ணகி வஞ்சி நகரில் தெய்வக்காட்சி தருகிறபோது ‘தென்னவன் தீது இலன் தேவர்கோன் நல்விருந்து ஆயினன் நான் அவன் தன் மகள்’ என்று கூறுகிறாள். இராமனின் அம்பு ஊடுருவிய நிலையில் தனக்குள் நுழைந்து தன் உருவத்தையும் உள்ளத்தையும் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்ட காம உணர்விலிருந்து விடுபட்ட இராவணனது முகம் அற்புத அழகோடு ஒளிர்கிறது. இவ்வகைக் காட்சிகள் எந்தவொரு இலக்கியத்திற்கும் மாபெரும் வளம் சேர்ப்பவை. இவை பேரிலக்கியங்கள். இவ்வகைக் காட்சிகளைத் தரிசனங்கள் என்று சொல்வதில் தவறில்லை. சமய உணர்வின் எல்லைக்குள் இவை செயல்படுவதைப் போலத் தோன்றினாலும், சமயம் கடந்த மனிதனின் பேருணர்வுகள் இவை.

இவ்வகைக் கவிதைகள் தனிப்பாடல்களாக இருந்துவிட முடியாது. இத்தகைய பெருங்காட்சிகள் உள்ளே வரவேண்டும் என்றால் வாழ்வின் பெரும் பரப்பையும் உள்ளடக்கியதாக இலக்கியம் அமைய வேண்டும். புதுக்கவிதை குறுகியதாகச் சில அடிகளில்தான் அமைய வேண்டும் என்று சிலர் இலக்கணம் வகுத்தனர். இவர்கள் பார்வையில் ஒரு ரோஜாச்செடியில் பூத்திருக்கிற மலர் மட்டுமே கவிதை அல்லது ஒரு மலரை மலர வைப்பதற்குச் சில இலைகள் போதுமென்றால் இந்தச் சில இலைகளோடு மலரையும் சேர்த்துக் கவிதை என்று சொல்லிக் கொள்ளலாம். பல இலைகள் தேவையில்லை. தண்டு, வேர் முதலியவை கவிதைத் தன்மை உடையன அல்ல. இப்படிச் சொல்கிறது இவர்கள் பார்வை.

நம்மைப் பொறுத்தவரை பூவோடு இலைகளும் தேவை. தண்டும் வேர்களும் இல்லாமல் செடியில்லை. மலரில்லை. செடி வளர மண்ணும் நீரும் உரமும் தேவை. காற்றும் வெயிலும் தேவை. மண் என்றால் நிலமும், காற்றும், வெளிச்சமுமென்றால் வானமும் தேவை.

ஒரு அழகிய மலரைச் செடி தரவேண்டும் என்றால் இத்தனையும் இல்லாமல் முடியாது. நான் உயிர் வாழ்வதற்கு இதயம் இருந்தால் போதுமா? மூளை தனித்தியங்க முடியுமா? மண்ணும், உலகமும், சமுதாயமும் இல்லாமல் நானில்லை. எனக்குள் இயக்கம் இல்லை, கவிதை இல்லை. வாழ்க்கை என்பதுகூடக் கவிதைக்குள் முடங்குவதில்லை. வாழ்விலிருந்து கவிதை தோன்றுவதற்கு மாபெரும் உயிரியக்கம் தேவை. இந்த உயிர் இயக்கம்தான் பெரும் கவிதை/காவியம்.

கடவுள் என்பது மனிதன் படைத்த பெரும் கவிதை. பிரபஞ்சத்திற்கு, உலகிற்கு, வாழ்வுக்கு வரலாற்றுக்கு அர்த்தம் தருபவன் மனிதன். இவனும் ஒரு கவிதை. மனிதன் வரலாற்றை, வாழ்வை, வாழ்வுக்கான அர்த்தங்களை, தன்னைப் படைத்துக் கொள்கிறான். கவிதை என்று தொடங்கினால் இப்படி ஒரு நெடும் பயணம் செல்ல வேண்டியிருக்கிறது.

இன்னும் கொஞ்சம் சொல்லலாம். கவிதைக்குள், இலக்கியத்தினுள் வெளிப்படுவது மனிதனின் கவித்துவம். இந்தக் கவித்துவம்தான் மனிதன் தனக்குள்ளும் வெளியிலும் துருவித்துருவி தேடுவதற்கும், தன்னைத் திரட்டிக் கொள்வதற்கும், தனக்காக உலகத்தைப் படைத்துக்கொள்ளவும் காரணம் ஆகிறது. இவன் வரலாற்றுக் காலம்தோறும் கருவிகளைப் படைக்கிறான். கருத்துக்களைப் படைக்கிறான். எல்லாவற்றினுள்ளும் இவன் தன்னையே படைத்துக் கொள்கிறான். இவனது வாழ்வியல் அனுபவங்கள், பார்வைகள் செறிந்துள்ளன.

இவனுக்குள் பிரபஞ்சம் வந்து போகிறது. இவன் தனக்குள் எல்லையற்றவன். இவன் அறிவியலை, கலை இலக்கியங்களைப் படைக்கிறான். பாடல்கள் புனைகிறான். கடவுள்களை, மெய்யியலைப் படைக்கிறான். எல்லாவற்றினுள்ளும் இவனது கவித்துவத்தை, படைப்பியக்கத்தை நாம் பார்க்கிறோம். ஆதிக்கங்களை எதிர்க்கும் முறையில் தன்னையே கூட இழந்து வாழ்வின் அர்த்தங்களை இவன் பெறுகிறான். இழப்பென்பது இவனுக்குள் ஒளியாகிறது. அழகாகிறது. இந்த மனிதனின்

மாபெரும் கவித்துவத்தின் ஒரு கூறுதான் கவிதை இலக்கியம்.

இப்பொழுது திரும்பவும் சொல்லலாம். 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில்தான் இலக்கியம் பற்றி, கவிதைபற்றி, தமிழலக்கியம் பற்றிக் கூடியவரை சரியான பார்வையை நாம் பெறுகிறோம். உண்மையில் இந்த நூற்றாண்டில்தான் நாம் உலக மனிதனாக மாறிக் கொண்டிருக்கிறோம். தமிழனைப் பொருத்தவரை தன்னை உலக மனிதனாகக் காண்பதில், வளர்த்துக்கொள்வதில் இவனுக்குள் எந்தச் சிரமமும் இல்லை. வள்ளுவரையோ, இளங்கோவையோ, சேக்கிழாரையோ இங்கு நாம் மேற்கோள் காட்ட வேண்டியதில்லை. வள்ளுவரில் இடம்பெறும் ஒப்புரவு தமிழனின் பேரறம். சமத்துவம், சமதர்மம் என்பவை இதன் வேறு பெயர்கள்.

4. தமிழில் இலக்கியம் பற்றிப் பேசும்பொழுது தொல்காப்பியத்தில் இருந்து தொடங்குகிறோம். தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் என்பதை இலக்கியத்திற்கான இலக்கணம் கூறும் நூல் என்றும் சில அறிஞர் குறிப்பிடுகின்றனர். பொருள் என்றவுடனே அகப்பொருள், புறப்பொருள் என்ற பாகுபாடு நமக்கு முன்வருகிறது. இங்கும் பொருள் என்ற சொல் இலக்கியம் என்று நேரிடையாகப் பொருள்படுவதில்லை. அப்படியானால் பொருள் என்பதற்கு என்ன பொருள் என்பது இன்னும் ஆய்வு செய்யவில்லை. தமிழ்ச் செய்யுளுக்குப் பொருளதிகாரம் இலக்கணம் கூறுகிறது. செய்யுள் என்பதை இன்று கவிதை என்று கூறுகிறோம். கவிதை என்பதை அதன் விரிந்த பொருளில் இலக்கியம் என்று பொருள்படுத்துகிறோம். செய்யுள் என்பதைக் காட்டிலும் கவிதை என்ற சொல்லை நாம் கூடுதலாக நியாயத்தோடு இங்குப் பயன்படுத்துவதில் தவறில்லை.

செய்யுளின் உறுப்புக்கள் பற்றித் தொல்காப்பியர் விரிவாகப் பேசுகிறார். இவை பற்றி அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். செய்யுளின் உயிரியக்கம் பற்றித் தொல்காப்பியர் விரிவாகவோ, ஆழமாகவோ எதுவும் சொல்லவில்லை. கவிதையின் உயிரியக்கம் குறித்து நம் காலத்தில்தான் விரிவாகப் பேசுகிறோம். சங்க இலக்கியம் படைத்தவர்களும் சரி, காப்பியம்

முதலியவற்றைப் படைத்தவர்களும் சரி கவிதை இலக்கியத்தில் உயர்ந்த சாதனை படைத்தவர்கள். இவை குறித்தெல்லாம் அக்காலத்தில் விரிவான ஆய்வுகள் தமிழில் எழுதப்படவில்லை என்றபோதிலும் இன்றைக்கும் பெரும் சாதனை என்று நாம் கொண்டாடுகிற இலக்கியங்களைப் படைத்தவர்கள் இலக்கியத்தின் உயிரியக்கம் என்னவென்று அறியாதவர்களாக இருந்திருக்கமுடியாது. இவ்வகை இலக்கியங்களின் உயிரியக்கம் என்னவென்று நம் காலத்தில் நம்மால் அதிக அளவில் புரிந்து கொள்ளவும், விளக்கம்/வரையறை சொல்லவும் இயலும்.

தொல்காப்பியர் செய்யுளில் செயல்படும் உறுப்புகள் என்பவை பற்றி விரிவாகச் சொல்லுகிறார். உவமை, குறிப்பு, உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு எனப் பலவற்றைக் குறிப்பிடுகிறார். மெய்ப்பாட்டின் வகைகள், அவை ஒவ்வொன்றும் தோன்றுவதற்கான இடங்கள் என்றும் பேசுகிறார். கவிதை பற்றிய ஆய்வுக்கு இவை முக்கியம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, குறிப்பு, உள்ளுறை என்பது கவிதை இலக்கிய ஆய்வுக்குத் தமிழர்களின் நன்கொடை என்றும் கூறலாம். பிற்காலத்தில் அணிகள் என விரிவாக வகைப்படுத்திக் கூறிய பலவற்றையும் உவமை என்பதன் விரிவு என்று தொல்காப்பியர் கூறியதை நம்மால் புரிந்துகொள்ள இயலுமென்றால் வகைகளில் நம் கவனம் பிளவுபடுவதைத் தவிர்த்துக் கவிதையைக் கூடுதலாக நம்மால் இரசிக்க முடியும். ‘உறுப்புடையதுபோல உணர்வுடையதுபோல’ என்று தொடங்கும் பொருளியல் நூற்பாவைக் கொண்டு கவிதையின் உயிரியக்கம் பற்றித் தொல்காப்பியர் ஓரளவுக்கேனும், சிந்தித்திருக்கிறார் என்பதைச் சொல்ல முடியும்.

உள்ளுறைக்கு அர்த்தம் தந்து பார்க்கும்போது கவிதையின் உயிரியக்கம் குறித்து மேலும் தொல்காப்பியர் சிந்தித்திருப்பதையும் சொல்லமுடியும். இவை ஒருபுறமிருக்க இலக்கியம் பற்றிய தற்காலப் புரிதலோடு தொல்காப்பியரின் திறனாய்வுக் கோட்பாட்டை இப்பொழுது பார்க்கலாம்.

அகத்திணை இலக்கியம் பற்றிய ஆய்வில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூவகைப் பொருளைத்

தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உரிப்பொருள் என்பது கவிதையின் மையம் எனக்கொண்டால் இதன் இயக்கத்திற்கு ஆதாரமாக இருப்பவை முதற்பொருளும் கருப்பொருளும் ஆகும். உரிப்பொருள் என்பது உணர்வு. காதல் என்பது அகத்திணையின் முதன்மையான உணர்வு. தலைவன் தலைவிக்கிடையில் கூடலும் பிரிவும் முக்கியமானவை. எந்த ஒரு உணர்வின் தோற்றத்தையும் சமூகச் சூழலை ஆதாரமாக இன்று நாம் வைத்துப் பார்க்கிறோம். காலம், வெளி என்று நாம் இப்பொழுது கூறுகிறோம். வாழ்வை காலமும் வெளியும் தீர்மானிக்கின்றன. காலம் என்பதனுள் நிலம், பொழுது ஆகியன உள்ளடங்கும். இடம் என்பதனுள் தொல்காப்பியரும் மற்றவரும் கூறும் கருப்பொருள் அடங்கும் எனக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமான வரலாறு மற்றும் சமூகச் சூழலை இவை குறிப்பிடுவதாக இன்று நாம் பொருள் கொள்ளமுடியும்.

இவ்வாறு விரித்துரைப்பதை விடுத்து நம் கால நோக்கிலிருந்து இப்பொழுது சிலவற்றைத் தொகுத்துக் கூறிவிடலாம். அகத்திணைக்கு மட்டுமே உரிப்பொருள் முதலியவற்றைக் கூறிய தொல்காப்பியர் புறத்திணை பற்றிய ஆய்வில் இவற்றை விரித்துரைக்கவில்லை. முதல், கரு என்பவை வரலாற்றுக் காலத்திற்கு ஒத்தபடி விரித்து உரைக்கப்பட வேண்டியவை. இவை குறித்த ஆய்வைப் பிற்காலத்து இலக்கண ஆய்வாளர்கள் செய்யவில்லை. அகத்திணையைப் பொறுத்தவரை திணைகள் ஐந்து என்றாலும் காதல்/அன்பு என்பதுதான் இவற்றின் உரிப்பொருள்.

காதல் எப்படித் தோன்றுகிறது என்று தொடங்கி, களவு, உடன்போக்கு, திருமணம், பிரிவு, கற்பு என்பனவற்றையெல்லாம் ஒன்றில் அடக்கிக் கூறிவிட முடியும். இல்லறம் இல்லாமல் மனிதனுக்கு வாழ்க்கை இல்லை. அதைப் போலப் புறத்திணை என்று வரும்பொழுது, தொல்காப்பியர் காலத்தில் மருதத்திணை சார்ந்த வாழ்க்கையே முதன்மை பெறுகிறது. மருதத்திணையில் வஞ்சிப்போரே முதன்மை பெறும். வெட்சி, கரந்தை முதலிய போர்கள் தொல் பழங்காலத்தில் நடந்த சிறு போர்கள்;

மருதத்திணை நாகரிகச் சூழலில் இவ்வகைப் போர்களுக்கு முக்கியத்துவம் இல்லை.

புறத்திணையின் உள்ளும் உரிப்பொருள் பற்றியும், இதற்கு ஆதாரமான முதற்பொருள் கருப்பொருள் பற்றியும் தொல்காப்பியர் சொல்லியிருக்க வேண்டும். புறத்திணையுள்ளும் வாகைத் திணையே விரிவும், ஆழமும் கொண்ட திணை. காஞ்சித் திணையும் பாடாண்திணையும் இதற்கு அடுத்த திணைகள்; மருதத்திணை சார்ந்த வாழ்க்கையினுள் போர் வெற்றியைப் போலவே வணிகம், பிறவகைத் தொழில்கள், கல்வி, தவம், துறவு முதலியவற்றிலும் மனிதன் பெறும் தோல்விகளோடு வெற்றிகளும் முக்கியமானவை.

மேலும் ஒன்று, அகத்தையும், புறத்தையும் முற்றாகப் பிரித்துவிடவும் இயலாது. அகத்திணையுள்ளும் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இடம் இருக்கிறது. வாழ்க்கையை இருவேறு கூறுகளாக அன்றும் சரி, இன்றும் சரி பிளவுபடுத்துவது சாத்தியமில்லை. பிளவு படுத்திய நிலையிலும் இலக்கணம் வகுப்பதிலும் நிறையக் குழப்பங்கள் வந்து சேரும்.

திருக்குறள்உரிப்பொருள் என அறத்தைச் சொல்ல முடியும்.

வள்ளுவரிடம் இந்த அறவுணர்வு மேலோங்கியிருப்பதற் கான காரணம் மற்றும் ஆதாரத்தை அவர் வாழ்ந்த காலம் மற்றும் இடச்சூழலில் நாம் தேட வேண்டும். குறளுக்கு உள்ளும், வெளியிலும் தேடிச் சிலவற்றைத் தொகுத்துச் சொல்லவும் முடியும். பக்தி இலக்கியத்தைப் பொறுத்தவரை இறைவனிடம் மனிதன் கொண்ட பக்தி, அதன் உரிப்பொருள், சமுதாயத்தில் பக்தி உணர்வு மேம்படுவதற்கான காரணங்களை வரலாற்றுச் சூழலில் தேட வேண்டும்.

காப்பியத்தைப் பொருத்தவரை இல்லறமும், துறவறமும் மோதிக் கொள்கின்றன. மனிதத் துயரங்கள் உச்ச அளவில் தெரிகின்றன. ஒருவகையில் மனிதனின் அவலம் என்பதைக்

காப்பியங்களின் உரிப்பொருளாகக் காணலாம் போலத் தெரிகிறது.

இதேபோலச் சிற்றிலக்கியக் காலச்சூழல் பற்றியும், சிற்றிலக்கியங்களின் தோற்றம் பற்றியும் நாம் ஆராய முடியும்.

தற்கால நோக்கில் கவிதை/இலக்கியம் பற்றிய ஆய்வில் நாம் அழுத்தம் கொள்ளும் பொழுது தொல்காப்பியம் குறித்து இவ்வாறு ஒரு மறுபார்வை நமக்குத்தேவை. சங்க இலக்கியங் களைத் தொல்காப்பியரும், அவரோடு கருத்தொற்றுமை/ வேற்றுமை உடையவர்களும் ஒருவகையில் ஆராய்ந்து இலக்கணம் வகுத்தனர். இந்த இலக்கணம் இன்று நமக்கு நிறைவு தரவில்லை. சங்க இலக்கியம் முழுவதையும் கலைத்துப் போட்டு வேறு எந்த வகையான பார்வையை முன் வைப்பது என்பது பற்றி நாம் சிந்திப்பதில் தவறில்லை. நமக்கு இலக்கியம் தேவை, கவிதை தேவை, மனிதன் தனக்கான வாழ்க்கையை/ வாழ்வின் அர்த்தத்தை வரலாற்றுச் சூழலிலிருந்து பெறுகின்றான். வரலாற்றுச் சூழலில் உள்ள முரண்களுக்கும், நெருக்கடி களுக்கும் எதிர்வினை தருவதன் மூலம் மனிதன் தன்னைப் படைத்துக் கொள்கிறான்.

முரண்பாடுகள் மற்றும் நெருக்டிகள் முற்றிய நிலையில் மனிதன் தனக்குள் பிளவுபடவும் சிதையவும் நேருகிறது. தன்னை இழந்த நிலையில் இவன் தவிக்கிறான். தனக்குள்ளும் வெளியிலும் தேடுகிறான். அறம் எது? பொருள் எது? இன்பம் எது? என்றெல்லாம் தேடுகிறான். கையில் கிடைத்ததை இறுக்கமாகப் பற்றிக் கொள்கிறான். இல்லறத்தில் உறவுகள் முற்றாகச் சிதையும் பொழுது துறவை நாடிச் செல்கிறான். துறவிலும் இவனுக்குள் நெருக்கடிகள்! இயலுமானால் தன் புலன்களை வெற்றி கொள்கிறான். இயலாத பொழுது போலியாகிறான். ஆணுக்குப் பெண் சேவை செய்ய வேண்டும். தன்னை அடிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அடிமைத் தனத்தை எந்தப் பெண்ணும் எக்காலத்திலும் பொறுத்துக் கொள்ள இயலாது. அவளும் பொங்கி எழுவாள். கணவனை உதறிச் செல்வாள். சமுதாயத்தில் எங்கும் நீதி நிலவும் என்று எதிர்பார்க்க முடியாது. தனிவுடைமையும், அரசும் தோன்றி வளர்ந்த

நிலையில் அரசு தன் அதிகாரத்தை விட்டுத்தர முடியாது. அரசின் அநீதிகளுக்கு மக்கள் எப்பொழுதும் ஒத்துச் செல்லவும் இயலாது. கலவரங்கள் எழத்தான் செய்யும். அரசனும் கொல்லப்படுவான். நகரங்களும் தீக்கிரையாகும். வறுமை கொடிகட்டிப் பறக்கும். சமயங்களுக்குத் தேவை ஏற்படும் கடவுளர்கள் காணிக்கை பெறுவார்கள். சமயங்களுக்கிடையிலும் போட்டிகளும் வம்புகளும் நடைபெறத்தான் செய்யும். மனிதன் தனக்குள் மேலும் தேடும்பொழுது சாதி வேண்டாம், மதம் வேண்டாம். அன்பு ஒன்றே இறைவன். இப்படியும் பேச நேரிடும். இவை எல்லாம் தமிழ் இலக்கியத்தினுள் இடம்பெறுகின்றன.

எந்த மொழி இலக்கியமும் மனிதனின் இந்தவகை வாழ்க்கை பற்றிப் பேசுகிறது. தமிழ் இலக்கியங்களும் இந்தப் பொது விதிக்கு விலக்காக இருக்க முடியாது.

தொல்காப்பியத்தில் இலக்கியம் குறித்து இடம் பெறுகிற கலைச் சொற்களைத் தொகுத்துப் பார்க்க முடியுமானால் ஓர் உண்மை நமக்குத் தெளிவாகப் புலப்படும். வாழ்க்கை குறித்தும் இலக்கியம் குறித்தும் அக்காலத்தில் விரிவாக ஆய்வுகள் நடந்துள்ளன. கலைச் சொற்களின் நுட்பங்கள் அற்புதமானவை. தொல்காப்பியரோடு முரண்பட்டவர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர். திருக்குறள், சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுகளுக்கே கூடத்தொல்காப்பியம் கூறும் இலக்கணம் போதுமானதாக இல்லை. பக்தி இலக்கியம் என்று வரும்பொழுது தொல்காப்பியரை நாம் எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ள இயலும்? எனினும் கவிதை/இலக்கியம் குறித்த ஆய்வில் இன்றுவரை தொல்காப்பியரிடமிருந்து எடுத்துக்கொள்ளத்தக்க கூறுகளும் உள்ளன. தொல்காப்பியரின் திணைக் கோட்பாடு இலக்கியம் பற்றிய ஆய்வுக்கு நமக்குள்ளிருந்து புது நெறியைத் திறந்திருக்க வேண்டும். இலக்கண ஆய்வில் நம்மவா ஈடுபட்டிருந்த அளவுக்கு இலக்கியம் பற்றி ஆராயவில்லை. எனினும் காலம் தோறும் வகைவகையான அற்புதமான இலக்கியங்களைப் படைத்துக் கொண்டேயிருந்தனர். இலக்கியம் பற்றிய ஆய்வில்லாமல் எப்படி இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்க முடியும்? இந்தக் கேள்வியோடு தேடினால்

காலந்தோறும் இலக்கியம் குறித்த சீரிய சிந்தனைகளை நாம் தொகுக்க முடியும்.

5. தமிழ் இலக்கியத்தைப் பொருத்தவரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உடையவை. உலகத்தில் கிரேக்கம் முதலிய சில மொழிகளுக்குத்தான் இத்தகைய நீண்ட வரலாறு உண்டு. இதற்காக நாம் பெருமைப்பட்டுக் கொள்வதைக் காட்டிலும், இதனது தொன்மை காரணமாக நமக்குள் ஏற்பட்டுள்ள கவிதை வளம் பற்றிய அக்கறையும் ஆய்வும் நமக்குத் தேவை. இத்தகைய நீண்டகால வரலாறு காரணமாக, இலக்கியத்தில் எத்தனையோ வகைமைகளை நாம் கொண்டிருக்கின்றோம். இத்தகைய வகைமை கூட உலகில் சில மொழிகளுக்குத்தான் இருக்க முடியும்.

காலத்தால் அழிந்துபோன இலக்கியங்கள் தவிர நமக்குக் கிடைத்திருக்கிற முதல் இலக்கியம் சங்க இலக்கியம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த இனக்குழு சமூகத்திலிருந்து நாம் வரலாற்றுக்கு வந்து வளர்ந்து கொண்டிருந்த காலத்து இலக்கியம் சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தில் சமயம் இன்னும் ஆளுகை பெறவில்லை. மனிதர் தமக்கான முகமலர்ச்சியோடும், காதல் உணர்வோடும், வீர உணர்வோடும், இந்த இலக்கியத்தில் மிளிர்கின்றனர். அதை அடுத்து வந்த காலத்து இலக்கியம் அற இலக்கியம். பிறகு காப்பியங்கள், தொடர்ந்து பக்தி இலக்கியம், சித்தர் இலக்கியம் அதன்பிறகு சிற்றிலக்கியம். அப்புறம் புராணங்கள், இவற்றைக் கடந்த பிறகு தற்கால இலக்கியத்துள் வருகிறோம்.

நீண்டகால இலக்கிய வரலாற்றுக்குள் பயணம் செய்கிற எந்த ஒரு மாணவனும் தன்னைத் தமிழன் என்று, கவிஞன் என்று உணராமல் இருக்க முடியாது. தமிழ் வளத்தின் சில பகுதிகளோடாவது தன்னை இனம் கண்டுகொள்ள முடியும். தமிழன் தனக்கெனத் தனி நாடு, நாகரிகம், தொன்மை, மேன்மை, பண்பாடு முதலியவற்றைக் கொண்டிருந்தவன். இதன் காரணமாகக்கூட நாங்கள் எவருக்கும் அடிமைப்படமாட்டோம். எங்களது மேன்மையான வரலாற்றை எவருக்கும் விட்டுக்

கொடுக்க மாட்டோம். எல்லாவற்றையும் நாங்கள் மீட்டுக் கொள்வோம் என்ற உணர்வு நமக்குள் ஏற்படுகிறது. வடவரோடு, வடமொழியோடு, பார்ப்பனியத்தோடு, இந்தியாவோடு, இந்துத்துவத்தோடு நாம் முரண்படுவதற்கு இவை காரணங்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் வழியே நாம் தொடர்ந்து பார்க்கிறோம். சாதியைத் தமிழன் ஏற்கவில்லை. மதங்களின் ஆதிக்கத்தைத் தமிழன் மறுத்து வந்திருக்கிறான். இவனுக்கும் தமிழ் மறைகள் உண்டு. இந்திய நாகரிகத்திற்கு இவன் பங்களிப்புகள் அதிகம். அழிந்து கொண்டிருக்கும் உலக நாகரிகத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வல்ல கூறுகள் தமிழியத்தில் உண்டு. தமிழனுக்கெனத் தனி மெய்யியலை நாம் வகுத்துக் கொள்ளமுடியும். சித்தர் இலக்கியம்தான் தமிழ் இலக்கியத்தின் சாரம். இப்படிப் பல காரணங்களுக்காகத் தமிழ்க் கவிதையை, தமிழனின் கவிதையை நாம் பெரிதாக வற்புறுத்துகிறோம். தமிழனின் நீண்ட வரலாறு இத்தகைய பொறுப்புக்களை நம்மீது சுமத்தி உள்ளது. இந்த வரலாற்றுக்கு இன்று நாம் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் இலக்கியக் கல்வி இத்தகைய உணர்வை நமக்குள் ஏற்படுத்த வேண்டும். தமிழ் இலக்கிய ஆய்வென்பதன் முதன்மையான நோக்கம் இதுவாகத்தான் இன்று இருக்க முடியும்.

நீண்ட காலத் தமிழ்க்கவிதையை/இலக்கியத்தை இன்று நாம் திறனாய்வு நோக்கம் இல்லாமல் கற்க முடியாது. செரித்துக் கொள்ள முடியாது. இன்று நமக்குள் செயல்படுகின்ற திறனாய்வுப் பார்வையை மேற்கிலிருந்து ஆங்கிலத்தின் வாயிலாகப் பெற்றோம் என்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை. ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின்போது, நம் தொன்மை நாகரிகம் தேடி நம்மை நாமே புதுப்பித்துக் கொண்டோம். ஆங்கில மொழி வாயிலாக நமக்குள் வந்த திறனாய்வுப் பார்வை, முந்தைய அடிமைத்தனத்திலிருந்து, பழைய பிடிப்புகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளவும் பயன்பட்டது. மேற்குலகிலிருந்து நமக்கு வந்து சேர்ந்த அறிவியல் தொழில் நுட்பம், அரைகுறை முதலாளியம், மக்களாட்சி முதலிய பலவற்றையும் இங்கு நினைவு கொள்ளலாம். மேற்கத்திய

நாகரிகத்தோடு நமக்கு ஏற்பட்ட உறவும், முரண்பாடுகளைக் கொண்ட உறவாகவே இருந்தது.

மேற்குலக நாகரிகத்திற்கு இங்குள்ள ஒருசிலர் நம்மை இன்றுவரை அடிமைப்படுத்திக் கொள்ளவும் நேர்ந்தது. நம்மையும், நம் வரலாற்றையும் புரிந்துகொள்வதற்குத் தேவையான கூறுகள் மேற்கிலிருந்து நமக்குக் கிடைத்தன. சாக்ரடீஸ், பிளாட்டோ, சேக்ஸ்பியர், ஷெல்லி எனப் பலரை நாம் கற்றுக் கொண்டோம். மேற்கிலிருந்து மட்டுமல்ல புரட்சிக்குப் பிந்திய சோவியத் ஒன்றியத்திலிருந்தும் நாம் பலவற்றைக் கற்றுக் கொண்டோம். இவற்றை எல்லாம் செரித்துக்கொண்டு வெளிச்சங்களைப் பெற்ற பலரும் நமக்குள் இருக்கின்றனர்.

உலகளவில் வைத்துப் பார்க்கும்போது எவருக்கும் நாம் இளைத்தவர்கள் இல்லை என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டது. இடைக்காலத்தில் நமக்குள் மங்கிப்போன திறனாய்வுப் பார்வையை நமக்குள் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டோம். இது குறித்து இங்கு விரிவாகச் சொல்லவேண்டும்.

தமிழ்இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம் முதற்கொண்டு வகைவகையான இலக்கியங்கள் நமக்கு வாய்த்திருக்கின்றன. இலக்கியம் குறித்த ஓரளவுக்கேனும் விரிவான பார்வை தொல்காப்பியருக்குள் இருந்திருக்கிறது. அதன் பிறகு அகத்திணை இலக்கணம் பற்றியும், செய்யுள் இலக்கணம், எழுத்து, சொல் இலக்கணம் என்று பலர் இலக்கண நூல்களைப் படைத்தனர். ஓரளவுக்கு இலக்கண ஆய்வையும் செய்தனர். ஆனால் இலக்கியம் பற்றிய ஆய்வில் இவர்கள் ஈடுபட்டு நூல்கள் படைக்கவில்லை எனினும் தொடர்ந்து வகை வகையான இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு நாம் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு இலக்கிய வகைமை மாறி இன்னொரு வகைமை இலக்கியம் தோன்றவேண்டுமென்றால் முன்னைய இலக்கியம் குறித்து மாறுபட்ட திறனாய்வுப்பார்வை இல்லாமல் முடியாது. அன்றியும் தம் காலச் சூழலுக்கு ஒத்த புதிய உணர்வுகளோடு கூடிய

புதுவகையான இலக்கியம் தனக்குத்தேவை என்ற உணர்வோடு தான் புதியவகை இலக்கியம் படைக்கவும் கூடும். அப்படியானால் இக்கால அளவில் செயல்பட்ட திறனாய்வுப் பார்வை என்னவாக இருந்திருக்க முடியும் என்று அவர்கள் எழுதி வைக்கவில்லை. எனினும் நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

இலக்கியம்/கவிதை வரலாறு எழுதுபவர்கள் இதற்கான அக்கறையோடும், தகுதியோடும் செயல்படவேண்டும். மேலும் ஒன்று, எந்த ஒரு இலக்கியமும், எந்த ஒரு பேரிலக்கியமும் அதனைப் படைத்தவரைப் பொறுத்தவரை தம் காலச் சமூக/ இலக்கியச் சூழலுக்கு எதிர்வினை தரும் நோக்கில்தான் புதிய இலக்கியப் படைப்பில் ஈடுபட்டிருக்க முடியும். கலைஞன் அல்லது படைப்பாளியாகிய இவருக்குள் ஒரு திறனாய்வாளனும் செயல்பட்டிருக்கின்றான். தனக்குள்ளும் வெளியிலும் தொடர்ந்து தேடல் இல்லாமல் இவன் தன்னை ஒரு திறனாய்வாளனாக வளர்த்துக் கொண்டிருக்கவும் முடியாது.

இப்பொழுது நாம் உறுதியாகச் சொல்லலாம். நீண்ட காலக் கவிதை/இலக்கிய வரலாற்றிலுள்ள பல்வேறு காலக்கட்டங்களில் செயல்பட்ட திறனாய்வுப் பார்வையை நாம் கண்டெடுக்க வேண்டும். இலக்கியம் பற்றிய இந்தப் பார்வை, சமயங்கள் குறித்த ஆய்வுக்கும் பொருந்தும். அப்படியானால் இங்கு ஒரு ஆய்வு நெறி குறித்துச் சொல்ல முடியும். வள்ளுவரின், இளங்கோவின் திறனாய்வுப் பார்வை என்று தொடங்கி, எந்த ஒரு பெரும் கவிஞனின் திறனாய்வுப் பார்வை குறித்தும் நாம் ஆய்வு செய்வதற்கான தேவை இருக்கிறது. மீண்டும் இங்கு மேலும் ஒன்றை உறுதியாகச் சொல்ல வேண்டும். எந்த ஒரு கவிஞனின் பாடல்குறித்து ஆராயும் போதும் 20/21 ஆம் நூற்றாண்டுச் சூழலிலிருந்துதான் ஆராய்கிறோம் என்ற உணர்வை இழந்துவிடக் கூடாது. அதற்கேற்ற முறையில் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எவ்வாறு தகுதிப்படுத்திக் கொள்வது என்பது குறித்து நமக்குச் சிந்தனை தேவை. எந்த வகை ஆதிக்கத்திற்கும் நமக்குள் இடம் தரக்கூடாது. நம்மை நாம் எப்பொழுதும் திறந்து

வைத்திருக்கவேண்டும். இதுபற்றி நாம் எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டும். எந்த ஒரு விருப்பு வெறுப்புக்கும் இடம் தரக்கூடாது.

6. நீண்டகாலத் தமிழ்க் கவிதை/இலக்கிய வரலாற்றில் பாரதி சுட்டிக்காட்டியபடி சிலபெரும் கவிஞர்களை நாம் பார்த்திருக்கிறோம். பாரதியாரின் மதிப்பீட்டின்படி வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும் பெரும் கவிஞர்கள் என்பதற்கான வரையறையை பாரதி ஓரளவுக்கேனும் நமக்குச் சுட்டிக்காட்டி இருக்கிறார். "விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்?" என்ற முடிவு பெறாத கவிதையில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியவர்களின் சிற்சில தனித்தன்மைகளைக் குறிப்பிட்டு இவர்களைப் படைத்த தமிழ்ச்சாதி அமரத்துவம் உடையது என்று குறிப்பிடுகிறார். இவர்கள் உயிர்ப்போடு இருக்கும் வரை தமிழ்ச் சாதிக்கு அழிவென்பது இருக்க முடியாது.

இதை எப்படிப் புரிந்து கொள்வது? வள்ளுவர் ஒப்புரவு, சான்றாண்மை என்பது பற்றி அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறார். அநீதியே நீதியாக மாறிவிட்ட அரசை அழித்தொழிக்க வேண்டும் என்கிறார் இளங்கோ. இது சான்றோர்களுக்கும், தெய்வங்களுக் கும், கற்புடைப் பெண்டிருக்கும் கடமை என்கிறார் இளங்கோ. கம்பரைப் பொறுத்தவரை பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகியவர்களை உள்ளடக்கி இவர்களைக் கடந்த பரம்பொருள் பற்றிப் பேசுகிறார்.

அரக்கர்களின் கொடுங்கோன்மை அதிகரித்துவரும் சூழலில் தெய்வமென இருந்தால் என்ன செய்யவேண்டும். மனிதரோடு மனிதராய்ப் பிறப்பெடுத்து அடிமைப்பட்ட மனிதர்களைத் தோழமை கொண்டு அரக்கருடைய கொடுங் கோன்மையை அழித்தொழிக்க வேண்டும். வள்ளுவரும் வறுமைக்கு எதிரான கலவரத்தைச் செய்தார். உலகில் வறுமை நிலவுகிறது என்றால் இறைவனும் வறியவனாகி இரந்துண்டு வாழவேண்டும் என்று சபித்தார். நீதியை நிலைநாட்டுவதில் தெய்வத்திற்குப் பொறுப்பு உண்டு. இப்படிச் செயல்படுவதுதான் தெய்வம். சமூகத்தில் நிலவும் அநீதிகளை ஒழிப்பதில்

தெய்வங்களை முன்னிலைப்படுத்துவதில் சமயங்களுக்குப் பொறுப்புண்டு; உடைமை, அதிகாரம் என்று மக்களைச் சுரண்டுகிற, ஒடுக்குகிற எவரையும் வள்ளுவர் முதலிய சான்றோர்கள் ஏற்கவில்லை.

வள்ளுவரென்றும், இளங்கோ என்றும், கம்பரென்றும் பேசுபவர்கள் ஆதிக்கங்களுக்கு எதிரான போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளத்தான் வேண்டும். பாரதி மதித்த பெரும் கவிஞர்களின் தனித்தன்மைகள் இவை. மீண்டும் இங்கு என்ன பார்க்கிறோம்? 20-ஆம் நூற்றாண்டு உலக/இந்திய/தமிழ்ச் சூழல்தான் பாரதிக்குள் இவ்வகைப் பார்வையைப் படைத்தது. மனிதகுல வரலாற்றைக் கலை, இலக்கியங்கள், சமயங்கள் முதலியவற்றைக் கற்பது என்பது கூட இவ்வகைப் பார்வையை நமக்குள் பெறுவதற்காகத்தான். தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரும் கவிஞர்கள் என்ற வரிசையில் வள்ளுவர் முதலியவர்களோடு பாரதியையும், பாரதிதாசனையும் நாம் சேர்த்துக் கொள்ள இயலும்.

அப்படியென்றால் செயங்கொண்டார், கொங்குவேளிர், திருத்தக்கதேவர், சேக்கிழார், குமரகுருபரர் முதலியவர்கள் இந்த வரிசையில் இடம்பெற மாட்டார்களா? என்று நமக்குள் கேட்கலாம். இவர்கள், அவர்கள் காலத்தில் பெரும் கவிஞர்களாக இருந்திருக்கக்கூடும். இன்று காலநிலை மாறுபட்டுவிட்டது. 20ஆம் நூற்றாண்டுச் சூழலில், மனிதன் முன்னிலைக்கு வந்த சூழலில், கொங்கு வேளிர் முதலியவர்களை அவர்களின் புலமைக்காக, கவிதை நயத்திற்காக நம்மால் இரசிக்க முடியும்; மதிக்க முடியும். இவர்களை மீண்டும் மீண்டும் கற்றுக் கொள்வதற்கும் கூடத்தேவை உண்டு. இவர்கள் வழியிலும் வரலாறு/சமூகம் எவ்வாறு செயல்பட்டது என்று ஆய்ந்தறியவும் வேண்டும். இயலுமானால் இவர்களுக்குள் செயல்பட்ட சமயம், சமயப்பார்வை அல்லது வேறுவகையான பார்வையை, மனிதப் பார்வையாக மாற்றிப் பார்ப்பதற்கான தடயங்களையும் இவர்களுக்குள் நாம் தேட வேண்டும். இவ்வகை ஆய்வை இன்று நாம் புறக்கணிக்கவும் தேவையில்லை.

மேலும் சிலரைக் குறித்து இங்குச் சொல்லலாம். ஔவையாரை ஒரு பெரும் கவிஞரென அண்மைக் காலத்தில் நாம் கண்டுகொண்டோம். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் போன்றவர்கள் அவர்கள் காலத்தில் பெரும் கவிஞர்கள். தாயுமானவர், வள்ளலார், அருணகிரிநாதர் முதலியவர்களுக்கும் அத்தகைய தகுதியை நாம் வழங்க முடியும். சித்தர்களில் சிவ வாக்கியரைப் புறக்கணிக்க முடியாது. இவர்கள் எல்லோரும் தமிழ் இலக்கியத்தின் மேன்மைகள், சொத்துக்கள், உச்சங்கள் என்பதில் ஐயமில்லை.

மேலும் சிலவற்றை இங்குச் சொல்ல வேண்டும். ஒரு கவிதை/இலக்கியத்தை உயர்வகை இலக்கியம் என்று நாம் சொல்லும் பொழுது எத்தகைய அளவுகோலை முன் வைக்கிறோம் என்பது பற்றிய அக்கறை நமக்குத் தேவை. கவிதையிலுள்ள சொல் நயம், உவமை அழகு அல்லது அணி நயம் முதலியவற்றைத் தனியே பிரித்தெடுத்துச் சுவைப்பது ஒருவகைப் பார்வை. கவிதையிலுள்ள நீதி, சமய உணர்வு, சமூக உணர்வு முதலியவற்றைத் தொகுத்துக்கொண்டு இரசிப்பது இன்னொரு வகைப் பார்வை. கவிதையிலுள்ள மெய்ப்பாடுகளைக் கண்டெடுத்துச் சுவைப்பதும் ஒருவகைப் பார்வை; இவற்றை யெல்லாம் நாம் மறுக்கவில்லை. ஒன்றைச் சுவைக்கும்பொழுது சுவைப்பவராகிய நாம் சமூகத்தின் எந்தப் பிரிவில் இருக்கிறோம் என்பது குறித்தும் தமிழ் இலக்கிய மரபை எந்த அளவில் நமக்குள் செரித்துக் கொண்டிருக்கின்றோம்/புரிந்து கொண்டிருக்கிறோம் என்பது குறித்தும் நம்மை நாமே கேட்டுக் கொள்ளவும் வேண்டும். தமிழை வைத்துப் பிழைக்கிறோமா, சம்பாதிக்கிறோமா, அரசியல் செய்கிறோமா என்றெல்லாம் சுய ஆய்வு செய்துகொள்ள வேண்டும். தமிழை எந்த வகையிலும் மகிமைப்படுத்தக் கூடாது. தமிழ் என்பது நமக்கு அறம், வாழ்வியல், ஒரு பேராற்றல் என்றெல்லாம் நமக்கு உணர்வுகள் தேவை. இரசனை நமக்குப் போதாது. தமிழின் மேன்மை என்று பெருமை சொல்வதில் பயனில்லை. தமிழ் என்பது தமிழ் மக்களின் சொத்து; திருவள்ளுவர் முதலிய பெரும் கவிஞர்கள் தொகுத்த அறம் முதலியவை மக்களிடமிருந்து கற்றுக் கொண்டவை. தமிழ் வாழ

வேண்டும், வளர வேண்டும் என்றால், தமிழ் மக்கள் வாழ வேண்டும். தமிழ் நிலத்தின் இயற்கை நாசமாகக்கூடாது. தமிழ் நிலம் அந்நியர் கைப்படக்கூடாது. தமிழ் என்றும், தமிழ் இலக்கியம் என்றும் ஆழ்ந்து கற்பது என்பது இத்தகைய பேருணர்வை நமக்குள் பெறுவதற்காகத்தான்.

தமிழ்க்கவிதை/இலக்கிய ஆய்வுக்கு நம் காலத்தில் முன் வைக்கப்படுகிற பார்வைகள், அணுகுமுறைகள் பற்றியும் இங்குச் சொல்ல வேண்டும். புலவர்கள் முன்வைக்கிற பார்வை பண்பாட்டுப் பார்வை. சமய உணர்வுடையவர்களும் தம் பார்வையை முன்வைத்துப் பக்தி இலக்கியம் முதலியவற்றை ஆராய்கிறார்கள். நம் காலத்தில் வளர்ச்சி பெற்ற பகுத்தறிவு இயக்கப் பார்வையிலிருந்தும் தமிழ் இலக்கியம் ஆய்வு செய்யப் படுகிறது. ஒன்று முற்றான பகுத்தறிவுப் பார்வை. மற்றொன்று தமிழ் உணர்வை அரசியல்மயப்படுத்துகின்ற பார்வை. மார்க்சிய வாதிகளைப் பொறுத்தவரை வர்க்கக் கண்ணோட்டம், வரலாற்றுப் பார்வை முதலியவற்றை முன் வைத்து ஆய்வு செய்கின்றனர்.

அண்மைக்காலத்தில் பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம் முதலிய பார்வைகளும் செயல்படுகின்றன. ஒப்பியல் ஆய்வென்பது இன்னொரு அணுகுமுறை. நாட்டார் வழக்காற்றியல் முறையிலும் தமிழ் இலக்கிய ஆய்விலும் ஈடுபட வாய்ப்புள்ளது. முனைவர் பட்டத்திற்கெனச் செய்யப்படும் ஆய்வுகள், கருத்தியல் தளத்தில் இல்லாமல் இலக்கியத்தின் உள்ளுறுப்புகளில் சிலவற்றை முதன்மைப்படுத்திய ஆய்வுகளாய் இருக்கின்றன. இவை பற்றியெல்லாம் நமக்குப் புரிதலும் மதிப்பீடும் தேவைப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் தமிழ்க் கவிதை என்ற இலக்கியத்தின் சில கூறுகள் முன்னுக்கு வர இயலும். சில கூறுகள் பின்னுக்குத் தள்ளப்படும் அல்லது மறுக்கப்படும். ஒவ்வொரு ஆய்வாளரும் தனக்கென ஒரு பார்வையை வைத்துக்கொண்டு ஆய்வு செய்கின்றனர். இதற்கேற்ற முறையில் தமிழ் இலக்கியம் பெருமை அல்லது சிறுமை அடையக்கூடும்.

என்னுடைய பார்வை என்ன என்பதை இங்குத் தொகுத்துச்

சொல்ல வேண்டும். மார்க்சிய நோக்கில் தமிழியல் ஆய்வில் நான் ஈடுபட்டிருக்கின்றேன். நான் தமிழ் இலக்கிய மாணவன். தமிழ் உணர்வையும் மார்க்சிய நெறியையும் என்னுள் செரித்துக் கொண்டுள்ளேன். இலக்கியத்தின் உள் ஆழங்களை நான் தேடிச் செல்கிறேன். வரலாறும் மெய்யியலும் எனக்குப் பேருதவியாக இருக்கின்றன. மேற்பரப்பில் இருப்பது சுவை உணர்வு, இன்னும் சில உணர்வுகள்; இவற்றையெல்லாம் கடந்து உள்ளே செல்லும் பொழுது இலக்கியத்தின் அடித்தளமாக இருப்பது மெய்யுணர்வு/ அறிவுணர்வு.

வர்க்கப்போராட்டங்களின் மூலம் வர்க்க உணர்வைக் கடந்து செல்வது மார்க்சியம் என்பது எனது புரிதல். சமத்துவம், சமதர்மம் என்ற உணர்வுகள் மனிதனின் அடித்தள உணர்வுகள்; சமயங்களின் உள்ளும் இத்தகைய உணர்வுகளே இயங்குகின்றன. எந்த ஒரு இலக்கியத்திலும் அதைப் படைத்தவன் தன் காலச் சூழலில் நிலவும் ஆதிக்கங்களுக்கு எதிர்வினை தருபவனாக இருக்கிறான். சமூகத்தோடும், தன் வாழ்நிலையோடும் சமரசம் செய்து கொள்கிறவன் சிறந்த படைப்பாளியாக இருக்க முடியாது. கட்சிக்கோ, பிறவகை நிறுவனங்களுக்கோ சேவை செய்பவன் உண்மையான படைப்பாளியாகச் செயல்பட முடியாது. ஒரு படைப்பாளி என்பவன் தனக்குள் திறனாய்வாளனாகவும் இருக்கிறான். தொடர்ந்து படைக்கிறபொழுது அந்தப் படைப்பியக்கத்தினுள் அவன் ஆழ்ந்து போகின்றான். தன்னை மறந்து, தன்னை இழந்து வரலாற்று இயக்கத்தினுள் கலந்து விடுகிறான். பிரபஞ்சம் தழுவிய ஒரு பேரியக்கத்தினுள் இவன் கலந்து விடுகிறான்/கரைந்து விடுகிறான். இவன் தனக்குள் காலம் கடந்தவனாகிறான்.

இவ்வகைப் பார்வையை நான் கொண்டிருப்பதன் காரணமாக தமிழ் இலக்கிய ஆய்வினுள் செயல்படும் பல்வேறு பார்வைகளோடு எனக்கு உடன்பாடு உண்டு, மறுப்பும் உண்டு. எனினும் எல்லாவற்றையும் கற்றுக் கொள்கிறேன். யாரோடும் எனக்குப் பகை இல்லை. ஒவ்வொருவரின் பார்வையையும் அதன் எல்லைகளோடு புரிந்து கொள்கிறேன். எல்லைகளுக்குள் ஒருவர் சிறைப்பட்டுவிடக்கூடாது. ஆனால் தன் எல்லையைப் பற்றிய

உணர்வோடு இயங்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லைகளைக் கடந்து செல்லமுடியும்.

பகுத்தறிவுப் பார்வை அல்லது சமயப் பார்வை அல்லது தலித் பார்வை, பெண்ணியப் பார்வை என்று தனக்குள் இறுக்கமான பார்வை கொண்டு தன்னைத் தானே சுருக்கிக் கொள்வது எனக்கு உடன்பாடில்லை. முதலாளியத்தைத் தனக்குள் வரித்துக் கொண்ட மார்க்சியத்தோடும், பெரியாரியத்தோடும் எனக்கு உடன்பாடில்லை. பிற நவீனத்துவத்தினுள்ளும்இருக்கிற இடதுசாரிப் பார்வை எனக்கு உடன்பாடு. மனித விடுதலைதான் இலக்கியத்தின் இறுதி நோக்கமாக இருக்க முடியும். எந்த ஒரு இலக்கியமும் மனிதனை, அவனது கட்டுக்களை நெகிழ்த்தக் கூடியவரை விரிவான பார்வைக்குள் அவனைக் கொண்டு செல்கிறது. எந்த ஒரு இலக்கியத்தையும் ஒரு வாசகன் தனக்குள் வைத்து வாசிக்கிறான். தன் அனுபவங்களோடு, தன் பார்வையோடு வாசிக்கிறான். தன்னைப் புரிந்து கொள்ளவும், தன் எல்லைகளைத் தளர்த்திக் கொள்ளவும் வாசிக்கிறான். இதற்காகத்தான் இலக்கியத்தை வாசிக்க வேண்டும்/படைக்க வேண்டும். படைப்பாளியாக இல்லாத ஒருவன் நல்ல திறனாய் வாளனாக இருக்க முடியாது.

7. தமிழின் கவிதைநயம் என்ற முறையில் இங்கு சிலவற்றைத் தொடர்ந்து சொல்லலாம். சங்க இலக்கியத்தைப் பொருத்தவரை குறுந்தொகை என்று எடுத்துக்கொண்டால் 400 பாடல்களில் இருந்து 50/100 கவிதைகளையாவது நல்ல கவிதைகள் எனத் தெரிவு செய்யலாம். இதைப்போலவே நற்றிணை, அகநானூற்றிலும் ஒரு தெரிவைச் செய்யலாம். கலித்தொகையில் கூடுதலாகக் கவிதை கிடைக்கும். இப்படிச் செயல்பட்டு ஒரு தரமான சங்க இலக்கியத் தொகுப்பைத் தேவையான விளக்கத்தோடு செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே கூறியபடி சங்க இலக்கியக் கவிதைகள் குறித்து நம் காலத்துக்கேற்றபடி ஒரு மறுபார்வை தேவை. அகநானூறு வரையிலான கவிதைகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு கவிதையும் அதன் முழு அளவில் ஒரு மையப்புள்ளியை நோக்கி

இயங்கும். இதன் காரணமாக அந்தக் கவிதை வீரியம் பெறுகிறது. பத்துப்பாட்டில் இப்படி இல்லை. மையப்புள்ளி என்பதிலிருந்து விலகி ஏராளமான விவரங்களை ஒவ்வொரு பாட்டும் கொண்டுள்ளது. இந்த விவரங்கள் நமக்குப் பலவகைகளிலும் தேவைப்படுகின்றன என்பது உண்மைதான். விவரங்களும் கூடக் கவிதையில் ஒரு நடை. ஒரு வகையில் இவை கட்டுரை போன்றவை. இடையிடையே கவிதைக்கூறுகள்.

தமிழ் இலக்கியத்தில் முதன்மையான பேரிலக்கியம் என்று கம்பர் காவியத்தைப் பலர் கருதுகின்றனர். அளவில் சற்றுச் சிறியது எனினும் சிலப்பதிகாரம் அற்புதமான பேரிலக்கியம். நம் காலத் தேவைகளுக்கு இப்பொழுது நெருக்கமாக வரக்கூடியது மணிமேகலை. இவற்றின் காவியத்தன்மை நம்மைப் பெரிதும் கவருகிறது. எனினும் இன்னும் கூடுதலான கவனத்தோடு பார்க்கிறபொழுது தமிழின் மிகச்சிறந்த பேரிலக்கியம் என்று புறநானூற்றைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். புறநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் தனித்தனிப் பாடல்கள் என்றாலும் இவற்றின் வழியே பெரும் வீச்சோடு கூடிய, பன்முகத்தன்மைஉடைய தமிழர் வரலாற்றையும் வாழ்வியலையும் காண்கிறோம். கவித்துவத்தின் உச்ச அளவிலான வீறுடன் சுமார் நூறு பாடல்களேனும் இயங்குகின்றன. இதன் காரணமாகவே புறநானூறு தமிழரின் பேரிலக்கியம்.

கவிதைநயத்தை மட்டுமே முன்னிலைப்படுத்துவது என்றால் முத்தொள்ளாயிரமும், இடைக்காலத்துத் தனிப்பாடல்களும் தமிழின் அற்புதச் சுவையை வெளிப்படுத்துகின்றன. செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியும், புகழேந்தியின் நளவெண்பாவும் கற்பனைவளம் செறிந்தவை. 96 வகை சிற்றிலக்கியங்களின் கற்பனைவளம், செய்யுள் திறன் நமது இரசனை எல்லைகளை நிரப்பக்கூடியவை. இலக்கிய மாணவன் என்பவன் உச்ச அளவில் கவிதைச் சுவையை இவற்றில் நுகர முடியும்.

- தமிழின் பக்தி இலக்கியங்களில் பெரும்பகுதியை நாம் கொண்டாட முடியும். திரும்பத் திரும்ப வருகிற வருணனை

களை நாம் ஒதுக்கிப்பார்த்தாலும் தேவாரத்திலிருந்து ஒரு நல்ல கவிதைத் திரட்டை நாம் உருவாக்க முடியும். இதே போலவே திருவாசகம் தொடங்கி, தாயுமானவர், வள்ளலார் வரை பக்திச் சுவையோடு கவிதைச்சுவையும் சொட்டும் பாடல்களைச் சேகரிக்க முடியும்.

பெருங்கதையின் உள்ளார்ந்த வீச்சை எவராலும் புறக்கணிக்க முடியாது. இதேபோல சிந்தாமணி, சேக்கிழார் பாடல்களின் கவிதை மற்றும் கற்பனை வளத்திற்கு மேல் அற்புதமான சில மனிதர்கள் அங்கங்கே இடம் பெறுகிறார்கள். கண்ணப்பநாயனார், மெய்ப்பொருள் நாயனார், மனுநீதிச் சோழன், திருநாளைப் போவார் என்று இன்னும் சிலரைக் கூற முடியும். குமரகுருபரர் கவிதைகள் கவிதைச் சுவை செழிப்பவை. அருணகிரியாரின் சந்தங்கள் அற்புதமானவை.

தமிழின் வெண்பா முதலிய நூற்றுக்கணக்கான செய்யுள் வகைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இங்கு விரித்துச் சொல்ல வேண்டியதில்லை. இவ்வகைச் செய்யுள்களுக்காகவே தமிழ் இலக்கியத்தைச் சுவைத்துச் சுவைத்து நாம் கற்க முடியும். விருத்தங்களில் எத்தனை வகை, வெண்பாவில் எத்தனை கச்சிதமான வார்ப்புகள். கலித்தொகையின் களிப்பாடல்களின் நாடகச்சுவையை என்னவென்று சொல்வது! இப்படி எவ்வளவோ சொல்வதற்கு இருக்கிறது.

இன்னும் ஒன்றை இங்குச் சொல்ல வேண்டும், யதார்த்த வாதம் என்று நம் காலத்தில் செறிவாகப் பேசுகிறோம். சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் இதன் கூறுகள் பலவாக உள்ளன. யதார்த்தத்தின் அடிப்படையில் உருவாகிற புனைவியல் மிகைஎதார்த்தம் முதலிய கூறுகள் தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதும் விரிவாக உள்ளன.

கவிதை என்பது எத்தனையோ தளங்களில் இயங்க வல்லது. தரையில் நடக்கும் கவிதை சிலசமயங்களில் தரையை விட்டுப் பறக்கத் தொடங்கும். மனிதர்களுக்குள் தெய்வங்கள் கிளம்பி வானத்தில் வலம் வரும். பேரழகோடு நம்மை வசப்படுத்தும்.

கவிதை நமக்குள் மாயங்களை உருவாக்கும். நமக்குள்ளிருந்தே புராணங்கள் புறப்படும். இசைப்பாடல்களை முழங்கும். யமகம், திரிபு என்று நம்மோடு விளையாடும். பக்தி வெள்ளத்தில் நம்மை ஈர்த்துக் கொண்டு செல்லும். மனிதனுக்குள் குழந்தையும் உண்டு, காதலன் உண்டு. காமுகனுக்கும் இடம் உண்டு; வீரன் உண்டு; துறவி உண்டு; கோழையும் உண்டு. வாழ்வின் நெருக்கடிகளுக்கிடையில் மனிதன் இப்படி எத்தனையோ தோற்றங்களைப் பெறுகிறான். எல்லாவற்றின் உள்ளிருந்தும் தன்னை அனுபவிக்கிறான். ஒவ்வொன்றினுள் இருக்கும் போதும் அதன் வசப்பட்டு இன்பத்தையோ, துன்பத்தையோ, வெற்றியையோ, தோல்வியையோ நுகருகிறான். இவ்வகைப் பிம்பங்களுக்குள் எப்பொழுதும் எல்லாக் காலத்திலும் அவன் தங்குவதில்லை. ஆதிக்கம் செய்யும் ஒருவன் பிறகு அவலத்தை உணருகிறான். அடிமைக்குள்ளிருக்கும் வீரனும் எழுகிறான். வானத்தை நோக்கிப் பயணம் செய்தவன் மண்ணுக்குத் திரும்புகிறான். தனக்காக வாழத் தொடங்கியவன் பிறகு தன்னை இழந்து ஊருக்காக, உலகத்திற்காகப் பாடுபடுகிறான்.

மன்னர்களும் ஆடசியின் அலங்கோலங்களுக்கு இடையில் அவதிப்பட்டபிறகு துறவியாகின்றனர். இப்படி எத்தனையோ மனித அனுபவங்கள். தமிழ் இலக்கியத்தின் வழியே நாம் எவ்வளவோ தேடிச்செல்ல முடியும். திருநாவுக்கரசரோடு, குமரகுருபரரோடு, காரைக்கால் அம்மையாரோடு நாம் பயணம் செய்ய முடியும். இப்படி எத்தனையோ அனுபவங்கள், தமிழ் இலக்கியத்தின் வழியே நமக்கு வாய்க்கும். நமக்குள் எல்லையில்லை, காலம் இல்லை. நாம் சித்தர்கள். எங்கும் அலைகிறோம். எல்லோருக்குள்ளும் புகுந்து வருகிறோம். இயற்கையோடு, இசையோடு உலவுகிறோம். சுருக்கமாகச் சொன்னால் தமிழர் என்ற வகையில் நமக்குள் அமரராகிறோம்.

தமிழின் கவிதைவரலாற்றுக்குள் இன்னும் எவ்வளவோ தேடவேண்டும். ஒருவகை இலக்கியம் இன்னொரு வகை இலக்கியமாக எப்படி மாறியது என்று விளக்கவேண்டும். கவிதை என்பதற்கும் இலக்கியம் என்பதற்கும் என்ன வேறுபாடு என்பதையும் சரியாக ஆராய வேண்டும். தமிழன் கவிதை வரலாறு

நமக்குத்தேவை. இதற்கான தூண்டுதலைத் தருவதற்குத்தான் இந்தக்கட்டுரை. இது ஒரு தொடக்கப்புள்ளி மட்டுமே. அடுத்து யார் தொடர்வார்கள் என்று எதிர்பார்த்திருக்கிறேன்.

8. தொல்காப்பியம் குறித்து மேலும் சில கேள்விகள் நமக்குள் எழுகின்றன. எழுத்திலக்கணமும், சொல் இலக்கணமும் கூறிய பிறகு தொல்காப்பியர் பொருள் இலக்கணம் கூறுகிறார். சொற்கள் எவ்வாறு பொருள்படும் என்பதைச் சொல் அதிகாரத்தில் தொல்காப்பியர் கூறினார். அடுத்துப்பொருள் என்று வரும் பொழுது அது என்னவாக இருக்கக்கூடும் என்ற கேள்விக்குப் பொருள் அதிகாரத்தின் உள்ளேயே நாம் தேடிச்செல்ல முடியும்.

இலக்கியத்திற்கு/கவிதைக்கு/வாழ்க்கைக்குத் தொல் காப்பியர் இலக்கணம் வகுத்தார் என்ற உட்கருத்தோடு தேடும்பொழுது இவற்றுக்கே முதன்மை தந்து பலவற்றை ஒதுக்கி விடுகிறார். சொல்லும் அவற்றின் பொருளும் சார்ந்தவை. உலக அளவில் நாம் காணும், பல்வேறு வகையான பொருள்கள், உலகம் மட்டும் அல்லாமல் பேரண்டமும் நிலம், நீர், தீ, வளி, வான் என்ற ஐந்து பூதங்களின் சேர்க்கையால் அமைந்தவை. நிலம் என்பது குறிஞ்சி முதலிய ஐந்து வகைப்பட்டது. பொழுது என்பது கார் முதலிய ஆறு பருவங்களையும், வைகறை முதலிய ஆறு சிறு பொழுதுகளையும் குறிக்கும். அறுபதாண்டுகளின் சுழற்சி பற்றித் தொல்காப்பியர் கூறவில்லை. ஒவ்வொரு நிலத்திலும் தோன்றக் கூடிய கருப்பொருட்கள் இவை என வகைப்படுத்துகிறார்.

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வங்கள் பற்றிக் கூறுகிறார். விலங்குகள், பறவைகள், மரங்களையும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நிலத்திலும் வாழும் மக்கள் பற்றியும், அவர்களின் தொழில் பற்றியும், அவர்கள் பயன்படுத்தும் யாழ், பறை பற்றியும் குறிப்பிடுகிறார். இவை அன்றியும் மரபியலில் தொல்காப்பியர் கூறும், நூல் படைப்பதற்கான உத்திகள் என்பனவற்றைச் சிந்தனை முறை என்றும் அளவையியல் [தர்க்கம்] என்றும் நாம் பொருள்படுத்தலாம். அரசர் என்றும், அந்தணர் என்றும், வணிகர் என்றும், வேளாளர் என்றும் இவர்களின் தொழில்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். குறிஞ்சி

முதலிய நிலங்கள் தொடங்கி மருதநிலம் வரையிலான போர்கள் குறித்துச் சொல்கிறார். திணைமயக்கம் என்று சொல்லும் பொழுது நிலமும் பொழுதும் கருப்பொருள்களும் மயங்கி வருவது பற்றியும் குறிப்பிடுகிறார்.

இவை எல்லாம் பொருட்கள் அன்றி வேறில்லை. ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி ஒரு இலக்கண நூல் கூறுவதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இவற்றோடு ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிர்கள் பற்றியும் சொல்வதைச் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்பொழுது நிலம் முதல் வானம் வரை நம்மை உருவாக்குகிற நம்மோடும் நமக்குள்ளும் இணைந்திருக்கிற மாபெரும் இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்கள், சிந்தனை முறைகள் முதலிய பலவற்றையும் தொல்காப்பியர் அங்கங்கே பகுதி பகுதியாகச் சொல்லி வைக்கிறார்.

நாம் இவற்றை வரிசைப்படுத்த முடியும், வகைப்படுத்தவும் முடியும். இவற்றோடு இன்னும் ஒரு பொருள் – இலக்கியம் என்ற பொருள், இலக்கியம் என்ற பொருள் குறித்துத் தொல்காப்பியர் நிறையவே கூறியிருக்கிறார். இன்பம் தான் உயிர்களின் விழைவு என்றும் கூறுகிறார். மனிதர்களின் காதல், வீரம், அறம், தவம், துறவு, கொடை, வெற்றி, தோல்வி, பெருமிதம், அச்சம், வியப்பு என்று ஏராளமான உணர்வுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்தும் பேசுகிறார். இவை எல்லாம் இலக்கியங்களில் இடம் பெறும் வாழ்வியல் பொருட்கள். இலக்கியத்திற்கு மட்டுமே தொல் காப்பியர் கூடுதலாக இடம் கொடுத்திருப்பது சற்று வினோதமானதாகவும் வியப்பாகவும் இருக்கிறது. அதிலும் மருதத்திணையும் மன்னர்களின் ஆளுகையும், திணை மயக்கமும் முதன்மைக்கு வந்துவிட்ட காலச்சூழலில் மீண்டும் வெட்சி என்றும் கரந்தை என்றும் பேசவதில் பொருளில்லை. மனித வாழ்க்கையில் போர்கள் என்பவை என்னதான் முக்கிய இடம் பெற்றாலும் இவையே முதன்மையாக முடியாது. வாழ்க்கையின் மையமென அறம், உழைப்பு, பகிர்வு [கொடை] முதலியவற்றைத் தான் சொல்லமுடியும். போர்ச்சூழல் என்பது மனித வாழ்க்கைக்குள் கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

மனித வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு ஆற்றல்களுள் போர் என்பதை ஒன்று என மட்டுமே காண முடியும்.

9. ஒருவகை இலக்கியம் இன்னொருவகை இலக்கியமாக எப்படி மாறுகிறது என்பது பற்றி இந்திரா பார்த்தசாரதி ஒரு கட்டுரையில் தந்த சில கருத்துக்களை முன்வைத்து நாமும் தமிழ் இலக்கிய வரலாற்றில் மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்பன குறித்து இங்குச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

இந்திராபார்த்தசாரதி கூறுகிறபடி எந்த ஒரு இலக்கியத்திலும் மேலோங்கிய ஆளுமைக்கூறுகள் என்பனவற்றோடு அதன் எதிரான எதிர்மறைக் கூறுகளும் இருக்கக்கூடும். ஒரு வகையில் இதுஅந்த இலக்கியம் தோன்றிய வரலாறு மற்றும் சமூகச் சூழலில் உள்ள முரண்பாடுகளைத் தனக்குள் எந்தஒரு இலக்கியமும் கொண்டதாக இருக்க முடியும் என்ற முறையிலும் இந்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

சங்க இலக்கியத்தைப் பொருத்தவரை தலைவனிடத்தில் உள்ள பரத்தமை முதலிய கூறுகள் மேலோங்கிய நிலையில் இல்லை. இவை அநேகமாக உள்ளடங்கி இருந்தன. அகத்திணை இலக்கியத்தில் இடம்பெறும் அறத்தொடு நிற்றல் முதலிய போக்குகள் மேலோங்கிய கூறுகளாக இருந்தன.

புறத்திணையினுள்ளும் வேந்தர்கள் பெரிதாகச் சிறப்பிக்கப்பட்டனர். அவர்களினுள்ளும் சிலர் அரசதிகாரத்தை வலுப்படுத்தும் முறையில் சில கொடுமைகள் செய்தனர். நன்னன் பெண்கொலை புரிந்ததையும், புலவர் ஒருவரை ஒற்றர் எனக்கருதி யானையின் காலில் அவரை இடறச்செய்த முயற்சியையும் புறநானூற்றிலிருந்து அறிகிறோம். அரசதிகாரத்தை யார் செலுத்துவது என்ற முறையிலும் மன்னர்களுக்கு இடையில் மட்டுமல்லாமல், ஒரு குடும்பத்தினுள்ளும் பகைமை பெருகியதையும் காண்கிறோம். படையெடுப்பின்போது ஊர்கள் அழிவுக்குள்ளாயின என்பதையும் பார்க்கிறோம். சங்க இலக்கியத்தில் அரசின் இத்தகைய செயல்பாடுகள் முதன்மை பெறவில்லை. எனினும் மக்கள் மற்றும் புலவர்களின் மனத்தில் கலவரங்கள் இருந்திருக்கக்கூடும்.

ஓரளவுக்கு முன்னைய சமூகத்தில் அடங்கியிருந்த கூறுகள், அடுத்த சமூகத்தில் முதன்மை பெறுகின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களை இவ்வகை நோக்கில் பார்க்க முடியும். குடும்பத்திற்குள் மட்டுமல்லாமல் அரசியல் மற்றும் சமூகத்திலும் அறத்தின் செயல்பாட்டை வள்ளுவர் வற்புறுத்துகிறார். தலைவனின் பரத்தமையைக் கண்டிக்கிறார். பெண்வழிச்சேறல் கூடாது என்கிறார். மன்னன் கொடுங்கோலன் ஆவான் என்றால் மக்கள் விடும கண்ணீர் அவனது அரச செல்வத்தை அழிக்கும் என்கிறார். சிலம்பிலும் மணிமேகலையிலும் இந்தப் போக்கின் எழுச்சியைப் பெருமளவில் காண்கிறோம். முன்னைய சமூகத்தில் குடும்பத்தினுள் தனக்கு மட்டுமல்லாமல் தன் கணவனுக்கும் கற்பை வலியுறுத்திய பெண், ஒன்று குடும்பத்தைவிட்டு வெளியில் வந்து அரசின் ஆதிக்கத்தைக் கேள்விக்கு உட்படுத்துகிறாள். தெய்வங்களையும் கேள்விக்குட்படுத்துகிறாள். ‘பெண்ணின் பெருந்தக்க யாவுள’ என்ற வள்ளுவர் வாக்குக்கு இணக்கமான முறையில் கண்ணகி செயல்படுகிறாள். பரத்தமையை உள்வாங்கிக் கொண்ட சமூகத்திற்கு எதிராகக் குடும்பத்தைவிட்டு வெளியேறும் பெண் தவம் மேற்கொள்கிறாள். கலைகளைத் துறக்கிறாள். சமூகத்தில் நிலவும் வறுமையைத் தீர்க்கப் போராடுகிறாள். அரசாட்சி முறையின் அநீதிகளைக் கண்டு வெறுப்படைகிறாள். போலித்துறவிகளைச் சாத்தனார் கண்டிக்கிறார்.

மன்னராட்சி ஆதிக்க உணர்வோடும், அதிகாரத்தோடும்தான் நடைபெறுகிறது. இதை உடனடியாக மாற்றுவதற்கு வழியில்லை. மன்னர்களின் ஆடம்பர வாழ்க்கை மேலும் மேலும் பெருகுகிறது. ஒரு அரசன் என்பவன் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறான். போர் வெற்றியின்போதும், வேறுவகையான சாகசங்கள் மூலமும் அழகிய பெண்களைக் கவர்ந்து கொள்கின்றான். ஒரு சமயம் இழந்த அரசுரிமையை மீண்டும் அவன்தான் பெறவேண்டும் என்ற முறையில் அமைச்சர்களும், பெரியவர்களும் அவனோடு ஒத்துழைக்கின்றனர். இழந்த அரசை அவன் மீட்டுக்கொள்கிறான்.

பெருங்கதையும், சிந்தாமணியும் இத்தகைய கதைகளைப் பேரளவில் சொல்லுகின்றன. புலனின்பம் என்பதில் மூழ்குவதில் பெரும் தவறில்லை. அரசன் தன் அதிகாரத்தோடும், ஆரவாரங் களோடும் இருப்பதில் தவறில்லை. புலனின்பம் முதலியவற்றைப் பெருமளவில் மறுக்கின்ற சமணர்கள் மன்னராட்சியோடு ஒத்துழைப்பதென்பது ஓர் அவலம். இதற்குக் கழுவாய் போல எல்லாவற்றையும் செய்து முடித்தபொழுது உதயணனைப் போலவே சீவகன் துறவு மேற்கொள்கிறான். எனினும் வாரிசுரிமை தொடர்கிறது.

இந்தக் காப்பியங்கள் இயற்றப் பெற்ற சமூகச்சூழல் குறித்து மேலும் சில விவரங்களை இங்குக் குறிப்பிடலாம். மணிமேகலையைப் போலவே குண்டலகேசி முதலியவர்களும் துறவு மேற்கொள்கின்றனர். தவம் செய்கின்றனர். சமயங்கள் குறித்த ஆய்வில் ஈடுபடுகின்றனர். இதேபோல ஒருநிலையைக் காரைக்கால் அம்மையார், திலகவதியார், ஆண்டாளிடத்திலும் காண்கிறோம். ஆண் ஆதிக்கம் இவர்களுக்கு உரிய மரியாதையைச் செய்யவில்லை. பெண்கள் மட்டுமல்லாமல் சமூகத்தின் அடித்தள மக்களின் வாழ்க்கையும் அவலங்களில் தான் ஆழ்ந்திருக்க வேண்டும். தெய்வங்கள் இப்போது முன்னிலைக்கு வருகின்றன. சைவம் எழுச்சி பெறுகிறது. மக்களின் பேரவலங்களை இனி மன்னர்கள் தீர்க்க மாட்டார்கள். பெருஞ்செல்வர்கள் தீர்க்க மாட்டார்கள். இனி மக்கள் சமயத்தை, தெய்வங்களை நோக்கிச் செல்லல வேண்டும். அடுத்துவரும் மன்னர்களும் சமயங்களோடு ஒத்துழைப்பதன் மூலமும் மக்கள் மீது தம் அதிகாரத்தை நிறுவிக் கொள்வார்கள்.

கம்பர்காவியம், பெரியபுராணம் முதலியவற்றிலும் இத்தகைய போக்கைக் காண்கிறோம். கொடுங்கோலர்கள் நாடு முழுவதும் தம் அதிகாரத்தை விரித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒடுக்கத் தெய்வம் மனிதனாகப் பிறந்து வரவேண்டும். அவனும் அரசு என்ற அதிகாரத்தில் இருக்கும் வரை மன்னர் என்ற கொடுங்கோலர்களை அழிக்கமாட்டான். அவனும் அரசைத் துறந்து அல்லது இழந்து மக்களோடு மக்களாய் வாழ வேண்டும். மக்கள் ஆதரவைப் பெற வேண்டும். அதன்பிறகுதான்

கொடுங்கோலனை வென்று ஒடுக்க வேண்டும். ஒருவேளை மீண்டும் இவனுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்கும் பொழுது, அதன்பிறகு மக்கள் மீது ஆதிக்கம் செய்வதை இவனும்தான் செய்வான்.

இப்படி ஒரு காலச்சூழலில்தான் சைவமும், வைணவமும் முன்னுக்கு வருகின்றன. தொடக்கக் காலத்தில் மக்களுக்கு மிக நெருக்கமாய் இருந்தவை இந்தச் சமயங்கள். எப்பொழுதும் ஒரே படித்ததாக இருப்பதில்லை. ஆட்சி அதிகாரத்தோடு உறவு கொண்ட நிலையில் சமயங்கள் நிறுவனமாகின்றன. நிறுவனமாகும்பொழுது சமயத்தின் பற்பல கூறுகளை விளக்கும் முறையில் ஏராளமான விரிவுரைகள் செய்யப்படுகின்றன. சிக்கல்கள் மற்றும் நுட்பங்களோடு கூடிய சித்தாந்தங்கள் எழுகின்றன.

தொடர்ந்து விரிவுரைகள் எழுதப்படுகின்றன. திருமூலரை முன்வைத்து இங்கு ஒன்றைச் சொல்ல முடியும். திருமந்திரம் என்ற புள்ளியிலிருந்து எதிரெதிரான இரண்டு போக்குகள் எழுகின்றன. ஒரு போக்கு தவம், மந்திரம், யோகம், சித்தாந்தம் முதலியவற்றுக்கு அழுத்தம் தருகிற போக்கு. இன்னொன்று அன்பே சிவம் என்று தொடங்கி மக்கள் நலத்திற்கு அழுத்தம் தருகிற போக்கு. முதல் போக்கின் தொடர்ச்சியாகச் சைவ சித்தாந்தம், சைவமட நிறுவனங்கள் தோன்றி வளர்கின்றன. மக்கட்சார்பான இரண்டாவது போக்கு சாதி, மதம், கோயில், சடங்கு முதலியவற்றை மறுக்கக்கூடிய சித்தர்களின் போக்காகத் தொடர்கிறது. இந்தப்போக்கு தாயுமானவர், பட்டினத்தார் வழியாக வள்ளலார் வரை செல்லுகிறது. சைவத்தின் திருமடங்கள் ஏராளமான நிலங்களையும், அதிகாரங்களையும், மன்னர் ஆரவாரங்களையும் சேகரித்துக் கொள்கின்றன. தொடக்கத்தில் துறவு என்பது சைவ சமயத்தின் இன்றியமையாத கூறாக இல்லை. நாளடைவில் சமணர்களை ஒழித்த பிறகு சமணர்களிடமிருந்து துறவு என்ற அமைப்பை இவர்கள் பிடித்துக் கொண்டனர். துறவி பெரும் மரியாதைக்குரியவன்.

சிவனும் சைவத்துறவியும் வேறுவேறானவர் இல்லை.

சைவத்துறவி எதைக்கேட்டாலும் மன்னனும், மக்களும் கொடுத்துவிட வேண்டும். மனைவியைக் கேட்டாலும் கொடுக்க வேண்டும். இப்படி ஒரு போலித்தனம் சைவ சமயத்தினுள் ஆளுகை பெற்றது. இந்த அவலம் இன்றுவரை தொடர்கிறது. மன்னர்கள் பிராமணர்களுக்கு ஏராளமான நிலங்களை உரிமைப்படுத்தியதை நம்மவர் கண்டிக்கின்றனர். ஆனால் ஆயிரம், பத்தாயிரம் ஏக்கர்கள் என வயல்நிலங்களை உடைமையாகவும், ஆதிக்கமாகவும் கொண்டிருக்கின்ற சைவ மடங்களை நம்மவர் கண்டிப்பதில்லை.

மன்னர் பரம்பரைகள் தமிழகத்தில் மாறிமாறி வருகின்றன. எவனெவனோ தமிழகத்தின் மீது படையெடுக்கிறான். மக்களைக் கொள்ளையடிக்கிறான். அப்புறம் இந்தக் கொள்ளைக்காரர்கள் கோவில் கட்டி, பிராமணர்களைச் சேர்த்துக்கொண்டு தம்மைத்தாமே புனிதப்படுத்திக் கொண்டு மன்னர்களாகின்றனர். இவர்களை எதிர்க்கும் திறன் மக்களிடமில்லை. யாராவது எதிர்த்தால் வேரோடும், மண்ணோடும்அவர்களை அழிக்கின்றனர். இப்படி ஒரு சூழல் தமிழ்நாட்டில் 13/14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு 500 ஆண்டுகள் நிலவுகின்றது.

இக்காலச் சூழலில் பேரிலக்கியங்கள் இல்லை. காப்பியங்கள் இல்லை. புராணங்கள் படைக்கப்படுகின்றன. மக்கள் வாழ்விலிருந்து இவை நெடுந்தொலைவு விலகிச் செல்லுகின்றன. தவம்கூட இனிப் பயன்படாது. தொலைவி லிருக்கும் தெய்வங்கள் கருணை செய்ய வேண்டும். தெய்வங்கள் வெகு தொலைவில் விண்ணுலகத்தில் இருக்கின்றன. அவற்றை எட்டிப்பிடிப்பது இயலாது. தமக்குக் கிடைத்த வாழ்க்கையை எப்படியேனும் வாழத்தான் வேண்டும். விதி வலிமையுடையது. எல்லாமே முற்பிறப்பிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு வரும் துயரங்கள், குறைகள் முதலியவை கூட நம்மை மேம்படுத்துவதற்கான தண்டனைகள் அல்லது சோதனைகள்.

தெய்வங்கள் சிலசமயம் அவதாரம் எடுத்து நம்மைக் காப்பாற்ற வரக்கூடும். நாம் காத்திருக்க வேண்டும். அதிகாரிகள் எது செய்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி ஒரு சூழல்

நிலவுகிற சமூகத்தில்தான் சிற்றிலக்கியங்கள் பெருமளவு தோன்றுகின்றன. ஒரு இலக்கிய மாணவனுக்கு இந்தப்போக்கு வியப்பளிக்கிறது. கொடுமையே அறமாக நிலவுகிற சமூகச் சூழலில் தமிழ்ப்புலர்கள்/கவிஞர்கள் நூற்றுக்கணக்கில்/ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள்.

இலக்கியம் என்பது தன்னளவில் சுயமான, ஒரு சுதந்திரமான ஆற்றல் என்பதை இங்குப் பார்க்கிறோம். சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைக் குறைந்தளவுக்கு மட்டுமே தனக்குள் உள்வாங்கிக் கொண்டு இலக்கிய உணர்வில் மட்டுமே ஆழமாகவும், விரிவாகவும் சென்று புலவர்கள் வகைவகையான இலக்கியங்களைப் படைக்கின்றனர். இலக்கியம் என்பது ஒரு விளையாட்டு. அன்றியும் ஒரு பொழுதுபோக்கு. விளை யாட்டிலும் ஏராளமான திறன்களுக்கும் நுட்பங்களுக்கும் வாய்ப்புண்டு. பக்தியை வைத்தும் வகைவகையாக இனி இலக்கியங்கள் பாடலாம். மன்னர்களையும் மகிமைப்படுத்தலாம். காமத்தைப் பாடுவதிலும் தவறில்லை. அங்கங்கே குட்டிச் சமீன்தாரர்கள், குறுநில மன்னர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு அரசவையை வைத்திருக்கிறார்கள். இந்த அவையில் புலவர்கள் பாடிப் பரிசு பெறலாம். தெனாலிராமன் முதலியவர்களுக்கும் இந்த அவையில் இடமுண்டு. சேவல் சண்டைகளையும் கூட அரசன் பார்த்துப் பரிசு வழங்குவான்.

எனினும் இக்காலச் சிற்றிலக்கியங்கள் தமிழ்ச் செய்யுட்களின் அற்புதமான திறன்களை வெளிப்படுத்துகின்றன. அழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் இப்படி ஒரு இலக்கிய ஆக்கத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்ள முடியும் எனினும் இதுதான் உண்மை.

இந்த வினோதமான சூழலை எப்படிப் புரிந்து கொள்வது என்பது பற்றி இங்குச் சிந்திக்கலாம். நம் காலச் சூழலிலும் வரலாற்றுணர்வு, சமூக உணர்வு சிறிதளவும் இல்லாமல் எழுத்தாளர்கள் பலர் ஏராளமாகப் படைக்கின்றனர். உத்திகளுக்கு முதன்மை தருகின்றனர். சமூகவாழ்வின் சிற்சில அனுபவங்கள் இவர்களுக்கு இருப்பதே போதுமானதாகத் தென்படுகிறது. இந்த

அனுபங்கள் குறித்தும் விரிவான/ஆழமான பார்வை இவர்களுக்கு இல்லை.

எத்தகைய சமூக/வரலாற்றுச் சூழலில் நம் அனுபவங்களை இவர்கள் பெறுகிறார்கள் என்பது பற்றி ஆய்வு இல்லை. பத்திரிகை தேவை என்பது இவர்களைத் தூண்டுகிறது.

19/20 ஆம் நூற்றாண்டின் சூழலில்தான் மனிதனை மையப்படுத்தி வரலாறு, சமூகம், மெய்யியல் முதலிய ஆழமான புரிதலை நாம் பெற்றோம் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். மேற்குறிப்பிட்ட நம் காலத்து எழுத்தாளர்களுக்கு இத்தகைய விரிவான புரிதல் இல்லை. இவர்களுக்குத் தரப்பட்ட கல்வி இத்தகைய புரிதலை இவர்களுக்குத் தரவில்லை. நம் சமூகத்தில் ஆதிக்கம் செய்கிற சுரண்டல் தனமான முதலாளியம் இவர்களுக்குள் நுழைந்து இவர்களைக் கூறுபோடுகிறது. இரண்டொன்றைப் பற்றிய அறிவே இவர்களுக்குப் போதுமானது.

இவர்கள் மார்க்சியம் கற்றுக்கொள்கிறார்கள். என்றாலும் கூடக் கற்றுக்கொள்வது அரைகுறை மார்க்சியம். நெடுங்காலத் தமிழ் வரலாற்றோடு இவர்களுக்கு உறவில்லை. இவர்கள் வேர்களற்றவர்கள். இவர்கள் சிறந்த படைப்புகளைத் தருகிறார்கள் என்றபோதிலும் இவர்கள் நம் மரியாதைக்குரியவர்களாக இல்லை. தமிழ்ச் சமூகம் சந்திக்கிற கடுமையான நெருக்கடிகள் குறித்து இவர்களுக்குக் கவலை இல்லை. தம் படைப்புகளிலேயே இவர்கள் பரவசப்பட்டுக் கொள்கிறார்கள்.

உலக அளவிலான அறிவுத்துறைகளோடு தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள் இன்று இருக்கின்றன. ஆனால் முன்னைய நூற்றாண்டுகளில் இத்தகைய வாய்ப்புகள் என்று எதுவும் இல்லை. நாம் பார்த்துவரும் காலச்சூழலில் வாழ்ந்த புலவர்களுக்கு வரலாறென்றால், சமூகம் என்றால் என்னவென்ற குறைந்த புரிதல் கூட இருக்க வாய்ப்பில்லை., நீண்டகாலத் தமிழ் வரலாறு என்பது கூட இவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. கிடைத்திருக்கிற வாழ்க்கையை நுகர்வதே இவர்களுக்குப் போதுமானது. இராமன் ஆண்டால் என்ன?

இராவணன் ஆண்டால் என்ன? எல்லாமே விதிவசம். எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்பதற்குமேல் இவர்களிடம் நாம் எதிர்பார்ப்பதற்கு எதுவும் இல்லை. எனினும் இவர்கள் பெரும் புலவர்கள். தமிழ் இலக்கியத்தை அற்புதம் என்று சொல்லும் அளவுக்கு இவர்கள் இலக்கியப் படைப்புகள் அமைந்திருக் கின்றன.

10. தமிழின் கவிதை வரலாறு என்பதை நமக்கு இயன்ற அளவில், உலக அளவில் உள்ள வேறுபல மொழிகளில் உள்ள கவிதை/இலக்கிய வரலாற்றோடு வைத்துக் கற்க வேண்டும் என்று இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். என்னைப் பொறுத்தவரை ஆங்கிலத்தின் மூலம், ஆங்கில இலக்கியத்தின் சில முக்கியமான கவிஞர்கள்/படைப்பாளிகள் பற்றி மிகுந்த அக்கறையோடு 1988 வரை படித்தேன். கிரேக்க மொழியில் உள்ள நாடக இலக்கியங்களை ஆங்கிலத்தின் மூலம் வெறியுடன் ஒருகாலத்தில் கற்றேன். வடமொழியில் உள்ள சில இலக்கியங்களை மொழிபெயர்ப்பின் மூலம் கற்றேன்.

இரஷ்ய இலக்கியம் குறித்து ஓரளவுக்கு அறிவேன். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் கற்பதற்கு என் கல்வியறிவு போதுமானதில்லை என்பது உண்மை என்றபோதிலும், இவ்வகைக் கல்வி எனக்குப் பெரிதும் பயன்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிறமொழி இலக்கியங்களை ஆழ்ந்து பயின்ற தமிழ் இலக்கிய மாணவர்களின் சிந்தனையை இந்தத் திசையில் தூண்டுவது என் நோக்கம். இதற்காக என் அனுபவம் குறித்து இங்குச் சிலவற்றைச் சொல்ல முடியும்.

சேக்ஸ்பியரைப்போல ஒரு இலக்கிய/நாடக ஆசிரியர் நமக்கு இல்லை. மில்டனை ஓரளவுக்குக் கம்பனோடு ஒப்பிட்டு நாம் கற்க முடியும். நவீன இலக்கியம் என்ற முறையில் வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் முதலியவர்கள் பாரதி முதலியவர்களை வெகுவாகவே பாதித்துள்ளனர். மார்லோ முதலியவர்கள் பாஸ்டஸ் [Fastus] கதையை மிக விரிவாகவும், ஆழமாகவும் சமகாலச் சூழலை உள்வாங்கிக் கொண்ட

முறையிலும் விரிவாகப் படைத்துள்ளனர். இத்தகைய படைப்பு நமக்கு இல்லை.

இந்தப் பட்டியலை இன்னும் எவ்வளவோ விரிவுபடுத்த இயலும் என்றபோதிலும், சிலவற்றை இங்குக் குறிப்பிட இயலும். சேக்ஸ்பியர் உலகளவில் மிகச்சிறந்த அவல நாடகங்களைப் படைத்துள்ளார். அவலம் குறித்து அரிஸ்டாடில் முதற்கொண்டு நீட்சே வரை எத்தனையோ விளக்கங்களைத் தந்துள்ளனர். அவல நாடகம் குறித்த இந்த விளக்கங்களோடு வைத்துச் சிலப்பதிகாரத்தை நாம் ஆழமாகக் கற்க இயலும். மேற்கத்திய அவல நாடகங்கள் அவலத்திலேயே முடிவடைகின்றன. சிலப்பதிகாரம் இப்படி முடிவடையவில்லை. காப்பியத்தின் இறுதியில் கண்ணகி தான் அனுபவித்த அவலங்களிலிருந்து விலகி நிற்கிறாள். எல்லாவற்றையும், அவளேகூட ஒரு நாடகம் போலப் பார்த்திருக்கிறாள். பாண்டியன் இப்பொழுது குற்றவாளி இல்லை என்கிறாள். அவனுக்குத் தான் மகளாகிவிட்டேன் என்கிறாள். ஒரு குறிப்பிட்ட சூழலுக்குப் பாண்டியன் வயப்பட்டு சிலவற்றைச் செய்துவிட்டான். இத்தகைய சூழலில் அகப்பட்ட எவரும் இப்படிச்சில தவறுகளைத் தாம் அறியாமலேயே செய்துவிடக் கூடும். பாண்டியன் செய்தது தவறில்லை என்றால் கோவலனை, மாதவியைக் குற்றவாளி ஆக்க முடியுமா? இப்படி முடிவு பெறுகிறது சிலப்பதிகாரம்.

கிரேக்கம் முதலிய நாடகங்களில் நாம் காண இயலாத இன்னொன்றையும் சிலம்பில் காண முடியும். கடுமையான சிக்கல்களுக்கு இடையில் அகப்பட்ட மனிதனுக்குள்ளிருந்து தெய்வம் எழுகிறது. தனக்குள்ளிருந்து தெய்வத்தை எழுப்பிக் கொள்வதன் மூலம் வாழ்வியல் சிக்கல்களை மனிதன் கடந்து செல்கிறான். மனிதனும் தெய்வமாகிறான். தெய்வம் பற்றி நம்மவர்களின் புரிதல் இத்தகையது.

கம்பர் காவியத்தையும் கூட இராவணன் வாழ்வுக்கு அழுத்தம் கொடுத்துப் பார்க்கும்பொழுது, ஓர் அவல நாகடத்தை கம்பர் காவியத்திலிருந்து நாம் வாசிக்க முடியும். மில்டனின் "சுவர்க்க நீக்கம்" இப்படித்தான் சாத்தானை முதன்மைப்

படுத்துகிறது. எல்லாவகையிலும் சிறந்தவனாகிய இராவணன் சீதையினிடத்தில் காமம் கொண்டான். அந்தக் காமம் என்ற மரு வளர்ந்து, பெருகி இராவணனை முழுமையாகத் தன் வசப்படுத்தல் நிலையில் இராவணன் வீழ்ச்சியடைகிறான். இராவணனை யாராலும் காப்பாற்ற முடியவில்லை. காமம் என்பது இப்படி எந்த மனிதனையும் ஆட்படுத்த இயலும். காம வயப்படாத மனிதன் என்று எவரும் இல்லை. ஆனால் காமம் என்ற உணர்வுக்கு ஒரு மனிதன் எந்த அளவுக்கு இடம் தர வேண்டும் என்பது குறித்த கவனத்தை இழந்துவிடக் கூடாது. இதன் காரணமாகவே இராவணன் வீழ்ச்சியடைகிறான்.

இராமனின் அம்பு ஊடுருவிச் சென்றபோது இராவணன் இடத்தில் இருந்த மாசு அழிந்தது. இந்நிலையில் அவன் முகம் பெற்ற பொலிவை கம்பர் வருணிக்கிறார். மேற்கத்தியக் காவியங்களில் இல்லாத ஒரு கூறு இப்படி இந்தியக் காவியங்களில் இடம்பெறுவதைக் குறித்து அறிஞர் பலர் சுட்டிக் காட்டுகின்றனர். காமம் என்பதை முதற்பெரும்பாவம் என்று மேற்கத்தியக் கிறித்துவம் கூறுகிறது. காமம் குறித்த இத்தகைய பார்வை இந்தியாவில் இல்லை. காமம் வாழ்வின் ஒரு முக்கிய கூறு என்பதே இங்குள்ள ஒரு அழுத்தமான கருத்து. மனிதன் தன் இயல்பில் தீயவன் என்பது மேற்கத்தியரின் கருத்து. மனிதன் தான் இயல்பில் நல்லவன் என்பது இந்தியக் கருத்து.

ஹோமரின் “இலியட்” என்ற காவியம் ஓர் அரசனின் மனைவியை இன்னொரு மன்னன் கடத்திச் செல்கிற கதையில் தொடங்குகிறது. இவ்வகைக் கதை உலகில் எந்த நாட்டிலும் நடக்கக்கூடிய கதை. இராமாயணத்திலும் இவ்வகைக் கதை இடம்பெறுகிறது. இந்தக் கதையின் முன்னைய வரலாற்றைத் தேடிச் சென்றால் தொன்மையான சமூகங்களில் ஓர் இனம் இன்னொரு இனத்திலிருந்து பெண்ணைக் கடத்திச் செல்வது என்பது இயல்பான நிகழ்வு.

பொதுவாகக் கன்னிப்பெண்களை மட்டுமல்லாமல், அடுத்தவரின் மனைவியையும் கவர்வது, உறவு கொள்வது, வலிந்து கடத்திச் செல்வது, அவளின் இசைவோடு கவர்ந்து

செல்வது என்றெல்லாம் நிகழ்வது இன்றுவரை நடைபெறுகின்றன. நம் காலக் கதைகளிலும் இவ்வகைச் சிக்கல் சில சமயங்களில் முதன்மை பெறுகிறது. கதை என்று மட்டுமே பார்த்து இங்கு ஆய்வை நிறுத்திக்கொள்ள இயலாது. இலக்கிய ஆய்வென்று தொடங்கினால் வாழ்வியலுக்குள்ளும் நெடுந் தொலைவு உண்மையைத் தேடிச் செல்லத்தான் வேண்டும். பிராய்டு முதலியவர்கள் இங்கு நம்மோடு ஓரளவுக்கேனும் உடன்வர இயலும். காமத்திலிருந்து விடுதலை என்ற முறையில் மதவாதிகளும் மற்றவர்களும் செய்துள்ள ஏராளமான முயற்சிகளின் ஆக்கம்/அழிவு குறித்தும் இங்கு நாம் ஆராய முடியும்.

கற்பென்பதற்குக் கண்ணகி முதலியவர்களை முன்வைத்து நாம் அழுத்தம் தந்து பேசுகிறோம். இது நமக்கே உரிய பண்பாடு என்றும் கூடச் சில சமயம் தற்பெருமையோடு பேசுகிறோம். மேற்கத்திய சமூகத்திலும் கற்பு பாராட்டப்படத்தான் செய்கிறது. சேக்ஸ்பியரின் "டெஸ்டிமோனோ" இதற்கு நல்ல சான்று. சேக்ஸ்பியர் என்ற இலக்கிய மேதையை முன்னிறுத்தித் தமிழ் இலக்கியத்தைக் கொஞ்சம் நாம் பார்க்க வேண்டும். சேக்ஸ்பியரில் நாம் காணும் வகைவகையான மனிதர்கள் தமிழ் இலக்கியத்தில் இல்லை. "ஹாம்லெட்" நமக்கு இல்லை. கிளியோபாட்ராவின் காதலில் வசப்பட்டுத் தம்மை அழைத்துக்கொண்ட மாவீரர்களின் கதை நமக்குப் புதிதில்லை.

கிரேக்க நாடகங்களில் விதி என்பது ஆற்றல் மிக்க ஒரு பாத்திரமாக மனித வாழ்வுக்குள் வந்து செயல்படுவதைக் காண்கிறோம். கிரேக்கத்தோடு ஒப்பிடும்பொழுது, நமக்கு ஏன் நாடகங்கள் இல்லை என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நமக்குக் கூத்துக்கள் இருந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வகைவகையான கூத்துக்கள் பற்றி அறிகிறோம். இவை தமிழ்க் கூத்துக்கள். கலித்தொகைப் பாடல்களும் கூத்து வடிவில் இயங்குவதைக் காண்கிறோம். இந்தக் கூத்துக்களை மீண்டும் ஒரு முறை நமக்குள் நிகழ்த்திப் பார்ப்பதன் மூலமும் நமக்கான இலக்கிய உணர்வை மேம்படுத்திக் கொள்ள இயலும். உலகளவிலான பேரிலக்கியங்கள் முதலியவற்றோடு தமிழ்

இலக்கியத்தை ஒப்பிட்டுக் கற்பதன் தேவையை இங்கு மேலும் அழுத்திக்கூற விரும்புகிறேன். இரண்டு வகை இலக்கியங்களை ஒப்பிட்டுக் கற்பது என்று தொடங்கி அப்புறம் இந்த ஒப்பீட்டி லிருந்தும் விலகி இலக்கியம் என்பதை நாம் கற்கத் தொடங்குகிறோம்.

உலக அளவில் எங்கிருந்தாலும், எங்கிருந்தும் வாழ்கிற மனிதர்களின் வாழ்வில், கதையில் நம் மனத்தைப் பறிகொடுக்கிறோம். தமிழ் இலக்கியம் என்று தொடங்கி அப்புறம் உலக அளவிலான இலக்கியத்திற்குள்ளும் நாம் பயணம் செய்கிறோம். இலக்கிய மாணவன் என்பவன் இப்படித்தான் தன் பயணத்தை, இயக்கத்தைக் கொண்டு செல்ல முடியும். தமிழ் மட்டுமே நமக்குப் போதும் என்ற அளவில் ஓர் இலக்கிய மாணவன் இருந்துவிட இயலாது. ஆங்கிலத்தின் மூலமே கூட இன்று உலக அளவில் பலமொழி இலக்கியங்களை அவற்றில் ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலம் கற்க முடியும். இந்த வாய்ப்பை நாம் இன்று பெருமளவில் பெற்றுள்ளோம். நம் இனத்தின் கதை எந்த அளவுக்கு முக்கியம் என்பது குறித்து நாம் இங்கு விளக்க வேண்டியதில்லை. இன உணர்வு அற்றுப்போக வேண்டும் என்பதும் நம் கருத்து இல்லை. இலக்கியம் என்ற மாபெரும் இயக்கம் குறித்து நமக்கு அக்கறை தேவை.

கைலாசபதி வீரகாவியங்கள் பற்றி நமக்குச் சொன்னார். பேராசிரியர் வையாபுரி அவர்களைப் பொருத்தவரை உலக அளவிலான காவியங்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதினார். இன்றுவரை இத்தகைய முயற்சிகள் தொடர்கின்றன. வடமொழியில் இருந்த இராமாயணம், மகாபாரதம் முதலிய பேரிலக்கியங்கள் தமிழில் திரும்பத்திரும்பத் தமிழ் வாழ்வுக் கேற்ற முறையில் எழுதப்பட்டன. சமஸ்கிருத மொழியில் காளிதாசர் போன்றவர்களின் இலக்கியங்கள் குறித்தும் ஓரளவுக்கேனும் நாம் அறிவோம். சமசுகிருத மொழியில் இலக்கியம் குறித்த ஆய்வுகள் மிகுந்த நுட்பத்தோடு நீண்டகாலம் நடைபெற்றன.

தமிழ் மாணவன் இவை குறித்தெல்லாம் கற்க வேண்டும். தமிழ் என்பது ஒரு கல்வி. இலக்கியம் என்பது இன்னொரு கல்வி.

மேலும் ஒன்றைச் சொல்லி இதை நிறைவு செய்யலாம். இலக்கியக் கல்வி என்பது வெறும் கல்வி என்ற மட்டில் நாம் கற்கக்கூடியதன்று. இலக்கியத்தைக் கற்கும் பொழுது நம்மை நாம் கற்றுக்கொள்கிறோம். இதுதான் முதன்மையான கல்வி. நாம் கற்கும் இலக்கியங்கள் நமக்குள் வந்து விடுகின்றன. நம்மின், நம் வாழ்வின் பகுதியாகிவிடுகின்றன. நம்மோடு ஊடாடுகின்றன. உறவு கொள்கின்றன. நம்மை விரிவு படுத்துகின்றன. ஆழப்படுத்துகின்றன. சேக்ஸ்பியரின் "ஹாம்லெட்" டைக் கற்கும் பொழுது நம்மைப் பற்றியும் சிந்திக்கிறோம். "பாஸ்டஸ்" [Fastus] பற்றிக் கற்கும் பொழுது நாமும் தான் எதையெதையோ தேடிச் சென்று அந்தத் தேடுதலின் போது நம்மை, நம் ஆத்மாவை இழந்து விடுவதை உணர்கிறோம். இப்படித்தான் நமக்குள்ளும் நம்மைப் புரட்டிக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழின் கவிதை/இலக்கிய வரலாறு என்பதைத் தொகுக்கும் போது/கற்கும் போது நம்மிடமிருந்து விலகிப் புறத்தில் வைத்துக் கற்க முடியாது. இலக்கிய வரலாறு என்று பாடநூல்கள் தயாரிப்பாளர்கள் இதைத்தான் செய்கின்றனர். இப்படிச் செய்வதன் மூலம் மாணவர்கள் இலக்கிய உணர்வோ வரலாறு பற்றிய உணர்வோ வேறு எப்பொழுதும் பெறமுடியாமல் செய்துவிடுகின்றனர். ஒரு சமூகத்திற்கு இந்த ஆசிரியர்கள் செய்யும் பெரும்கேடு என்று இதைச் சொல்ல முடியும். இலக்கியம் என்பது நமக்குள் நாளும் பொங்கித் தளும்புகிறது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கிறோம். நாளிதழ்களில் எத்தனையோ மனிதர்கள், நிகழ்ச்சிகள் பற்றிப் படிக்கிறோம். எல்லாவற்றையுமே இலக்கியம் என்று நாம் காணமுடியும். நிகழ்ச்சியிலிருந்து ஒரு கணம் விலகி இந்த நிகழ்ச்சிகள் குறித்து ஒரு கணம் சிந்திக்க இயலுமானால், அதனுள் இயங்கும் ஒரு இலக்கியத்தை நாம் தொட்டுவிட முடியும். ஒரு புள்ளியைத் தொட்டவுடன் அந்தப் புள்ளியின் வழியே நெடுந்தொலைவு போய்விட முடியும். நாம் படித்த எத்தனையோ இலக்கியங்களை இடையிடையே சந்திக்க முடியும். சீதையின் தற்கொலை இங்கு ஒவ்வொரு நாளும் நிகழ்கிறது. மெய்ப்பொருள் நாயனார் ஒவ்வொருநாளும் கொல்லப்படுகிறார்.

சாக்கியநாயனார் இன்னும் கடவுள்மீது கல்லெறிந்து கொண்டிருக்கிறார். லியர் அரசன் இன்னும் தன் மக்களை நோக்கிக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார். மீன்கள் கிடைக்கவில்லை என்றாலும் அந்தக் கிழவன் கடலில் நெடும்பயணம் மேற்கொள்ளாமலில்லை. சகுனிகள் இன்றும் தாயக்கட்டைகளோடு வலம் வருகிறார்கள். நளனை வீழ்த்துவதற்கு இன்னும் சனி அலைந்து கொண்டிருக்கிறான். கணவனைத் தொலைத்த தமயந்தி இன்னும் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறாள். திரௌபதியின் சபதம் இன்னும் நிறைவேறவில்லை. இப்படித்தான் வாழ்க்கை இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வாழ்க்கை என்னும் பெரும் பயணத்தை அங்கங்கே இலக்கியங்கள் குறிப்பெடுத்துத் தமக்குள் ஆழப்படுத்தி நமக்குத் தருகின்றன. மூலம் எதுவென்று நாம் தோண்டித்துருவிக் கற்க வேண்டும். இலக்கிய வரலாறென்பதை இப்படித்தான் கற்க முடியும்.

குறிப்பு

திருச்சி தூயவளனார் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் 2003ல் நிகழ்த்தப்பெற்ற அறக்கட்டளைச் சொற்பொழிவு.

16. வரலாற்றில் தமிழர்—இன்னொரு பக்கம்

தமிழ் மொழி மற்றும் இனம் பற்றிய நம் வரலாற்றில் தொடர்ந்து நாம் புறக்கணித்து வருகிற சில கூறுகளைப் பற்றி இப்பொழுதேனும் கூர்மையான கவனத்தை நாம் பொறுப்புடன் செலுத்த வேண்டும். தமிழ் மற்றும் தமிழரின் தொன்மை மேன்மை இலக்கிய / இலக்கண வளம் / பண்பாடு முதலியவை குறித்து நாம் பெருமிதம் கொள்ளும் அளவுக்கு இவற்றோடு தொடர்புடைய வரலாறு குறித்து நாம் அக்கறை கொள்ளவில்லை. தமிழனுக்கு வரலாற்றுப் பார்வை இல்லை. பெருமித உணர்வை வரலாற்றுப் பார்வை என்று கொண்டதன் மூலமும் நாம் தவறு இழைத்திருக்கிறோம்.

ஹரப்பா நாகரிகத்திற்கும் முற்பட்டுச் செல்வது தமிழ் நாகரிகம் என்பதில் ஐயமில்லை. சில அறிஞர்கள் கூறியபடி இந்திய நாகரிகம் என்பதன் மேலடுக்கு ஆரிய நாகரிகம் என்ற போதிலும், அந்த மேலடுக்கை நீக்கிப் பார்த்தால் இந்திய நாகரிகத்தின் அடிக்கட்டுமானம் என்பது திராவிடர்/தமிழர் நாகரிகம்தான் என்பதில் நாம் இன்னும் உறுதி கொள்ள முடியும்.

இந்தியாவுக்குள் ஆரியர்கள் நுழைந்தார்கள். தமிழர் நாகரிகத்தைச் சிதைத்தார்கள். ஆரியர் என்ற இனம்தான் நம் எல்லா அழிவுகளுக்கும் ஒரே காரணம் என்று பெரியார் நெறியில் திரும்பத்திரும்ப நாம் சொல்லி வருகிறோம்.

இப்படிச் சொல்வதன் மூலமும் நமக்கு நாமே தவறு இழைத்து வருகிறோம். அறிவுத்துறையில் ஆரியர்/பார்ப்பனர் மேம்பட்டவர்கள் என்பது போலவும், தமிழனுக்கு அறிவு இல்லை, ஆகவேதான் பார்ப்பனர் சூழ்ச்சிக்கு தமிழன் பலியானான் என்பது போலவும் உணர்ச்சிப் பெருக்கோடு நம்மவர் கூறுகின்றனர். இப்படி பெரியவர்கள்/அறிவாளிகள் சொல்வதை இளம் தலைமுறையினரும் ஏற்றுக் கொள்கின்றனர். பார்ப்பனரைக் காய்ந்து இகழ்வதன் மூலம் அவர்களை வென்றுவிடலாம் என்றும் இவர்கள் கருதுவது போலத் தெரிகிறது. இப்படி அறுபது

ஆண்டுகளுக்கு மேலாகக் காய்ந்ததன் விளைவாகவும் பார்ப்பனர்கள் நமக்குக் கடுமையான எதிரிகள் ஆகி உள்ளனர் என்பதையும் நாம் பார்கக்த்தவறுகிறோம். இன்னும் இவை போன்ற பலவற்றை இப்பொழுதேனும் நாம் மறு ஆய்வுக்குட்படுத்தவேண்டும்.

வேதங்கள் இதிகாசங்கள் முதலியவற்றினுள்ளும் தமிழறிஞர்களின் ஆக்கங்கள் இருப்பதை அறிஞர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். தரிசனங்கள் எனக்கூறப்படும் சாங்கியம், வைசேடிகம், சார்வாகம், நியாயம் ஆகியவை வேதமதத்திற்கு எதிரானவை மட்டுமல்ல, அதிகளவில் இவை தமிழரின் படைப்புக்கள். சமணமும் பவுத்தமும் மதங்கள்தான் என்றபோதிலும் தம் அறிவாற்றல் மூலம் வேதமதத்தை இவை கடுமையாகச் சாடின. வேதங்களை விரிவாக ஆய்ந்த அறிஞர் அம்பேத்கர் கூறியுள்ள ஓர் உண்மையை நாம் கவனிக்க வேண்டும்.

உயிர்களின் தோற்றம் முதலிய அனைத்துக்கும் மூலமான காரணம் இறைவன் என்ற கருத்து காணப்படும் அதே ரிக் வேதத்தில் எல்லாவற்றுக்கும் மூல காரணம் மனிதன்தான் என்ற கருத்தும் காணப்படுகிறது என்று அம்பேத்கர் நிறுவியுள்ளார். தலையிலிருந்து பிறந்தவன் பிராமணன் என்றெல்லாம் குறிப்பிடுகிற புருஷ சூக்தம் ரிக் வேதத்தில் ஓர் இடைச்செருகல் என்றும் அவர் விளக்கி உள்ளார். புத்தம், சமணம் ஆகிய அறிவுச் சமயங்கள் தமிழர் நாகரிகத்திற்கு எத்தகைய புத்தெழுச்சியைத் தந்தன என்பதையும் நாம் அறிவோம். சாங்கியத்திற்கு எதிராக பகவத் கீதை நிறையப் பேசி உள்ளதையும் நாம் அறிகிறோம். சாங்கியம் பற்றி பாரதிதாசன் அவர்களும், வைசேடிகம் குறித்து அறிஞர் குணா அவர்களும் விரிவாகப் பேசுகின்றனர்.

வரலாறு பற்றிய சரியான பார்வை நமக்கு இல்லை என்பதை இன்னொரு வகையிலும் விளக்கலாம். உலகில் அனேகமாக எல்லாச் சமூகங்களிலும் மதம், கடவுள், ஆன்மா, கோவில், வழிபாடு, புரோகிதர், சடங்குகள் முதலியவை இல்லாமல் இல்லை. பல்வேறு வரலாற்றுச் சூழலில் இவை தோன்றுகின்றன. தோற்றுவிக்கப்படுகின்றன. உயிர்கள் எப்படித் தோன்றின.

சூரியன், சந்திரன், இயற்கை, படிவ மாற்றங்கள், மனிதப் பிறப்புக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன/இயங்குகின்றன என்பன பற்றிய தீவிரமான கேள்விகள் மனிதனை ஓயாமல் குடைந்த காலச்சூழலில் இவ்வகைக் கருத்தினங்கள் தோன்றுகின்றன/ தோற்றுவிக்கப்படுகின்றன. ஒரு வகையில் இவை குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் மனிதர்களுக்குக் கிடைத்த அறிவு வெளிச்சங்கள். இந்த விடைகள் ஒரே மாதிரியாக இருப்பதும் சாத்தியமில்லை. வரலாற்றில் அனுபவங்கள் சேரும் பொழுது மாறுபட்ட விடைகள், முரண்பட்ட விளக்கங்கள் ஆகியவையும் எழுகின்றன. தனிவுட்மை, அரசதிகாரம், வர்க்கப் பிளவுகள் ஆகியவை தம் தேவைகளுக்கு ஒத்த முறையில் இவற்றை தமக்கேற்ற வகையில் திரிபு படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

நாம் பெருமைப்படுத்திக் கூறுகிற அறிவியல் ஆய்வுகளிலும் இப்பதிவுகள் இன்றுவரை இல்லாமலும் இல்லை. இவற்றோடு இன்னும் ஒன்று உலகளவில் தொடக்ககாலம் முதலே சமூகங்களுக்கு இடையில் கலாச்சார மோதல்களும், பரிவர்த்தனைகளும் நடைபெற்றே வருகின்றன. மோதலின் விளைவாக சில நாகரிகங்கள் மறைந்து வேறு நாகரிகத்திற்கு இடம் கொடுக்கவும் செய்கின்றன. நாகரிகத்தில் மேலோங்கிய ஒரு சமூகம், நாகரிகத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள அநாகரிகர்களால் எளிதாக அழிக்கப்படுவதும் நேர்ந்திருக்கிறது. அநாகரிகம் என்று முன்பு சொல்லப்பட்ட ஒரு சமூகம் நாகரிகத்தில் உயர்கிற பொழுது அழிவுக்குள்ளாவதும் இயற்கை. உடலுழைப்பு, அறிவுத்தேட்டம் முதலியவை குறைந்து பெரும் வசதிகளில் திளைக்கும் ஒரு சமூகம் என்னதான் போர்க்கருவிகள், அறங்கள் முதலியவற்றைச் சேர்த்துக் கொண்டபோதிலும் தனக்குள்ளே வலு அற்றதாக இருக்கத்தான் செய்யும். அந்த நாகரிகம்அழிவுக்குள்ளாகும் என்பதற்கு இதுஒரு அடையாளம். எந்தஒரு சமூகமும் இவற்றில் இருந்து தப்ப முடியாது.

தமிழர் நாகரிகமும் இந்த உண்மைக்கு விதிவிலக்காக இருக்க முடியாது. ஆரியர்கள்தான் எம்மை அழித்தார்கள் என்று திரும்பத்திரும்ப ஒப்பாரி பாடுவதில் பொருள் இல்லை. தமிழர் நாகரிகத்தில் சாதிகள் இல்லை, சடங்குகள் இல்லை

என்றெல்லாம் புனைந்துரைப்பதிலும் பொருள் இல்லை. மதம் என்பது தமிழ்ச் சிந்தனைக்கு எதிரானதென்று வழக்காடுவது, நமக்கு வரலாற்றுப் பார்வை இல்லை என்பதைத்தான் உறுதிப் படுத்துகிறது. நாமறிந்த வரலாற்றுக் காலம் முழுவதும் தமிழ் மக்கள் பல்வேறு சமயங்களோடும், சடங்குகளோடும் தான் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

சாதிகள் இன்று நமக்குத் தேவை இல்லை என்பதைப் போலவே தனிவுடைமையும், அரசு அதிகாரமும் இன்று நமக்குத் தேவையில்லை. சாதி வேண்டாம், மதம் வேண்டாம் என்று ஓயாமல் உரத்துப் பேசுபவர்கள் தனிவுடைமைக்கு எதிராக, அரசு அதிகாரத்திற்கு எதிராக வாய் திறப்பதில்லை. பெரியாருக்குத் துதிபாடும் இவர்கள் பணத்தை, அதிகாரத்தைக் கடவுளாக வழிபடுகிறார்கள். வல்லரசுகளுக்கு எதிராக, உலகமயமாதலுக்கு எதிராக இவர்கள் ஏன் தீவிரமாகப் பேசுவதில்லை? உலக மயமாதலோடு ஒத்துழைக்கின்ற சீர்கெட்ட முதலாளியத்தைத் தகர்ப்பதற்கு இவர்கள் ஏன் முனைவதில்லை?

இயற்கை வேளாண்மை, தாய்த்தமிழ்ப் பள்ளிகள், பசுமை இயக்கம் முதலியவற்றை இவர்கள் ஏன் கண்டு கொள்வதில்லை. இவை எல்லாம் தமிழரின் மேன்மையான நாகரிகத்தை, பண்பாட்டை வளர்க்கக் கூடியவை. தமிழகத்தின் இயற்கை, நிலவளம், நீர்வளம், காடுகள், கடல்கள் முதலியவை மாசுபட்ட நிலையில் எத்தனைத் தமிழர்கள் நல்வாழ்வு வாழ முடியும். சமூகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் பரவிவரும் ஊழல் என்ற கொடுமையை வைத்துக்கொண்டு தமிழர் பண்பாடென்றும், வள்ளுவர் என்றும், இளங்கோ என்றும் நாம் வாயாடுவதற்கு என்ன தேவை இருக்க முடியும்?

பரிசுச்சீட்டுகள், மதுபானங்கள் மக்கள் நெஞ்சில் அற உணர்வை அடியோடு அழிப்பவை. நுகர்வியம் என்ற வெறி தமிழ்ச் சமூகத்தில் வேர்கொண்டு கிளைபரப்பி விழுதுகள் ஊன்றி உள்ளதை எவ்வாறு நாம் ஏற்கமுடியும்? இவற்றுக்கெல்லாம் பார்ப்பனர் மட்டுமே காரணம் என்று நம்மால் பொய் உரைக்க முடியுமா? தமிழ்ச் சமூகம் இந்தத் தீமைகளைத் தன்னிடமிருந்து

முற்றாகக் களைந்தால் ஒழியத் தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொள்வது சாத்தியமில்லை. இவை குறித்தெல்லாம் தமிழ் இயக்கங்கள் அக்கறையோடு ஆராய வேண்டும்.

திரவிடர்/தமிழர் நாகரிகத்தின் ஆக்கத்திற்கு ஆரியர் தீங்கு செய்தனர் என்று நம்மவர் பேசுகின்றனர். வேளாண்மை என்பது நாகரிகத்தின் முதன்மைக்கூறு. காடுகள் வெட்டி, நிலம் திருத்தி, நீர்ப்பாசன வசதிகள் செய்து, கழனிகளை உருவாக்கி, காடுகளில் தானே விளைந்துள்ள பயிர்கள் செடி வகைகளிலிருந்து தேவையானவற்றைத் தெரிவு செய்து, அவற்றைக் கழனிகளில் பயிரிட்டுப் பக்குவமாக விளைச்சல் செய்த தமிழ் மக்களுக்கு ஆரியர் எதனையாவது கற்றுத் தந்திருக்க முடியுமா? வேளாண்மை நாகரிகத்திற்கு முன்பே காடுகளிலும், மலைகளிலும் ஆயிரக் கணக்கில் திரிந்த மாடுகள், காளைகள், எருமைகள் முதலியவற்றைக் கீழே சமநிலத்திற்கு இழுத்து வந்து அவற்றை வீட்டு விலங்குகளாகப் பண்படுத்துவது என்பது ஓர் நூற்றாண்டில் அல்லது ஓராயிரம் ஆண்டுக்கால அளவில் நடைபெறக்கூடிய செயலாக இருக்க முடியாது.

நீர்ப்பாசனத்தை ஏற்படுத்துவதற்குக் கணிதமும் பொறியியலும் இல்லாமல் முடியாது. மருத்துவ அறிவில்லாமல் உயிர்களை வாழ்விக்க முடியாது. வானவியல் அறிவு இல்லாமல் வேளாண்மை சாத்தியமில்லை. இவை மட்டுமா, கடல் வாணிகத்தில் தேர்ந்தவர் தமிழர் என்று கூறுகிறோம். படகு/ கப்பல் கட்டுவது, கடலில் பயணம் செய்வது ஆகியவற்றுக்கு நிலவியல், வானவியல் முதலிய எத்தனை அறிவு வேண்டும். இவற்றோடு நகர நாகரிகம், தொழில் வகைகள், அணிகலன்கள், ஆடைகள் முதலியவற்றிற்கு எத்துணை அறிவு தேவை. இவை எல்லாம் தமிழ் மக்களின் அசலான படைப்புக்கள். இவற்றின் ஆக்கத்திற்கும், ஆரியருக்கும் ஒரு மயிரிழை அளவுகூட தொடர்பிருக்க முடியாது. இவற்றோடு சிற்பங்கள், நாட்டியம், இசை, மருத்துவம் ஆகியவற்றில் தமிழர்களின் சாதனைகள், எத்தனை பெரியவை. இவற்றோடு ஆரியருக்கு என்ன உறவு? தொல்காப்பியத்தில் மொழி குறித்தும், இலக்கியம் குறித்தும்

ஆயிரத்துக்கு மேற்பட்ட அசலான கலைச் சொற்களைக் காண்கிறோம். நுண்ணறிவு மிக்க தர்க்கச் சிந்தனையைக் காண்கிறோம். இவையும் தமிழர் படைப்புக்கள். தமிழர்களின் பொருளியல், சமூகவியல், அளவையியல், கணிதவியல், வானவியல், சட்டஇயல், இன்பவியல், மெய்யியல் முதலியவற்றை யும் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இவற்றோ டெல்லாம் ஆரியருக்கு என்ன உறவு இருக்க முடியும்?

திராவிடர்/தமிழர் நாகரிகம் என்று நாம் பேசும்பொழுது நிலவியல் அடிப்படையில் தமிழகத்தை வைத்து நாம் பேசுவது கூடப் பொருந்தாது. இந்தியா முழுவதும் வேளாண்மை தொடங்கிப் பல்வேறு கூறுகளில் நாகரிக வளர்ச்சியை நாம் பார்க்க வேண்டும். இவையெல்லாம் யாருடைய ஆக்கங்கள்? இந்தியா நெடுகிலும் ஆயிரக் கணக்கில் இனக்குழுச் சமூகங்கள் இன்றைக்கும் இருக்கின்றன.

கோடிக்கணக்கான இந்தப் பழங்குடிகளின் அறிவையும், பண்பாட்டையும் நாம் ஆரியருக்கு அடகு வைக்க முடியாது. திராவிட மொழிகள் என்று இந்தியா நெடுகிலும் இனம் காணத்தக்க மொழிகள் முப்பதுக்கு மேல் உள்ளன. சமஸ்கிருதத்தின் வழிவந்த மொழிகள் என்று அறியப்படுகின்ற வட இந்திய மொழிகளின் இலக்கணக் கட்டமைப்பு தமிழாகத்தான் இன்றுவரை இருக்கிறது.

இப்படிச் சொல்லும் பொழுது நாம் இன்னொன்றையும் சேர்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். ஆரியர்களை வடவர் என்று நாம் குறிப்பிடுவதைக் கொண்டு வடக்கிந்தியாவில் வாழுகிற கோடிக்கணக்கான உழைக்கும் மக்களையும் ஆரிய இனத்தவரென்று நாம் பொருள்படுத்துவது போலத் தெரிகிறது. இதன் காரணமாகவும் இந்தி மொழி பேசுகிற பலகோடி உழைக்கும் மக்களோடு நமக்கு மன உணர்வு என்ற அடிப்படையிலும் உறவு கொள்ளத் தயங்குகிறோம். இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பலமுறை பயணம் செய்துவந்த தோழர் ஆனைமுத்து அவர்களின் அனுபவம் வேறுவகையாக இருக்கிறது. இந்தி பேசும் அரசியல்வாதிகள், வணிகர்கள்தாம் தமிழுக்கு எதிரானவர்கள். எங்கள் இந்தி மொழி உங்கள் மேல் ஆதிக்கம்

செய்வதில் எங்களுக்கு உடன்பாடில்லை என்று அங்கு வாழும் அடித்தள மக்கள் கூறுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறார் பெரியவர் ஆனைமுத்து அவர்கள்.

இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் நம்மைப் போலவே மய்ய அரசின் ஒடுக்கு முறைக்குள்ளானவர்கள். வங்கம், ஒரிசா, குஜராத் மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் வாழும் உழைக்கும் மக்கள் திராவிட இனக்கலப்புடையவர்கள். இவர்கள் நமக்கு எதிரிகள் அல்லர். இன்னும் ஒன்றைக்கூறி இப்பொழுதைக்கு இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

மதம்/இந்துமதம் என்றவுடன் நாம் எதிர்நிலை எடுக்க வேண்டியதில்லை. மதத்திற்கு எதிர்நிலை எடுத்த நிலையில், மெய்யியல் என்பதை மதம்என்று பொருள்படுத்திக் கொண்டு நாம் தொடர்ந்து மறுத்து வந்ததன் மூலம், கேடு செய்துள்ளோம். மனித வாழ்வை மேன்மைப்படுத்துகிற ஓர் அடிப்படையான பார்வை மெய்யியல் பார்வை. நான் யார்? என்ற கேள்விக்கும் இறுதியான விடை தருவது மெய்யியல் பார்வை. உடமையோ அதிகாரமோ வாழ்வுக்கு ஆதாரமாக முடியாது. இயற்கையோடும், உயிர்களோடும், பிரபஞ்சத்தோடும் நாம் இணைந்திருக்கிறோம். பிரபஞ்சத்தின் பேரியக்கத்தினுள் நாம் இருக்கிறோம். சமத்துவம்/ சமதர்மம் இன்றி வாழ்க்கை அர்த்தம் பெறாது, அழகு பெறாது, ஆற்றல் பெறாது. கடவுள்/ஆன்மா என்பவை இடைக்காலத்தில் மனிதர் வகுத்துக் கொண்ட கருத்தாக்கங்கள்.

இவற்றை இன்று கட்டவிழ்த்துப் பார்க்க முடியும். கடவுள் என்பது ஒரு புனைவு/கட்டமைப்பு. இதைக் கலைத்துப் பார்க்கும் பொழுது இதற்குள் மனிதனைக் குறிக்கிற எத்துணையோ உட்கருத்துக்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் மனிதன் புறக்கணிப்பதற்கில்லை.

தமிழ்மெய்யியல் என்று இங்கு நாம் பேசமுடியும். அரசியலை, சமூகம், பொருளியல் என்ற வரையறைகளில் முடக்கிவிட இயலாது. தமிழ்த் தேசியம் என்ற அரசியலின் ஆதாரமான தளமாக தமிழ் மெய்யியல் தான் இருக்கமுடியும். சைவமும், வைணவமும் தமிழர் சமயங்கள் என்ற போதிலும்

இவற்றின் உள்ளியங்கும் தமிழ் மெய்யியலைத்தான் நாம் காண வேண்டும். வள்ளுவரின் ஒப்புரவும், சித்தர்களின் மெய்யியலும் நமக்கு நெருக்கமானவை. உழவர்களும் கைவினைஞர்களும் அசலான தமிழர்கள் என்ற முதல் மரியாதைக்குரிவர்கள். தமிழ் இலக்கியம் முதலியவை கற்றதனாலேயே ஒருவர் அசலான தமிழர் ஆகிவிட முடியாது. தமிழ் மக்களின் வாழ்வியல் மேன்மையோடு, விடுதலையோடு தன்னை இணைத்துக் காண்பவரைத்தான் தமிழர் என்று நாம் மரியாதையோடு கூற முடியும். தமிழை வைத்துப் பிழைப்பவர்கள் அரசியல் செய்பவர்கள். தமிழ் மக்களின் உணர்வைச் சுரண்டுபவர். இவர்கள் போலித் தமிழர்கள்.

அரசதிகாரத்தில் இடம் பெறுவதே தம் வாழ்வின் இலக்கு என்று அலைபவர்கள், தமிழ் மக்களின் எதிரிகள். இந்துமதம் என்றவுடன் இந்துத்துவம் என்ற பொருள்படுத்துவது தவறாகி விடும். ஆங்கிலேயர்கள்தான் இந்துமதம் என்பதற்கு உருவம் தந்தவர் என்றபோதிலும் “இந்து மதம் பன்முகப் பரிமாணங்கள் கொண்டது.” கடவுள் உண்டு என்று சொல்பவர்கள் மட்டுமல்லாமல், கடவுள் இல்லை என்று சொல்பவர்களுக்கும் இதில் இடமுண்டு.

கடவுளை எந்த வடிவிலும் வணங்கலாம் அல்லது வழிபடாமல் இருக்கலாம். இந்துமதம் குறித்து இப்படி நிறையச் சொல்லலாம். இந்து மதம் என்பதன் பன்முகப் பரிமாணங்களை அழித்து இதை மதவாதமாக, மதவெறியாக, மதவாத அரசியலாக மாற்றுவது இந்துத்துவம். இந்துத்துவம் பற்றி முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தரும் விளக்கம் வளமானது என்ற போதிலும், இந்துத்துவவாதிகள் இதை ஏற்க மாட்டார்கள். இந்துமதம் என்பதே இந்துத்துவம் என்று பொருள்படுத்தி இந்து மதத்திற்கு எதிராகவும் போராடுவதென்பது இறுதியில் இந்துத்துவத்திற்கே வலுச் சேர்க்கும். மக்களுக்கு எதிராகவும் நாம் நிற்க வேண்டிவரும். அப்புறம் தமிழ் மரபுக்கு எதிராகக்கூட நாம் பேசவேண்டி இருக்கும். இதைப்போலவே பார்ப்பனியம் என்பதையும் ஒற்றைப் பரிமாணத்தில் வைத்துப் பேசுவதற்கில்லை.

எந்த ஒரு மெய்யியல்/கருத்தியலுக்குள் நம் இடதுசாரி, வலதுசாரி என்று இருவகை எதிர்நிலைகளை நாம் காணமுடியும். பார்ப்பணியத்தினுள்ளும் இடதுசாரிப் போக்கென்பதை பாரதி விவேகானந்தர், சில உபநிடதங்கள் முதலியவற்றோடு இணைத்துப் பார்க்க முடியும். சமத்துவம், சமதர்மம் ஆகியவற்றின் கூறுகள் இடதுசாரிப் பார்ப்பணியத்தில் உண்டு. வலது சாரிப் பார்ப்பணியம் ஆதிக்கத்தோடு, அரசோடு கூட்டுச் சேர்ந்து கொள்ளும். புரோகிதம், கடவுள், கோவில், பூணூல், சாதி என்பனவற்றிற்கு இது அழுத்தம் கொடுக்கும். இது மக்களுக்கு எதிரான போக்கு. பார்ப்பணியத்தை இப்படிப் பொருள்படுத்தி நாம் பார்த்திருக்க வேண்டும்.

தமிழ்ச் சமூகத்தில் தமிழ் மக்களுக்காகவும், தமிழ் இலக்கியத்திற்காகவும் காலம் முழுவதும் உழைத்த பார்ப்பனர்களை நாம் எதிரிகளின் பட்டியலில் சேர்க்க முடியாது. காந்தியம் குறித்தும் விடுதலைப் போராட்டம் குறித்தும் நாம் முற்றான எதிர்நிலை எடுத்திருக்க வேண்டாம். தமிழின் எவ்வளவோ ஆக்கங்களைத் தன்வயப்படுத்திக் கொண்டது சமஸ்கிருதம். தமிழ் இல்லாமல் சமஸ்கிருமம் இல்லை. சமஸ்கிருதக் கல்வியைக் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் நாம் புறக்கணிக்க நேர்ந்தது. இதன் காரணமாக சமஸ்கிருத மொழியோடு நாம் பகை கொள்ளவேண்டியதும் இல்லை.

மேலும் ஒன்று, இந்திய நாகரிகம் என்பதன் அடித்தளம் திராவிட நாகரிகம் என்று உண்மையாகவே நாம் நம்பினால், இந்தியாவை நம் பார்வைக்கு ஒத்தமுறையில் மாற்றியாக வேண்டும். தேசிய இனங்களின் இறையாண்மை என்பதை முழு அளவில் ஒப்புக் கொள்கிற சமத்துவம்/சமதர்மக் குடியரசு என்ற அடிப்படையில் ஒரு புதிய அரசியலமைப்புச்சட்டம் உருவாக வேண்டும் என்ற கருத்தோடு நாம் இயங்க வேண்டும். உடனடியாக இத்தகைய உருவாக்கத்திற்கான சாத்தியங்கள் தென்படவில்லை என்றாலும், இத்தகைய ஆற்றல்மிக்க கருத்தியல் நமக்கான எதிர்காலத்திற்கு வழிதிறக்கும்.

தமிழர் வரலாற்றில் ஆரியர் ஆதிக்கம் மட்டுமல்லாமல் வேறு

பலவகையான ஆதிக்கங்களும் வந்து சேர்ந்திருப்பதைக் குறித்தும் சுருக்கமாகச் சொல்லி முடிக்கலாம். இங்கும் அறிஞர் அம்பேத்கரின் ஒரு அருமையான விளக்கம் நமக்குத் தேவைப்படுகிறது. கி.பி முதல் நூற்றாண்டுகளில் சமூகத்தின் தலைமையைப் பெற பார்ப்பனர்களுக்கும், சத்திரியர்களுக்கும் இடையில் கடுமையான போர்கள் நடைபெற்றன. இதன் காரணமாக இரு வர்ணத்தினரும் வலிமை குன்றினர். பிறவர்ணங்கள் மேலுக்கு வந்தன. இந்த நிலையில் இனியும் தமக்கிடையில் போர் நடைபெறுமானால் பிற வர்ணங்களின் ஆதிக்கத்திற்குத் தாங்கள் அடிமைப்பட நேரும் என்ற முடிவுக்கு வந்து பார்ப்பனரும், சத்திரியரும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர்.

இப்படி இந்திய வரலாற்றை விளக்கும் அம்பேத்கர், இந்திய வரலாறு இதே கதியில் சென்றது என்று கூறுகிறார். இந்திய வரலாற்றுக்கான திறவுகோல் என்று இந்தப் பார்வையை நாம் குறிப்பிடமுடியும். சத்திரியர்களின் தனிவுடமை அரசதிகாரம் ஆகியவற்றோடு பார்ப்பனர்களின் கருத்தியலும் இணைந்த நிலையில் சமூகத்தின் தலைமையை இவர்கள் தக்க வைத்துக் கொள்ள இயலும். கருத்தியல் தனியே இருந்து சமூகத்தின் தலைமையைக் கைப்பற்ற முடியாது. தனிவுடைமையும் அரசதிகாரமும் சமூகத்தின் தலைமையைக் கைப்பற்ற இயலும் என்றாலும் கருத்தியலின் துணையில்லாமல் நெடுங்காலத்திற்கு இதைத் தக்க வைத்துக் கொள்ள இயலாது. அம்பேத்கரின் இத்தகைய பார்வை மார்க்சியத்தோடு ஒத்தபார்வை.

பார்ப்பனர்கள் வந்தார்கள். தமிழர்களை அடிமைப் படுத்தினார்கள் என்ற பார்வை தமிழர் வரலாற்றை விளக்குவதற் கில்லை. தனிவுடமைக்கும், அரசதிகாரத்திற்கும் ஆதரவாகப் பார்ப்பனர் மட்டுமல்லாமல் சமணர்களும், பவுத்தர்களும் கூடச் சில கட்டங்களில் செயல்பட்டிருக்கிறார்கள். சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் பார்ப்பனர்கள் முதலியோர் தேவைப்பட்டிருக் கிறார்கள். தனிவுடமையும், அரசதிகாரமும் மக்கள் மீது சுரண்டலையும் ஒடுக்கு முறைகளையும் திணிக்கும் முறையில் இவர்களுக்குப் பார்ப்பனர்களும், சைவர்களும் தேவைப்

பட்டிருக்கலாம். தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பது ஒரு முதுமொழி. தமிழர் அடிமைப்பட்ட வரலாற்றை இந்தக் கோணத்திலும் நாம் பார்க்க வேண்டும்.

●

17. வரலாற்றில் தமிழர் — வீழ்ச்சியும் மீட்சியும்

- ஓர் மார்க்சிய ஆய்வு -

பகுதி ஒன்று

எந்தவகையான வரலாறென்றாலும், அது எவ்வாறு எழுதப்படுகிறது அல்லது தொகுக்கப்படுகிறது என்பது பற்றிய பார்வை மிக முக்கியமானது. Historography என்று இதற்குப் பெயர் இட்டு இருக்கிறார்கள். இந்தியாவின் வரலாற்றை ஆங்கிலேயர் எழுதியபோது அவர்களுக்கு ஒரு நோக்கம் இருந்தது. இந்துக்கள் காலம் இசுலாமியர் காலம் என்று அவர்கள் வகுத்து வரலாறு எழுதினார்கள். இதற்குப் பிறகு நவீன காலம். ஆங்கிலேயர் முதலியவர்கள் வருகையை உள்ளடக்கிய காலம். ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகுதான் இந்தியா ஒன்றுபட்டது. தொன்மைக்கால மூடநம்பிக்கைகள்; பழக்க வழக்கங்கள் மாறின. மேற்கத்திய நாகரிகம், கல்வி, தொழில்முறை, ஆட்சிமுறை முதலியவை இந்திய மக்களை மேன்மைப்படுத்தின என்ற முறையில் அவர்களது வரலாறு எழுதுகை அமைந்தது. இதில் ஆங்கிலேயர்களின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது. இந்திய மக்களின் மீது தங்கள் ஆதிக்கத்தை அவர்களும் ஏற்றுக் கொள்ளும் முறையில் திணிக்கவேண்டும் என்பது அவர்களது நோக்கம்.

அண்மைக்காலத்தில் இந்துத்துவவாதிகள் இந்தியாவின் வரலாற்றைத் தங்களுக்குச் சாதகமாக எழுத முனைந்துள்ளனர். ஆரியர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள் அல்லர். ஹரப்பா நாகரிகம் கூட ஆரியருடைய நாகரிகம்தான். வேத வாழ்வுதான் உயரிய வாழ்க்கைமுறை. ரிஷிகள்தான் இந்திய மக்களுக்குத் தலைவர்கள். வருணாசிரமம்தான் நமக்கான வாழ்க்கை நெறி. சமஸ்கிருதம் தெய்வ மொழி. சமஸ்கிருதத்தில் இருந்துதான் இந்தியாவின் அனைத்து மொழிகளும் தோன்றின. இந்தியாவின் முன்னைய பெயர் பரதகண்டம். இப்படிச் செல்கிறது அவர்கள் எழுதும் வரலாறு.

வரலாறு எழுதுபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்கால

மற்றும் எதிர்கால நோக்கம் உண்டு. இந்த நோக்கங்களை உள்ளடக்கி வரலாற்றை அவர்கள் கட்டமைக்கிறார்கள். கல்வெட்டு, ஆவணங்கள், இலக்கியங்கள், பயணிகளின் குறிப்புகள் என்ற முறையில் அதுகாலம் வரை கிடைத்த ஆதாரங்களைத் தம் நோக்கங்களுக்கு ஏற்ற முறையில் பொருள் படுத்துகிறார்கள். சிலவற்றை மறைக்கிறார்கள். சிலவற்றைத் திரிக்கிறார்கள். வரலாற்றில் கிட்டாத தொடர்ச்சியை இவர்கள் படைத்துக் கொள்கிறார்கள். முன்னைய காலத்தில் வரலாறு எப்படி நடைபெற்றது என்பது குறித்து ஆய்ந்தறிவது ஒரு கடினமான செயல்.

வரலாறு எழுதுபவர்களுக்குத் தாம் எந்த நோக்கத்தோடு எழுதுகிறோம் என்ற சுயமான அறிவு தேவை. தன்னைப் பற்றியேகூட விமர்சனம் தேவை. மெய்யியல், பொருளியல், பண்பாடு முதலியவை குறித்து நமக்குத் தெளிவான பார்வை இருக்க வேண்டும். தன்னைப் பற்றிய ஆய்வறிவு இல்லாத நிலையில் தனது நம்பிக்கைதான் சரியான கருத்தாக இருக்க முடியும் என்று அவர்கள் நம்பத் தொடங்கி விடுகிறார்கள். வரலாற்று ஆய்வென்பது இவ்வகையான தெளிவோடு நடைபெற வேண்டும். இந்த நோக்கில் அறிவியல், பொருளியல், கலாச்சாரம், கலை, இலக்கியம், சமயம், தத்துவம் என்ற முறையில் எழுதப்படும் எந்த வரலாற்றையும் நாம் திரும்பத்திரும்ப மறு பார்வைக்கு உட்படுத்த வேண்டும். இம்முறையில்தான் தமிழர்களின் வரலாறு பற்றிய ஆய்வுக்குள்ளும் நாம் நுழைய வேண்டும்.

தமிழில் எழுதப்படும் இலக்கிய வரலாறு முதலியவையும் இவ்வகையான ஆய்வுக்குட்பட்டவை.

தமிழ் மக்களின் வரலாறு என்ற முறையில் நீலகண்ட சாஸ்திரியார், சீனிவாச அய்யங்கார், கே.கே. பிள்ளை எனத் தொடங்கிப் பலர் எழுதி உள்ளனர். சிலர் முழுமையாகவும், சிலர் பகுதியாகவும் எழுதுகின்றனர். தமிழர் வரலாற்றைச் சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து தொடங்கலாம் என்பதும் அல்லது குமரிக்கண்ட ஆய்விலிருந்து தொடங்க வேண்டும் என்பதும்

நம்மவரின் கருத்தாக அமைகிறது. இவர்களைத் திராவிடர் என்று கூறுவதா, தமிழர் என்று கூறுவதா என்ற முறையிலும் கேள்விகள் எழுந்துள்ளன. திராவிடர்கள் இந்தியாவுக்கே உரிய மக்களா? என்ற கேள்விக்கும் இடமிருக்கிறது. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிவிட, அங்கிருந்து தப்பி வடக்கில் சென்ற மக்கள் பின்னர் உலகம் முழுவதும் பரவிச் சென்றார்கள் என்றும் சிலர் நம்புகிறார்கள்.

ஆப்பிரிக்காவில் தான் மனிதன் தோன்றினான். அப்புறம் அங்கிருந்துதான் உலகளவில் மக்கள் பரவிச்சென்றனர். இப்படி எல்லாம் பல கருத்துக்கள் நிலவுகின்றன. சிந்துச் சமவெளி நாகரிகம் திராவிடர்/தமிழருடையதுதான் என்று நாம் நம்புவதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. சிந்துச் சமவெளி நாகரிகம் எவ்வாறு அழிந்தது என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் தொடர்கின்றன. ஆரியர்கள் வருகையை ஒட்டி சிந்து நாகரிகம் அழிவுக்கு உள்ளாகியது என்பது ஒரு மெய்மை. நாகரிகம் அற்றவர்களாக இந்தியாவுக்கு வந்த ஆரியர் தம் மொழி, நாகரிகம் முதலியவற்றைத் திராவிடர் மூலம் மேம்படுத்திக் கொண்டனர் என்பதும் உண்மை. ஆரியர்களின் முதலிலக்கியம் என்று கூறப்படுகிற வேதங்களிலிருந்து ஏராளமான ஆதாரங்களை நம் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தி உள்ளனர். வேதங்களில் காணப்படும் தத்துவம் முதலியனவும் திராவிடர்களுக்கு உரியவை.

வருணாசிரமம் என்பதை ஆரியர்கள் வகுத்ததைப் போலவே சாதிமுறை என்பது திராவிடருக்குரியது. இரணடும் பிறிதொரு காலத்தில் கலந்த நிலையில் இந்தியாவின் வரலாற்றை இயக்கும் முக்கியமான ஆற்றலாக இது மாறியது.

உண்மையில் இந்தியாவின் வரலாற்றை வடக்கிலிருந்து தொடங்க முடியாது. தெற்கிலிருந்துதான் தொடங்க வேண்டும். இந்திய நாகரிகம் என்று சொல்லப்படுவதன் மேலடுக்கு ஆரிய நாகரிகமாகத் தென்படலாம். மேலடுக்கை நீக்கிவிட்டுப் பார்த்தால் இந்திய நாகரிகத்தின் அடித்தளம் திராவிட நாகரிகம். வேளாண்மை, கட்டடக்கலை, தொழில்முறை முதலிய அனைத்தும் திராவிட மக்கள் படைத்தவை. கல்வி, மருத்துவம்,

பண்பாடு, தத்துவம் முதலியவையும் திராவிடர்களின் படைப்புகள். ஆரியர் தமக்குரிய ரிஷிகள் என்று உரிமை கொண்டாடுபவர்களில் பெரும்பகுதியினர் திராவிடர். வால்மீகி, வியாசர் என்று தொடங்கிப் பலர் இவ்வாறு குறிக்கப்படுகின்றனர்.

ஆரியருடைய நாகரிகம் வேள்வி முதலியவற்றை உள்ளடக்கிய மேலுலகச் சார்பானது. திராவிட நாகரிகம் உலகியல் சார்ந்தது. திராவிடர்களின் தெய்வங்கள் அதிக அளவில் தாய்த் தெய்வங்கள். ராமன், கிருஷ்ணன், விஷ்ணு, சிவன் முதலியவர்கள் திராவிடருக்குரிய தெய்வங்கள். வேதங் களிலுள்ளும் எல்லாவற்றுக்குள்ளும் மூலம் கடவுள் என்பதைப் போலவே எல்லாவற்றுக்கும் மூலம் மனிதன் என்றும் காணப்படுகிறது.

சாங்கியம், நியாயம், வைசேடிகம், சார்வாகம் முதலிய தரிசனங்கள் திராவிடருக்குரியவை. இவற்றில் கடவுளுக்கு முதன்மையில்லை. பவுத்தம், சமணம் போன்ற மதங்களும் திராவிடர் படைத்தவை. இப்படி எல்லாம் இந்தியாவின் வரலாறு குறித்து நாம் பேசுகிறோம். பேசுவதற்கான தேவையை தமிழ் மக்களாகிய நம்மவரின் நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்வியல் தேவைகளிலிருந்து பெறுகிறோம். ஆரியர்களும் திராவிடர்களும் தொடக்க காலத்தில் தமக்குள் போரிட்டுக் கொண்டாலும் பிறகு ஒன்றாகக் கலந்து விட்டனர். இன்று ஆரியர் என்றும் திராவிடர் என்றும் முரண்படுத்திப் பார்ப்பதில் பொருளில்லை என்றும் கூறுபவர்களுடைய நல்லெண்ணத்தை நாம் புரிந்து கொள்கிறோம். தமிழ் மக்களின் நெடுங்கால வரலாற்றை எண்ணிப்பார்க்கும்பொழுது ஆரியருக்கும், தமிழருக்கும் இடையில் மொழி, பண்பாடு என்ற முறையில் நெடுங்காலமாகவே முரண்பாடுகள் நிலவியதை நாம் மறுப்பதற்கில்லை. முரண்பாடுகள் இன்றளவும் தீர்வதற்கு மாறாக முற்றி வருவதையும் பார்க்கிறோம். தமிழ் மக்களிலேயே ஒரு பகுதியினர் ஆரியருக்குச் சார்பாக இன்று மட்டுமல்ல நெடுங்காலமாகவே இயங்கி வருவதையும் பார்க்கிறோம். இந்தியப் பண்பாடு என்ற தொகுப்பின் ஒரு பகுதி தமிழர் பண்பாடு. இரண்டு பண்பாடுகளும் முற்றாகவே கலந்துவிட்டன என்றும் சிலர் கூறுகின்றனர்.

அரசியல் வட்டாரத்திலும் இந்த முரண்பாடு இன்று கூர்மையடைந்து வருகிறது. நெடுங்கால வரலாறு மட்டுமல்லாமல் தற்கால வரலாற்றினுள்ளும் இந்தப் பகைமைக்கான காரணங்களை நாம் தேட வேண்டியும் இருக்கிறது.

3.

சங்ககாலம் தொடங்கிக் கடந்த இரண்டாயிரமாண்டுத் தமிழர் வரலாற்றின் சில முக்கியக் கூறுகளையும் இங்குத் தொகுத்துக் கொள்வது தேவையாயிருக்கிறது. குறிஞ்சி முதலிய ஐவகைத் திணைகளின் நாகரிகம் மிகத் தொன்மைக் காலத்தில் தனித்தனியாக இருந்தன எனினும், பிறகு மருத நில நாகரிகத்தின் மேலாண்மை காரணமாகத் தமிழர் நாகரிகம் என்று அறியப்படும் ஒரு தொகுதி உருவாகியது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் முதலிய நிலங்களில் வாழ்ந்த இனக்குழு மக்கள், பின்னர் மருத நில நாகரிகத்தில் ஆளுமைக்கு உட்பட்டதோடு மருதநில நாகரிகத்தின் ஆதாரத்தில் தோன்றிய வேந்தர்களின் வல்லாண்மைக்கும் இடம் கொடுக்க வேண்டியிருந்தது.

இனக்குழுக்களின் தலைவர்கள் பாரி முதலிய வேளிர்களை வேந்தர்கள் ஒடுக்கினர் அல்லது அழித்தனர். தனிவுடமை, அரசதிகாரம் ஆகியவை வலுப்பெற்றன. ஆதிப்பொதுமைச் சமூகத்தின் பொதுமைஅறம் தமிழ்ச் சமூகத்தில் அழிந்து விடவில்லை. தமிழ்ச் சான்றோர்கள் இந்த அறத்தை நிலை நிறுத்தவே பெரிதும் முனைந்தனர். சங்க இலக்கியத்தின் பாடல்கள் பலவற்றிலும், திருக்குறள் முதலிய அறநூல்களிலும், வெளிப்பட்ட இந்த அறம் இடைக்காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றினுள்ளும் இடம்பெற்றதோடு பின்னர் சித்தர் இலக்கியங்கள், பக்தி இலக்கியங்களிலும் இவை வீறு பெற்றன.

தமிழ் அறம் என்று இன்றும் போற்றுவதாகிய இந்த அறம் வள்ளலார், பெரியார், பாரதி, பாரதிதாசன் மூலம் இன்றும் நமக்குள் வந்து சேர்ந்திருக்கிறது. சான்றோர்கள் போற்றிய இந்த அறம் தமிழ் மக்களுக்குரியது. உழவர்கள் மற்றும் உழைக்கும்

மக்களுக்குரியது. இவர்களின் வாழ்விலிருந்து அல்லாமல் சான்றோர் இந்த அறத்தை தமக்குள் கண்டு தொகுத்திருக்க முடியாது. தமிழ்ச் சமூகத்தினுள்ளும் சாதிகள் இடம்பெற்ற போதிலும், சாதிகளைச் சான்றோர் போற்றவில்லை.

சங்ககாலச் சமூகத்திலிருந்த பரத்தமை முதலிய தீமைகளைத் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்து சேர்ந்த சமணர்களும் பவுத்தர்களும் கண்டித்தனர். தமிழ்ப் பண்பாடு என நாம் இன்றுவரை போற்றுகின்ற தொகுப்புக்கு சமணர்களும் பவுத்தர்களும் தந்த பங்களிப்புகள் அதிகம். தமிழ் மொழியை அதனுள் செயல்படும் இலக்கணம் கண்டு தொகுப்பவர் தொல்காப்பியர் முதலியோர். தமிழ்ச் சமூகத்தின் சில அநீதிகளை இவர்கள் களைய முற்பட்டனர்.

தனிவுடமை, அரசதிகாரம் ஆகியவை எந்த ஒரு நாட்டின் வரலாற்றிலும் தவிர்க்க இயலாத கூறுகள். பாரி முதலிய வேளிர்கள் மக்களோடு ஒன்றியிருந்தனர். வேந்தர்களும் நெடுங்காலம் மக்களோடு ஒன்றியிருக்க முடியாது. இவர்கள் மக்களிடமிருந்து வேறுபட்டனர். உடமையையும் அதிகாரத்தை யும் காப்பாற்றியாக வேண்டும். இவர்களைப் பாராட்டிப் பரிசும் பாராட்டும் பெற்ற புலவர்களும் உண்டு. இவர்களின் அழிவுச் செயல்கள் கண்டு இவர்களைக் கண்டித்தவர்களும் உண்டு. தமிழ்ச் சமூகத்தின் அறவோராய் அந்தணர்கள் இருந்தார்கள். இவர்களைத் தமிழ்ப் பார்ப்பனர் என்று சொல்வதில் தவறில்லை. சங்க காலத்திலேயே ஆரியர்களின் வேள்வி முதலியவற்றைச் சில மன்னர்கள் ஏற்றுக் கொண்டார்கள். சேரன் செங்குட்டுவனை அவனது இறுதிக்காலத்தில் வேள்வி செய்ய வைக்கிறார் இளங்கோவடிகள். வேள்வி முதலியவற்றைச் செய்வதை வள்ளுவர் கண்டிக்கவே செய்கிறார். போலித்துறவிகள், கொடுங்கோல் மன்னர்கள் முதலியவர்களை வள்ளுவர் கண்டிக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தில் நகரங்கள் பெருகின. வணிகர்கள் தொழில் குழுக்களை அமைத்துக் கொண்டனர். மதுரை போன்ற நகரங்களில் அவர்களுக்கென தனித்தெருக்கள் இருந்தன.

உள்நாடு, வெளிநாட்டு வாணிகத்திலும் இவர்கள் ஈடுபட்டு வந்தனர். நெடுந்தொலைவுக் கடற்பயணத்தை வணிகர்கள் மேற்கொண்டனர். இதற்கு ஏற்ற முறையில் நாவாய் முதலியவற்றைக் கட்டும் அறிவியல் அறிவை இவர்கள் பெற்று இருந்தனர். வானியல், மருத்துவம், நடனம், இசை, சிற்பம் முதலிய கலைத்திறன்களிலும் தமிழ்க் கலைஞர்கள் தேர்ச்சி பெற்று இருந்தனர். வெளிநாட்டினரும் இங்கு வந்து சென்றனர்.

இப்படி எல்லாம் வரலாற்றின் முதற்கட்டத்தில் நாம் அறிந்து கொள்கிற தமிழ்ச்சமூகம் பற்றி ஒரு விவரிப்பைத்தர முடியும். இந்தச் சமூகம் இயங்குகிற ஒரு சமூகமாக இருந்தது. வேலைப் பிரிவினைகள், தொழில் நுட்பங்கள் முதலியவை கூடிக் கொண்டிருந்தன.

ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து வளர்ந்தன என்றபோதிலும் சான்றோர்கள் இதை மறுத்துரைத்தனர். சான்றோர் நெறியிலேயே சமூகம் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அறமும் தனக்குள் முரண்படத்தான் செய்யும். வேந்தர்களுக்கு இடையிலும் பகைமை தோன்றாமல் இருக்க முடியாது. எந்தவொரு சமூகத்திலும் மன்னர்கள் பிறநிலங்களின் மீது வேட்கையோடு படையெடுக்கத்தான் செய்தனர். வேந்தர்கள் நிலப்படை, நால்வகைப்படை முதலியவற்றைக் கொண்டிருந் தனர். படையெடுப்பின்போது ஊர்களை, நீர்நிலைகளை, விளைச்சல்களை இவர்கள் அழித்தனர். ஊர்களைக் கொள்ளை யிட்டனர். பிறகு மன்னர் முன்னிலையில் பங்கிட்டுக் கொண்டனர்.

பாணர்களுக்கு முதல் பங்கு கிடைத்தது. எதிரி மன்னனின் மனைவியர் முதலியவர்களைக் கவர்ந்து கொண்டனர். அடிமைகள் ஆக்கிக் கொண்டனர். போர்வெறி இப்படியெல்லாம் செயல்பட்டது. போரில் கலந்துகொண்ட வீரர்களுக்கு இந்த உண்மை தெரியுமா என்ன? சிலசமயம் மன்னர்களுக்கு இடையில் பகை வேண்டாம் என்று பெரும் புலவர்கள் அறம் உரைத்தனர். மன்னர்களும் கேட்டுக்கொண்டனர். இது இப்பொழுது நடக்கவா செய்யும்?

சமூகம் மாறிக்கொண்டுதான் இருக்கிறது. ஆக்கங்கள், அழிவுகள் தமிழ்ச் சமூகத்தில் வந்துகொண்டிருக்கின்றன. ஊர்கள் தோறும் அறங்கூறவைகள் இருந்தன. இவற்றில் அறம் உரைத்தவர் சான்றோர். ஊர் நடுவில் அம்பலத்தில் செயல்பட்டவை இந்த அவை. கள்வர்கள் அங்கு தண்டிக்கப் பட்டனர். காதலித்த பெண்ணைக் கைவிட்டவனை இவர்கள் தண்டித்தனர். வேறுவகைக் குற்றங்களுக்கான தீர்ப்புகள் இங்கு சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

இந்த அவைகள், முற்காலத்து இனக்குழுச் சமூகத்தின் தொடர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். இந்த அவைகள் தமிழ்ச் சங்கத்தில் நெடுங்காலம் நிலவின. இந்த அவையின் ஆளுகைக்குள் மன்னர் தலையிடவில்லை. தமக்கான நெறியை இவர்களே வகுத்துக்கொண்டனர். இந்த அவையின் செயல் பாடுகளை மனு வகுத்த நீதிமுறைகளோடு இணைத்துப் பேசுவதற்கில்லை.

தமிழர்களின் மணமுறையில் ஒரு காலத்தில் களவுக்கோ, காதலுக்கோ முதன்மை இருந்தது. தலைவர் தலைவிக்கிருந்த உறவில் பெற்றோர் தலையிடவில்லை. காலம் மாறிய நிலையில் கற்புமுறைத் திருமணம் வந்து சேர்ந்தது. குலம், செல்வம் முதலியவற்றுக்கு முதன்மை கிடைத்தது. சான்றோர் என்ன செய்ய முடியும்? என்னதான் கடிந்துரைத்தாலும் ஒரு தலைவன் தன் மனைவியைத் தவிர இன்னொருத்தியோடு உறவு கொள்வதை யார் தடுக்க முடியும்? பரத்தமை தொடரத்தான் செய்தது. பெண்ணுக்குக் கற்பு தேவை. கற்பென்ற குணத்தைத் தலைவி மேற்கொள்கிறாள். இதன் மூலம் தலைவனைக் கட்டுப்படுத்த முனைகிறாள். குடும்பம் என்ற அமைப்பினுள் தலைவனைக் கட்டுப்படுத்தும் முயற்சியைத் தலைவி மேற்கொள்கிறாள். திருமண முறையும் எளிதாக இருந்தது.

ஆரியரின் திருமண முறை முதலியவற்றைத் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்கின்றனர். சிலப்பதிகாரத்திலும் ஆரிய மணமுறையை சமணராகிய இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். பார்ப்பனியம் என்பதனோடு இளங்கோவடிகள் முரண்படாமல்

இல்லை. பார்ப்பனியத்தை சாத்தனாரும் கண்டிக்கிறார்.

இங்குதான் நிறையச் சிக்கல்கள், கேள்விகள் எழுகின்றன. வரலாற்றில் நாகரிக வளர்ச்சியை, நகர வளர்ச்சியை, வணிகத்தை, மன்னராட்சியை, கலை இலக்கியங்களின் வளர்ச்சியை நாம் மறுக்க முடியுமா? இதைப்போலவே இனங்களின் கலப்பையும் நாம் மறுக்க முடியுமா? போராட்டங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. சடங்குகள் முதலியவை தொன்மைக்காலம் முதலே தொடங்கிவரக் கூடியவை.

நிகழ்காலச் சமூகத்திலும் சிக்கல்கள் அதிகரித்த நிலையில் சடங்குகள் பெருகும். கடவுள் என்ற கருத்தை வள்ளுவரைப் போலவே இளங்கோ அடிகளும் கேள்விக்குட்படுத்துகிறார். விதிக்கோட்பாடு தமிழ்ச்சமூகத்திலும் இருந்திருக்க வேண்டும். இயற்கையின் இயக்கத்திலுள்ள விதிமுறைகள் வாழ்வியலுக் குள்ளும் வந்து சேர்கின்றன. இயற்கை நிகழ்ச்சிகளைப் போலச் செய்தல் என்ற முறையில் சடங்குகள் தோன்றுகின்றன. உயிர் பற்றிய நம்பிக்கை, முன்னோர் வழிபாடு முதலியவை எல்லாச் சமூகங்களிலும் இருப்பவை. இறந்தவர்களின் ஆவிகளை மனம் குளிரச் செய்ய வேண்டும். இப்படியாக மெல்ல மெல்ல கடவுள், ஆன்மா, விதி முதலிய கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்தில் எழுந்தன.

இவை வெளியில் இருந்துதான் வந்தன என்று நாம் அடித்துப் பேச முடியாது. வெளியிலிருந்து வந்தவைதான் என்று சொல்லப்பட்டாலும் சமூகத்தின் இசைவு இன்றி இவை நிலைபெற முடியாது. நன்மை, தீமை என்ற கருத்துக்கள் இல்லாமல் எந்த ஒரு சமூகமும் இயங்குவதில்லை. இயற்கை, வாழ்க்கை முதலியவற்றைப் புரிந்துகொள்ள கடவுள், ஆன்மா முதலிய கருத்தாக்கங்களும் அன்று தேவைப்பட்டன. அறிவைப் பெருமளவுக்கு சமணர்களும் பவுத்தர்களும் போற்றினாலும் அவர்களுக்கும் விதி, ஆன்மா முதலிய நம்பிக்கைகள் இருந்தன. வேலைப் பிரிவினைகளைப் போலவே நாளடைவில் ஏற்றத் தாழ்வுகளையும் நாம் மறுப்பதற்கில்லை. இதனால் சிலருக்கு உயர்வும், சிலருக்குத் தாழ்வும் சொல்லப்படத்தான் செய்யும். சுருக்கமாகச் சொல்வதென்றால் வரலாற்றுக்குள் தமிழ்ச்சமூகம்

வந்துவிட்டது. தனிவுடமை, அரசு முதலியவை இந்தச் சமூக இயக்கத்தின் தவிர்க்க முடியாத கூறுகள்/ ஆற்றல்கள் ஆகிவிட்டன. இவற்றை முற்றாக ஏற்பவர்களும் உண்டு. மறுப்பவர்களும் இருந்திருக்க வேண்டும். ஏற்பதா வேண்டாமா என்று தடுமாறுபவர்களும் உண்டு. செல்வம் பெருகுவதற்கு எது நல்வழி என்ற கேள்வியும் எழத்தான் செய்யும். இப்படி எந்த ஒரு சமூகத்தினுள்ளும் பொருளியல், அரசியல், வாழ்வியல் முதலியவற்றில் முரண்பாடுகள் இல்லாமல் முடியாது. முரணியக்கம் என்பது வரலாற்றில் தவிர்க்க இயலாதது. முரணியக்க்ததின் மூலமே வரலாறு நகர்கிறது.

4

வரலாற்றை எவ்வாறு எழுதுகிறார்கள். எத்தகைய கோட்பாடு இவர்களுக்குள் செயல்படுகிறது என்ற கேள்வியோடு இந்தக் கட்டுரையைத் தொடங்கினேன். இந்துத்துவவாதிகளும் திராவிட மற்றும் தமிழர் சார்புடையவரும் இந்திய/தமிழர் வரலாற்றை எவ்வாறு எழுதுகிறார்கள் என்பது பற்றி நமக்கு ஓரளவுக்கேனும் தெரியும். ஆரியர் நுழைவால் தமிழ்ச் சமூகம் சீர்குலைந்தது என்ற அடிப்படையில் திராவிட/தமிழ்ச் சார்புடையவர்கள் தமிழர் வரலாற்றைப் பொருள்படுத்துகின்றனர். கே.கே.பிள்ளை எழுதிய தமிழர் வரலாற்றில் இந்த நோக்கமே முன்னுக்கு வருகிறது. நீலகண்ட சாஸ்திரியார் முன் வைக்கிற கோட்பாடு வேறு.

இவர்களைப் போன்று இன்னும் பலரும் தமிழர் வரலாறு குறித்து என்ன என்ன கோட்பாடுகளை முன்வைத்து ஆராய்ந்தனர் என்பது பற்றி நமக்கு ஆய்வுகள் தேவை. தமிழர் வரலாறு குறித்து வெளிநாட்டவர் சிலரும் ஆராய்ந்துள்ளனர். கல்வெட்டு ஆய்வறிஞர்கள் சிலரும் விடாப்பிடியாகத்தம் ஆய்வுகளைத் தொடருகின்றனர். தமிழ் மக்களிடம் இன்று இடம்பெற்றுள்ள சில பொருள்கள், பழக்க வழக்கங்கள் குறித்தும் மிக வித்தியாசமான ஆய்வை பேராசிரியர் தொ.பரமசிவம் முன்வைக்கிறார்.

என்னைப் பொருத்தவரை மார்க்சிய ஆய்வுமுறையைப் பெரிதாக நம்புகிறேன். வரலாறு குறித்த மார்க்சிய ஆய்வுகள் என்ற முறையில் மேலும் ஆய்வுகளைத் தொடருவதற்குத் தமிழக

அளவில் மட்டுமல்லாமல் இந்திய அளவிலும், உலக அளவிலும் ஏராளமான வாய்ப்புகள்/தேவைகள் இருக்கின்றன. வர்க்கப் போராட்டம் இல்லாது வரலாற்றுக் காலஅளவில் சமூகத்தில் இயக்கம் இல்லை என்பது மார்க்சியத்தின் ஓர் அடிப்படை. வரலாற்றில் எந்த ஒரு நிகழ்வையும், அது எவ்வாறு தோன்றுகிறது, நிலைபெறுகிறது, மாறுகிறது அல்லது மறைகிறது அல்லது எதற்கு இடம் கொடுத்து மறைகிறது என்றெல்லாம் அறிந்து கொள்வதற்கு வரலாற்றின் பொருளியல் முதலிய சூழலை ஆராய வேண்டும்.

உற்பத்தி சக்திகள்/உற்பத்தி சாதனங்கள்/உற்பத்தி முறை என்பது பற்றிய ஆய்விலிருந்து தான் வரலாற்று ஆய்வையே தொடங்கவேண்டும் என்று மார்க்சியர் வற்புறுத்திச் சொல்வதற்கான நியாயம் முக்கியமானது எனினும், இதிலேயே முழுக் கவனம் செலுத்துவதன் மூலம் இதற்கான வரலாற்றுத் தடயங்கள் நமக்குத்தேவையான அளவு கிடைப்பதுமில்லை.

மேற்கத்திய சமூகத்தைப் பொருத்தவரை ஆதிகாலப் பொதுமைச் சமூகத்தை அடுத்து அடிமைச் சமூகம், நிலமானியச் சமூகம், பிறகு முதலாளியச் சமூகம், அதன் பிறகு சமதர்ம சமூகம், என்று மார்க்சியர் சிலர் முன்வைக்கும் வரையறை அதே வடிவில் கீழைச் சமூகங்களுக்குப் பொருந்துவதில்லை. அப்படியானால் இந்தியச் சமூகம் பற்றிய ஆய்வுக்குத் தனிவிதிகளை நாம் காண வேண்டும்.

எது எப்படி இருந்தபோதிலும், எந்த ஒன்றையும் வரலாற்றின் பொருளியல் சூழலில் வைத்து ஆராய்வதுதான் மார்க்சிய நெறி என்பதை மார்க்சியர் அனைவரும் ஒப்புக்கொள்வார். இந்த அடிப்படையில்தான் மதம், கலாச்சாரம், அறிவியல், கலை, இலக்கியங்கள் பற்றிய ஆய்வையும் கொண்டு செல்ல வேண்டும். இந்த அடிப்படையை முற்றாக மறுக்காத நிலையில் மதம், கலை, இலக்கியங்கள் முதலியவற்றின் வளர்ச்சிக்கான தனி விதிகளையும் மார்க்சியர் மறுப்பதற்கில்லை.

ஒருமுறை இவை தோன்றிய பிறகு இவை தன் சுய விதிகளைக் கொண்டு இயங்கும் என்பதை ஏங்கல்சு

விளக்கியுள்ளார். மார்க்சியத்தின் வரலாற்று ஆய்வு நெறி குறித்து இந்த அளவில் சுருக்கமாகச் சொல்வதோடு நிறுத்திக் கொள்கிறேன். நான் முதன்மையாக தமிழ் இலக்கிய மாணவன். வரலாறு பற்றிக் கூடுதலாக அக்கறை உண்டு எனினும் தமிழகம் தொடர்பான வரலாற்று ஆய்வில் நான் நேரிடையாக ஈடுபட்டவன் அல்லன். இலக்கியம் என்ற ஆதாரத்தைவிட கல்வெட்டு முதலியவை கூடுதலான உறுதியான சான்றுகள் என்று நான் அறிந்துள்ளேன். கல்வெட்டு ஆய்வுகள் குறித்து வெளி வந்திருக்கிற நூல்களோடு எனக்குப் பயிற்சி இல்லை. கடைசியாக 'தமிழ்க் கல்வெட்டுக்களில் அறம்' என்ற பேராசிரியர் கா.அரங்கசாமி அவர்களின் ஆய்வேட்டை படித்தபொழுது எனக்குள் ஏற்பட்ட வியப்புக்கு அளவில்லை.

இப்படி நேரிடையாக வரலாற்று ஆய்வில் நான் ஈடுபடவில்லை என்றபோதிலும் தமிழர் வரலாறு குறித்து திராவிட இயக்கத்தவரும் பிறரும் முன்வைக்கிற கொள்கைகள்/கோட்பாடுகள் குறித்து ஓரளவுக்கேனும் நான் அறிவேன். இவர்களோடு மார்க்சியர் மாறுபடுவது குறித்து நான் அறிவேன். மார்க்சியம் குறித்த புரிதலில் இவர்களோடு நான் கொள்ளும் முரண்பாடுகள் எனக்கு முக்கியமானவை என்று தோன்றுகிறது. தமிழ் இலக்கிய மாணவன் என்ற முறையில் எனக்குள் செரிந்துள்ள தமிழ் உணர்வு மார்க்சியம் குறித்த எனது பார்வையை மேம்படுத்தி உள்ளது. அதுபோலவே மார்க்சியம் குறித்த எனது புரிதல் மூலம் தமிழிலக்கியம்/தமிழர் வரலாறு குறித்து நான் கூடுதலாகப் புரிந்து கொள்கிறேன். இதுதான் எனக்கான பார்வை. இந்தப் பார்வையில் உள்ள குறை நிறைகளை நண்பர்களின் ஆய்வுக்கு விட்டுவிடுகிறேன்.

சங்க காலத்திற்கு முற்பட்ட காலச்சூழலில் இருந்த ஆதிப் பொதுமைச் சமூகத்தின் பொதுமை அறம், அடுத்து வந்த வரலாற்றுக்காலம் முழுவதும் தமிழ்ச் சான்றோர்கள் மற்றும்மக்கள் மூலம் தொடர்கிறது என்பதை நான் அறிந்துள்ளேன். கம்பரிடத்தில் பொதுவுடமைக் கருத்துக்கள் எந்த ஆதாரத்தில் இருக்கின்றன என்பதை அறிஞர் கைலாசபதி அவர்கள் வியந்து கூறினாரே ஒழிய, கம்பருக்குள்ளும் ஆதிப்பொதுமைச் சமூகத்தின்

அறம் தொடர்வதை அவர் கண்டுகொள்ளவில்லை.

பாரி முதலிய வேளிர்கள் இனக்குழு சமூகத்தின் தலைவர்கள் என்ற முறையில் அவர்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை அழித்தால் அல்லாமல், தம் அரசு அதிகாரத்தை மக்கள் ஏற்க மாட்டார்கள் என்று கருதித்தான் வேந்தர்கள் படையெடுத்து அவர்களை அழித்தனர். சங்க இலக்கியங்களில் மேம்பட்டுத் தெரிகிற பொதுமை அறம், தமிழ் அறம். தமிழர்களின் அறம் சமத்துவம்/சமதர்மம் என்று நம் காலத்தில் பொருள் படுத்தத் தக்க அறம்.

சங்ககாலத்தில் வணிக வர்க்கம் வளர்ச்சி பெற்று வந்தது என்பதை மறுப்பதற்கில்லை. நாகரிக வளர்ச்சியிலும் வணிக வர்க்கத்தின் ஆக்கத்திறன்களை நாம் ஏற்க முடியும். இதே கால அளவில் வேந்தர்கள், மன்னர்கள் இருந்தார்கள் என்பதாலேயே இது நிலவுடமையாளர்களின் ஆதிக்கம் என்று வரையறுப்பதற்கில்லை. வள்ளுவரையும், இளங்கோவடிகளையும் வணிக வர்க்கச் சார்பினர் என்று கூறுவதற்கில்லை. இவர்கள் மக்கட் சார்பினர். பொதுமை அறத்தை தமக்குள்ளும் கண்டு போற்றுபவர்கள். அநீதியான அரசு அதிகாரத்தை ஒழிப்பதைக்கூட இவர்கள் வேண்டுபவர். தெய்வங்களுக்கு பொருள் காண்பவர்கள்.

வணிக வர்க்கத்தினர் என்னதான் செல்வாக்கு பெற்றபோதிலும் மன்னர்களின் ஆட்சியை அவர்களால் ஒழிக் கமுடியாது. 15/16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியச் சூழலில் தோன்றி வளர்ந்த வணிக வர்க்கம் பின்னர் தொழிற்புரட்சியிலும் ஈடுபட்டனது. சமூக உற்பத்தியில் பெரும் பகுதிக்கு இவர்கள் காரணமாக இருந்தார்கள். உழவர்களிட மிருந்து பெருமளவு வேறுபட்ட தொழிலாளர் படையை இவர்கள் உருவாக்கி இருந்தனர். இதன் காரணமாக ஐரோப்பாவில் இருந்த நிலமானியச் சமூகத்தில் தலைவர்களாக இருந்த மன்னர்களையும் மதவாதிகளையும் இவர்கள் கேள்விக்கு உட்படுத்தினர். மன்னர்களைத் தூக்கியெறிந்தனர். தேசிய மதங்களை, தேசங்களை உருவாக்கினர். இம்மாதிரி ஒரு சூழ்நிலை சங்க காலத்திலோ, அடுத்துவந்த காலத்திலோ இல்லை.

வள்ளுவர் இளங்கோ மற்றும் சங்க இலக்கியச் சான்றோர் ஆகியவர்களைத் தமிழக மார்க்சியர் புரிந்து கொள்ளாததற்கு மேலும் ஒரு முக்கியமான காரணமுண்டு. தமிழகத்தில் திராவிட இயக்கத்தினரும், தமிழ்ப் பற்றாளர்களும் வள்ளுவர், இளங்கோ முதலியவர்களை உள்ளடக்கிய பழங்காலத் தமிழ்ச் சமூகத்தைப் போற்றி வந்ததை மார்க்சியர் ஏற்கவில்லை.

சங்ககாலம் பொற்காலமாக இருக்கமுடியாது என்பது உண்மைதான். ஆதிப்பொதுமைச் சமூகத்திலிருந்து தமிழ்ச் சமூகம் இன்னும் முற்றாக விடுபடாத சூழலில்; தமிழ் மக்களின் அன்றைய மேன்மையை நம்மால் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் இன்னும் சாதி, மதம், சடங்குகள் முதலியவற்றுக்கு முதன்மை தரவில்லை. மன்னர்கள் இன்னும் மக்களின் மீது கடுமையான ஆதிக்கவாதிகளாக மாறவில்லை. அறங்கூறும் அவைகள் இருந்தன. பார்ப்பனர் இன்னும் தமிழ்ச்சமூகத்தை ஆட்டிப்படைப்பவர்களாக இல்லை. மார்க்சியர் போற்றிச் சொல்லும் பொருள் முதல்வாதக் கூறுகள் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் அழிந்து விடவில்லை. இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் சங்க இலக்கியம் முதலியவற்றை நாம் போற்றுவதற்குக் காரணம் நமக்குத் தேவையான நிகழ்காலம் மற்றும் எதிர்காலக் கூறுகள் சங்க காலத்தோடு ஒத்திருக்கின்றன என்பதற்காகத்தான் இருக்கமுடியும். திராவிட/தமிழ் இயக்கத்தோடு முற்றிலும் எதிர்நிலை எடுத்தபோது தமிழக மார்க்சியரின் மார்க்சிய அறிவு இப்படி முடம்பட்டிருப்பது என்பதை நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

5

சங்ககால முடிவுக்கு பிறகு சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக் காலத்திற்குள் இப்பொழுது நுழைகிறோம். நுழையும்போது நாம் எதிர்ப்படுவது களப்பிரர்களின் காலம். 'களப்பிரர்கள் தமிழகத்திற்கு வெளியிலிருந்து, கர்நாடகத்திலிருந்து வந்தவர்கள்' என்று சொல்லப்பட்ட போதிலும் அந்தக்கால அளவில் கர்நாடகம் என்று பிறகு சொல்லப்பட்ட பகுதியும் தமிழ் வழங்கும் நிலமாகவே இருந்தது. இவர்கள் சமண மதத்தோடு உள்ளே நுழைந்தார்கள்.

ஒரு மூன்று நூற்றாண்டுகளுக்கு இவர்களின் தாக்குதலால் மூவேந்தர் எவரும் இங்கில்லை. ஒருசிலர் மறைந்து வாழ்ந்திருக்கலாம்.

சிலப்பதிகாரத்தில் மதுரை நகரத்தின் அழிவு, மணிமேகலையில் புகார் நகரத்தின் அழிவு, தொண்டி, முசிறி கடல்கோள் முதலியவற்றையும் இங்கு சேர்த்துப் பார்க்க முடியும். சங்கத்தை அடுத்த பிற்காலத்தில் தமிழகம் முழுவதும் கடுமையாகப் பரவியிருந்த வறுமை நிலைக்குத் திருக்குறளும் மணிமேகலையும் சான்றுகள். சங்க காலச் சமூகத்திலும் சில சீரழிவுகள் இருந்தன. எனினும் கொடிய வறுமைக்கான காரணங்களை மன்னர்களுக்கு இடையில் வேளிர்களோடு அவர்கள் தொடர்ந்து நடத்திய போர்களில் காணலாம். வறுமை மிக்க நிலையில் அறங்கள் அழியும். பெண்டிர் கற்பு சிதைவுறும், கள்ளும் சூதும் பெருகும். இத்தகைய சீர்குலைவின்போதுதான் களப்பிரார்கள் எழுச்சியை இங்கு நாம் காண்கிறோம். இவர்கள் மக்கள் சார்பினர்.

முன்னர் தமக்கு உரிமையாக இருந்து, பின்னர் பிராமணர் அகப்படுத்திக்கொண்ட இரண்டு கிராமங்களை முன்னைய உரிமையாளருக்கு களப்பிரர் மீட்டுக் கொடுத்தனர். களப்பிரர் காலத்தில் தமிழ் மொழியும் இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றன. இவர்களை அநாகரீக மக்கள் என்றும் காட்டு மிராண்டிகள் என்றும் கூட சைவ சமய அறிஞர் கூறுகின்றனர். மன்னர்கள் மற்றும் வணிகர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக மக்களின் எழுச்சி என இதைக் கூறுவதில் தவறில்லை. இத்தகைய கலகங்கள் வரலாற்றுக் காலம்தோறும் எல்லா நாடுகளிலும் நடைபெறுகின்றன. மார்க்சியர் இதைப் புரிந்துகொண்டு பாராட்டமுடியும்.

6–ஆம் நூற்றாண்டு வாக்கில் மீண்டும் பாண்டியர்கள். அதன்பிறகு 9–ஆம் நூற்றாண்டு வாக்கில் சோழர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். தமிழக வரலாற்றில் இந்த இடைக்காலம் மிக முக்கியமான காலம். இந்தக் காலத்திலும் பாண்டியர்கள் மற்றும் சோழர்களுக்கு இடையில் கடுமையான போர்கள். சோழர்கள்

தமிழக எல்லை கடந்தும் கடல் கடந்தும் படைநடத்திப் பல நாடுகளை வென்றனர்.

இந்தக் கால அளவில்தான் தமிழகத்தில் பிரம்மாண்டமான கோயில்கள் எழுந்தன. மிக விரிவான அளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்பட்டன. காவிரியில் இருந்தும், வைகையில் இருந்தும் வெள்ளக் காலத்தில் நீரை நிரப்பி வைப்பதற்கென தொடர்ச்சியான குளங்களும் ஏரிகளும் உருவாயின.

தமிழகம் முழுவதும் வேளாண்மையை மையமாகக் கொண்டு ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருந்தன. கிராம சபைகள் எழுந்தன. இவற்றை ஓரளவுக்கு குடியரசுகள் என்று வரலாற்று அறிஞர் குறிப்பிடுகின்றனர். கிராமச் சபை நிர்வாகத்தில் அந்த கிராமத்தில் வாழும் நில உடமையாளர் பங்கு பெற்றனர். கோவில்தான் ஊரின் மையம். அங்குதான் கிராமசபையும் அமைந்திருக்கிறது. கிராமத்திற்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் கிராம சபை மேற்கொண்டது. ஏரி, குளங்கள் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம், மருத்துவம், பஞ்ச காலத்திற்கென தானியங்கள் சேகரித்து வைத்தல், நீதி நிர்வாகம் என்று அனைத்தையும் கிராம சபையினர் கவனித்துக்கொண்டனர். சபையில் உறுப்பினர் ஆவதற்கு ஏராளமான விதிமுறைகள். நிர்வாகத்தில் மன்னர் தலையிடமுடியாது. புதிய வரி விதிப்பதென்றாலும் கிராம சபையின் இசைவு தேவை.

இந்தக் கால அளவில்தான் வடக்கிலிருந்து ஆயிரக்கணக்கில் பிராமணர் குடும்பங்கள் மன்னர்களின் ஆதரவோடு தமிழ் நாட்டுக் கிராமங்களில் குடி அமர்த்தப் பட்டன. பிரம்ம தேயம் என்ற முறையில் விளை நிலங்கள் இவர்களுக்கு வரியிலியாக தரப்பட்டன. வேதம் ஓதுவது, யாகம் செய்வது இவர்களின் கடமை. பிரம்ம தேயத்தை பிராமணர்களே நிர்வாகம் செய்து கொண்டனர். நிலங்களில் இறங்கி அவர்கள் உழைத்திருக்க மாட்டார்கள். உழைப்பவர்கள் உழவர்கள். கிராமச் சபைக்கோ அரசுக்கோ செலுத்த வேண்டிய வரிப்பணத்தை இவர்கள் தானியமாகவோ, பணமாகவோ பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டும். இவ்வளவு பெருந் தொகையில்

பிராமணர்களைக் குடியேற்றியதற்கான காரணம் நமக்குப் புரியவில்லை. வேதங்களாலும், யாகங்களாலும் நாடு நலம்பெறும், மழை தவறாமல் பெய்யும், கொடிய நோய்கள் இருக்காது, இயற்கை உற்பாதங்கள் நிகழாது, மன்னர் ஆயுள் பெருகும். மன்னராட்சி நடைபெறும். இப்படி அந்தக் காலத்தில் நம்பிக்கைகள் ஏற்பட்டிருக்க வேண்டும். மழை முதலியவை நாட்டு மக்களின் நலத்திற்கு இன்றியமையாதவை. ஆகவே மன்னர் மட்டுமல்லாமல் மக்களும் இவற்றை நம்பி இருக்கலாம்.

ஆனால் இங்கு ஒன்றை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். விளை நிலங்களை கிராமச் சபைகளிடமிருந்து பறித்து மன்னர்கள் பிராமணர்களுக்குத் தாரை வார்த்திருக்க முடியாது. நாடு முழுவதும் மன்னரின் முக்கிய கடமை காடு கெடுத்து நாடாக்குதல், மற்றும் குளம் தோண்டுதல். புதிய நிலங்களை ஏற்படுத்தி அங்கு பிராமணர்களைக் குடியமர்த்தி யிருக்க வேண்டும். கிராமச்சபை நிர்வாகத்தில் பிராமணர்கள் தலையிட முடியாது. கிராமச்சபையினரின் நீதி நிர்வாகத்திலும் மனு நெறிகள் அநேகமாக இடம் பெறவில்லை. முந்திய காலத்திலும் இருந்த அறங்கூறவைகளின் வளர்ச்சி பெற்ற வடிவமே கிராமச் சபைகள் என்று கூற முடியும். கிராமச் சபைகளின் நீதி நிர்வாகம் பற்றி ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் நாம் காணும் சான்றுகள் இன்றும் நமக்கு வியப்பை அளிக்கின்றன. கொலைக் குற்றத்திற்குக் கொலைத் தண்டனை இல்லை.

கோயிலில் விளக்கேற்றுதல், விளக்கேற்றுவதற்கு நெய் வழங்கல், நெய்க்காக ஆடுகள் அல்லது பசுமாடுகளைக் கோவிலுக்கு வழங்குதல், பசுமாடுகள் இடையர்களிடம் ஒப்படைக்கப்படுதல் அவற்றைப் பராமரிக்கும் இடையர்கள் தலைமுறைகள் தோறும் கோயிலுக்கு நெய் வழங்க வேண்டும்– இப்படி எத்தனையோ வகையான ஏற்பாடுகள். சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று விதிமுறைவகுத்து விட்டு அப்புறம் சட்டத்தை பணமும் திறமையும் உள்ளவர் தமக்கேற்ற முறையில் வளைத்துக் கொள்ளும் முறை அங்கு இல்லை. தரமறிந்து நீதி வழங்கினர்.

இந்த இடத்தில் சாதி அமைப்பு பற்றியும் மார்க்சு கூறியுள்ள ஆசியமுறைச் சமூகம் பற்றியும் சிலவற்றைச் சொல்ல வேண்டும். கி.பி.8–ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதும் சாதி அமைப்பு நிலை பெற்றது என்று வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். ஒரு சமுதாயம் தனக்கென ஒரு சமூக முறையைப் படைத்துக் கொள்வதற்கான தேவையிருக்கிறது. இந்தியச் சமூகம் தனக்கென இந்த முறையைப் படைத்துக் கொண்டது. அதாவது ஒரு கிராமத்தில் நில உடமையாளர் மட்டுமே தேர்தல் மூலம் கிராமச் சபையில் இடம் பெறுகின்றனர். வேளாண்மை முதலிய செயல்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை தச்சர், கொல்லர் முதலிய்வர் செய்து தர வேண்டும். இவர்கள் குடியிருப்பதற்கு வீட்டு நிலம், உணவின் தேவைக்கு ஆண்டுதோறும் இவ்வளவு தானியம் என்ற அவர்களுக்குத் தருவது நிலவுடமையாளர் கடமை.

இவர்களுக்கு கிராமச்சபை நிர்வாகத்தில் இடமில்லை. இவர்களுக்கு நிலவுடமையில்லை. இவர்கள் கிராமத்திற்கு வெளியில் இருப்பவர்கள். சிலசமயம் நிலவுடமையாளர் குடும்பத்துப் பெண் கைவினைஞர் வீட்டு ஆணைக்காதலித்து மணம்செய்து கொள்வதென்றால், இவர்களை ஊருக்கு வெளியில் ஒரு தொழிலை வகுத்து குடிவைப்பவர். இவ்வகைப் பட்ட கைவினைஞர்கள் 12/18 சாதியினர். இதுதான் அன்றைய சமூக நடைமுறை/சாதிமுறை. இதைத்தான் ஆசிய உற்பத்தி முறை என்று மார்க்சு குறிப்பிடுகிறார். இந்த சமூக முறையைப் படைத்துக்கொண்டது இந்தியச் சமூகம். நெடுங்காலம் இந்தச் சமூக முறை நிலை பெற்றிருந்தது.

சோழர்களின் ஆளுகைக்குப் பிறகு விஜய நகரமன்னர்கள் மற்றும் நாயக்கர் காலத்தில் கிராம சபைகள் சீர்குலைந்தன. ஆங்கிலேயர் காலத்தில் மேலும் சீர் குலைவு. ஆனால் இன்று வரையில் இதன் சீரழிந்த எச்சங்களை நாம் பார்க்க முடியும்.

இப்பொழுது இது வரையில் நாம் பார்த்த பலவற்றை நின்று நிதானமாக ஆய்வுக்குட்படுத்த வேண்டும். இந்தக்கால அளவில் இங்கு நிலை பெற்றது நிலவுடமையாளர்களின் ஆதிக்கம் என்றோ

இதை நில மானிய சமூகம் என்றோ மார்க்சியர் குறிப்பிடுவதற்கு இங்கு அநேகமாக ஆதாரம்இல்லை. மேற்கத்திய சமூகத்தில் முன்னர் நிலவிய அடிமைச் சமூக முறை மாறிய பின்னர் எழுந்தது நிலமானிய முறை என்ற வரையறைக்கு இங்கு இடம் இல்லை.

கிரேக்கம் மற்றும் ரோம் சமுதாயத்தில் நிலவிய பண்ணை அடிமை முறை இங்கில்லை. கிரேக்கத்தில் சமூகத்தின் உற்பத்தி அனைத்தையும் செய்தவர் அடிமைகள். இங்கு மன்னர் அரண்மனைகளில் அடிமைகள் இருந்தனர் என்பது உண்மை. பகைமன்னரின் மனைவியரும் அந்தப்புரத்தில் அடிமைப் பெண்களாகப் பணியாற்றினர். இதை அடிமைமுறை என்றோ, இது அடிமைச் சமூகம் என்றோ சொல்வதற்கு வாய்ப்பில்லை. கிராமச்சபை நிர்வாகத்திற்கு வெளியில் இருத்தப்பட்ட கைவினைச் சாதியர் முதலியவர்களுக்குச் சில உரிமைகளும் கடமைகளும் உண்டு. இவர்களையும் அடிமைகள் என்று சொல்வதற்கில்லை.

இந்தக்கால அளவில் பஞ்சமர்கள் என்று நாம் குறிப்பிடும் தாழ்த்தப்பட்ட சாதியினர் நிலைமை பற்றி நாம் விரிவாகச் சொல்வதற்கில்லை. இத்தகைய நடைமுறை இன்னும் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். சூத்திரர் எனப்பட்டவர் பஞ்சமர்கள் அல்லர். தமிழ்ச் சமூகத்தில் வர்ணாசிரம நடைமுறை என்பது உறுதியாகச் செயல்பட்டது என்பதற்கு ஆதாரம் குறைவு. இங்கு சத்திரியர் இல்லை. வைசியர் இல்லை. வேளாளர் முதலிய சாதிகளைச் சூத்திரர் என்று சொல்வதை அவர்கள் ஏற்றிருக்க முடியாது. பிராமணர்கள் வந்தார்கள், தமிழ்ச் சமூகம் அழிந்தது என்று சொல்லப்படும் கூற்று நாம் பார்த்து வரும் இந்தக்கால அளவில் அதே அளவில் உண்மை இல்லை.

இங்கு ஊர்கள் தோறும் கோவில்கள் எழுந்தன. தஞ்சைப் பெரிய கோயில் போன்ற பிரமாண்டமான கட்டமைப்புக்கள் இங்கு அற்புதமாய் எழுந்தன. ஒரு ஊரை உருவாக்குவது என்றால் அந்த ஊரில் மையத்தில் ஒரு கோயில் தேவை. கோவிலில் தெய்வ வழிபாடும் ஊர் நிர்வாகமும் ஒரு சேர நடைபெறுகின்றன. நிர்வாகத்தினருக்கான கட்டமைப்பு கோவில். கோவிலை உருவாக்குவதன்மூலம் மக்கள் தன்னை ஏற்குமாறு மன்னன்

செய்ய முடியும். கோவிலுக்கு நிலம் முதலியவற்றை மன்னனும் தானம் செய்தான். மன்னன் மனைவியர், படைத்தலைவரும் சாதாரண மக்களும் செய்தனர்.

கோவில் என்ற அமைப்பின் கீழ் சிற்பம், இசை, நடனம் முதலிய க்லைகளும் வளர்ந்தன. வேதம் என்று சொன்ன அளவில் வடமொழி வேதங்களை மட்டுமே நாம் குறிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. வேதம் என்பது மறை; திருக்குறள், தேவாரம் என்பனவும் மறைமொழிகள்.

மேலும் ஒன்றை இங்குக் குறிப்பிடவேண்டும். வரலாற்றில் தனிவுடமையும், அரசதிகாரமும் இவற்றின் தொடர்பாக எத்தனையோ நிறுவனங்களும் வந்து சேர்ந்துவிட்டன. இந்தச் சமூகத்தில் உழவர்களும் கைவினைஞர்களும் பெரும் தொகையினராகத்தான் இருந்திருக்கவேண்டும். உடைமை முறை என்பது மக்கள் மனத்தில் நிறைய கலவரங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்தக் கால அளவில் இவற்றின் மூலமே நாகரிக வளர்ச்சி என்பது பெருமளவில் நடைபெறுகிறது. வேளாண்மை மற்றும் கைவினை முதலியவற்றில் எத்தனையோ நுட்பங்கள் கூடியிருக்க முடியும். கட்டிடம், சிற்பம், இசை, நடனம் முதலிய கலைகளின் வளர்ச்சியில் மனித ஆளுமையின் மலர்ச்சி பெருகியிருக்க முடியும். சமூகத்தில் உள்ள வணிகர்கள் மூலம் எத்தனையோ புதிய புதிய வரவுகள் மற்றும் வெளிநாட்டு அனுபவங்கள். சமூகத்திலுள்ள மேட்டுக் குடியினரின் சுகபோகங்கள், ஆடம்பரங்கள், கூடவே சீரழிவுகள், மேலும் படையெடுப்புகள், பேரழிவுகள், வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட அடிமைகள் மற்றும் செல்வங்கள்.

ஆக்கமும் அழிவும் ஒருசேர நடைபெறுகின்றன. வரலாற்றில் இதைத் தவிர்த்திருக்க முடியாது. மார்க்சியருக்கு இது கடுமையான சிக்கல். மாபெரும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் மாபெரும் கோவில் அமைப்பையும் பிரித்துப் பார்க்க முடியாது. கணித அறிவும், பொறியியல் முதலிய அறிவுகளும் இங்கு தொடர்ந்து வளர்ச்சி பெறுகின்றன.

அதேசமயம் கிராமச் சபை, நீதி நிர்வாகம் முதலியவற்றையும் நாம் பார்க்கிறோம். அறத்தை இவர்கள் அழித்து விடவில்லை. பழம் சமூகத்தின் அறம் இங்கும் தொடர்கிறது. நாகரிக வளர்ச்சியின் போது அறமும் சிக்கலுக்கு உள்ளாகும் என்பதிலும் ஐயமில்லை.

இந்தக்கால அளவில் இன்னொன்றையும் நாம் பார்க்கிறோம். பாண்டியரும் சோழரும் சைவ சமயச்சார்போடு செயல்படுகின்றனர். முன்பு இங்கு வந்து வளர்ச்சி பெற்ற பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் இங்கு இந்தக் கால அளவில் தளர்ச்சி பெற்றன என்பதைத் தவிர அழிந்து விட்டன அல்லது அழிக்கப்பட்டன என்று கூறமுடியாது. சைவம் முன்னிலைக்கு வருகிறது. வைணவமும் முன்னுக்கு வருகிறது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாடெங்கும் பாடிப் பரவிச் செல்கின்றனர். சமண, பௌத்த கோவில்கள் வைணவ, சைவக் கோவிலாக மாற்றம் பெறுகின்றன. எல்லாச் சமயக் கோவில்களுக்கும் மன்னர்கள் ஆதரவு தருகின்றனர். சமணர்கள் முன்பு அரசின் ஆதரவோடு இருந்த நிலை இப்போது இல்லை. சமணர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படவும் செய்தனர். சைவத்தை நிலைநிறுத்த எவ்வளவோ இவர்களும் செய்தனர்.

மதம் என்ற வடிவிலும் மதங்களுக்கு இடையிலான மோதல் என்ற வடிவிலும் நடைபெறுவது வர்க்கப்போர் என்று மார்க்சியர் கருதுகின்றனர். இந்தக் கால அளவிலான சமூகத்தின் வர்க்க வகைப்பட்ட நிலவரங்கள் நமக்குச் சரியாகத் தெரியவில்லை.

இயற்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும், தன்னிலிருந்தும் பிரிந்தநிலையில் தனக்குள்ளும் பிளவுபட்டு மனிதன் அந்நியன் ஆனதன் வெளிப்பாடுதான் சமயம் என்று மார்க்சியர் கூறுகின்றனர். சமயத்தினுள்ளும் வர்க்க போராட்டம் என்ற முறையில் ஒரு பக்கத்தில் உடைமையாளர், மதபீடங்கள், புரோகிதர்கள் என்பதையும் மறுபக்கத்தில் மக்களையும் நாம் பார்க்கிறோம். நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் மக்கட்சார்பையும் நாம் காணமுடியும். இந்தக் கால அளவில் பேரளவில் தோன்றி வளர்ந்த சைவம், வைணவம் ஆகியவற்றின் ஆக்கத்தை நம்மால் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ள இயலவில்லை. எத்தகைய கடுமையான சமூகச்

சிக்கல்அல்லது தனக்குள் பிளவுண்ட மனிதனின் சிக்கல் சமயத்தின் வடிவில் வெளிப்பட்டது என்பதை விளக்க பிராமணர்களையும் சாதியையும் இங்கு தொடர்புப்படுத்திப் பார்க்கவும் இயலவில்லை.

இன்னும் ஒன்றையும் சொல்லலாம். சமூகத்தின் பரப்பில் பெரும்பான்மை மக்கள் உடமையாளர்கள், மன்னர்கள், மன்னரைச் சார்ந்தவர்கள், கலைஞர்கள் உழைக்கும் மக்கள் என்று பலரும் வாழ்கின்றனர். இவர்களுக்கு வாழ்க்கை முக்கியம். அதற்காக எவ்வளவோ செய்ய வேண்டும். இடையில் கடவுள், சமயம், சடங்குகள் என்பன வந்துபோகும். இவற்றையே கட்டிக்கொண்டு இவற்றையே முழுமையென நம்பி மக்களும் உடமையாளரும் வாழ்வதில்லை. ஒருசிலரைத்தான் தெய்வம் முதலியவை ஆக்கிரமித்துக்கொள்கின்றன. இவர்கள்தான் தெய்வமே கதியென்று அலைகின்றனர். வரலாற்றாய்வில் ஈடுபடும் பொழுது சமயத்திற்கான இடம் பெரிதாக இருக்கமுடியாது.

6

இதுவரையில் வரலாற்றில் தமிழர் என்று நாம் பார்த்து வருகையில், தமிழ் மக்களின் சாதனைகள் என்று இன்றுவரையில் நாம் பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் எவ்வளவோ பார்த்து வருகிறோம். தமிழ்ச் சமூகம் மேன்மையுடையது என்பதற்கு இவ்வளவும் சான்றுகள். ஆக்கங்களையும், அழிவுகளையும் மனத்தில் இருத்திப் பார்க்கிறோம். வர்க்கப் பார்வை என்ற முறையில் அடித்தள மக்கள் வாழ்வுக்கு மட்டுமே அழுத்தமோ, முதன்மையோ தந்து, தனியுடமை அரசதிகாரத்தை முழு அளவில் காய்வதன்மூலம் வரலாற்றை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. எந்த ஒரு சமூகத்திலும் முன்னோக்கி இயங்குவதென்றால், மனிதர்களின் உழைப்பையும், அறிவையும், பண்புகளையும் பயன்படுத்தியாகவேண்டும். மேம்படுத்தியாக வேண்டும்.

ஆதிக்கம் எப்பொழுதும் சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் செய்யும். சமூகம் முன்னோக்கி இயங்க இவற்றின் அளவு உச்சளவிலோ குறைந்தளவிலோ நடைபெறத்தான் செய்யும். சுரண்டலுக்கும், ஒடுக்கு முறைக்கும் உள்ளாகிறவர்

அடித்தள மக்கள்தான். ஆனால் ஒரு சமூகத்தின் இயக்கம் எவ்வாறு நடைபெறுகிறது என்று இவர்கள் அறிவுபெறாத அந்தக் காலத்தில் தெய்வ விதி என்றோ, மன்னராட்சி இல்லாமல் சமூகம் இல்லை என்றோ இப்படி ஏதாவது உணர்வோடுதான் வாழ்வைச் சகித்துக் கொள்ள இயலும். மன்னர்களும் உடமையாளரும் கூட சமூகத்தின் உள்ளார்ந்த இயக்கம் குறித்து அறிந்து கொள்வதும் அன்றைய நிலையில் சாத்தியமில்லை.

இன்னும்சில நூற்றாண்டுகள் கழிந்து மேற்கத்தியரோடு நமக்கு தொடர்பு ஏற்பட்டு மக்களாட்சி என்பதற்கு அறிமுகம் ஆகி வரலாற்றின் மக்கள் பங்கு என்ன என்பது பற்றிச் சரியான அறிவைப் பெறும் பொழுதுதான் இந்தச் சிக்கலிலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக்கொள்ள இயலும். சாணக்கியர் போன்றவருக்கு சமூகத்தின் இயக்கம் ஓரளவுக்கேனும் தெரிந்திருக்கிறது. இந்தப் புரிதல் பிராமணர்களில் ஒருசிலருக்கும் இருந்திருக்கக் கூடும். தெய்வம், மந்திரங்கள் பற்றி அறவே நம்பிக்கை இல்லாமல் தெய்வத்தின் பெயர் சொல்லி மக்களை மயக்க முடியும் என்று இவர்கள் கருதியிருக்கக் கூடும். இவற்றையும் உள்ளடக்கி சமூகம்/வரலாற்று இயக்கம் பற்றித் தேவையான அளவுக்கேனும் புரிந்துகொள்ளும் காலம்வரை மக்கள் தம் கால வரலாற்று மாயைகளுக்குள் சிக்கிக் கிடப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதற்காக நாம் உடமையாளர்களையோ, அரசதிகாரத்தையோ இப்பொழுது காய்வதில் ஒரு பயனும் இல்லை. நம் காலச் சுவடில் எந்தவகையிலும் ஆதிக்கத்தோடு நம்மால் ஒத்துழைக்க முடியாது என்பதில் நாம் உறுதிபெறும் வரை முன்னோர்களைக் காய்வதில் பொருள் இல்லை.

உலகில் உள்ள எல்லாச் சமூகங்களைப் போலவே தமிழ்ச் சமூகம் சில அரிய தனித்தன்மைகளோடு இயங்கி வந்தது என்பதைப் பார்த்தோம். அதன்பிறகுதான் தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சி தொடங்குகிறது என்பதை இனிப் பார்க்க வேண்டும். வீழ்ச்சிக்கான காரணிகள் முன்னைய சமூகத்தினுள்ளும் சில இருந்திருக்க வேண்டும். இவை குறித்து இங்கு விரிவாக ஆராய வேண்டியதில்லை. அடிமை முறைச் சமூகம் இங்கில்லை. பெண்ணடிமைத்தனம் என்று அழுத்திச் சொல்வதற்கும்

இடமில்லை. பிராமணர்கள் இங்கு வந்ததனாலேயே சமூக அறம் அழிந்து விட்டது என்பதற்கும் இடமில்லை. உடமை முதலியவற்றின் ஆதிக்கம் நிலவும் எந்தச் சமூகத்தினுள்ளும் பிளவுகள், ஏற்றத்தாழ்வுகள், ஆக்கத்தோடு அழிவுகள் இல்லாமல் முடியாது. அதிகாரத்தில் இருப்பவருக்குத்தானே எல்லாமும் என்று அவர்கள் கருதவும் கூடும்.

குறிப்பாகப் பாண்டிய மன்னர்களுக்குள் தாயாதி சண்டை நிலவிய சூழலில் சுந்தரபாண்டியன் வடக்கிலிருந்து மாலிக்காபூரை அழைக்க அவன் இங்கு வந்து அடித்த கொள்ளைகள் பற்றிக் குறிப்பிடலாம். தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சி ஏற்படுவதற்கான காரணிகளில் மிக முக்கியமானது இது. 13-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மேற்கத்தியர் வருகை வரையிலான சுமார் ஐநூறு ஆண்டுகால வரலாற்றில் நாம் என்னவெல்லாம் பார்க்கிறோம். ஏற்கனவே மன்னர்கள் தமிழகத்திற்கு வெளியில் எத்தனையோ முறை படையெடுத்துச் சென்றிருக்கின்றனர். எத்தனையோ அழிவுகளைச் செய்திருப்பார்கள். மேலும் ஒன்று, இதுவரையில் நாம் பார்த்த தமிழ்ச் சமூகம் வளமான சமூகம், எல்லா வகையிலும் வளமான சமூகம்; இந்த வளம் தமிழகத்திற்கு வெளியில் உள்ளவர்களின் கவனத்தை ஈர்க்காமல் இருக்க முடியாது.

இந்தியாவின் தென்திசைக்கோடியில் தமிழகம் இருக்கிறது. இந்த வளமான சமூகம் யார்யாருக்கோ இடம்தருகிறது. வாழ்வுக்கு ஆதாரம் தருகிறது. வடக்கிலிருந்து துரத்தப்பட்டவர்கள் இங்கு வந்து சேர்கிறார்கள். தமிழகத்தின் பரப்பளவு அதிகம். வசப்படுத்திக் கொள்ளவும் கொள்ளையடிக்கவும் செல்வங்கள் இருக்கின்றன. வரலாற்றின் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் தமிழகச் சூழலிலிருந்து கேரளா விடுபடுகிறது. கர்நாடகமும் ஆந்திரமும் விலகிச் செல்கின்றன. கொடும் தமிழாக இருந்தவை இப்பொழுது சமஸ்கிருதக் கலப்போடு தனி மொழிகளாகின்றன. நான்வேறு, நீவேறு என்ற வேறுபாடும், முரண்பாடும் கூடத் தோன்றிவிட்டன.

ஆந்திராவிலிருந்து கிருஷ்ணதேவராயர் படையெடுத்து வந்ததையும், மதுரையில் நாயக்க மன்னன் ஆட்சி ஏற்பட்டதையும் அந்த ஆட்சிக்கு அனுசரணையாகப் பாளையக்காரர்

நிலைபெற்றதையும் இங்கு விரிவாகச் சொல்லவேண்டியதில்லை. வடக்கிலிருந்து மொகலாயர் உட்பட யார்யாரோ வந்தனர். மராட்டியத்திலிருந்து சிவாஜி வழியினர் இங்கு வந்தனர். அரசுகளை அமைத்துக் கொண்டனர். ஆடம்பரமான வாழ்க்கையை மேற்கொண்டனர். இங்கெல்லாம் அவர்கள் வைத்ததே சட்டம். செய்வதே அதிகாரம். வரிகள் என்ற பெயரில் கொள்ளைகள். தேவைப்படும்பொழுதெல்லாம் ஒரு கொள்ளையர் கூட்டம் புறப்பட்டு ஊர்களைக் கொள்ளையடித்து வரும். பெண்களை நாசப்படுத்தும். நூற்றுக்கணக்கில் ஆண்களுக்குத் தண்டனை வழங்கும். கை கால்களை வெட்டி எறியும். வளமான நிலங்களிலிருந்து மக்களை அடித்துத் துரத்தி அங்கு படைவீடு அமைப்பர். தன் இன மக்களைக் குடியேற்றுவர். இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் இத்தகைய கொடுமைகள் விடாப்பிடியாகத் தொடர்ந்து நடைபெறும் பொழுது தமிழ் இனம் என்ன ஆகும். சமஸ்கிருத மொழியோடு, வேற்று மொழிகளும் ஆட்சி மொழிகளாகின்றன. எந்த ஒரு கொடுங்கோலனோடும் ஒத்துழைப்பதற்கும் சிலர் உடன்படுகிறார்கள். கிராம சபைகள் சிதைவுக்குள்ளாயின. கொள்ளைக்காரர்கள், கொடுங்கோலர்கள் தான் இங்கு அரசமைத்து, கோயில் கட்டி ஏராளமான பிராமணர்களைக் கொண்டுவந்து, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து இங்கு நிலையாக தங்க விடுகின்றனர்.

தமிழ்ச் சமூகத்தினுள்ளும் எத்தனையோ புதுமைகள்; உணவு, உடை, கலாச்சாரம், கோவில், வழிபாடு, கூத்துக்கள் என்றெல்லாம் எத்தனையோ புதுமைகள், புதுவரவுகள், அங்கங்கே சில நல்லிணக்கங்களும் நேர்கின்றன. தமிழ் இலக்கியங்களில் புதுமைகள் நேர்கின்றன. பக்தி பெருக்கெடுக்கிறது. இங்கு எவரும் தமிழ் மன்னராக இல்லை. இங்கு அரசமைத்தவர்களுக்குள் தொடர்ந்து கடுமையான மோதல்கள். ஏராளமான சீரழிவுகள். இயற்கை வளங்கள் நாசமாகின்றன. இவர்கள் அமைத்ததைக் கூட அரசு என்று நாம் சொல்வதற்கில்லை. ஓயாத போர்களுக்கு இடையில், கொள்ளைகள் முதலியவற்றுக்கிடையில் அரசமைப்பதற்கான நீதி நிர்வாக முறை முதலியவை இவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கும். இவர்கள் அதிகாரம் செய்வார்கள். முழு

அளவில் இவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள்.

இந்தக் கால அளவில் நல்லவர்கள் ஒதுங்கி வாழவேண்டும். எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டும் ஓடி ஒளிந்து வாழவேண்டும். சமயம், இலக்கியம், கலை, இசை என்று எவற்றையாவது பற்றிக்கொள்ள வேண்டும். இந்த ஐநூறு ஆண்டுகால அழிவைத் தமிழ் மக்கள் எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ள இயலுமா? எப்படியேனும் தமிழ் மக்களின் தொகை இந்தக் கால அளவிலும் பெரும்பான்மையாகத்தான் இருந்திருக்க முடியும். விளை நிலங்கள் இன்னமும் இவர்களின் கைகளில் உள்ளன. இன்னும் மழை பெய்கின்றது. காடுகளும் ஆறுகளும் இருக்கின்றன. தமிழ்க்கல்வியும் இருக்கிறது. கல்வியாளர்களும் இருக்கிறார்கள். முன்னைய சமூகம் இவர்கள் நினைவில் தங்கி இருக்கிறது. இவர்கள் இன்னும் தமிழர்கள். முற்றான அடிமைத்தனத்தை எந்தஒரு அரசு நாட்டின் எல்லா மூலை முடுக்குகளிலும் செயல்படுத்திவிட முடியாது. ஆகவே தமிழ் மக்கள் இங்கெல்லாம் வாழ்கின்றார்கள். தமிழராய் வாழ்கின்றனர். வடக்கிலிருந்து வந்த வைணவத்தோடு இவர்களுக்குப் பகையில்லை. புதியவகை கூத்துக்கள் வந்து சேர்கின்றன. கோயில்கள் இன்னும் பெரியதாக, அழகியதாக எழுகின்றன. புதிய நிலங்கள் சாகுபடிக்கு வருகின்றன. இங்கு படையோடு வந்த மக்கள் பல தலைமுறைகள் கடந்த நிலையில் இங்குள்ள மக்களோடு கலந்து வாழ்கின்றனர். இவர்களிலும் ஒரு பகுதியினர் தமிழர் ஆகிவிட்டனர். வீழ்ச்சி என்பது முற்றான அளவில் சாத்தியமும் இல்லை. சரபோஜ் மன்னனை நாம் பாராட்டலாம். திருமலை நாயக்கனையும் அவனது கட்டிடக் கலைக்காகப் பாராட்டலாம். கட்டபொம்மன் கொள்ளைக்காரன் தான். அவனைத் தமிழனாக நம்மவர் மாற்றியிருக்க வேண்டாம். தெலுங்கு இனத்தவர்களில் ஏராளமானபேர் நிலக்கிழார்களாக இங்கு வாழ்கின்றனர். இனக்கலப்பும் வரலாற்றில் தவிர்க்க இயலாதது. மராட்டியர் என்றும் முகமதியர் என்றும் தெலுங்கர் என்றும் பல தலைமுறைகளாக வாழ்கிறவரோடு இன்று நாம் பகைமை கொள்வதில் பொருளில்லை. தமிழ் நிலத்தில் இவர்கள் பங்கையும் நாம் மறுக்கவேண்டியதில்லை. வீழ்ச்சி மேலும் தொடர்கிறது. இன்னும் கடுமையாக.

பகுதி இரண்டு

சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிற தமிழர்களின் வீட்சியை 20/21 ஆம் நூற்றாண்டுச் சூழலில் எப்படித் தடுத்து நிறுத்தப்போகிறோம்? எப்படித் தமிழ் இனத்தை மீட்கப் போகிறோம்? என்று கடுமையான சிக்கல் பற்றி இங்கு ஆராய்வோம்.

உலக நாகரிகங்களில் மூத்ததும், மேன்மையானதும் தமிழர் நாகரிகம் என்பதுதான் நம் சிந்தனையை, உணர்வை அழுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நினைவிலிருந்து நம்மை மீட்டுக் கொள்ள இயலவில்லை. தமிழர் நாகரிகம் இரண்டாயிரம் ஆண்டுகளல்ல ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தொன்மை உடையது. தொன்மைக் காலத்திலேயே தமிழ் மக்கள் நகர நாகரிகம், கடல் கடந்த வணிகம், இசை, நடனம் முதலிய கலைகளில் தேர்ச்சி, மொழியின் இலக்கண/இலக்கிய வளம் முதலியவற்றைப் பெற்றிருந்தனர். தமிழர் அறம் உன்னதமானது என்பதில் ஐயமில்லை. தமிழர் அறத்தின் முதன்மைக் கூறுகளெனச் சமுத்துவத்தையும், சமதர்ம உணர்வையும் கூற முடியும். சாதியோ மதமோ தமிழ்ச் சமூகத்தில் அழுத்தம் பெறவில்லை. இத்தகைய தமிழ் அறம் தான் சங்க இலக்கியம் தொடங்கித் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிலும் வள்ளலார் வரையிலான சித்தர்பாடல்களிலும் மேலோங்கி இருக்கிறது.

உலகளவில் கொண்டாடத்தக்கத் தமிழின் பக்தி இலக்கியம் மனிதச்சார்புடையது. பெரியார் முதலியவர்களையும் தமிழ் அறத்தின் இந்தத் தொடர்ச்சியில் வைத்துத்தான் நாம் காண்கிறோம். இந்தத் தமிழ்அறம் எத்தனையோ தடைகளுக்கு இடையிலும் தமிழ்ச் சமூகத்தில் வரலாற்றுக் காலங்களில் மங்கியும் மறைந்தும், எனினும் அழிவு படாமல் இன்னும் நம்மைத் தமிழர் என அடையாளப்படுத்துகிறது. இந்த அறம் பெரியாரியக் கத்துக்கு மட்டுமல்லாமல், மார்க்சியத்துக்கும் உகந்த அறம். இந்த அறநெறியை அழிக்கக் கூடிய/திரிக்கக்கூடிய ஆதிக்க சக்திகள் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நம்மை அழுத்தி வருகின்றன.

இவற்றிலிருந்து நாம் எவ்வாறு விடுபடுவது என்பது நமக்கு இன்று பெரும் சிக்கல்.

நம்மைப் போலவே மூத்த நாகரிகங்கள் பற்றியும் இங்கு எண்ணிப் பார்க்கலாம். எத்தனையோ வகை வகையான மேன்மைகளைக் கொண்ட கிரேக்க நாகரிகத்தை இன்றுவரை காத்து வைத்திருக்கிறார்களே ஒழிய அதை மீண்டும் நம் காலச் சூழலுக்கு ஏற்றவாறு புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சி அங்கிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இஸ்ரேலைப் பொறுத்தவரை தொன்மையான யூத நாகரிகத்தை, மொழியை இன்று புதுப்பிக்கும் முயற்சியில், இடைக்காலத்தில் நேர்ந்த எத்தனையோ அழிவுகளைக் கடந்து வெற்றிபெற்று வருகிறார்கள்.

அமெரிக்காவில் செவ்விந்தியர் தம் மேன்மையை மீட்டுக் கொள்ள முடியாத அளவிற்கு அங்கு குடியேறியவர் அழித்து விட்டனர். சீன நாகரிகத்தைப் பொருத்தவரை தன் ஐயாயிரம் ஆண்டு பண்பாட்டு வளத்தை வரலாற்றின் எந்தச் சூழலிலும் இழந்து விடவில்லை என்பதோடு மாவோவின் மார்க்சியம் அதிலிருந்து தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. நம் தமிழ் நாகரிகமும் பெரியாரியம் மற்றும் மார்க்சியத்தின் மூலம் மீண்டும் புத்துயிர்ப்பைப் பெற வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்தியாவைப் பொருத்தவரை ஆரியம் என்று அறியப்படுகிற நாகரிகத்தின் ஊடுருவலிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதற்கு இடைக்காலத்திலும் இன்றும் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறோம். ஆரிய நாகரிகத்தின் இன்றைய தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் இருப்பது இந்துத்துவம். இந்தியா என்றால், இந்துமதம்/இந்துத்துவம் என்ற முறையில் தன் அடையாளத்தையும், ஆதிக்கத்தையும் இந்திய மக்கள் மீது இந்துத்துவம் திணித்து வருகிறது. இந்தியாவில் அரசியல், பொருளியல், கல்வி, பண்பாடு முதலிய அனைத்துக் களங்களிலும் தன்னை நிறுவிக் கொள்ள முயற்சி செய்கிறது. வேதங்கள் என்றும், உபநிடதங்கள் என்றும், இதிகாசங்கள் என்றும்,

பகவத்கீதை என்றும் ஓயாமல் பேசுகிறது. வர்ணாசிரமம் தான் ஒரே தர்மம் என்று பேசுகிறது. சமத்துவமோ, சமதர்மமோ இந்துத்துவத்திற்கு உடன்பாடில்லை. இஸ்லாமியரும் கிறித்துவரும் இந்திய தேசத்துக்கு அந்நியர்கள். இந்தியாவுக்குள் இவர்கள் வாழ்வதென்றால் தம்மரபும் இந்து மரபென்று இவர்கள் ஏற்க வேண்டும். சமஸ்கிருதம் தான் இந்தியாவின் ஆதிமொழி. மார்க்சியம் இந்து தர்மத்திற்கு எதிரானது. திராவிட இயக்கத்தின் சாதி மதம் முதலியவற்றின் மறுப்பு இந்து நாகரிகத்திற்கு எதிரானது.

இந்தியாவைப் பொருத்தவரை ஆரிய நாகரிகமும், திராவிட/தமிழர் நாகரிகமும் தொன்மையான நாகரிகங்கள். ஆரிய நாகரிகம் தன்னை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து வெற்றி பெறுவதோடு, தமிழர் நாகரிகத்தின் தொன்மை, மேன்மை முதலியவற்றை மறுப்பதோடு தமிழர் நாகரிகத்தினுள்ளும் ஊடுருவித் தமிழ் மக்களை வசப்படுத்தித் தமிழர் நாகரிகம் என்ற தொகுதியில் தனது நாகரித்தை உள்ளார்ந்த ஒரு பகுதி என்று நிறுவ முயற்சி செய்கிறது. அப்படி இயலவில்லை என்றால் தமிழர் நாகரிகத்தை அடியோடு அழிப்பது என்ற முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது. இதற்கும் கைகொடுக்கும் சக்திகள் தமிழகத்தினுள்ளும் இருக்கின்றன. இந்தச் சூழலில் தமிழ் மக்களாகிய நம் நாகரிகத்தை மீட்டுக் கொள்வதோடு மேம்படுத்துவதும் நமக்கு முதன்மையான கடமையாகிறது.

2

கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக மேற்கத்திய சமூகத்தோடு/மேற்கத்திய நாகரிகத்தோடு நாம் உறவு கொண்டிருக்கிறோம். போர்ச்சுக்கீசியரும், பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் நமக்குச் செய்த அழிவுகள் குறித்து நாம் இன்றும் ஆத்திரத்தோடு பேச வேண்டியிருக்கிறது. 17/18 ஆம் நூற்றாண்டுகளில் உலகளவில் இருந்த நாகரிகங்களில் இந்திய நாகரிகம், தொழில், வேளாண்மை, கல்வி, மருத்துவம் முதலிய பல்வேறு துறைகளில் மேன்மையுடையதாகவே விளங்கியது.

இதன் கவர்ச்சிகாரணமாகவே மேற்கத்தியர் இங்கு வந்தனர். வணிகம் என்று தொடங்கிப் பிறகு மன்னர்களுக்கு இடையில் இருந்த பகைமையைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவில் தம் ஆதிக்கத்தை மெல்ல மெல்ல நிறுவிக் கொண்டனர். இந்தியாவின் தொழில், வேளாண்மை முதலிய வளங்களை அழிப்பதன் மூலம் இந்தியாவைத் தமக்கு அடிமை நாடாகச் செய்து கொண்டனர். இந்தியாவின் தொன்மைக் கால மேன்மைகளை இவர்களால் மறுக்க இயலவில்லை. இந்தியாவிலிருந்து எவ்வளவோ எடுத்துச் சென்றனர். இந்தியாவின் நாகரிகத்தை இருண்ட நாகரிகம் என எழுதி வைத்தனர். ஆங்கிலக் கல்வியின் மூலம்இந்தக் கருத்தை இந்திய மக்கள் ஏற்கவும் செய்தனர். ஆரிய நாகரிகத்தின் மேன்மை பற்றி மேற்கத்திய அறிவாளிகள் பேசினர்.

சுதேச மன்னர்களோடும், நிலவுடமையாளர்களோடும், சமயவாதிகளோடும் சமரசம் செய்து கொண்டதன் மூலம் இந்திய மக்கள் மீது தம் ஆதிக்கத்தை நிறுவிக் கொண்டனர். ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் தான் இந்தியா என்ற ஒரு தேசத்தை, வரலாற்றில் முதன் முறையாக உருவாக்கியது; தம் ஆதிக்கத்தின் தேவைக்காக ஆங்கிலேயர்கள் உருவாக்கினர். நவீன கால ஆயுதங்களும், இராணுவ அமைப்பும் இவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. ஒருவகையில் மக்கள் நலத்திற்கு எதிரான மன்னர்கள் இந்தியாவை ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு விட்டுக் கொடுத்ததன் மூலம் தம் வாழ்க்கை வசதிகளைக் காத்துக் கொண்டனர் என்று சொல்லலாம். இந்திய மக்களை இவர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு விட்டுக் கொடுத்தார்கள்.

ஆங்கிலேயர்களின் இராணுவத்தில் பெரும்பான்மையாக இடம் பெற்றவர்கள் இந்திய மக்கள். சாதி மதங்கள் காரணமாக மக்கள் தமக்குள் ஏற்றத் தாழ்வுகளையும், பகைமையையும் கொண்டிருந்தது, ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குச் சாதகமாக இருந்தது. காலமெல்லாம் மன்னர்கள் என்று சொல்லப்படும் கொள்ளைக்காரர்களின் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆட்பட்டிருந்த மக்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கும் சேவை செய்வதில் தவறு காணவில்லை. வறுமைக் கொடுமையில், சாதியச் சிக்கல்களில் காலம் எல்லாம் துன்புற்ற மக்கள்

ஆங்கிலேயர்களின் இராணுவத்தில் சேர்ந்தனர்/சேர்க்கப்பட்டனர்.

இந்த வகையில் அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை கிடைத்தது. சில சமயம் கொள்ளையடிக்கவும் வாய்ப்புக் கிடைக்கும். நல்ல படைப் பயிற்சி, பாதுகாப்பு, மாத ஊதியம் இவைஎல்லாம் இவர்கள் முன்பு கண்டிராதவை. ஆங்கிலேயர் வெற்றி பெற்றதில் பெரிய அதிசயம் எதுவும் இல்லை. இராபர்ட் கிளைவ், வாரன் டிங்ஸ் ஹேஸ் அடித்த கொள்ளைக்கு எது அளவு?

இவற்றை எல்லாம் இங்கு திரும்பக் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் இந்தியா என்ற பெரிய தேசத்தின் ஒரு உறுப்பாகத் தமிழகத்தை இவர்கள் படைவலிமை கொண்டு இணைத்துக் கொண்டனர் என்பதை விளக்குவதற்காகத்தான். ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு, ஆட்சிக்கு உதவி செய்தவர்கள், ஒத்துழைத்தவர்கள் என்று தமிழகத்திலும் இருந்தனர்.

3

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போர் இந்தியாவில் நடைபெற்ற வரலாற்றை நாம் இங்கு விவரிக்க வேண்டியதில்லை. பேராயக் கட்சியின் உருவாக்கத்தில் தமிழ் மக்களும் பங்கு பெற்றனர். இந்தியா, பாரததேசம், பாரதப் பண்பாடு என்று இவர்களும் பேசினர். ஆரிய நாகரிகத்திற்கு இவர்களும் சேவை செய்தனர். இந்தியா ஒரு தேசம்தான் என்று இவர்களும் நம்பினர். ஓர் உண்மையை இங்கு ஒப்புக் கொள்ளலாம். விடுதலைப் போரின் போது ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்க இந்தியர் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதில் தவறில்லை. இவ்வகையில் உருவான இந்திய தேசியம் என்று கருத்தாக்கத்தில் நாம் குற்றம் காண வேண்டியது இல்லை. இந்திய தேசியத்தின் உட்கிடையாக இந்துமதம் தான் இருந்தது என்றும் நாம் சாதிக்க வேண்டியது இல்லை. இந்து மதத்தினுள்ளும் பன்முகப் போக்குகள் உண்டு. இந்து மதம் என்பதற்கு ஒற்றை முகத்தை அன்றே வழங்கிய இந்து மதவாதிகளும் இருந்தனர். தேசீயம் என்ற கருத்தாக்கம் மதத்தின் வழியே வெளிப்பட்டதோடு, மதம் என்பதற்கும் புது வடிவம் தர முயன்றது. காந்தியடிகளையும்,

பாரதியாரையும் நினைவு கொள்ளலாம். திலகரும் தான் நம் நினைவுக்கு வருகிறார். இப்படியும் இந்து மதம் தனக்குள் முரண்பட்டுச் செயல்பட முடியும்.

பகவத் கீதையைக் கையில் ஏந்திப் புரட்சி இயக்கத்தில் செயல்பட்டவர்களையும் நாம் காண்கிறோம். இக்காலச் சூழலில் தான் விவேகானந்தரையும் நான் காண்கிறோம். மதம் என்பது இப்படி மக்கள் சார்பிலும் இயங்க முடியும். அப்புறம் இந்துமதம் என்பது இந்துத்துவமாக வடிவம் எடுத்தது என்பதையும் நாம் மறுக்க வேண்டியதில்லை.

இந்திய தேசியத்தினுள்ளும் பார்ப்பணர் மற்றும் உயர் சாதியினர் செல்வாக்கை மட்டுமல்லாமல் முதலாளிகளின் செல்வாக்கையும் நாம் பார்க்கிறோம். இந்திய முதலாளிகள் விடுதலை இயக்கத்தைக் கூடிய வரை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். விடுதலை இயக்கமும் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான முற்றான இயக்கமாகவும் இல்லை. தனக்குள்ளும் அந்த இயக்கம் முரண்பட்டு இருந்தது. அரசியல் விடுதலைதான் முதல் தேவை என்று அழுத்தம் பெற்ற குரல் சமுதாய விடுதலையை ஓரத்திற்கு ஒதுக்கியது.

பொருளியல் விடுதலை என்பது சமதர்மம் என்று பொருள்படுத்துவதை விடுதலை இயக்கம் வெளிப்படையாக ஏற்கவில்லை. ஒரு கட்டத்தில் லெனின் கூறிய அறிவுரையை ஏற்று இந்திய விடுதலையின் முன்னனியில் இருந்த தேசிய முதலாளிகளோடு இந்தியப் பொதுவுடமை இயக்கமும் ஒத்துழைக்கத் தொடங்கியது.

இந்தக்கால அளவில் தமிழகத்தில் பேராயக் கட்சியோடு முரண்பட்டு, பெரியார் வெளிவர நேர்ந்ததையும் நாம் இங்கு குறிப்பிடலாம். பேராயக் கட்சிக்குள் இருந்த வருணாசிரமக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்து வெளிவந்த பெரியார், காந்தியை மறுக்கத் தொடங்கி, காங்கிரஸ் இயக்கத்தை மறுக்கத் தொடங்கி பின்னர் பார்ப்பனிய எதிர்ப்பாளராக மாறி, அப்புறம் சாதி, மதம், கடவுள் ஆகியவற்றை முற்றிலுமாக மறுப்பவராக மாறினார். விடுதலை இயக்கத்தை மீண்டும் நெருங்கிச் செல்வதற்கான

வாய்ப்பு அவருக்கு ஏற்படவில்லை. சாமி முதலியவற்றிலிருந்து தமிழ் மக்களை விடுதலை செய்வதே அவருக்கு முதன்மை நோக்கமாக மாறியது. இந்தியாவோடு தன்னை இணைத்துக் கொள்வதற்குத் தேவையில்லை என்ற முறையில் அப்புறம் திராவிட இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து விடுதலை பெற்ற ஒரு தனி நாடு திராவிடநாடு என்ற கோரிக்கையை திராவிட இயக்கம் மேற்கொண்ட போதிலும், அதற்கான செயல்முறைத் திட்டத்தை முன்வைத்துச் செயல்படவில்லை. திராவிடநாடு என்ற கொள்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்ட அளவிற்கு மலையாளிகளும் பிறமொழியாளர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்நாடு தமிழுருக்கே என்று பெரியார் சிலசமயங்களில் குரல் கொடுத்தார். ஜின்னா பாகிஸ்தான் என்ற கோரிக்கையை முன்வைத்து முஸ்லீம் இயக்த்தை காங்கிரஸ் இயக்கத்திற்கு எதிராகச் செயல்படுத்தியது போல பெரியார் செய்யவில்லை. அம்பேத்கர் அளவுக்கும் பெரியார் செயல்படவில்லை. பிரச்சார இயக்கமாகவே திராவிட இயக்கம் தொடர்ந்தது.

வரலாற்றில் நாம் பின்னடைந்ததற்கான காரணங்களில் இதுவும் முக்கியமான காரணம். விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழ்நாடு உள்ளடங்கியதாகச் சென்னை மாகாணம் இருந்தது. மொழிவாரி மாநிலம் என்பதற்காகவும் கடுமையாக நம்மவர் போராடினர். தமிழ்நாடு உருவாயிற்று. எல்லைப்பகுதிகளில் பலவற்றையும் இழக்கவும் நேர்ந்தது. தமிழை ஆட்சிமொழி ஆக்குவது, பயிற்சி மொழி ஆக்குவது என்பதையெல்லாம் ஆர்வத்தோடு தொடங்கினோம். எல்லாவற்றையும் அரைகுறையாகச் செய்து வைத்திருக்கிறோம். இந்தியாவோடு இணைந்திருப்பதன் பயனாகக் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு இந்தியோடு ஆங்கிலம் என்ற உரிமையைப் பெற்றோம்.

இடையில் ஒரு நிகழ்வு. இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான விவாதங்கள் நடைபெற்றபோது, தொடக்கத்தில் இந்தியாவோடு இணைந்திருக்கிற எந்த ஒரு மாநிலமும் பிரிந்துபோகும் உரிமை பற்றியும் பேச்சு இருந்தது. பொதுவுடைமையர் கூட இப்படி ஒரு கொள்கையைக்

கொண்டிருந்தனர். பிறகு இந்த உரிமை பறிபோனது. இந்தியாவோடுதான் நாம் இணைந்து இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1947 விடுதலையைப் பெரியார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அண்ணாதுரை ஏற்றார். இன்னொரு கட்டத்தில் திராவிட நாடு கோரிக்கையையும் கைவிட்டார் அண்ணா. அரசு அதிகாரத்தில் பின்னர் இடம்பெற வாய்ப்புக் கிடைத்ததைக் கழகம் உறுதியாகப் பற்றிக் கொண்டது. இப்படித் தமிழ் மக்களின் விடுதலைக்கான இயக்கம் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் இயக்கமாகவே மாறியது. மேற்கத்திய நாகரிகம், முதலாளியம், ஆங்கிலம் முதலியவற்றைத் தமக்கு வாய்ப்பாகவும் ஆற்றலாகவும் மாற்றிக் கொண்ட இயக்கம் முதலாளியத்திற்கும் இந்தியாவின் மைய அரசுக்கும் சேவை செய்வதில் வியப்பில்லை.

4

இந்தியாவின் விடுதலை இயக்க்ததில் பொதுவுடமை இயக்கத்தினரும் பங்குபெற்றனர். மக்களுக்கு முற்றான விடுதலைக்கு வழி வகுக்கும் இயக்கம் இது. 1925இல் சிங்கார வேலரின் தலைமையில் இந்தியாவில் பொதுவுடமை இயக்கம் உருவாயிற்று. அரசியல் விடுதலை, பொருளியல் விடுதலை மட்டுமல்லாமல் சமூக விடுதலையும் சிங்கார வேலருடைய நோக்கங்களாக இருந்தன. பெரியாரோடு இணைந்து ஈரோடு சமதர்மதிட்டத்தை ஒரு கட்டத்தில் உருவாக்கினார். ஆங்கிலேயரின் அடக்கு முறை ஏற்பட்ட ஒரு சமயம், ஜீவா முதலியவர்கள் விலகிச் சென்றனர். சமதர்மக் கொள்கையில் பெரியாரைப் பொருத்தவரை வெளிப்படையாகவும், மறைவாகவும் உறுதியாகவே இருந்தார்.

தமிழக வரலாற்றில் அற்புதமாகக் கிடைத்த ஒரு வாய்ப்பு தவறிப் போயிற்று. வேறுசில சமயங்களிலும் பொதுவுடமைக் கட்சியோடு பெரியார் ஒத்துழைக்க முயன்றாலும் இறுதியில் இரண்டு இயக்கங்களும் எதிர்த் திசைகளில் பயணம் செய்தன. தமிழகத்தில் திராவிட இயக்கம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் மத்தியில் பெருத்த செல்வாக்கு ஏற்பட்டதைப்

பொதுவுடமைக்கட்சி விரும்பவில்லை. தமிழர் நாகரிகத்தின் தொன்மை, மேன்மை என்று பேசுவது மார்க்சியருக்கு உவப்பாக இல்லை. திராவிடர்/தமிழர் என்று பேசுவது இனவாதம். இட்லர் பேசியதைப் போல இதுவும் இனவாதம். பாசிசத்திற்குச் சேவை செய்வது இந்த இனவாதம். தவிர தேசிய இனம் என்று பேசுவது முதலாளியக் கருத்து. நமக்குத் தேவை சமதர்மம். இந்தியாதான் நம் தேசம். ஒன்றுபட்ட இந்தியாவிலிருந்து நாம் விலக முடியாது/ விலகக்கூடாது. சோவியத் ஒன்றியத்தைப் போல இந்தியாவில் தேசிய இனங்கள் ஒன்றிணைந்து இருக்க வேண்டும். ஏகாதிபத்தியத்தை எதிர்க்க இந்தியா ஒரு தேசமாக இருக்க வேண்டும். நேருவின் சமதர்மப் பாதையின் மூலமாக இந்தியாவில் சமதர்மத்தைப் பெற முடியும். சோவியத் ஒன்றியத்தோடு நாம் நேசமாக இருக்க வேண்டும். புரட்சிப் பாதை நமக்குத் தேவையில்லை. தனிநாட்டுக் கோரிக்கை நமக்குத் தீங்கு செய்யும்.

தமிழகத்தில் ஆட்சி மொழியாகத் தமிழ்தான் இருக்க வேண்டும். மைய அரசின் ஆட்சி மொழியாக இந்தி இருப்பது தேவை. இந்த வகையில் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஒன்றுபட்டு இருக்க வேண்டிய இரண்டு இயக்கங்கள் பிளவுபட்டு எதிர்த்திசையில் விலகிச் சென்றதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலை தள்ளிப்போயிற்று.

5

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கொள்கையளவில் கூட்டாட்சி என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும் உண்மையில் அரசியல் சட்டத்தில் கூட்டாட்சியின் சில கூறுகள் மட்டுமே இருந்தன. மைய அரசுக்குக் கூடுதலான அதிகாரங்கள், மாநில அரசுக்குக் குறைந்தளவு அதிகாரங்கள். பொதுப் பட்டியலில் இடம்பெற்ற அதிகாரங்களை மைய அரசு மாநிலங்களின் இசைவோடு எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் செயல்படுகிற அரசு ஒன்றே ஒன்றுதான்; அது மைய அரசு. மாநில அரசுகள் என்பவை மைய அரசின் உறுப்புக்கள் மட்டுமே. கூட்டாட்சி என்று பெயரளவில் சொல்லப் பட்டாலும், தேவைப்படும் பொழுது

நெருக்கடி நிலையை அறிவித்துவிட்டு மைய அரசு இந்தியாவில் எதையும் செய்ய முடியும். மாநில அரசுகளைக் கலைக்க முடியும்.

இந்தியாவுக்குள் இடம்பெறுகிற எந்த மாநிலத்திற்கும் பிரிந்து செல்கிற உரிமை இல்லை. பிரிவினைக் கோரிக்கைகள் கடுமையாக அடக்கப்படும். தேர்தல் நடைமுறையின் மூலமே சட்டமன்றம், பாராளுமன்றம் முதலியவை அமையும். 18 வயதான எல்லா மக்களுக்கும் வாக்குரிமை உண்டு. மக்கள் தமக்கான அரசை தேர்தல் நடைமுறை மூலம் நிறுவிக் கொள்ளலாம். சமதர்மம், சமயச் சார்பின்மை, மக்கள் நல அரசு, மக்களுக்கு அடிப்படை உரிமைகள், அரசியல் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களைச் செய்து கொள்வது என்றெல்லாம் மக்களுக்கும் உரிமைகள், கடமைகள் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இந்தியாவின் அரசியல் அரங்கை நாம் கவனித்து வருகிறோம். இந்தியா சமதர்மம் எனத் தொடங்கிச் சிலவற்றைச் செய்தது; மதச் சார்பின்மையை ஓரளவுக்கேனும் கடைப்பிடித்தது. இவை எல்லாம் பொய்யாய்ப் பழங்கனவாய் இன்று மாறிவிட்டன.

சோவியத் ஒன்றியத்தில் சமதர்மம் தகர்ந்ததற்குப் பிறகு இந்தியாவுக்கும் சமதர்மம் தேவையில்லை. இப்படித் தொடங்கி அந்நிய நிறுவனங்களின் தொடர்ச்சியான ஊடுருவலோடு இன்று எவ்வளவோ நடைபெறுகிறன. தமிழக அரசு மைய அரசிற்கு எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறது. திராவிட இயக்கமும் பல கூறுகளாகச் சிதைந்துவிட்டது. பொதுவுடமை இயக்கமும் தமக்குள் சிதைந்து அரசு அதிகாரவாதம், தொழிற்சங்கவாதம் முதலியவற்றுக்குள் முடங்கி விட்டது. விடுதலை இயக்கங்கள் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றன. தமிழ் இயக்கங்களும் கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. இந்துத்துவம் மேலுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இவை இன்று எதார்த்த நிலவரங்கள்; இறையாண்மை என்பது மக்களிடம் தான் குடிகொண்டிருக்கிறது என்பது உண்மையில்லை. மக்களாட்சி என்று சொல்லப்பட்டாலும்

மக்களின் தேர்தல் முறையைத் தேர்ந்து கொண்ட கட்சிகள் அரசதிகாரத்தோடு ஒத்துழைக்கின்றன. உலக மயமாதலின் தீவிரமான விளைவுகளை இப்பொழுதே பார்க்கிறோம். மக்கள் மத்தியில் வறுமை, வேலையின்மை, நோய்நொடிகள், கல்விக்கு வாய்பின்மை முதலியவை அதிகரித்து வருகின்றன. இயற்கை, நீர் நிலை முதலியவை நாசப்படுத்தப்படுகின்றன. மக்கள் எல்லாத் திசைகளிலும் உரிமை இழப்பதோடு ஒடுக்கப்படுகின்றனர். இதிலிருந்து யாரும் தப்புவதற்கு வாய்ப்பில்லை. இத்தகைய சூழலில் தான் தமிழ் மக்களின் மீட்சி என்று பேசுகிறோம்.

6

தமிழ் மக்களின் மீட்சி குறித்து இங்கு சுருக்கமாச் சிலவற்றைச் சொல்லலாம்.

1. இந்தியாவிலிருந்து தமிழ்நாடு பிரிந்து செல்ல வேண்டும் என்ற இயக்கம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு. அப்படி ஒரு விடுதலை இயக்கம் தமிழகத்தில் இல்லை. ஒடுக்கு முறைகளும் தொடர்ந்து கடுமையாகி வருகின்றன. இந்நிலையில் தேசிய இனங்களில் இறையாண்மையை ஒப்புக் கொள்கிற ஒரு கூட்டாட்சி இந்தியாவுக்குத் தேவை. இத்தகைய ஆட்சியின் கூறுகள் குறித்து நாம் நிதானமாக ஆராயந்து தொகுக்க வேண்டும். இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் மீது மறுபார்வை மிக விரிவாகத் தேவைப்படுகிறது. உடனடியாக இத்தகைய மறுபார்வை சாத்தியமில்லை என்றாலும் இந்தியாவின் சில மாநிலங்களிலேனும் இப்படி ஒரு கருத்தாக்கத்தை உருவாக்குவதற்கு நாம் முனைய வேண்டும். ஒரு வகையில் மக்களுக்கான அரசு, பொருளியல், கல்வி, மருத்துவம், தொழில், வேளாண்மை முதலியவை எத்தகையனவாக இருக்க வேண்டும் என்பதற்கான அறிவையும் புரிதலையும் மக்கள் மத்தியில் பரப்ப இந்தத் திட்டம் பெரிதும் பயன்படும்.

2. தமிழகத்தைப் பொருத்தவரை பெரியாரியமும், மார்க்சியமும் கைகோர்த்துக் கொள்வதன் மூலமே தமிழ் மக்களின் மீட்சிக்கான செயலைத் தொடங்க முடியும். முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட பெரியாரியமோ, மார்க்சியமோ, மக்கள்

நலத்திற்கு எதிராகவே செயல்பட முடியும். சமதர்மம் என்ற மையத்தில் பெரியாரியமும் மார்க்சியமும் இணைய முடியும். சமதர்மம் என்ற மையத்திலிருந்து சாதி ஆதிக்கம் முதலிய ஆதிக்கங்களை ஒழிக்க முடியும். அல்லது கட்டுப்படுத்த முடியும். சாதி என்றும் வர்க்கம் என்றும் பேசி நமக்குள் பிளவுபடுவது இனியும் இயலாது. சாதி என்பது உருவம், வர்க்கம் என்பது உள்ளடக்கம் என்ற முறையில் குறைந்தளவுக்கான புரிதலோடு நாம் செயல்பட வேண்டும்.

அரசு அதிகாரத்தில் பங்கு பெறுவது என்ற நடைமுறை மார்க்சியருக்கோ, திராவிட இயக்கத்தாருக்கோ எதிராய் முடியும்.

3. தமிழ்மரபையும், மார்க்சியத்தையும், அதே போலப் பெரியாரியத்தையும் ஒரு புள்ளியில் இணைத்துக் காண முடியும். தமிழ் அறம், தமிழர் அறம் என்பது சமத்துவம், சமதர்மம். நெடுங்காலத் தமிழிலக்கியம் முழுவதிலும் இந்த நீரோட்டம் பரவி இருக்கிறது. சாதி வேண்டாம். மத ஆதிக்கம் வேண்டாம் என்று நாம் தொடங்கவேண்டும். சமதர்மம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை. ஆங்கிலேயர் இங்கு திணித்த மேற்கத்திய நாகரிகமோ, நவீன அறிவியல் தொழில்நுட்பங்களோ ஆங்கிலமோ நம் மக்களை உலகளவிலான ஆதிக்கங்கட்கே அடிமைப்படுத்தும்.

இயற்கை வேளாண்மை, பசுமை இயக்கம், தாய்த்தமிழ்ப் பள்ளி என்பவை நம் தொடக்க முயற்சிகளாக அமைய முடியும். இயற்கையைக் காப்பதன் மூலமே உழைக்கும் மக்களை நாம் காக்க முடியும். தமிழர் தம் கலைத்திறன் முதலியவற்றை, இலக்கிய ஆளுமையை, மெய்யியலை நமக்கானவை என்று நாம் கண்டு வளர்க்க வேண்டும். மக்களோடு இணைவதன் மூலமே தமிழை, தமிழ் அறத்தை நாம் வளர்க்க முடியும். நடுத்தர மக்கள் அடித்தள மக்கள் மீது ஆதிக்கம் செய்ய முடியாது.

ஆங்கிலேயர் இங்கு திணித்த பிற்போக்கு முதலாளியம் நம் அனைவரையும் அழிக்கும் காரியத்திற்கு நாம் இடம்தரக் கூடாது. எளிய வாழ்க்கை நமக்குப் போதும்; நடுத்தர மக்களாகிய நமக்குள் இடம்பெறுகிற அறிவுத்திறன், கலைத்திறன் முதலியவை உலகளவிலான வரலாற்றின் மூலம், சமூகத்தின் மூலம் நமக்கு

வந்து சேர்ந்தவை. இவற்றை அதிகளவு சேகரித்து, செரித்துக் கொள்வதன் மூலம் நம் வாழ்க்கை, அழகு பெறும், ஆற்றல் பெறும். மதம் என்ற உடனே நாம் அதை மறுக்க வேண்டிய தில்லை. வெறுக்க வேண்டியதில்லை. மதத்தினுள்ளும் மக்கள் விடுதலைக்கான கூறுகள் இருப்பதை நாம் காண வேண்டும். நமக்கான அரசியல், பொருளியல், வாழ்வியல் முதலிய அனைத்தும் மெய்யியல் ஆதாரத்தில் இயங்க வேண்டும். மார்க்சியம் பெரியாரியத்தையும், பெரியாரியம் மார்க்சியத்தையும் தமிழகச் சூழலில் வளப்படுத்த இயலும்.

4. இவற்றை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் தமிழர் மீட்சிக்கான நெறி என்பதை தமிழ்த் தேசியம் என்று கண்டு கொள்ள முடியும். தமிழ்த் தேசியம் என்பது அரசியல் மட்டுமன்று தமிழ் மக்களுக்கான பொருளியல் முதலிய அனைத்து உள்ளடக்கங்களையும் கொண்டது. தமிழ்த் தேசிய அரசியலில் அடிப்படை தமிழ் மெய்யியலாகத்தான் இருக்க முடியும்.

5. இறுதியாக ஒன்று. மேற்கத்திய அரசியல், பொருளியல் ஆதிக்கத்தின் மூலம் உலக நாகரிகம் ஒரு இறுதி அழிவுக்கு விரைந்து கொண்டிருக்கிறது. தேசங்களின் இயற்கை வளங்கள், மக்கள் வளங்கள் முதலியவற்றை அழித்த பிறகு வல்லரசுகள் தாமும் அழிவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தச் சூழலில் பல்லாயிரமாண்டுகளாக வளர்ந்து வந்த உலக நாகரிகத்தைக் காக்கும் பொறுப்பு தமிழர் நாகரிகத்திற்கு இருக்கிறது. உலக வரலாற்றின் ஒரு பகுதி தமிழர் வரலாறு. தமிழ் மக்களுக்கு உலகப் பார்வை/வரலாற்றுப் பார்வை இன்றியமையாதது.

உலகத்தில் ஒடுக்குமுறை, இயற்கைப் பேரழிவுகள் முதலியவை எங்கு நடைபெற்றாலும் அதுபற்றி நாம் கவனம் கொள்ள வேண்டும். கவலைப்படவேண்டும். இத்தகைய நிலை நமக்கு எப்பொழுதும் நேரலாம். எந்த நாடும் அணுகுண்டு முதலியவற்றைச் சேகரித்து வைப்பதை உலக மக்கள் நலன்களுக்கு எதிரான செயல் என்றே நாம் கருதவேண்டும். சுரண்டல், ஒடுக்குமுறையை யார் மீதும், எவரும் எந்தப் பெயராலும் திணிப்பதை நாம் ஏற்க முடியாது. தமிழை, தமிழ்

மக்களை, தமிழ் மக்கள் நலன்களை ஒடுக்கும் சக்திகள் இந்திய அளவில் மட்டுமல்லாமல் தமிழகத்தினுள்ளும் செயல்படுகின்றன. இவை உலகளவில் செயல்படும் ஆதிக்க சக்திகளோடு ஒத்துழைக்கின்றன. நமக்கான விடுதலை, மீட்சி எது என்று தெரிந்து கொண்டு, நம் மக்களோடு இணைந்து, இயக்கங்களில் இணைந்து எல்லா வழிகளிலும் போராட வேண்டும். இத்தகைய போராட்டம் இல்லாமல், தமிழ், தமிழர் என்று பெருமிதத்தோடு பேசுவதில் பொருளில்லை.

குறிப்பு :

திருச்சி – தூய பவுல் இறையியல் கல்லூரியில் [சூலை – 5 – 2003] நடைபெற்ற கருத்தரங்கிற்காக எழுதிய கட்டுரை.

●

18. என் எழுத்தும் வாழ்க்கையும்

நான் முப்பதாண்டுகளாக எழுதுகிறேன் என்றபோதிலும், எழுத்தை என் தொழில் என்று நான் கருதுவதில்லை. வாழ்க்கை எனக்கு இளமைக்காலம் முதலே தரும் நிர்பந்தங்களைப் புரிந்து கொள்வதற்காகவும் வாழ்க்கைக்கு எதிர்விளைதரும் முறையிலும் வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் எழுதுகிறேன். வாழ்க்கை தரும் நெருக்கடிகளைப் புரிந்து கொள்வதன் மூலம் நெருக்கடிகளிலிருந்து ஓரளவுக்கேனும் விடுபடுவதன் காரணமாகவும் என்னால் எழுதாமல் இருக்க முடிவதில்லை. சிறுகதையோ, நாவலோ, நான் எழுதவில்லை. பத்திரிகைகளின் தேவைக்காகவோ, பணத் தேவைக்காகவோ நான் எழுதவில்லை.

பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தேன். பணியிலிருந்து விலகிய பிறகு ஓய்வூதியம் கிடைக்கிறது. நாவலும், சிறுகதையும், ஒருகட்டத்தில் எழுத முயன்றேன். கவிதையும் எழுதினேன். இவற்றைவிட திறனாய்வில்தான் என் மனம் சென்றது. திறனாய்வையே என் எழுத்துமுறை என்று வரித்துக் கொண்டேன்.

இதற்கான காரணத்தை நான் இங்குச் சுருக்கமாகச் சொல்லமுடியும். ஒரு கிராமத்தில் கீழ் நடுத்தரக் குடும்பத்தில் நான் பிறந்தேன். எட்டு குழந்தைகள் கொண்டது எங்கள் குடும்பம்; என் குடும்பத்தில் எனக்கு மட்டுமே உயர்கல்விக்கான வாய்ப்புக் கிடைத்தது. படிப்பில் நான் சிறந்த மாணவனாக இருந்தேன் என்பதும் ஒரு காரணம். தந்தையாருக்கு ஊரில் பெரும் மரியாதை உண்டு. அவர் நேர்மையான மனிதர். என் பாட்டனாரையும், பாட்டியையும் இன்றும் நான் நினைத்துக் கொள்கிறேன். அவர்கள் அற்புதமான மனிதர்கள். என் அத்தைமார் இருவரும் அன்பின் ஊற்றுக்கள்.

நான் வளர்ந்தது கிராமச் சூழலில். கிராமத்து உழவர்களோடும், மற்றவர்களோடும், நான் கொண்டிருந்த அன்பை இன்றளவும் நான் மறக்கவில்லை. காடுமேடுகளை நண்பர்களோடு சுற்றித்திரிந்திருக்கிறேன். ஊருக்குள்ளும் வெளியிலும் உள்ள கோயில்கள் எனக்குப் பிடித்தமானவை.

மண்ணோடும், இயற்கையோடும், மனம் பதிந்திருந்தது. இன்றுவரை நான் எளிய மனிதனாக இருப்பதற்கு இவையெல்லாம் காரணங்கள்.

குடும்பத்தில் வறுமையை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். இந்தியாவின் முதல் விடுதலை நாளைப் பள்ளியில் நாங்கள் கொண்டாடினோம். காந்தியையும், நேருவையும் எனக்கு மிகவும் பிடிக்கும். விவேகானந்தரையும், நேதாஜியையும் நான் விரும்பிப் படித்தேன். கடவுள் நம்பிக்கை எனக்குள் பதிந்திருந்த போதிலும் எனக்கு எப்போதுமே அது ஒரு மனச்சிக்கல். கடவுளைக் காண முடிந்தால் என் துயரங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று உண்மையாகவே நம்பினேன். கல்லூரியில் படிக்கிற காலத்தில் நானே பிரம்மம் என்பதை அனுபவம் மூலமாக உணர்ந்தேன். நானே பிரம்மம் என்பது எனக்கு சில கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியது. என்னை நானே கும்பிட முடியாது. மேல், கீழ் என்ற வேறுபாடு எனக்கு இல்லை. பிறரிடமிருந்து என்னை வேறுபடுத்திக் கொள்ள இயலாது. இதனால் எனக்குள் கடுமையான சிக்கல் ஏற்பட்டு உடல் நோய்க்கு ஆளாகிப் பல மாதங்கள் மருத்துவமனையில் இருந்து தொடர்ந்து சிந்தித்துச் சில தெளிவுகளைப் பெற்றேன். கடவுள் என்ற கருத்து காலம் காலமாகப் பலர் வழியே இருந்து எனக்குள் ஏறிய/ஏற்றிக் கொண்ட கருத்து.

கடவுள் என்பது தனியான உண்மை இல்லை. மனிதனுக்குத் தேவைப்பட்ட ஒரு கருத்து. இப்படிச் சில முடிவுகளுக்கு வந்ததோடு, மார்க்சியனாக நான் மாறத் தொடங்கினேன். பிரபஞ்சம் உண்மை. இயற்கை என்பதும், வரலாறு என்பதும், சமூகம் என்பதும் மிகப்பெரிய உண்மைகள். இவற்றின் இயக்கத்தில் நான் இருக்கிறேன். இவை தான் என்னைப் படைத்திருக்கின்றன. இவற்றோடுதான் எனக்கும் வாழ்வு. இவற்றின் மூலமே என்னையும் நான் படைத்துக் கொள்கிறேன். கடவுள் என்பதும் மனிதனின் படைப்பு. வரலாற்றுச் சூழலில் சில புரிதல்களுக்காக மனிதர்கள் செய்து கொண்ட படைப்பு.

கல்லூரி வாழ்க்கை முடிந்த பொழுது கோவையில் நான் தமிழாசிரியராகப் பணியாற்றினேன். தமிழ் இலக்கியக் கல்வி என்னைப் பெரிதும் கவர்ந்தது. என் காலத்தில் தமிழுணர்வு ஏறுமுக நிலையில் இருந்தது. மறைமலையடிகள், திரு.வி.க. சேதுபிள்ளை, தெ.பொ.மீ., வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியவர்கள் நேரிடையாக இல்லாவிட்டாலும், தங்கள் ஆய்வுகளின் மூலம் என்னைப் போல எத்தனையோ மாணவர்களை உருவாக்கினர்.

நேரிடையாக எனக்குத் தமிழ் கற்பித்த சான்றோர்கள் என்றும் என் வணக்கத்திற்குரியவர்கள். அரசியல் அரங்கில் பெரியார் என்றும், அண்ணா என்றும், ஜீவா என்றும் பல பெரியவர்கள். இவர்கள் மூலம் தமிழ் உணர்வை எங்களுக்குள் ஆழமாய்ப் பெற்றோம். சங்க இலக்கியத்தை நான் ஆழ்ந்து கற்றேன். இன்றுவரை கற்கிறேன். எப்படியோ, தமிழ் எனக்கு வாழ்வாக மாறியது. சங்க இலக்கியம் முதலியவற்றில் என் ஆர்வம் பெரிது. நவீன இலக்கியத்தையும் இடைவிடாது கற்றேன். பெரியவர் செல்லப்பாவோடு என் கல்லூரிக் காலத்திலேயே உறவு ஏற்பட்டது. புதுக்கவிதை தமிழ்க் கவிதை மரபுக்கு அந்நியமாக எனக்குப் படவில்லை.

என் குடும்பச் சூழல் கீழ் நடுத்தரவர்க்கம் என்று குறிப்பிட்டேன். சிரமங்களோடுதான் நான் கற்று முடித்தேன். கிராமச் சூழலில் பேரன்போடு மக்கள் இருந்த போதிலும் அவர்கள் பட்டபாடுகள் கடுமையானவை. இந்த மக்களிடமிருந்து என்னை அந்நியப்படுத்திக்கொள்ள முடியாது. சமூகத்திலும் நெருக்கடிகள் அதிகரித்து வந்தன. விடுதலையை அடுத்து ஏற்பட்ட கொடிய பஞ்சம் எங்களைக் கடுமையாகப் பாதித்தது. காந்தி கொல்லப் பட்டார். நேரு சோசலிசம் என்றார். ஐந்தாண்டுத்திட்டம் என்றார். எதிர்பார்த்த வாழ்க்கை கிட்டவில்லை. சோசலிசம் உறுதியாகச் செயல்படவில்லை. நேரு கூட்டுச்சேராக் கொள்கை பற்றி உறுதியாக இருந்தார். குருச்சேவ் கூறியபடி சமாதான வழியில் சோசலிசம் வருமென்று நாங்கள் நம்பினோம். இந்திய அரசியலில் எவ்வளவோ நடைபெற்றன. இந்தச் சூழலைப் பற்றிய புரிதல் மார்க்சியத்தின் மூலம் தான் சாத்தியம். தோழர் எஸ்.என்.

நாகராசன் மூலம் நாங்கள் கற்றுக்கொண்ட மார்க்சியம் ஆழமானது. இந்த மார்க்சியம்தான் இன்றுவரை எங்களுக்குள் விரிந்து, ஆழப்பட்டு எங்களைத் தாங்கி நிற்கிறது. மார்க்சு முதலியவர்களை நாங்கள் மிகுந்த அக்கறையோடு பயின்றோம். எஸ்.வி. ஆரும் நானும் நெருக்கமான நண்பர்கள். அந்நியமாதல் குறித்துத் தோழர் எஸ்.என்.கற்றுக் கொடுத்தார். இருத்தலியல் குறித்து நானும் எஸ்.வி. ஆரும் ஆராய்ந்தோம். நண்பர்களோடு கலந்து "புதிய தலைமுறை" இதழ் வெளியிட்டோம். கலாச்சாரப் புரட்சி எங்களைப் பெரிதும் ஈர்த்தது. மாவோ எங்களுக்குள் குடியேறினார். நக்சல்பாரி இயக்க்கதிற்கு நாங்கள் வசப்பட்டோம்.

கட்சிக்குள் கொஞ்ச காலம் இருந்தோம். சில கசப்பான அனுபவங்கள் காரணமாக வெளியேறினோம். எங்கள் நெஞ்சின் ஆழத்தில், நாங்கள் கற்றுக் கொண்ட மார்க்சியத்தோடுதான் இன்றுவரை வாழ்கிறோம். இரஷ்ய மார்க்சியம் எங்களுக்குத் தேவையில்லை. மாவோவின் மார்க்சியம் வழியே நாங்கள் எவ்வளவோ கற்றுக் கொண்டோம். மேற்கத்திய மார்க்சியத்தை நாங்கள் ஒதுக்கவில்லை. மார்க்சியத்தின் புதிய பரிமாணங்கள் பற்றி நமக்குத் தெளிவு வேண்டும். இதற்காகப் "பரிமாணம்" இதழைத் தொடங்கினோம். ஸ்டாலின் குறித்து எங்களுக்கு நிறைய விமர்சனங்கள் உண்டு.

இந்த வரலாற்றை இத்துடன் நிறுத்திக் கொண்டு, இந்தக் கால அளவில் தமிழோடு எனக்கு நேர்ந்த உறவு பற்றி இங்கு சொல்ல வேண்டும். கைலாசபதி, வானமாமலை, ஜீவா போன்றவர்களை நெருக்கமாகக் கற்றோம். சங்க இலக்கியம் குறித்து மரபு முறையில் மார்க்சியர் கூறிய கருத்துக்கள் எனக்கு உடன்பாடில்லை. வள்ளுவர், இளங்கோ முதலியவர் பற்றி மார்க்சியரின் வர்க்க வரையறை எனக்கு உடன்பாடில்லை. மதம் வெறுக்கத்தக்கதன்று. அந்நியமாதல் என்பது மார்க்சியத்தின் அடிப்படையில் ஒன்று.

அந்நியமாதல் என்ற கருத்தாக்கத்தின் மூலமே மதம் பற்றிய இலக்கியம் பற்றியும் ஆழமான புரிதலைப் பெற முடியும். அந்நியமாதல் பற்றிய புரிதலின் மூலமே வாழ்வுக்கு அர்த்தம்

தேடும் இருத்தலியல் என்பது மார்க்சியத்திற்கு எதிரானது இல்லை. வாழ்வுக்கு அர்த்தம் என்ன என்பதை வேறு எந்தத் தத்துவத்தைக் காட்டிலும் மார்க்சியமே தெளிவுபடுத்துகிறது. தமிழ் இலக்கியம் எனக்குள் ஊறியிருந்தது. தமிழ் இலக்கியமும் மார்க்சியமும் எனக்குள் இணைந்தன. தமிழ் இலக்கியம் மார்க்சியத்தை எனக்குள் கரைய வைத்தது. இத்தகைய இணக்கம் ஓரளவுக்கு ஜீவாவிடம் இருந்தது. வேறு பலரிடம் மார்க்சியமும், தமிழும் ஒட்டவில்லை.

மார்க்சியத்தை நம் மரபுக்கு அந்நியமான கோட்பாடென்று கருதும் பேராசிரியர்கள் தமிழின் உள் ஆழங்களைப் புரிந்து கொள்வது சாத்தியமில்லை. தமிழ் வெறும் கல்வியாக மட்டும் இருக்க முடியாது. நமக்குள் பார்வையாக, அறிவாக, ஆற்றலாக மாற வேண்டும். தமிழ் வெறும் வணிகப் பொருளாக இருக்க முடியாது. பட்டிமன்றங்களுக்கான கருவாக இருக்கமுடியாது. தமிழ் மக்களின் சொத்து. தமிழே நமக்கு அறம், வாழ்வு.

மார்க்சியம்தான் இந்தப்புரிதலை நமக்குத் தரமுடியும். மார்க்சியம் இறக்குமதிச் சரக்காக இருக்க முடியாது. மார்க்சியத்தை தமிழின் வளமான மரபுகளோடு இணைத்துப் பார்க்கமுடியும். தமிழின் மரபு மார்க்சியத்தின் மூலம் செழுமை பெறமுடியும். ஒப்புரவுதான் சமதர்மம், தமிழின் அறம். மார்க்சியத்தின் மையமும் சமதர்மம் தான். தமிழ்ச் சூழலில் மதத்தை ஒதுக்கி வைத்து தமிழைச் செரித்துக் கொள்வதும் சாத்தியமில்லை. இதயமற்ற உலகின் இதயம் என்ற மார்க்சிய வாய்ப்பாடு மதங்களைப் பற்றிய ஆழமான புரிதலை நமக்குத் தரமுடியும். நாம் மதவாதியாக மாற வேண்டியதில்லை. மதம் பற்றிய புரிதல்தான் நம் மக்களோடு நம்மை இணைக்கும். பெரியாரைப் போலவே மார்க்சியரும் மக்களிடமிருந்து விலகி இருப்பதற்கு இதுவும் காரணம்.

வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிப்பொதுமைச் சமூகத்திலிருந்து ஒப்புரவு முதலிய பண்புகள் தமிழ் வரலாற்றின் நீரோட்டத்தின் வழியே வந்து நம்மோடு கலக்கின்றன. இந்த நீரோட்டம் தான் வள்ளுவருக்குள் மட்டுமல்லாமல் கம்பருக்குள்ளும்

சித்தர்களுக்குள்ளும் விளைந்திருக்கிறது. இந்த விளைச்சலில் வள்ளலாரையும், பெரியாரையும் நாம் இணைத்துக் காண முடியும்.

ஆதிப்பொதுமைச் சமூகம் இன்றளவும் நமக்குள் இருக்கிறது. இந்தப் பொதுமைப் பண்புதான் மதங்களின் உள்ளடக்கம். அன்பே கடவுள், அறிவே கடவுள், அருளே கடவுள் என்ற கருத்தாக்கங்கள் இங்கிருந்துதான் தோன்றுகின்றன. எல்லோருக்குள்ளும் இறைவன் உண்டு என்பதற்கும் இதுதான் பொருள். இத்தகைய கருத்துத்தான் சாதி வேண்டாம், மதம் வேண்டாம், சடங்குகள் வேண்டாம் என்று பல்வகைச் சிந்தனைகளாய் வெளிப்படுகின்றன.

பாரதியும், பாரதிதாசனும் தமிழ்ச் சிந்தனையின் ஊற்றுகளிலிருந்து பொங்கியவர்கள். நாம் செய்யும் கவிதைகள் இலக்கியங்கள் என்பன இந்த ஊற்றிலிருந்து நாம் அள்ளிக் கொண்டவை. இந்த ஊற்றைத் தனக்குள் கண்டறிந்தவன் மதவாதியாக முடியாது. முதலாளியத்தின் சுரண்டலையும், ஒடுக்குமுறையையும் திணிக்கும். ஆதிக்க அரசியலோடு நாம் ஒத்துழைக்க முடியாது. இத்தகையவன் ஒற்றைப் பரிமாணத்தோடு கூடிய கட்சிக்காரனாக இருக்கமுடியாது. இவன் இயற்கையை நேசிக்கிறவன். சமூகத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். வரலாற்றின் நீரோட்டத்திற்குள் இருப்பவன். பிரபஞ்சத்தின் பேரியக்கத்திற்குள் தன்னைக் கண்டவன்.

இப்படி ஒரு பார்வை மூலமே எனக்குள் நான் நிறைவு பெறுகிறேன். இப்படி ஒரு பார்வையை நான் பெறுவதற்கு இடைக்காலத்தில் எனக்கு ஏற்பட்ட தொடர்புகள், நண்பர்கள் மட்டும் காரணமல்ல. நான் கிராமத்தில் வளர்ந்தவன். உழவர்களோடும், பிற உழைப்பாளர்களோடும் நாங்கள் நெருக்கமாக இருந்தோம். கீழ், நடுத்தர வர்க்கம் என்று குறிப்பிட்டேன். வறுமையோடு வாழ்ந்திருக்கிறோம். பூர்வீகச் சொத்துக்கள் என்று எதுவுமில்லை. பஞ்சகாலத்தில் பங்கீட்டுக் கடையை என் தந்தையார் நடத்தினார். என் தந்தையார் நடத்திய பங்கீட்டுக் கடையிலிருந்த புழுத்த மக்காச்சோளத்தைத் தான் நாங்கள் உண்டோம். எங்கள் பள்ளி ஆசிரியர்கள் பேரன்பு

உடையவர்கள். இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு வாய்க்கவில்லை என்றால் சமதர்மம் எனக்குள் ஊறியிருக்காது. வாழ்க்கை நெருக்கடிகளுக்கு இடையில் நான் கடவுளைத் தேடினேன். எனக்கும் கடவுள் கிடைத்தார். அந்தக் கடவுளின் உள் ஆழங்களில் தேடியபொழுது வரலாறும், சமூகமும், இயற்கையும் எனக்குள் நெருக்கமாயின; தமிழும் எனக்குள் என் ஆளுமையின் பகுதியாயிற்று.

வாழ்வின் பொருள் என்ன என்பது குறித்து எனக்குத் தெளிவு ஏற்பட்டது. இதைத்தான் நான் எழுதுகிறேன். இலக்கியத் திறனாய்வென்றும், கவிதை என்றும், கட்டுரை என்றும், மெய்யியல் என்றும், மார்க்சியம் என்றும் எழுதுகிறேன். இதைத்தவிர எனக்கு எழுதுவதற்கு வேறு எதுவுமில்லை. என் வாழ்க்கையைப் பற்றித்தான், வாழ்க்கை பற்றிய புரிதலைத்தான் மார்க்சியத்தின் மூலமும் கற்றுக் கொண்டேன். மார்க்சியத்தோடு எத்தனையோ தத்துவங்களையும் கற்றேன். நண்பர்களைக் கற்றேன். மனிதர்களைக் கற்றேன்.

அப்புறம் நாவல்கள், இலக்கியங்கள் என பலவற்றைக் கற்கிறேன். எல்லாவற்றினுள்ளும் என்னைத் தேடுகிறேன். வாழ்வின் மெய்யியலைத் தேடுகிறேன். வாழ்வின் உள்ளியத்தைத் தேடுகிறேன். இவற்றைத்தான் எழுதுகிறேன். திரும்பத் திரும்ப எழுதுகிறேன். என் வாழ்க்கை பற்றி எனக்கு இப்பொழுது அதிருப்தி இல்லை. எனக்குக் கண்பார்வை இல்லை என்பதற்காக நான் கவலைப்படவில்லை. என்தேசம் பற்றி, சமூகம் பற்றி, தமிழின் நிலை பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் வேதனையில் ஆழ்ந்துவிடுகிறேன். தனிப்பட்ட என் வாழ்வின் மீது எனக்கு நினைவுதான் என்றாலும் சமூகம் பற்றிய கவலை எனக்குள் பெருங்கவலையாய் விரிந்திருக்கிறது. இன்றைய அரசியல், பொருளாதாரம், தொழில் முறைகள், கல்வி, மருத்துவம், பசுமைப்புரட்சி, ஆங்கில ஆதிக்கம் முதலியவை எப்படி எல்லாம் நம் மக்களின் வாழ்வைக் கூறு போடுகின்றன, சிதைக்கின்றன, அழிக்கின்றன. இவற்றைச் செய்வதன் மூலம் ஆதிக்கங்கள் எவ்வாறெல்லாம் தம்மை வாழ்விக்கின்றன என்று சிந்திக்கிறேன். ஆதிக்கங்களுக்குத் தம்மை இழந்த நிலையில், தம் வாழ்வின்

அர்த்தங்களை இழந்து எல்லாவகையிலும் வறியவர்களாகி அவலங்களில் ஆழ்ந்து கிடக்கிற நம் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறேன். இவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய அரசியல் சக்திகள் பற்றி, மதவாத சக்திகள்பற்றி சமூகச்சக்திகள் பற்றிச் சிந்திக்கிறோம். இந்த மக்களின் அவலங்களைப் பயன்படுத்திக் கொண்டு இவர்களைத் தொண்டர்களாக, துதிபாடிகளாக, கூலிகளாக, கொள்ளைக்காரர்களாக மாற்றுகிற அரசியல்வாதிகள் பற்றிச் சிந்திக்கிறோம்.

இந்த மக்களோடு தம்மை இணைத்துக் காண்கிற மார்க்சியவாதி எப்படிப் பொருள் சேர்த்துக் கொள்ள முடியும்? எப்படி ஆணவக்காரனாக இருக்கமுடியும்? எப்படி ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொண்டவனாக இருக்கமுடியும்? எப்படி இவன் நிம்மதியாக இருக்கமுடியும்? என்றெல்லாம் சிந்திக்கிறோம்?

சமூக விடுதலைக்காக நடைபெறும் எத்தனையோ இயக்கங்களோடு தன்னை இணைத்துக் கொள்ளாமல், தன்னுடைய காசு, பணம், குடும்பம், வாழ்க்கை முதலியவற்றையே முதன்மைப்படுத்துபவனாக எப்படி இருக்க முடியும்? இவன் எழுதும் கதை, கட்டுரை முதலியவை எந்த உண்மையை இவனிடமிருந்து வெளிப்படுத்தும்? இப்படி எல்லாம் சிந்திக்கிறேன். இலக்கியவாதிகளும், படைப்பாளிகளும், திறனாய்வாளர்களும் இப்படித்தான் வாழ்கின்றனர். பரிசுகள், பாராட்டுக்கள், விருதுகள் என்று தேடி அலைகின்றனர். முதலாளிகள் தரும் ஆயிரம், இரண்டாயிரம் என்ற பரிசுத் தொகைக்காகக் காத்திருக்கின்றனர். பட்டிமன்றங்களில் ஏறி மக்களின் உணர்வுகளை மலினப்படுத்தி ஐயாயிரம், பத்தாயிரம் எனத் தொகைகளைப் பெற்றுக் கொண்டு வருமான வரிக் கணக்கும் காட்டாமல் தமிழுக்குத் "தொண்டு" செய்யும் கள்ளர்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? தமிழ் இன்று அழிந்து கொண்டிருக்கும் போது, தமிழைக் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ள தமிழாசிரியர்கள், பேராசிரியர்கள் தம்மை வாழ்வித்துக் கொள்வதே போதும் என்று இருக்கிறார்கள். இவை பற்றி எல்லாம் நான் எழுதுகிறேன்.

1970 முதல் 1985 வரையிலான கால அளவில் என் அனுபவங்கள் சிலவற்றை இங்கு தொகுத்துக் கொள்ள விரும்புகிறேன். "புதிய தலைமுறை" யிலிருந்து வெளியேறிய பிறகு சில கசப்பான அனுபவங்களுடன் தயக்கத்தோடுதான் "வானம்பாடி" இயக்கத்திற்குள் சென்றேன். வானம்பாடி இயக்கத்தில் நானும் புதிய கவிதைகள் எழுதினேன். கவிதை கற்றுக் கொண்டேன். திறனாய்விலும் தொடர்ந்து ஈடுபட்டேன். வானம்பாடி இயக்கத்திற்குள் மார்க்சியம் எந்த அளவுக்குத் தேவை, தேவையில்லை என்ற விவாதம் எழுந்தது. தத்துவ ஈடுபாடு கவிதைக்கு இடையூறு செய்யும் என்று சில நண்பர்கள் கருதினர். படைப்பாளிக்குத் தான் முதல் தகுதி. திறனாய்வாளனுக்கு இந்தத் தகுதி இல்லை என்றும் சிலர் கருதினர். வானம்பாடி இயக்கத்தில் பிளவு நேர்ந்தது. இயக்கமாக அதை உருவாக்குவதைக்கூட இவர்கள் விரும்பவில்லை.

வானம்பாடி இயக்கம், "எழுத்து", "கசடதபற" ஆகியவற்றுக்கு எதிர்வினையாகத் தோன்றிய இயக்கம். 1970களில் "எழுத்து" இதழின் தொடர்ச்சியாகவும், சில கூடுதலான கூறுகளுடனும் கசடதபற சிறப்பாக நடைபெற்றது. இலக்கியத் திறனாய்வுகளுடன் மேற்கத்திய இலக்கியம் முதலிய வற்றைத் தமிழுக்கு அவர்கள் சிறப்பாக அறிமுகப்படுத்தினர். கவிதை பற்றிய விவாதங்கள் தொடர்ந்தன. கலாச்சாரம் பற்றிய ஆய்வுகள் முதன்மைக்கு வந்தன. நவீன ஓவியம் பற்றி "கசடதபற" அக்கறையோடு கட்டுரைகளை வெளியிட்டது. நவீன சினிமா பற்றியும் எழுதியது. இவை எல்லாம் தமிழுக்குப் புதிய வரவுகள். இவர்கள் திராவிட இயக்கத்தோடு, மார்க்சிய இயக்கத்தோடு முரண்பட்டவர்கள். வெங்கட் சாமிநாதனும், பிரமிளும் தமிழில் சில சாதனைகளைச் செய்யமுடியும் என்பதற்கான அறிகுறிகள் "கசடதபற" வில் வெளிப்பட்டன. வானம்பாடியைப் பொருத்தவரை சமூக உள்ளடக்கத்தோடு, குறிப்பாக மார்க்சியப் பார்வையோடு புதுக்கவிதை படைக்கிற இயக்கம். இம்முறையில் "கசடதபற" குழுவினருக்கும், வானம்பாடி குழுவினருக்கும் முரண் எழுந்ததில் வியப்பில்லை.

1970க்குப் பிறகு, தமிழில் திறனாய்வு பெருமளவில் வளர்ச்சி பெற்றது. "இலக்கிய வெளிவட்டம்", "படிகள்",

“பரிமாணம்”, “ஞானரதம்”, “நடை”, “ப்ரக்ஞை” போன்ற எத்தனையோ இதழ்கள் வெளிவந்தன. வெங்கட்சாமிநாதனும், பிரமிளும் நிறைய எழுதினர். விவாதங்களைக் கிளப்பினார்கள். இலக்கியச் சூழல் தீவிரம் பெற்றது. ஞானக்கூத்தனை வெங்கட் சாமிநாதன் தொடங்கிப் பலரும் தாக்கி எழுதினர். ஞானக்கூத்தனும் பதில் தந்தார். அசோகமித்திரனுக்கு எதிராகவும் உணர்ச்சிகள் கிளப்பப்பட்டன. சுந்தர ராமசாமியின் படைப்புகளுக்குக் கிடைத்த பாராட்டு ஜெயகாந்தனுக்கு இல்லை. ந. பிச்சமூர்த்தி தொடங்கி க.நா.சு. முதலியவர்கள் மூலம் வளர்சசி பெற்ற புதுக்கவிதை இயக்கம், பிரமிள், ஞானக்கூத்தன், கலாப்பிரியா ஆகியவர்கள் மூலம் பல்வேறு வகைகளில் தீவிரம் பெற்றது. வானம்பாடி இயக்கத்தினுள்ளும் புவியரசு, சிற்பி, கங்கை கொண்டான் போன்றவர்களும் சாதனையாளர்களாக விளங்கினார்கள். இவர்களோடு இன்குலாபையும், தமிழன்பனையும், அப்துல் ரகுமானையும் சேர்த்துக் கொண்டால் இந்தக் காலக்கட்டத்தில் தமிழில் கவிதை இயக்கம் எந்தளவுக்கு வீறு பெற்றது என்பதைச் சொல்ல முடியும்.

“படிகள், இலக்கிய வெளிவட்டம், பரிமாணம்” ஆகியவற்றில் தமிழவன், ராஜ்கவுதமன், ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன், எஸ்.என். நாகராசன், எஸ்.வி. ராஜதுரை, ஞானி முதலியவர்கள் செய்து வந்த தீவிரமான கருத்தாய்வுகளையும் இங்கு சேர்த்துச் சொல்லலாம். தமிழவனுக்கும், வெங்கட்சாமி நாதன், பிரமிள் ஆகியவர்களுக்கும் இடையில் நடந்த விவாதங்கள் தீவிரத்தோடு இயங்கின. கொல்லிப்பாபவை இதழில் ராஜமார்த்தாண்டனும் விரிவாக எழுதினார். கசடதபற மூலம் தன் ஆளுமையை வெளிப்படுத்திய ந. முத்துசாமியும், அம்பையும் குறிப்பிடத்தக்கவர்கள். கணையாழி, தீபம் ஆகிய இதழ்களும் இக்கால அளவில் குறிப்பிடத்தக்கவை. கணையாழியில் இந்திரா பார்த்தசாரதி, ஆதவன் போன்றவர்களும் எழுதினர்.

இந்தக்கால அளவில்தான் கைலாசபதி, வானமாமலை ஆகியவர்களும் தமிழ்ச் சூழலில் செயல்பட்டனர். படைப்பாளிகள் என்ற வகையில் லா.ச.ரா., அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், நீல.பத்மநாபன், சா.கந்தசாமி, இந்திரா பார்த்தசாரதி,

மாதவன் போன்றவர்களையும் இங்கு தமிழின் படைப்பியக்கத் திற்குள் சேர்த்துக் கொள்ளலாம்.

பார்ப்பனியம் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இருத்தலியல், படைப்புக்கள் மூலம் தமிழுக்கு அறிமுகமாயிற்று. மார்க்சியத்தினுள்ளும் புதிய பரிமாணங்கள் வெளிப்பட்டன. இலக்கியம், கலாச்சாரம், சினிமா, நாடகம் ஆகிய எல்லாக் களங்களிலும் புதிய வீச்சுக்கள் வெளிப்பட்டன. 1970கள் தொடங்கி 1985வரையிலான இந்தக் காலகட்டம் தமிழில் பேரெழுச்சி என்று சொல்லுமளவுக்கு முக்கியமான காலகட்டம். வானமாமலை முதலியவர்கள் எழுத்துவகைக் கவிதைகளைக் கடுமையாக விமர்சனம் செய்தனர். மனிதவாழ்வில் அவ நம்பிக்கையை இவர்கள் விதைப்பதாக எழுதினர். தாமரையும், செம்மலரும் இந்தக்கால அளவில் தமக்குரிய நோக்கை முன் வைத்து எழுத்தாளர்களைத் திரட்டினார்கள். இலக்கியம் முதலியவை குறித்து சமூகவியல் ஆய்வுகள் முதன்முறையாக வெளிவந்தன. வரலாறு குறித்து, தத்துவங்கள் குறித்துப் பெரும்பாலும் ஆய்வுகள் இல்லை.

இந்தக்கால அளவில் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்பது பற்றி இங்கு சொல்லவேண்டும். விடாப்பிடியாக இவர்கள் அனைவரையும் கற்றுக் கொண்டிருந்தேன். கோவையில் இருந்த இலக்கியச் சூழல் அன்று வளமாக இருந்தது. தொடர்ச்சியான விவாதங்கள் நடைபெற்றன. விவாதங்களில் ஞன. சுந்தரம், ஜீவஒளி, அக்கினிபுத்திரன் ஆகியவர்களோடு நானும் ஈடுபட்டிருந்தேன். சுந்தரராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், வண்ணநிலவன் முதலியவர்களை கோவைக்கு அழைத்து அவர்களின் படைப்புகள் பற்றிய கலந்துரையாடல் நடத்தினோம். வானம்பாடி இதழிலும் “கசடதபற” வுக்கு எதிராக பிரமிளுக்கு எதிராக எழுதப்பட்ட சில கவிதைகள் வெளிவந்தன. பெரும்பாலும் குழுச் சண்டைகளில் நான் கலந்து கொள்ளவில்லை. வெங்கட் சாமிநாதன், பிரமிள், தமிழவன் முதலியவர்கள் திறனாய்வுகள் என்ற முறையில் தமிழுக்கு வளம் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

அந்நியமாதல் என்ற உணர்வோடு கவிதைகள் எழுதிய ஞானக்கூத்தனைப் பழி தீர்த்துக் கொள்ளும் முறையில் வெங்கட் சாமிநாதன் முதலியவர்கள் எழுதிய விமர்சனங்களில் எனக்கு உடன்பாடில்லை. இந்தத் தாக்குதலில் சுந்தர ராமசாமி கலந்து கொண்டிருக்க வேண்டாம் என்பது என் கருத்தாக இருந்தது. விவாதங்களின் வழியே தமிழவன் முன்னுக்கு வந்து கொண்டிருந்தார். ராஜ்கவுதமனும் சிறப்பாக எழுதினார். தமிழவன், ராஜ்கவுதமன், ஆல்பர்ட் முதலியவர்களோடு 'இலக்கு' அமைப்பில் என்னையும் இணைத்துக் கொண்டேன். இந்தக் கால அளவில் என்னைப் பொறுத்தவரை மார்க்சியம் தான் முதன்மையாக இருந்தது. அரசியலை முதன்மைபடுத்தி கலை. இலக்கியம் ஆகியவற்றை இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்துக்குத் தள்ளுவது எனக்கு உடன்பாடில்லை. கட்சிக்காரர்கள் இதைத்தான் செய்து கொண்டிருந்தனர். கைலாசபதியை எதிர்த்து வெங்கட் சாமிநாதன் எழுதிய விமர்சனங்களில் சிலவற்றோடு எனக்கு உடன்பாடுண்டு. பிரமிளின் கவிதைகள் பற்றி நான் எழுதிய கட்டுரையில் என்னைக் காட்டிலும் பிரமிளுக்குத்தான் மார்க்சியத்தின் தேவை அதிகம் என்று எழுதினேன்.

வெங்கட்சாமிநாதனின் "பாலையும் வாழையும்", என்ற கட்டுரைத் தொகுப்பை விமர்சனம் செய்து எழுதினேன். சுந்தர ராமசாமியின் "ஜே.ஜே. சில குறிப்புகள்" நாவலில் வெளிப்பட்ட அவரது பார்வை எனக்கு உடன்பாடில்லை. முல்லைக்கல் ஒரு மோசமான மார்க்சியன். திருத்தல்வாதி, ஜே.ஜே.வுக்கு எதிராக இவனை நிறுத்தியிருக்க வேண்டாம். வளமான மார்க்சியரும் நம் காலத்தில் வந்திருக்கின்றனர். இந்த மார்க்சியனை நாவலுக்குள் சு.ரா. கொண்டு வந்திருக்க வேண்டும். வரலாற்றுக்குள் வந்துவிட்ட இந்த மார்க்சியன் மீது சு.ரா.வுக்கு அக்கறையில்லை. ஜெயகாந்தனை நான் வெகுவாக மதித்து விரிவாக எழுதினேன். அசோகமித்திரன் படைப்புகள் அன்றும் இன்றும் என் மரியாதைக்கு உரியவை. நீல.பத்மநாபனின் சில நாவல்களோடு எனக்கு முரண்பாடுண்டு. கலாப்பிரியாவை நான் பெரிதும் மதிக்கிறேன். இக்காலத்தில் நான் எழுதிய கட்டுரைகள் "மார்க்சியமும் தமிழ்

இலக்கியமும்" என்ற என் தொகுப்பில் உள்ளன.

இந்த இடத்தில் நான் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். 1970க்கு முன்னரே தமிழ் இலக்கியத்திற்குள் வந்து ஆற்றலோடு செயல்பட்ட செல்லப்பா, க.நா.சு., லா.ச.ரா., சிட்டி ஆகியவர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். இவர்களோடு சில/பல சந்தர்ப்பங்களில் நான் நெருக்கமாகப் பேசி இருக்கிறேன். இவர்களோடு என் கருத்து வேறுபாடுகளையும் சொல்லியிருக்கிறேன். இவர்களைப் போல அசோகமித்திரன், இ.பா., ஆதவன், ஞானக்கூத்தன் ஆகியவர்களோடும் பழகியிருக்கிறேன். அசோகமித்திரனும், இ.பா.வும் வண்ணநிலவனும், வண்ணதாசனும் என்னிடத்தில் கொண்டிருக்கும் பேரன்பை இப்பொழுதும் நினைத்துக் கொள்கிறேன். செல்லப்பாவையும், சிட்டி அவர்களையும் இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். க.நா.சு. வோடு யாரும் பேச்சில் விளையாட முடியும். அவரும் விளையாடுவார். வெங்கட் சாமிநாதனோடும், பிரமிளோடும் உறவு வேண்டாம் என்று நானும் விலகித்தான் இருந்தேன். ஆனால் பின்னர் இவர்களோடு பழக நேர்ந்த சந்தர்ப்பங்களில் இவர்கள் எந்தளவுக்குக் குழந்தைத்தனத்தோடு இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து வியப்படைந்தேன். சுந்தர ராமசாமி அவர்களிடம் நான் நிறையப் பேசியிருந்தபோதிலும் எப்படியோ அவர் மனத்தில் நான் இடம்பெற முடியவில்லை. ஜெயகாந்தன் எங்கு கண்டாலும் இரண்டொரு வார்த்தையாவது என்னோடு பேசாமல் செல்வதில்லை.

இங்கு நான் சொல்லவந்தது என் காலத்து இலக்கியவாதிகளோடு கூடியவரை நெருக்கமாகப் பழகி அவர்களிடமிருந்து நிறையக் கற்றுக் கொண்டேன் என்பனபற்றி. இவர்கள் எவரோடும் என் நிலைப்பாட்டைச் சொல்லாமலும் இருந்ததில்லை. தமிழவனையும் இங்கு நான் சொல்லியிருக்க வேண்டும். விவாதங்களில் எனக்கு ஆர்வம் உண்டு. கற்றுக் கொள்வதிலேயே நான் கவனமாக இருப்பேன். கற்றுக் கொள்வதற்குக் கிடைத்த எந்த ஒரு வாய்ப்பையும் நான் தவறவிடமாட்டேன். கைலாசபதியோடு நிறையப் பேசினேன். வானமாமலையோடு உரையாடல் சாத்திய மில்லை. முத்தையா அன்பானவர் எனினும்

என்னையும், ஒரு மார்க்சியனாக அவர் கருதவில்லை என்று நினைக்கிறேன். தி.க.சி.யின் பேரன்புக்கு இணை சொல்ல முடியாது. என்னைப் பற்றி ஒரு முறையேனும் மரியாதையோடு அவர் அன்று எழுதியதில்லை. எத்தனையோ வசைச் சொற்களைக் கொட்டியிருக்கிறார். எனினும், குழந்தை போலப் பழகும் அவரிடம் எனக்குக் கோப மில்லை. ரகுநாதனோடும் நெருங்கிப் பழக வாய்ப்பில்லை. ஜீவா அவர்களோடு நெருக்கமாக இருந்து இருக்கிறேன். வானமாமலையின் ஆராய்ச்சி இதழ் எங்களுக்குப் பாடநூலாகப் பயன்பட்டிருக்கிறது. நண்பர் கேசவன் அவர்களோடு எனக்கு முரண்பாடு உண்டு எனினும் என் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய நண்பர் அவர்.

என்னைப் பற்றி நண்பர்கள் முன்வைக்கும் திறனாய்வுக்கு இப்பொழுது நான் பதில் சொல்லலாம். இடதுசாரிகளை நான் பாராட்டுவதில்லை. மார்க்சியத்திற்கு எதிரானவர்களை, வலது சாரிகளை, பார்ப்பனர்களை நான் பாராட்டி எழுதுகிறேன், இப்படி என்மீது ஒரு குற்றச்சாட்டு உண்டு. இதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

இடதுசாரிகள் என்று சொல்லப்படுபவர்கள் எழுத்துக்களில் அரசியல் மேலோங்கி இருக்கிறது. அவரவர் கட்சிப் பார்வை முன்னுக்கு வருகிறது. இவர்கள் அரசியலும் பெரும்பாலும் எனக்கு உடன்பாடில்லை. இவர்களின் கட்சிக் கண்ணோட்டம் மார்க்சியத்தைக் குறுக்குகிறது. இவர்களின் எழுத்துக்களில் படைப்பியக்கம் மேலோங்குவதில்லை. பல சமயங்களில் இவர்கள் படைப்பாளிகளாக மேம்படாமல் எழுத்தாளர்களாகவே எஞ்சுகிறார்கள். வாழ்வின் புதிர்கள் இவர்கள் எழுத்துக்களில் இல்லை. உள்ளுணர்வு பற்றி இவர்களுக்க அக்கறையில்லை. எழுத்தும் ஒரு தவம் என்று இவர்கள் கருதுவதில்லை. இவர்களி லுள்ளும் சில அரிய விதிவிலக்குகள் இருக்கின்றன. இவர்களை மதிப்பதில் நான் என்றும் தவறவில்லை. சின்னப்ப பாரதி, டி. செல்வராஜ் ஆகியவர்களின் முதல் இரண்டு நாவல்கள் நம் மரியாதைக்குரியவை. அடுத்து இவர் எழுதிய நாவல்கள் முன்னைய தரத்தில் இல்லை. பஞ்சும் பசியும் நாவலை இன்று பாராட்டமுடியாது. ஐசக் அருமைநாதனின் கீறல்கள் இதைவிடச்

சிறந்த நாவல். பொன்னீலன் எழுதிய கொள்ளைக்காரர்கள், புதிய தரிசனங்கள் நாவல்களைப்போல முன்னையவை இல்லை. எடுத்துக்காட்டாக சிலவற்றை இங்கு குறிப்பிட்டேன். பட்டியல் போடுவது என் நோக்கமல்ல.

படைப்புகள் என்ற வகையில் அசோகமித்திரன், இ.பா., லா.ச.ரா., மாதவன், சு.ரா., சா. கந்தசாமி, வண்ணநிலவன், வண்ணதாசன், பிரபஞ்சன் என்று இன்னும் பலரை நான் குறிப்பிட முடியும். இவர்கள் எழுதியவை படைப்புகள். இவர்கள் அனைவரும் தம்மை மார்க்சியர் என்று கூறிக் கொள்வதில்லை. மார்க்சியத்தோடு இவர்களுக்கு அனுதாபம் இருக்கலாம். சிலர் மார்க்சியத்திலிருந்து விலகியும் இருக்கலாம். இவர்களில் எவரையும் சமூக அக்கறை இல்லாதவர் என்று கூற முடியாது. இவர்கள் படைப்புகளும் யதார்த்தவகைப் படைப்புகள். க.நா.சு.வின் சில நாவல்கள் தரமானவை. கவிஞர் கலாப்பிரியா போன்றவர் களையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்களிடம்தான் வாழ்க்கை சிறப்பாக வெளிப்படுகிறது. இவர்கள் வர்க்க வரையறைகளில் மனிதர்களைப் பார்ப்பதில்லை. வாழ்வின் அவலங்களோடு இருக்கிற மனிதர்களை இவர்கள் பார்க்கிறார்கள், படைக்கிறார்கள். இவர்கள் தம்மளவில் நேர்மையானவர்கள். இவர்கள் நடுத்தர வர்க்க மனிதர்கள் என்பதாலேயே இவர்களை முதலாளிப் பார்வை ஆக்கிரமித்திருக்கிறது என்று சொல்வதற்கில்லை. முதலாளியத்தின் சில கூறுகளை இவர்கள் வரவேற்கலாம். அதே சமயம் முதலாளியத்தைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. கம்யூனிச இயக்கமும் முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டதாக இருக்கிறது. சமூகத்தை முற்றாக மாற்றி அமைக்கும் இயக்கத்தில் இவர்கள் இல்லை. அப்படி இவர்கள் செய்திருக்க முடியுமானால் மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்கள் இவர்களோடுதான் இருப்பார்கள். இவர்களைத் திறனாய்வு செய்வதற்கு இடமிருக்கிறது. இவர்களிடமிருந்து கலையை, படைப்பைக் கற்றுக் கொள்ளும்போதே இவர்களைத் திறனாய்வு செய்ய இடமுண்டு. இவர்களது பார்வை எந்த வரையறைகளோடு இயங்குகிறது என்பதோடு இவர்கள் பார்வைக்கப்பாலும் இருக்கிற உலகம் பற்றிச் சொல்ல முடியும்.

வெங்கட்சாமிநாதனையோ, பிரமிளையோ நான் மார்க்சியத்திற்கு எதிரானவர் என்று கருதுவதில்லை. சில கூறுகளில் இவர்கள் இறுக்கம் கொண்டிருக்கிறார்கள். மார்க்சியம் பற்றி விரிவாக இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அசலான மார்க்சியரை இவர்கள் அறியவில்லை. கட்சிக்காரர்கள் இவர்களைக் கடுமையாகத் தாக்கி இதன் காரணமாக இவர்களை மார்க்சியத்திற்கு அந்நியமானவர்களாக மாற்றிவிட்டார்கள். ஆரோக்கியமான முறையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்குமானால் இவர்களை மார்க்சியத்தின் எல்லைக்குள் கொண்டு வந்து இருக்க முடியும். வானமாமலை, தி.க.சி., முத்தையா முதலியவர்கள் தன் கட்சி சார்ந்த எழுத்தாளர்களைக் கொண்டாடுகிறார்கள். பிறரைக் கண்டு கொள்வதில்லை. இவர்களில் ஒருவரேனும் எஸ்.வி.ஆரையோ, கோ. கேசவனையோ, இன்குலாப்பையோ, அ.மார்க்சையோ, ஞானியையோ பாராட்டி எழுதியதில்லை. உலகம் எங்கள் கைகளில்தான் என்ற வீம்போடு தன் எல்லைக்குள் வராதவர்களைத் தாக்குகிறார்கள். பிராய்டியம் பற்றிப் படித்தறிய வில்லை. வரலாறு பற்றிய ஆய்வில்லை. இந்தியச் சமூகம் பற்றிய சுயமான ஆய்வில்லை.

தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு என்று இவர்களுக்கு அக்கறையில்லை. தமிழ்த் தேசியம் என்றால் இவர்களுக்கு வெறுப்பேற்படுகிறது. [மார்க்சியம் பற்றிக் கூடுதலான புரிதலோடு படைப்பாளிகளை நான் பார்க்கிறேன். அவர்களிடமிருந்து நான் கலையைக் கற்றுக் கொள்கிறேன். தமிழைக் கற்றேன். மார்க்சியர் என்று அறியப்பட்டவரிடமும் நான் தெரிந்து கொள்வதற்கு நிறைய உள்ளன.]

இவர்களில் சிலர்/பலர் பார்ப்பனர் என்பதனாலேயே இவர்களை என்னால் வெறுக்க முடியாது. இடதுசாரிப் பார்ப்பனியம் மரியாதைக்கு உரியது. வலதுசாரிப் பார்ப்பனியம் வெறுப்புக் குரியது. இவர்களிடம் வெளிப்படும் ஒருசில வலதுசாரிக் கூறுகள் காரணமாக இவர்களைத் தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்து விலக்கி வைக்க வேண்டியதில்லை. நடுத்தரவர்க்க எழுத்தாளர்கள் என்பதனால் இவர்கள் சமூக நிலையில்

அடிமட்டத்தில் உள்ள மனிதரகளைப் பற்றி எழுதுவதில்லை என்பது உண்மை என்ற போதிலும் இதற்காக இவர்களைக் காய முடியாது. தம்மைப் போன்ற நடுத்தர/கீழ் நடுத்தர மக்களின் அவலங்கள் பற்றி இவர்கள் எழுதுவதை நாம் மதிக்க முடியும். இவர்களும் நம் சமூக மனிதர்கள்.

பால்சாக்கை மார்க்சு மதித்துப் படித்தார், சேக்ஸ்பியரைப் பாராட்டினார் என்றெல்லாம் இங்கு சொல்லவேண்டியதில்லை. டால்ஸ்டாயை பாராட்டியளவுக்கு தாஸ்தா வெஸ்கியையும் லெனின் புரிந்து பாராட்டி இருக்கமுடியும். கட்சிக் கண்ணோட்டம் படைப்பாளியின் பார்வையைக் குறுக்கிவிடக்கூடாது. படைப்பாளியைப் பொறுத்தவரை கட்சிக் கட்டுப்பாடென்பதை மறுக்கும் துணிவு தேவை. மார்க்சிய கட்சி சார்பிலுள்ள கலை இலக்கிய அமைப்புகளுக்குள் கட்சிக் கட்டுப்பாடு திணிக்கப் படுவதில்லை என்று இவர்கள் சொல்லிக் கொள்வதிலும் உண்மை யில்லை. ராஜம் கிருஷ்ணனைத் தொடர்ந்து பாராட்டும் இவர்கள் இந்திரா பார்த்தசாரதியை ஏற்பதில்லை. சோவியத் யூனியன் தகர்ந்ததோடு சோசலிச யதார்த்தவாதத்தைக் கைவிடுவதற்கான மன உறுதியும் தெளிவும் ரகுநாதனிடமும், ஜெயகாந்தனிடமும் இருந்தன. புதிய தரிசனங்கள் நாவலில் பொன்னீலன் சோசலிச யதார்த்தவாதத்தைக் கடைப்பிடிக்கவில்லை. கட்சி இதற்காக இவர்களைக் கண்டுகொள்ளவும் இல்லை. கண்டிக்கவும் இல்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான தகுதிகளில்ஒன்று நவீன தமிழ் இலக்கியக் காலம். நூறாண்டுகளுக்கு மேற்பட்ட நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970 முதற்கொண்டு 1985 அளவிலான காலம் படைப்புகளுக்காக மட்டுமல்லாமல் திறனாய்வு வளர்ச்சியும் ஏற்பட்ட காலம் என்று இந்தக் காலத்தைச் சிறப்பித்துச் சொல்ல முடியும். தமிழில் திறனாய்வு வளரவில்லை என்று சொல்வதில் பொருள் இல்லை. திறனாய்வு ஒரு இயக்கமாக எழுச்சி பெற்றது இந்தக்கால அளவில்தான். இலக்கியத்தில் மட்டுமல்லாமல் திறனாய்விலும் முரண்பாடுகள் இல்லாமல் வளர்ச்சி சாத்திய மில்லை. முரண்பாடுகள் குழுச் சண்டையாக, மோதல்களாக மாறுவதை ஒருவகையில் விபத்தென்று கூற முடியும்.

வளர்ச்சியைப் பாதிப்பது இத்தகைய விபத்து. குழுச்சண்டைகள் இன்றைக்கும் தொடர்வது தமிழின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க முடியாது. இக்காலத்திய படைப்புக்களையும், திறனாய்வையும் இன்றைய இளைஞர்கள் தேடிப்படிக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தின் ஆக்கத்திற்கு திறனாய்வு இல்லாமல் முடியாது. ஆகவே தமிழ் அறிஞர்களும், திறனாய்வாளர்களும் இந்தக் கால வரலாற்றைத் தமிழின் பொற் காலங்களில் ஒன்று என்று கருதிப் பாதுகாக்க வேண்டும்.

1985 முதற்கொண்டு 1995/96 வரையிலான காலத்தை என் இலக்கிய வாழ்வின் அடுத்த கட்டம் என்று குறிப்பிட வேண்டும். இந்தக் கால அளவில் உலகளவிலும், இந்தியாவிலும், தமிழகத்தின் இலக்கியச் சூழலிலும் மிக முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றுக்கெல்லாம் எதிர்வினை தரும் முறையில் "நிகழ்" இதழை நண்பர்களின் ஒத்துழைப்போடு நான் நடத்திவந்தேன். மாக்சியம் குறித்துக் கூர்மையான கேள்விகள் இக்கால அளவில் எழுந்தன. அமைப்பியல்வாதம், நவீனத்துவம், பின் நவீனத்துவம் ஆகியவை தமிழகச் சூழலில் பெரிதாகப் பேசப்பட்டன. இவற்றோடு பெண்ணியமும், தலித்தியமும் பெரியாரியமும் முன்னுக்கு வந்தன. இதே கால அளவில் தமிழியம் பற்றியும் பேச வேண்டிய தேவை ஏற்பட்டது. இவை குறித்தெல்லாம் இந்தப் பகுதியில் சொல்ல வேண்டும்.

1980களில் இறுதியில் முதலில் கிழக்கு ஐரோப்பாவிலும், பின்னர் சோவியத் யூனியனிலும், சோசலிசக் கட்டுமானங்கள் தகர்ந்தன. உலகளவில், உலகமயமாதல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் என்ற நோக்கில் தொடக்கத்தில் டங்கள் திட்டமும் பிறகு உலக வர்த்தக அமைப்பும் உருவாயின. இந்தியச் சூழலிலும் இவற்றின் தாக்கங்கள் கூடுதலாக இருந்தன. மார்க்சியத்திற்கு மாற்று என்ற முறையில் அமைப்பு மையவாதம் தொடங்கிப் புதிய கோட்பாடுகள் பல அறிமுகமானதோடு, தமிழிலக்கியச் சூழலில் இவை கடுமையான சர்ச்சைகளை உருவாக்கின. ஒருபக்கம் நிறப்பிரிகை இதழென்றால் அதன் மறுபக்கத்தில் நிகழ் இதழ் செயல்பட்டது. இன்னும் பல இதழ்கள் இக்கால அளவில் செயல்பட்டன. பாளையங் கோட்டையில் சிவசு

நடத்திய "மேலும்" இதழ், பெங்களூரில் இருந்து வெளிவந்த "வித்தியாசம்" இதழ், சென்னையிலிருந்து வெளிவந்த "கவிதாசரண்" என்று பலவற்றை இங்கு குறிப்பிடலாம். தமிழகம் முழுவதும் தொடர்ந்து கருத்தரங்குகளும் நடைபெற்றன. தமிழக இலக்கியச்சூழலில் முக்கியமான திருப்பம் இப்பொழுதும் ஏற்பட்டது.

சோவியத் யூனியன் முதலிய நாடுகளில் நிகழ்ந்த சோசலிசத் தகர்வு என்பதை மார்க்சியத்தின் தோல்வி என நாங்கள் கருதவில்லை. மார்க்சியத்தின் உள்ளுறை ஆற்றல்கள் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு என்று எஸ்.என். நாகராசன் இதை விளக்கினார். மாவோவின் சிந்தனைகள் அடிப்படையாகக் கொண்டு மேலை மார்க்சியத்திற்கு எதிராகக் கீழை மார்க்சியம் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார். மேலை மார்க்சியத்தில் பகை முரண்பாட்டிற்கு அழுத்தம் அதிகம் என்றும், கீழை மார்க்சியத்தில் நட்பு முரண்பாடு முக்கியத்துவம் பெறுகிறது என்றும் தொடங்கிப் பல்வேறு விளக்கங்களைத் தந்தார்.

1968 முதற்கொண்டே மூன்றாம் உலக நாடுகளில் புதிய காலனியம் செயல்படுவது குறித்து எழுதினார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வல்லரசு நாடுகள் மூன்றாம் உலக நாடுகளை தங்கள் சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் ஒத்த முறையில் மாற்றி வருவதை எடுத்துரைத்தார். அதாவது, இங்கெல்லாம் அமெரிக்காவோ, பிரிட்டனோ மூலதன உதவி, தொழில்நுட்ப உதவி என்ற பெயரில் ஏற்படுத்தும் தொழில்கள் மூலம் மேறகத்தியர் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இங்கு ஏற்படுத்தப்படும் தொழில் முயற்சிகள் இந்தியா முதலிய நாடுகளின் பொருளியல் விடுதலைக்கான தொழில்கள் அல்ல. இங்குள்ள முதலாளிகள் மற்றும் அரசுகளோடும் கூட்டுச் சேர்ந்து கொள்வதின் மூலம் தேசத்தின் இயற்கை வளங்கள் முதலியவற்றைக் கொள்ளையடிப்பதோடு மக்களின், விடுதலை இயக்கங்களைத் தீவிரமாக ஒடுக்கவும் முடியும். சோவியத் யூனியனும் இந்திய அரசோடு ஒத்துழைத்தது. வல்லரசு நாடுகளின் உள்நோக்கத்தை நம்மவர்புரிந்து கொள்ளவில்லை. மாவோவைப் பொறுத்தவரை தன் கொள்கையில் தெளிவோடும் உறுதியோடும்

இருந்தார். நவீன அறிவியல் தொழில்நுட்பம் என்பவை முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டவை. நிபுணர்கள் இல்லாமல் இவற்றைச் செயல்படுத்த இயலாது. மையத்தில் மூலதனத்தையும், அதிகாரத்தையும் இவை குவிக்கின்றன. இத்தகைய புதிய காலனியம்தான் புதிய பொருளாதாரம், உலகமயமாதல் முதலிய பெயர்களில் இங்கு வந்து சேர்ந்திருக்கிறது. இவற்றைக் கடுமையாக நாம் எதிர்க்க வேண்டும். நவீன அறிவியலும், தொழில்நுட்பமும் செய்யும் விளைவுகளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் புகுப்பதின் விளைவாகச் சோவியத் யூனியனும் சமூக ஏகாதிபத்தியமாகத்தான் மாறியது. இது தனக்குள் தகர்ந்ததில் வியப்பில்லை.

இவ்வகை விளக்கங்களை நாகராசன் தன் கட்டுரைகளில் விரிவாக எழுதினார். நிகழில் இந்தக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. மேற்கத்திய மார்க்சியத்திற்கு குறிப்பாக மார்க்சு முதலியவர்களுக்கு அன்பு தெரியாது என்று நாகராசன் எழுதியதை நண்பர்கள் கடுமையாகக் குறை கூறினர். பொருட்களைப் பற்றி, உயிர்களைப்பற்றி ஆய்வு செய்வதற்கு அன்பு இல்லாமல் முடியாது. நாகராசனின் இவ்வகை விளக்கம் மார்க்சின் அந்நியமாதல் கோட்பாட்டிற்கு அழுத்தம் தந்தது. ஆண்டான் தனக்கு விடுதலை வேண்டும் என்றால் அடிமைக்கும் விடுதலை தரவேண்டும். அதேபோல் அடிமைக்கும் விடுதலை தேவை என்றால் ஆண்டானையும் விடுவிக்க வேண்டும் என்று நாகராசன் சிறப்பாகவே விளக்கினார். கீழை மார்க்சியம் என்பதற்கான விளக்கங்கள் விரிவானவை. சுருக்கமாக இங்கு சொல்வதற்கு இயலாதென்பதை நான் உணர்கிறேன், இவை குறித்த கட்டுரைகள் நிகழில் தொடர்ந்து வெளிவந்தன. நாகராசனின் கட்டுரைகள் அடங்கிய மார்க்சியம் கிழக்கும் மேற்கும் என்ற தொகுப்பை பிறகு நண்பர் ராமலிங்கம் அவர்களின் ஒத்துழைப்போடு நாங்கள் வெளியிட்டோம்.

நூலின் வெளியீட்டு விழா திருச்சியில் நடைபெற்றது. நாகராசனின் வைணவ பின்புலத்தையும், அன்பு பற்றிய அவரது கருத்தையும் முதன்மைப்படுத்தி நாகராசனைப் பார்ப்பணர் என்ற தாக்குதலை அ. மார்க்ஸ் அங்குதான் தொடங்கி வைத்தார்.

இந்தத் தாக்குதலை எதிர்கொள்ளும் முறையில் நானும் நண்பர்களும் அன்றுமுதல் இன்றுவரை பதில் கூறி வருகிறோம். இதன் தொடர்பாகத்தான் எனக்குள்ளும் பார்ப்பனியத்தைக் கண்டு நண்பர்கள் சாடுகின்றனர். இதில் உண்மை இல்லை என்பதை நானும் தொடர்ந்து சொல்லி வருகிறேன்.

உலகமயமாதல் குறித்த கூர்மையான திறனாய்வுகளை நிகழ் விரிவாகத் தொடர்ந்து வெளியிட்டது. ரவி சீனிவாஸ் தொடர்ந்து எழுதினார். நவீன அறிவியல் / தொழில் நுட்பம் இயற்கையை, மனிதர்களை எவ்வாறெல்லாம் நாசப்படுத்துகிறது என்பது குறித்து நிகழில் தொடர்ந்து கட்டுரைகள் வெளிவந்தன. அறிவியலையும், ஆன்மீகத்தையும் உடன்படுத்தும் முறையிலும், எதிர்நிலைப்படுத்தும் முறையிலும் கட்டுரைகள் வெளியாயின. க. பூரண சந்திரன், ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன், ஜீவஒளி, ரவி சீனிவாஸ், பிரமிள் முதலியவர்கள் கட்டுரைகள் எழுதினர். சிங்கராயர் சில அரிய மொழியாக்கக் கட்டுரைகள் தந்தார்.

மேலை மார்க்சியத்தின் சாதகம் மற்றும் பாதகமான கூறுகள் பற்றிய ஒருவிவாதம் “நிகழில்” எழுந்தது. அ.மார்க்சின் கட்டுரையை மறுத்து அன்பு வசந்தகுமார் எழுதினார். அன்பு வசந்தகுமாரின் கட்டுரை எனக்குக் கூடுதலான நிறைவைத் தரக்கூடியதாக இருந்தது. இதேபோல இன்னொரு சமயம் கிராம்சி குறித்து ஏற்பட்ட விவாதத்தில் ஒரு முனையில் எஸ்.வி.ஆர். இருந்தார். இன்னொரு முனையில் அன்பு வசந்தகுமார் இருந்தார். முடிவை வாசகரின் விருப்பத்திற்கு நான் விட்டபோதிலும், என் கருத்துஅன்பு வசந்தகுமாரைச் சார்ந்ததாகவே இருந்தது. இது குறித்து அப்பொழுது நான் எழுதவில்லை.

1980களின் தொடக்கம் முதலே தமிழகச் சூழலில் அமைப்பியல்வாதம் பற்றிய கருத்துக்கள் விரிவாகப் பரவின. “படிகள்” இதழில் கட்டுரைகள் சில வெளிவந்தன. தமிழவனைப் பொருத்தவரை இலக்கியம் முதலியவற்றின் ஆய்வில் மார்க்சியத்தின் போதாமையை உணர்ந்து அமைப்பியல்வாதம் பற்றி எழுதத் தொடங்கினார். ஸ்ட்ரக்சுரலிசம் என்ற அவரது பெரிய நூல் வெளிவந்தது. வெளிவந்தவுடனே மிகுந்த அக்கறையோடு நான்

இந்த நூலைப் படித்தேன். நண்பர் முத்துப் பொருநனும் இந்த நூலை நுட்பமாகப் படித்தார்.

இருவர் கருத்துகளும் வியக்கத்தக்க முறையில் ஒத்திருந்தன. தமிழவனின் நடை காரணமாக நூலைப் படிக்க இயலவில்லை என்று நண்பர் சிலர் கூறியபோதிலும் எங்களைப் பொருத்தவரை தமிழவனின் நடை ஒரு தடையாக இல்லை. எங்கள் சிந்தனையில் எத்தனையோ கதவுகள் திறந்தன என்பதை நான் இங்குக் குறிப்பிட வேண்டும். தமிழகச் சூழலில் அடுத்து சில ஆண்டுகள் அமைப்பியல் பற்றியும், பின் அமைப்பியல் பற்றியும், நவீனத்துவம், பின் நவீனத்துவம் பற்றியும் விரிவான விவாதங்கள் நடந்தன. சில கருத்தரங்குகளில் நான் கலந்து கொண்டேன். எம்.டி. முத்துகுமாரசாமி, நாகார்ஜுனன் முதலியவர்களைக் கோவைக்கு அழைத்துப் பயில்மனைகள் நடத்தினேன். தமிழவன், ராஜ்கவுதமன் முதலியவர்களோடும் நான் பேசினேன். ஒரு சமயம் வ.கீதா அவர்களிடத்தும் என் ஐயங்களைத் தீர்த்துக் ொண்டேன். பேரா. முத்துமோகன் அவர்களும், நண்பர் பூர்ணசந்திரனும் இவை பற்றி எல்லாம் தீவிரமான சிந்தனை உடையவர்கள். இத்தகைய விவாதங்கள் விளைவாகப் பெண்ணியம், தலித்தியம் பற்றியும், பெரியாரியம் குறித்தும் புதிய சிந்தனைகள் எழுந்தன.

என்னைப் பொருத்தவரை மார்க்சியம் என்ற அடிப்படையிலிருந்து ஒரு பொழுதும் விலகவில்லை. மார்க்சியத்தை விட்டு விலகாமலேயே புதிய கருத்துகளை நான் உள்வாங்கிக் கொண்டிருந்தேன். எஸ்.வி. ஆரும், அ. மார்க்சும், தமிழவனும் எனக்குத் தெரிந்த அளவில் சில சந்தர்ப்பங்களில் மார்க்சியத்தைவிட்டு வெளியில் செல்வதாக உணர்ந்தேன். நான் வெளியில் ஒருபோதும் சென்றதில்லை. மார்க்சியத்தின் உள்ளிருந்தே அவற்றை எதிர்கொள்ள முடியும் என்று நம்பினேன். மார்க்சியத்தின் அடிமைகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும், ஆழப்படுத்திக் கொள்வதற்கும் இந்தப்புதிய கருத்தாக்கங்கள் சிறப்பாகப் பயன்படும். மார்க்சியமும் அதிக அளவில் ஒரு கட்டமைப்பு மையத்தில் அதிகாரத்தைக் குவிக்கிற ஸ்டாலினிய வகைப்பட்ட மார்க்சியம் நமக்குத் தேவையில்லை. மார்க்சியமும்

புதிய விளக்கங்களுக்கு, புதிய வார்ப்புகளுக்கு உள்ளாகக் கூடியதுதான். அடித்தளம் நான் எப்பொழுதும் தீர்மானிக்கிற சக்தி என்பது உண்மையில்லை. இயங்கியலை மேலும் நுட்பமாக வளர்த்தெடுக்க முடியும். மார்க்சியத்தையும் ஒரு கற்பிதம் என்றோ புனைவு என்றோ பார்ப்பதன் மூலம் மார்க்சியம் மேலும் தெளிவுபடுகிறது. மார்க்சியம் இதனால் பொய்யாவதில்லை. அதிகாரத்தை முழு அளவில் களைந்துகொள்கிற சூனியமும் கூட ஒரு மார்க்சியவாதிக்குள் இருப்பது நல்லதுதான். பெரிய கட்டுமானங்கள் நமக்கு வேண்டாம். அவற்றைக் கூடியவரை களைந்து விட்டு கட்டுமானங்களை சிறியவனாக உருவாக்கிக் கொள்ளஇயலும். சிறிய கட்டமைப்புக்குள்ளும் அதிகாரம் சிறிய அளவிலேனும் இயங்குவது தவிர்க்க இயலாது. தேவைப்படும் பொழுது இதையும் களைந்து கொள்ளமுடியும். கலாச்சாரம், வரலாறு முதலியவை போலவே கட்சி, தத்துவம், மார்க்சியம் உட்பட அனைத்தும் கட்டமைப்புக்கள்.

கட்சிகாரர்கள் இப்படிச் சிந்திப்பதில்லை. எஸ்.என். நாகராசனே கூட இந்தப் புதிய கருத்தாக்கங்கள் வழியே மார்க்சியத்தை மேலும் சிறப்பாக அணுகமுடியும் என்பதன் தேவையை ஒப்புக் கொள்ளவில்லை. ஒருசமயம் பிரமிளையும் இன்னொரு சமயம் வெங்கட் சாமிநாதனையும் கூடக் கேட்டேன். அமைப்பியல் முதலியவை பற்றிச் சில நூல்களையாவது நீங்கள் படிப்பீர்கள் என்றால் அப்புறம் அமைப்பியலின் மொழியியல் உங்கள் கருத்துக்களைச் சிறப்பாகவே வெளிப்படுத்த இயலும் என்று கூறினேன். தமிழவன் மீது அவர்கள் கொண்ட வெறுப்பு தீர்வதாக இல்லை.

பெண்ணியம், தலித்தியம், பெரியாரியம் முதலியவையும் இந்தப் புதிய கருத்தாக்கங்களின் வழியே புத்துயிர் பெற்றன என்று சொல்ல வேண்டும். தலித்தியம் தன்னைத் தனிமுதல் நெறி எனக் கண்டது போலவே பெண்ணியமும் தனிமுதல் நெறி எனத் தன்னைக் கண்டது. பெண்ணியமும், பெரியாரியமும் ஒரு வகையில் தங்களுக்குள் ஊடாடின. தலித்தியம் போலவே பெரியாரியமும் முதலில் சாதி, மதம், பார்ப்பனியம் ஒழிக்கப்பட வேண்டும், பிறகுதான் பொதுவான மனித விடுதலை பற்றிப் பேச

முடியும் என்று கருதியது. நிறப்பிரிகை முதலிய வட்டங்களைச் சேர்ந்தவர்கள் நிறைய எழுதினர். பேசினர். மார்க்சியத்தின் மையம் சமதர்மம்; பெரியாரியத்திலும் சமதர்மத்தை மையப்படுத்த இயலும். தலித் மக்களும், மகளிர் அமைப்புகளும் உடனடித் தேவைகளுக்காகப் போராடுவதை, கலகம் செய்வதை நான் மறுக்கவில்லை. எனினும் சமதர்மத்தில் அவையும் மையம் கொள்ள இயலுமானால் மட்டுமே மனித விடுதலை சாத்தியம்; உலகமயமாதல் உழைக்கும் மக்கள் அனைவரையும் கூடுதலான சுரண்டலுக்கும், ஒடுக்கு முறைக்கும் உள்வாங்குவதன் மூலம் உழைக்கும் மக்களை விளிம்பு நிலைக்குத் தள்ளுகிறது. மனித மாண்பை அழிக்கிறது.

இவ்வகைச் சோகங்களிலிருந்து தலித் மக்களோ, பெண்களோ தனித்திருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. மார்க்சியத்தின் எல்லைக்குள்ளிருந்தே அனைவரும் இணைந்து போராடுவதன் மூலம்தான் மனித விடுதலை சாத்தியப்படும். பெரியாரியத்திற்கும் வேறுநெறி இருக்க முடியாது.

தொடர்ந்து நடந்த விவாதங்கள் வழியே இவ்வகைத் தெளிவுகளுக்கு நான் வந்து சேர்ந்தேன். இதற்காக நான் நிறப்பிரிகை நண்பர்கள் முதலியவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நமக்கிடையில் உள்ள வேறுபாடுகள் குறித்து ஆரோக்கியமான விவாதங்கள் வேண்டுமென்று நான் எவ்வளவு முறை எழுதினாலும் சில நண்பர்கள் இதைப் பொருட்படுத்த வில்லை. விவாதங்களைச் சூடாக்கி, நண்பர்களைக் கேவலப் படுத்துவதன்மூலம் விவாதங்களில் வெற்றி பெற்றதாக அவர்கள் ஆர்ப்பரித்தனர். இவை எல்லாம் ஓரளவுக்கேனும் நிகழ் இதழ்களில் பதிவு செய்தேன். தலித்தியம், பெண்ணியம் குறித்தும் கட்டுரைகள் வெளியிட்டோம். கவிதைகள், சிறுகதைகளும் வெளியிட்டோம். உஜ்ஜை ராசன், அண்ணாத்துரை முதலிவர்கள் எழுதினர்.

ஓர் இலக்கிய இதழ் என்ற முறையிலும் நிகழ் சிறப்பாகவே பணிபுரிந்தது. 1983ல் நண்பர் சுகுமாரனை ஆசிரியராகக் கொண்டு இதழ் தொடங்கினோம். இடையிடையே நின்று இதழ்கள்

வெளிவந்தன. 1988ல் 8வது இதழ் முதற்கொண்டு நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். 32 பக்கங்கள், அப்புறம் 64 பக்கங்கள், 100 பக்கங்கள் என இதழின் அளவு பெரியதாயிற்று. 25வது இதழ்வரை 1/8 டெம்மி அளவு – 26 முதல் 32 முடிய 1/5 என்ற அளவு – 32 இதழ்களையும் ஒரு சேர வைத்துப் பார்க்கும் பொழுது 1/8 டெம்மி அளவில் சுமார் 3000 பக்கங்கள் அளவுக்கு கவிதைகள், சிறுகதைகள், திறனாய்வுகள், கடிதங்கள், நேர்காணல்கள் என்று சிறப்பாக வெளியிட்டோம். நிகழ் இதழ்கள் மூலம் தமிழ் இலக்கிய உலகுக்கு சிலர் சிறப்பாக அறிமுகமாயினர். சிங்கராயர் முதலிய தரமான கட்டுரையாளர்கள் தமிழுக்குக் கிடைத்தனர். பி.ஆர்.குப்புசாமி, ம.இலெ. தங்கப்பா, செ. கணேசலிங்கன், சிவகங்கை ராமகிருஷ்ணன், மாயாண்டி பாரதி, கருணா மனோகரன் முதலியவர்களோடு விரிவான நேர்காணல் வெளியிட்டோம். கேரளாவில் நக்சலைட் இயக்கத்தின் சாதனைகள் பற்றி நண்பர் மனோகரனின் சில மொழியாக்கக் கட்டுரைகள் வெளியிட்டோம். நிகழ் மதிப்புரைக்கு வந்த அனைத்து நூல்களையும் குறித்து மதிப்புரைகள் வெளியிட்டோம். தொடக் கத்திலேயே கோவையிலும், பிறகு சென்னையிலும் அச்சிட நண்பர்கள் உதவினர்.

நிகழ் குறித்து, அது நின்று பல்லாண்டுகள் கழிந்த பிறகும் நண்பர்கள் மரியாதையோடு பேசுவதைக் கேட்கிறேன். நிதானத்தோடும், உறுதியோடும் செலவைச் சிறிதும் பொருட் படுத்தாமல் நிகழைச் சிறப்பாக நடத்தினேன். பெரும் பொருள் வசதி எனக்கு இல்லை என்ற போதிலும் நிகழ் மூலம் நான் அடைந்த இழப்பை, இழப்பென்று நான் என்றும் கருதமாட்டேன். உண்மையில் இவை வரவுகள் என்றே கருதுகிறேன். நிகழ் மூலம் நிறைய நண்பர்களைப் பெற்றேன். நண்பர்கள் மூலம் என் அறிவை, கலை உணர்வை விரிவுபடுத்திக் கொண்டேன். சிற்றிதழ் என்பது தமிழின் ஆக்கத்திற்கான ஒரு பேரியக்கம். இந்த இயக்கத்திற்கு 1970 முதற்கொண்டே நானும் வசப்பட்டேன். இந்த இயக்கத்தினுள் என்னை ஈர்த்த நண்பர்கள் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இயக்கத்திற்குள் என்னை ஈர்த்ததில் தமிழவனுக்குத்தான் முதலில் நன்றி சொல்ல வேண்டும். பிறகு, நடராசன், ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன், ஜி.கே.

ராமசாமி முதலியவர்கள் என் நன்றிக்குரியவர்கள். இந்த இயக்கத்தின் மூலம் மு. இராமசாமி, ஆல்பர்ட் முதலிய நண்பர்களைப் பெற்றேன். பட்டியல் என்று தொடங்கினால் இன்னும் நிறையப் பேரைச் சொல்ல வேண்டும். இந்த வரிசையில் ஜெயமோகன், மனுஷிய புத்திரன், தேவதேவன் முதலியவர்களும் உள் வருகின்றனர். தமிழகத்திலும், பெங்களூரிலும் நடந்த கருத்தரங்குகளில் கலந்து கொண்டதன் மூலம் நான் நிறையப் பயன்பெற்றேன். நானும் கட்டுரைகள் எழுதினேன். விவாதங்களில் கலந்து கொண்டேன். இவை பற்றியெல்லாம் இன்றும் இனிய நினைவுகளோடு இருக்கிறேன்.

தமிழகத்தில் புகழ்பெற்ற சிற்றிதழ்கள் கடந்த ஐம்பதாண்டு களுக்கு மேலாக வெளிவருகின்றன. எதிர்காலத்திற்கு இவை எந்த அளவுக்குக் கிடைக்கும் எனத் தோன்றவில்லை. மணிக்கொடி இதழிலிருந்து ஒரு பகுதிதான் இப்பொழுது வெளிவந்திருக்கிறது. சரஸ்வதியும் ஒரு பகுதி அளவில் இன்று கிடைக்கிறது. கசடதபற இதே போல வெளிவந்தது. எழுத்துக்கு இந்த வாய்ப்பு இதுவரை இல்லை. முழு அளவில் தொகுதிகள் வெளிவருவதன் இன்றியமையாமையை நான் வற்புறுத்த வேண்டியதில்லை.

வெங்கட்சாதிநாதன், பிரமிள், தமிழவன், ராமசாமி முதலியவர்களின் கவிதை/கட்டுரைத் தொகுப்புகள் தொடர்ந்து வெளிவருகின்றன. "மனிதன்" இதழ் தொகுதி முழுமையாக இப்பொழுது கிடைக்கிறது. படிகள், பிரக்ஞை, கொல்லிப்பாவை முதலிய இதழ்களிலிருந்தும் தொகுப்புக்கள் வெளிவர வேண்டும்.

நாங்கள் நடத்திய புதிய தலைமுறை கட்டுரை முதலியவற்றின் தொகுப்பு இதுவரை வெளிவரவில்லை. புதிய தலைமுறை பற்றித் தமிழரசியின் ஆய்வேடு நூலாக வெளி வந்துள்ளது. வானம்பாடி தொகுப்புக்கள் இதுவரை வெளிவர வில்லை. வானம்பாடி பற்றி தமிழ நாடனின் நூல் வெளிவந்தது. வானம்பாடி பற்றிய ஆய்வுகள் நூல்களாக வெளிவர வேண்டும். பரிமாணம் இதழ்களிலிருந்து முக்கியமான கட்டுரைகளைத் தொகுத்து "மார்க்சியம் – புதிய பரிமாணங்கள்" என நண்பர்

குறிஞ்சியின் ஒத்துழைப்போடு நூல் வெளியிட்டோம். இன்னும் சில கட்டுரைகள் வெளிவரவில்லை. நிகழில் வெளிவந்த இலக்கியத் திறனாய்வு குறித்த ஒரு கட்டுரையைத் தொகுத்து – "சில சிகரங்களும், வழித்தடங்களும்" என நூல் ஒன்றை வெளியிட்டுள்ளோம். நிகழில் வெளிவந்த சில தரமான கட்டுரைகளைத் தொகுத்து "அறிவியல் அடிதகாரம் ஆன்மீகம்" என்ற பெயரில் காவ்யா மூலம் ஒரு தொகுப்பை வெளியிட்டோம். காவ்யா வெளியிட்ட இன்னொரு தொகுப்பு "இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்".

நிகழ் கட்டுரைத் தொகுப்புகளில் இதுவே தலைசிறந்த தொகுப்பு என்பது என் கருத்து. இதைப் போலவே மார்க்சியம் குறித்து நிகழில் வெளிவந்த கட்டுரைகள் பலவற்றைத்தொகுத்து "மார்க்சியம் தேடலும் திறனாயவும்" என்ற நூலைக் குறிஞ்சியின் மூலம் வெளியிட்டோம். நிகழில் மதிப்புரை செய்யப்பட்ட நூல்கள் இருநூற்றைம்பது. இவற்றிலிருந்து நூறு மதிப்புரைகளைத் தெரிவு செய்து "நிகழ் மதிப்புரைகள் 100" என்ற பெயரில் கவிதா பதிப்பகத்தின் மூலமாக ஒரு நூல் வெளியிட்டோம். இன்னும் சில தொகுப்புக்கள் வெளியிட வேண்டும் என்ற போதிலும் இதற்கான வாய்ப்பு இதுவரை கிட்டவில்லை. ஏற்கனவே நாகராசனின் கட்டுரைத் தொகுப்புக்கள் இரண்டு வெளிவந்துள்ளன. "மார்க்சியம்–கிழக்கும் மேற்கும்" என்பது ஒரு தொகுப்பு. இன்னொன்று நவீன அறிவியல், தொழில்நுட்பம் குறித்து அவரது திறனாய்வுக் கட்டுரைகள் "அழிவின் தத்துவம்" என்பது நூலின் பெயர்.

புதிய தலைமுறையில் நான் நிறைய எழுதினேன். வானம்பாடியில், கல்லிகை மற்றும் சில கவிதைகள் எழுதினேன். வானம்பாடிக் காலத்தில் நான் எழுதிய கவிதைகள் பல என்ற போதிலும் இவை எல்லாம் பயிற்சிக்கான கவிதைகள். எனினும் கருத்தாழமிக்க கவிதைகள். "பரிமாணம்" இதழில் இரண்டொரு கட்டுரைகள் மட்டுமே எழுதினேன். நிகழ் இதழிலும் இதைப் போலத்தான். நான் பொறுப்பேற்று நடத்துகிற இதழில் என் கட்டுரைகள் கூடுதலாக இடம்பெறுவது எனக்கு உடன்பாடில்லை. இக்கால அளவில் நான் நிறைய எழுதி வைத்தேன். இவை

எல்லாம் தொடர்ந்து நண்பர்கள் ஒத்துழைப்போடு நூல்களாக வெளி வருகின்றன. சிற்றிதழ் எஙபது தமிழின் ஆக்கத்திற்கான ஒரு பேரியக்கம். இந்த இயக்கம் தற்பொழுது தடம்மாறிச் சென்று கொண்டிருக்கிறது. வணிகச் சூழல் சிற்றிதழின் தரத்தையும் தடத்தையும் அழித்துக் கொண்டிருக்கின்றன. சிற்றிதழ் இயக்கம் வெறும் இலக்கிய இயக்கமில்லை. தத்துவம் முதலிய பலவற்றையும் உள்ளடக்கிய கலாச்சார இயக்கம். இந்த இயக்கத்திற்கு கட்சி சார்பில்லை. எனினும் அரசியல் குறித்த வீரியமான பார்வை இந்த இயக்கத்திற்கு உண்டு.

மார்க்சியத்தின் குரல் என்றைக்கும் ஓய்வதில்லை. தமிழகச் சூழலில் மார்க்சியமும் பெரியாரியமும் சமதர்மம் என்ற ஆதாரத்தில் இணைவதற்கான இன்றியமையாத தேவையை இப்பொழுது உணர்கிறோம். தலித்தியம், பெண்ணியம், சூழலியம் முதலிய பல்வேறு இயக்கங்களும் இவற்றோடு இணைய முடியும். இந்த நோக்கில் நான் எழுதிய கட்டுரைகள், 'தமிழகத்தின் பண்பாட்டின் நெருக்கடிகள்', என்னும் நூலில் இடம் பெறுகின்றன. இன்னுமொரு இயக்கம் தமிழியக்கம். மார்க்சியத்தைச் சிறிதளவும் இழக்காமல் தமிழியக்கத்திற்குள் நான் இப்பொழுது இருக்கிறேன். இதுபற்றி நான் இன்னொரு இயலில் விரிவாகப் பேசமுடியும்.

மார்க்சியம் பற்றிய புரிதலில் நான் பெற்ற தெளிவும், தமிழ் இலக்கியம் பற்றிய என் ஆய்வும் இணைந்தன என்பதை முன்பே கூறினேன். நவீனத்துவம் முதலிய புதிய கோட்பாடுகள் மூலம் மார்க்சியம் மட்டுமல்லாமல் தமிழ் இலக்கிய ஆய்வும் மேம்படும் என்பதும் என் நம்பிக்கை. இவை குறித்து இப்பொழுது சிலவற்றைச் சொல்லலாம்.

மார்க்சியத்தின் அடிப்படை என்று வர்க்கக் கோட்பாட்டைக் குறிப்பிடுவது பொருந்தும். உடனடியாக இந்தக் கோட்பாட்டின் அரசியல் வடிவத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி வள்ளுவர், இளங்கோ முதலியவர்களை வணிக வர்க்கச் சார்பினர் என்று ஒற்றைப் பரிமாணத்திற்கு உட்படுத்துகிற கட்சிக்காரர்களின் ஆய்வு எனக்கு உடன்பாடு இல்லை. வர்க்க முரண் என்பதை மேலும் ஆழமாகப் பார்ப்பதற்கு மார்க்சின் அந்நியமாதல் கோட்பாடு

உதவி செய்கிறது. வர்க்க வேறுபாடுகள் இல்லாத ஆதிப்பொதுமைச் சமூகம் மறைந்து தனிஉடமை, அரசு, அதிகாரம் முதலியவற்றை உள்ளடக்கிய வர்க்கச் சமூகம் தோன்றுகிறது. இன்றுவரை நிலவுவது வர்க்கச் சமூகம். இதன் காரணமாகவே போட்டி, வம்பு வழக்குகள், போர்க்கொடுமை, வறுமை, நோய் நொடிகள் முதலியவை சமூகத்தில் நிலவுகின்றன. வர்க்க ஏற்றத் தாழ்வுகள் மறைந்தொழியும் காலத்தில் இவை இல்லாமல் போய்விடும். வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிப்பொதுமைச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. இயற்கையோடும், சமூகத்தோடும் மக்கள் ஒருங்கிணைந்திருந்தனர். தன்னோடும் அவர்கள் முரண்பட வில்லை. வர்க்கச் சமூகத்தில் இந்த ஒருங்கிணைவுகள் அழிந்தன. இதனாலேயே மனித அவலங்கள் தோன்றிப் பெருகின. வர்க்க ஏற்றத்தாழ்வுகள் மறைந்தொழியும் இன்னொரு கட்டத்தில் மீண்டும் இயற்கையோடும், சமூகத்தோடும், தன்னோடும் அந்நியமாதல் அற்று மக்கள் ஒருங்கிணைந்து வாழ்வர். மார்க்சின் அந்நியமாதல் கோட்பாட்டை இவ்வாறு விளக்கலாம்.

ஆதிப்பொதுமைச் சமூகத்தில் சில முக்கியமான கூறுகள் வர்க்கச் சமூகத்திலும் முற்றாக அழிவதில்லை. சமத்துவத்தோடும், சமதர்மத்தோடும் நாம் வாழ வேண்டும். பிறரோடு நம்மைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஊருக்காக உழைப்பது மேன்மையான பண்பு. இப்படிச் சில கூறுகள் தான் இன்றும் நம்மைத் தாங்குகின்றன. அறம் என்றும், அன்பென்றும் நாம் போற்றுவது இவற்றைத்தான். இந்தப் பண்புகளின் ஆற்றல் மிக்க வெளிப்பாடுகள் என இயேசு முதலிய சான்றோர்களை நாம் குறிப்பிடுகிறோம். இந்தப் பண்புகள்தான் இலக்கியத்தின் உரிப்பொருள்களாக இன்றும் இருக்கின்றன. வர்க்கச் சமூகம் மேலோங்கிய நிலையிலும் வள்ளுவர், இளங்கோ போன்ற சான்றோர்கள் மீண்டும் ஒரு சமத்துவ/சமதர்ம சமூகத்தை வேண்டித்தான் இலக்கியம் படைக்கின்றனர். அரசு, தனிவுடமை ஆகியவற்றோடு இவர்கள் ஒத்துழைக்க நேர்ந்தபோதிலும் இவற்றின் ஆதிக்கத்தை இவர்கள் அறவே விரும்பவில்லை.

தமிழ் இலக்கியத்தில் கணியன் பூங்குன்றன் முதற்கொண்டு

வள்ளுவர், இளங்கோ முதலியவர்கள் வழியாகச் சித்தர்கள் மூலமும் இடையறாது எழுச்சி பெறுவது இந்தப் பேரறம்தான். வள்ளுவர், இளங்கோ முதலியவர்கள் அரசு அதிகாரம் முதலிய கொடுங் கோன்மைகளுக்கு எதிராக மக்களைச் சார்ந்தே இருந்தனர். இவர்கள் ஆளும் வர்க்கச் சார்பினர் என்று கண்டுபிடிப்பது உண்மையான ஆய்வாகவும் இருக்க முடியாது.

காலந்தோறும் தனிவுடமைக்கும், அரசதிகாரத்திற்கும், வேறு வகையான ஆதிக்கங்களுக்கும் எதிர்நிலையில் அறவாணர்கள், அருளாளர்கள், படைப்பாளிகள் மக்கள் சார்பிலிருந்து எழுதுகின்றனர், செயல்படுகின்றனர். இம்முறையில் வர்க்கப் போராட்டம் என்பதை நான் பொருள்படுத்தித் தமிழ் இலக்கிய ஆய்வை மேற்கொள்கிறேன். சங்க காலத்தில் வர்க்கப் போராட்டம் எவ்வாறு நிகழ்ந்தது? சங்க இலக்கியம் எப்படி முடிவுக்கு வந்தது என்று எழுதியுள்ளேன். வள்ளுவருக்குள்ளும், இளங்கோவுக் குள்ளும் மட்டுமல்லாமல் சாத்தனாருக்குள்ளும் அன்றைய வர்க்கச் சமுதாயத்திற்கு எதிராக எழுந்த எதிர்வினை என்ன? என்பது குறித்து எழுதுகிறேன். சித்தர்களுக்குள்ளும் நிகழ்ந்த எதிர்வினை பற்றி எழுதியுள்ளேன். இம்முறையில்தான் பாரதி, பாரதிதாசன் முதலியவர்களையும் மதிப்பீடு செய்கிறேன்.

வர்க்கச் சமூகம் என்ற கட்டமைப்பில் தொடக்கத்தில் அடிமைச்சமூகம் என்றும் பின்னர் நிலவுடமை முதலிய சமூகங்கள் என்றும், இவற்றில் ஒன்றைவிட அடுத்து வரும் சமூகம் மேம்பட்ட சமூகம் என்றும் மார்க்சியர் கருதுகின்றனர். இறுதியில் வர்க்கச் சமூகம் அழிந்து பொதுமைச் சமூகம் மலரும் என்றும் நம்புகின்றனர். மாற்றங்கள், மேம்பாடுகள் என்று கூறப்படுபவை நிகழ்ந்த போதிலும், வர்க்கச் சமூகத்தில் உடமையும் அரசதிகாரமும் ஆளும் வர்க்கத்தோடும் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வையும், ஆளுமை முதலியவற்றையும் அழிக்கின்றன. இம்முறையில் வர்க்கச் சமூகம் நிலவுகிற காலம் முழுவதிலும் பல்வேறு வகையான அவலங்களோடுதான் மக்கள் வாழ நேர்கிறது. இதன் காரணமாக உடமைக்கும், அதிகாரத்திற்கும் எதிரான குரல் மக்கள் உள்ளங்களில் எத்தனையோ வடிவங்களில் எழுகின்றன.

ஆதிப்பொதுமைச் சமூகத்தின் அறப்பண்புகளை மக்கள் இழந்து விடுவதில்லை. இலக்கியவாதிகள் மட்டுமல்லாமல் சமய வாதிகளுக்குள்ளும் இந்த உணர்வுகள் தொடர்ந்து பொங்குகின்றன. சமயவாதிகளின் கடவுளை ஆதிப்பொதுமைச் சமூகத்தின் அறப் பண்புகளின் பேரெழுச்சி என்றுதான் நாம் பார்க்க முடியும். ஆதிக்கங்களோடு ஒத்துழைக்கிற மதம் மக்களை அடிமைப்படுத்தவும் செய்யும் என்பதை நாம் மறுக்கவில்லை. மீண்டும் ஒரு பொதுமைச் சமூகம் வரும் வரை இலக்கியங்களும் சரி, சமயங்களும் சரி இந்தப் பொதுமைப் பண்புகளை இழந்து விடுவதில்லை. நவீன இலக்கியமும் இந்த உள்ளடக்கத்தைத் தான் தமக்குள் கருவாக வரித்துக் கொள்கிறது. இலக்கியம் குறித்தும், சமயம் குறித்தும் என் பார்வையில் ஏற்பட்ட தெளிவோடுதான் இலக்கியத் திறனாய்வு பற்றிய சில நூல்களோடு "கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை" என்ற ஆய்வையும் எழுதி உள்ளேன்.

மார்க்சியர்களின் கலைஇலக்கியப் படைப்புக்களில் பெருமளவு புறக்கணிக்கப்படும் இன்னொரு கூறுபற்றி இங்கு குறிப்பிட வேண்டும். அரசியலுக்கு முதன்மை தருபவர், கலை இலக்கியங்களுக்கு அடியில் செயல்படும் படைப்பியக்கத்தை கவனிப்பதில்லை. படைப்பியக்கம் என்பது மார்க்சிய வரையறைகளுக்கு அப்பாற்பட்டது என்றுகூட இவர்கள் கருதுவதற்கு இடமுண்டு. புகழ்பெற்ற கலை இலக்கியப் படைப்பாளிகள் தம் ஆழ்மனத்திற்குள் இருந்து படைக்கின்றனர். சமூக முரண்பாடுகள் என்னும் நெருக்கடிகளுக்கு தமக்குள்ளிருந்து எதிர்வினை தேடும்பொழுது தவிர்க்க இயலாமல் இவர்கள் ஆழ்மனத்திற்குள் செல்கின்றனர். ஆழ்மனத்திற்கும் படைப்பியக்கத்திற்கும் உள்ள நெருக்கமான தொடர்பை நாம் அதிகம் விளக்க வேண்டியதில்லை. சி.ஜெ.யெங் கூறிய கூட்டு நனவிலி மனம் பற்றி நம்மில் பலரும் அறிவர். ஆழ்மனத்திற்குள் செல்லும்பொழுது சமூக மனத்தோடு நாம் இணைகிறோம். ஆதிச்சமூகத்தினரின் மனநிலையை நெருங்குகிறோம். உடமை, அதிகாரம் முதலியவற்றிலிருந்து விடுபடுகிறோம். ஓர் உணர்வில் இணைகிறோம். இங்கிருந்து நானே பிரம்மம் என்று பேச முடியும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பேச முடியும். தொன்மங்கள் முதலியவற்றின் மூலம் இங்கிருந்து பேச முடியும். சிகர அனுபவங்கள் என்பவை இங்கிருந்தே சாத்தியப்படுகின்றன. படைப்புச் செயலின் மூலம் இப்படி ஒரு படைப்பியக்கத்திற்குள் சென்றவர்கள் அப்புறம் படைப்பின்றி வாழ்வில்லை என்ற மனநிலைக்கு வந்து சேர்கின்றனர்.

ஏதோ அருவ நிலை பற்றி நாம் இங்கு பேசவில்லை. படைப்பியக்கம் பற்றி மார்க்சுக்கு நன்கு தெரியும். பட்டுப்புழு பட்டு உற்பத்தி செய்வதையே தன் வாழ்வியலாகக் கொண்டிருப்பதைப் போல மில்டன் சொர்க்க நீக்கத்தைப் படைத்தார் என்று மார்க்சு எழுதி உள்ளதை என் கட்டுரைகளில் பலமுறை மேற்கோள் காட்டியுள்ளேன். பட்டு உற்பத்தி செய்வதன் மூலம் தனக்கு அழிவு நேரும் என்றபோதிலும் பட்டு உற்பத்தி செய்யாமல் பட்டுப்புழுவால் இருக்கமுடியாது. சாவு ஒரு பொருட்டல்ல. படைப்பே வாழ்வு மில்டனும் இப்படித்தான் தன் உயிரைக் கொடுத்துப் படைக்கிறார். படைக்காமல் அவரால் இருக்க முடியாது. மார்க்சு கூட இத்தகைய படைப்பனுபவம் பெற்றவர். இவரும் தனக்குள் படைப்பனுபவம் என்ற பேரியக்கத்தின் வசப்பட்டவர். மாபெரும் கலைஞர் என்பவர்கள் இத்தகைய பேரனுபவம் பெற்றவர்கள். ஒருமுறை பெற்ற பேரனுபவத்தைப் பிறகு விட்டுவிட முடியாது.

எல்லோரும் ஒன்று; மனிதன் அனைவரும் ஒரு நிகர்; இந்த உலகம் நமக்கானது; சமதர்மமே நமக்கு வாழ்வு என்ற பேருணர்வு இந்த ஆழ்மனத்திலிருந்துதான் எழுகிறது. சரியாகச் சொன்னால் வர்க்கம் கடந்த மனநிலை இது. இந்த மனநிலை வாய்த்தவனுக்கு ஏற்றத்தாழ்வு முதலியவற்றின் மீது மரியாதை இல்லை. இத்தகைய ஒருவன்தான் உண்மையான பொதுவுடமைவாதி. இவனைத்தான் மகான் என்று லெனின் கூறினார். இவன் தனக்குள் அதிர்வதில்லை. இவனுக்குள் அச்சமில்லை. இத்தகைய மனநிலை உடையவன்தான் இயேசுவாகிறான், புத்தராகிறான். சமயங்களின் உள் ஆழங்களில் பொங்கும் உணர்வு இஃதன்றி வேறில்லை. வள்ளுவர் முதலியவர்கள் இத்தகைய மனநிலையைத் தொட்டவர்கள். பாரதி

போன்றவர்களுக்கு வாய்த்தது இந்த மனநிலை. பெருங்கவிஞர்களுக்கு மட்டுமே இந்த மனநிலை உரியது என்று நாம் கருத வேண்டியதில்லை. தனக்குள் ஆழ்ந்து செல்லும் எவனும் சில சந்தர்ப்பங்களிளேனும் இந்த மனநிலையைத் தொட முடியும். அந்த அளவுக்கேனும் இவர் படைப்புக்கள் தீட்சண்யம் பெறும்.

சமதர்மம் என்பதை அரசியல் மற்றும் பொருளியல் வாய்ப்பாடாக மட்டுமே உச்சரிப்பவனுக்குள் இந்த மனநிலை வாய்க்கும் என்று உறுதி சொல்ல முடியாது. ஒரு வகையில் இது மெய்யியல் அனுபவம். மார்க்சியம் வெறும் அரசியல்/ பொருளியல் கோட்பாடு என்பது உண்மையில்லை. மார்க்சியம் அடிப்படையில் நம் மரியாதைக்குரிய மெய்யியல். உண்மையான சமயவாதிகள் மார்க்சியத்தைத் தமக்குள் சந்திக்க இயலும். விவேகானந்தரும் பாரதியும் இம்முறையில்தான் சமதர்மத்தோடு ஒத்துச் செல்கின்றனர். சமதர்மம் என்பதை இத்தகைய மெய்யியல் ஆழத்தோடு தனக்குள் தாங்கியவன் என்றும் இதிலிருந்து விலக முடியாது.

இத்தகைய படைப்பியக்கத்தைத்தான் தமிழிலக்கியம் பற்றிய என் பெரும்பாலான கட்டுரைகளில் மையப்படுத்துகிறேன். வள்ளுவரின் ஒப்புரவையும், அநீதிக்கெதிரான இளங்கோவின் போர்க்குரலையும் அமுதசுரபியைப் படைத்த சாத்தனாரையும் இராவணர்களுக்கு எதிராகப் போரிடும் இராமனைப் படைத்த கம்பரையும் என் கட்டுரைகளில் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறேன். கவிதைகளில் மட்டுமல்லாமல் நாவல்களிலும் இந்த மெய்யியலைத்தான் நான் தேடுகிறேன்.

எந்த ஒரு படைப்பாளிக்குள்ளும் சிறிதளவிலோ அல்லது பெரியளவிலோ, அவர் அறிந்தோ அல்லது அறியாமலோ இப்படி ஒரு மெய்யியல்தளம் இல்லாமல் முடியாது என்ற உணர்வோடு தான் படைப்புக்குள் நான் பயணம் செய்கிறேன். உத்திகள் உருவகங்களைத் தேடி நான் தொகுத்ததில்லை. என் பயணத் திற்கிடையில் இவற்றின் அழகை இரசித்து விட்டுக் கடந்து செல்கிறேன். இந்த மெய்யியல் தளத்தை ஒரு கைப்பிடி

அளவுக்கேனும் அள்ளிக் கொள்பவன்தான் எனக்குப் பிடித்த மனிதன். ஜெயகாந்தனின் ஹென்றி முதலியவர்கள் இத்தகையவர்கள். க.நா.சு.வின் சோமு பண்டாரம் இப்படி ஒருவனைத் தனக்குள் தேடித்தான் அலைகிறான். இருத்தலியல் என்ற வாழ்வின் அர்த்தம் தேடி அலைபவர்களுக்குள் இத்தகைய மெய்யியல் தேட்டம் உண்டு. இந்திரா பார்த்தசாரதி, அசோக மித்திரன், ஆதவன் ஆகியவர்களுக்குள் இத்தகைய தேட்டம் உண்டு. வாழ்வின் நெருக்கடிகளுக்குள் கடுமையாச் சிக்குண்ட வர்கள் தம்மை உடைத்துக்கொண்டால் ஒழிய நெருக்கடிகளி லிருந்து விடுபடுவதற்கு வழியில்லை. தம்மை உடைத்துக் கொள்ளும்பொழுது தெறிப்பது இந்த மெய்யியல். பிச்சமூர்த்தி, லா.ச.ரா முதலியவர்களின் படைப்புக்களினுள்ளும் இத்தகைய மனிதர்களை நாம் காண முடியும். இத்தகைய மனிதனைத் தனக்குள் கண்டுகொள்ள முடியாமல் வாழ்வின் பல்வேறு தளங்களில் அலைபவர்களைப் பற்றியும் நல்ல படைப்புகள் வர முடியும். வாழ்வை எவ்வாறு வீணடிக்கிறார்கள் என்ற உணர்வோடு இத்தகைய படைப்புக்களை நாம் வாசிக்கிறோம்.

சுருக்கமாக நான் இப்படிச் சொல்ல விரும்புகிறேன். வாழ்வின் மெய்யியல் குறித்த பார்வை தனக்குள் அறவே இல்லாமல் எழுதுபவர் படைப்புகளில் எனக்கு ஈடுபாடில்லை. இவர்கள் பணம், அதிகாரம் முதலிய சக்திகளுக்குத் தம்மை விட்டுக் கொடுத்தவர்கள். இவர்கள் வேறு யாருக்கோ சேவை செய்கிறார்கள். தம்மைக்கூட இவர்கள் வளர்த்துக் கொள்வதில்லை. இவர்களுக்கு வாழ்க்கை தெரியாது, வரலாறு தெரியாது, தத்துவம் தெரியாது என்று சுருக்கமாகச் சொல்ல முடியும். என் கட்டுரைகளில் உள்ள படைப்பியக்கம் என்ற ஒரு உண்மையை அழுத்திச் சொல்வதற்கு இவ்வளவும் நான் எழுதினேன். இந்தக் குறிப்பு என் கட்டுரைகளை வாசிப்பதற்கு பதிலி இல்லை என்று மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1970 முதல் தற்கால இலக்கியத்தை மிகுந்த ஈடுபாட்டோடு நான் வாசித்தேன் என்பதை முன்பே குறிப்பிட்டேன். புதுக் கவிதையில் ந.பிச்சமூர்த்தி முதற்கொண்டு இறுதியில் ஆத்மநாம் வரை நான் மிகுந்த அக்கறையோடு வாசித்தேன். எதுபற்றி நான்

வாசித்தாலும், அதுபற்றி என் கருத்துக்களை என் குறிப்பேடுகளில் எழுதி வைப்பதன் மூலம் என்னை நானே வளர்த்துக் கொண்டேன். இக்காலத்தில் வெளிவந்த சிறந்த நாவலாசிரியர் படைப்புக்களையும் விடாமல் படித்தேன். இவை பற்றி எல்லாம் தனித்தனிக் கட்டுரைகள் என்ற முறையில் எழுதி என் கோப்புகளில் போட்டு வைத்தேன். இவற்றில் சில கட்டுரைகள் மட்டுமே சில இதழ்களில், சில நூல்களில் வெளிவந்தன. பெரும்பாலான கட்டுரைகள் வெளிவரவில்லை. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் என் கோப்புகளை தூசிதட்டி எடுத்து நண்பர்கள் ஒத்துழைப்பின் மூலம் இவற்றை எழுதுவித்தேன்.

சுமார் 50 நாவல்கள் குறித்து என் கட்டுரைகள் "தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும்" என்ற பெயரில் அண்மையில் வெளிவரலாம். அண்மைக்காலத்தில் புதுக்கவிதையில் தீவிரமாக எழுதிவரும் பலரின் கவிதைகளைப் பற்றிய என் ஆய்வு "கவிதையிலிருந்து மெய்யியலுக்கு" என்ற தொகுப்பில் அடங்கும். கவிதைக்குள் நாம் தேடிச் செல்லும்பொழுது அதன் இறுதித் தளமாக நமக்குள் தரிசனமாக வெளிப்படுவது மெய்யியல். இந்தப் பயணம் படைப்பாளிகளுக்கு இன்றியமையாத பயணம் என்பதை இங்கு நான் வற்புறுத்த வேண்டியதில்லை.

நவீனத்துவம், பின்—நவீனத்துவம், அமைப்பியல் முதலிய புதிய அணுகுமுறைகள் மூலம் மார்க்சியத்தை நான் எவ்வாறு ஆழமாகப் புரிந்துகொள்கிறேன் என்று முந்திய கட்டுரையில் எழுதினேன். மார்க்சியத்தோடு தமிழ் இலக்கியத்தையும் இந்தப் புதிய அணுகுமுறையோடு நான் எவ்வாறு புரிந்து கொள்கிறேன் என்று இப்பொழுது சிலவற்றைச் சொல்லலாம். எடுத்துக்காட்டுக்கு சில சான்றுகள் மட்டும் இங்கு தருகிறேன்.

சிலப்பதிகாரத்தை இன்று நம் காலத்தில் வைத்து வாசிக்க முடியும். பாண்டியனிடம் நீதி கேட்பதற்காகக் கண்ணகி மதுரைத் தெருக்கள் வழியாக ஓலமிட்டவாறு செல்கிறாள். இத்தனை பெரிய அநீதி நடந்த இந்த நகரத்தில் சான்றோர்கள் இருக்க முடியுமா? தெய்வங்கள் இருக்க முடியுமா? கற்புடைய மகளிர் இருக்க முடியுமா? என்று கேட்கிறாள். இந்தக் குரல் இன்றும்

நமக்குள் ஒலிக்கிறது. இது நம் காலத்தின் குரல். மணிமேகலைக்கு அமுதசுரபி வாய்க்கிறது. எடுக்க எடுக்க உணவு குறையாத அமுதசுரபி; கொடிய வறுமை நிகழ்கிற காலத்தில் இப்படி ஒரு அமுத சுரபி இருந்தால்தான் வறுமையைத் தீர்க்க முடியும். தெய்வங்கள் ஒத்துழைத்தால் அன்றி வறுமையைத் தீர்க்க முடியாது. சாத்தனாரின் இந்தச் சிந்தனையை இன்றைய சூழலில்வைத்து நாம் புரிந்து கொள்கிறோம். இப்படி ஒரு அமுதசுரபி இன்று நமக்குக் கிட்டாது. ஆகவேதான் நாம் சமதர்மம் இல்லாமல் முடியாது என்று குரலெழுப்புகிறோம். சாத்தனாரின் குரல் சமதர்மத்தின் குரல். அமுத சுரபிக்கு இப்படித்தான் பொருள் சொல்ல வேண்டும்.

சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்கள் எழுதப்பட்டுப் பல நூறாண்டுகள் சென்ற பிறகும் இன்றும் நம்கால உள்ளடக்கத்தோடு வாசிக்கிறோம், பொருள்படுத்துகிறோம். சிலப்பதிகாரம் எழுதிய காலத்திற்கு நாம் செல்ல முடியாது. இளங்கோவின் உள்ளுணர் வையும், அதே வடிவில் வாங்கிக் கொள்ள முடியாது. இளங்கோவின் பிரதி அவருடைய பிரதி. நம் அனுபவங்களோடு வாசிக்கிற பொழுது இது நம் பிரதி. அன்றியும் ஓர் இலக்கியம், எந்தக் காலத்திலும் எழுதப்பட்ட போதிலும் நாம் வாசிக்கும்பொழுது அது நிகழ்காலத்திற்கு வந்து சேர்கிறது. இவ்வகையில் ஒரு இலக்கியத்தில் காலம் கடந்த தன்மை என ஒன்று இருக்கிறது. இப்படித்தான் திருக்குறள் முதலியவை நம் காலத்திற்கு வந்து சேர்கின்றன. ஒரு வகையில் பழைய இலக்கியத்தை நம் வசதிக்கேற்ற முறையில் கலைத்துப்போடுகிறோம். நமக்குள் இருந்து ஒரு புதிய இலக்கியத்தைப் படைத்துக் கொள்கிறோம். உரையாசிரியர்கள் இன்று நமக்குக் கிடைத்திருக்கிற தெளிவோடு வாசிக்கவில்லை.

பாரதி பற்றி நான் எழுதிய கட்டுரைகளில் ஒன்று கண்ணன் பாட்டு பற்றிய கட்டுரை. கண்ணனை பாரதி எப்படியெல்லாம் காண்கிறான் என்று நமக்குத் தெரியும். அரசனாக, குருவாக, தோழனாக, சீடனாக, தாயாக, காதலியாக, குழந்தையாக கண்ணனை பாரதி காண்கிறான். இப்படிக் கண்ணன் என்ற ஒருவனுக்குள் பலரை, பன்முகப் பரிமாணங்களில் காண்பது

சாத்தியமா? என்ற கேள்விக்கும் நாம் ஓரளவு விடைகாண முடியும். பாரதியின் கண்ணனை இன்னும் நமக்கு நெருக்கமாகக் காண்பதற்குப் புது நெறி உண்டு. பாரதியின் கண்ணன் ஒருவகையில் கடவுள். கடவுள் என்பவர் நம்மைப் படைத்தவர், நம்மோடு இயங்குபவர், நமக்குள் இயங்குபவர் என்றெல்லாம் சொல்வது மரபு. இந்த மரபுக்கு நம் காலத்தில் வைத்துப் புதிய பொருள் சொல்ல வேண்டும். இந்தப் பிரபஞ்சம், உலகம், இயற்கை, சமூகம் – இவை நம்மைப் படைக்கின்றன. இவை இல்லாமல் நமக்கு வாழ்வில்லை. இவற்றோடு நாம் வாழ்கிறோம். இவற்றை நமக்குள் வரித்துக் கொள்கிறோம். இவை நம் ஆளுமையை உருவாக்குகின்றன. இவற்றை நாமும் படைக்கிறோம். நாமில்லாமல் இவையுமில்லை. இவற்றுக்கு நாம்தான் பொருள் சொல்கிறோம். அழகு கற்பிக்கிறோம்.

உலகம் அல்லது இயற்கை அல்லது சமூகம் என்று ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். உலகத்தோடு நாம் உறவு கொள்கிறோம். உலகம்/சமூகம் சில சமயம் நம்மை அதிகாரம் செய்கிறது. நமக்கு அறிவு வழங்குகிறது. நம்மைத் தாங்குகிறது. நம்மோடு உறவாடுகிறது. நம்மைக் கொஞ்சுகிறது. நாமும் இந்த உலகத்தோடு உறவாடுகிறோம். அதிகாரம் செய்கிறோம். தோழமை கொள்கிறோம். இந்த உலகம் இன்றிக் கண்ணன் என்ற படிமம் இல்லை. இந்த இயற்கை இன்றிக் கண்ணன் இல்லை. உலகம் முதலியவற்றோடு நாம் கொள்ளும் உறவின் மூலமே கண்ணன் நமக்குள் உருவாகிறான். குழந்தைகளோடு நாம் கொஞ்சுவது நம்மைப் படைக்கிறது. ஆறு, குளங்களில் நீராடுகிறோம். இவை நமக்கு இனியவை. இப்படியே நம் வாழ்வியலுக்குள் கண்ணனின் பன்முகப் பரிமாணங்களோடு நாம் உறவு கொள்கிறோம். தெய்வம் என்பது தனியாக இல்லை. உலகம் முதலியவற்றின் இயக்கத்திற்குள் நாம் காண்பது தெய்வம்.

இப்படித்தான் கண்ணன் பாட்டை நான் வாசிக்கிறேன். கண்ணன் பாட்டை எனக்குள் வைத்து வாசிக்கிறேன். இவன் என் கண்ணன், இப்படித்தான் இலக்கியத்தை நமக்குள் செரித்துக் கொள்கிறோம். இப்படித்தான் மார்க்சியத்தையும் நமக்குள் செரித்துக் கொள்கிறோம்.

நவீனத்துவம், பின் நவீனத்துவம் முதலிய பார்வைகள் நமக்குள் ஒரு புது வகையான வாசிப்பைத் தூண்டுகின்றன. சிலம்பு முதலிய கவிதைகளை மட்டுமல்லாமல், நாவல்கள் முதலிய எல்லா வகைப் படைப்புக்களையும் நமக்குள் வைத்து, நம் காலத்தில் வைத்து, வரலாற்றுச் சூழலில் நமக்குரிய வாழ்வியல் அனுபவத்தோடு வாசிக்கிறோம். யதார்த்த உலகத்தோடு மட்டும் நாம் இல்லை. பொருள் வகை உறவுகளோடு மட்டும் நாம் இயங்குவதில்லை. முன்னைய உலகை அல்லது வாழ்வை அல்லது அனுபவங்களை இப்பொழுது நமக்குள் கலைத்துப் போட்டுக் கொள்ள முடியும். தேவையான வடிவங்களில் இவற்றைத் தொகுத்துக் கொள்ள முடியும். எனக்குள் நான் நெடும் பயணம் செய்ய முடியும். வள்ளுவரையும், டால்ஸ்டாயையும் சந்திக்க முடியும். எனக்குள்ளும் ஒரு சித்தன் இருக்கிறான். கண்ணகி எனக்குள் கொதிக்கிறாள். மணிமேகலை தவம் செய்கிறாள். நானும் சிலுவையில் அறையப்படுகிறேன். நான் இராமனாகவும் இருக்கிறேன். இராவணனாகவும் இருக்கிறேன். எனக்குச் சீதையும் தேவை, சூர்ப்பனகையும் தேவை. காலங்களில் நான் கட்டுப்படவில்லை. காலம் கடந்து நான் பயணம் செய்கிறேன். எனக்குள் கருந்துளைகள் உண்டு. எனக்குள் சூனியமும் உண்டு. எனக்குள் ஒரு ஆதிவாசியும் உண்டு. ஆதிக்கவாசியும் உண்டு. பித்தேறியவனும் உண்டு. இலக்கியங்கள் வழியே நான் பயணம் செய்யும் பொழுது இப்படி எல்லாம் மாறிமாறி நான் அனுபவங்கள் பெறுகிறேன். எனக்குள் என்னை நானே கலைத்துப் போடுகிறேன். சுதந்திரம் என்ற வெளி எல்லையற்று விரிகிறது. இந்தப் பயணத்தின் மூலம் என்னை நான் வாசித்துக் கொள்கிறேன். இப்படியெல்லாம் பழைய கட்டுக்களிலிருந்து நான் விடுபடுகிறேன். நவீனத்துவம் முதலிய புதிய அணுகுமுறைகள் இப்படி எனக்குள் புதிய வெளிச்சங்களைத் தருகின்றன. இவற்றால் என்னை நான் இழந்துவிடவில்லை. என்னை நான் கூடுதலாகத் திரட்டிக் கொள்கிறேன். வர்க்கப் போராட்டங்களின் வழியே வர்க்கங்களைக் கடந்து செல்வது மார்க்சியம் என்பது என் புரிதல். எனக்குள்ளும் வர்க்கம் கடந்த மனிதன் ஒருவன் இருக்கிறான். இவனோடு உறவான இந்தப் புதிய பார்வை எனக்கு வழிகாட்டுகிறது. "மறு வாசிப்பில் தமிழ்

இலக்கியம்" என்ற என் கட்டுரைத் தொகுப்பில் உள்ள சில கட்டுரைகள் இந்த நோக்கில் எழுதப்பட்டவை.

இங்கு இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். ஒரு படைப்பாளி தனக்குள் இயங்குகிற படைப்பியக்கத்தை அதன் உள் ஆழங்களோடும், விரிவோடும் புரிந்து கொள்கிறபோது அவன் சிறந்த திறனாய்வாளனாகத் தன்னை வளர்த்துக் கொள்ள முடியும். இது பற்றி என் அனுபவம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வானம்பாடியில் புதுக்கவிதையில் ஒரு குறுங்காவியம் என்று சொல்லத்தக்க முறையில் "கல்லிகை" எழுதினேன். நான்கு நாட்களில் "கல்லிகை" எழுதி முடித்தேன். பிறகு அங்கங்கே சில திருத்தங்கள் செய்தேன். கல்லிகை எழுதிய மூன்றாவது நாள் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளானேன். எனினும் தொடர்ந்து எழுதி முடித்தேன். எனக்குள் கவிதை இயக்கம் அதில் ஈடுபட ஈடுபட வீரியம் பெற்றது. உலகத்தினால் பழிச்சொல்லுக்கு உள்ளாகிய அகலிகை என்ற ஒரு பெண்ணை நியாயப்படுத்துவது முதலில் என் நோக்கமாக இருந்தது. கவிதையின் இயக்கம் அதன் உள் ஆழங்களுக்குள் விரிந்த பரப்புக்குள் என்னை இழுத்துச் சென்றது. இந்திரன் உடமையாளன். கவுதமன் மதவாதி. இருவருக்கு இடையில் அகப்பட்டு இருவரிடமிருந்தும் விடுதலைக்காகத் தவிக்கிற அகலிகையை நோக்கி இராமன் என்ற புரட்சியாளன் வருவதாக எழுதி முடித்தேன். அகலிகை இப்பொழுது ஒடுக்கப்பட்ட மனிதனின் படிமம் ஆகிறாள். இந்த மனிதனுக்கு இப்பொழுது விடுதலை இல்லை. எதிர்காலத்தில் இந்த விடுதலை கிட்டலாம். இம்முறையில் மார்க்சியத்தின் சாரமும் இந்தக் கவிதைக்குள் என்னையறியாமல் ஏறியது.

படைப்பனுபவம் / படைப்பியக்கம் என்றால் என்ன என்பதை "கல்லிகை" எழுதியபோது நான் விரிவாகப் புரிந்து கொண்டேன். தீவிரமான படைப்பியக்கம் வெறுமனே, சாதாரணமான ஒருவனுக்குள் எழாது. முதலில் தன் வாழ்வுக்குள் கடுமையான சிக்கல்களை ஒருவன் எதிர்கொண்டு இருக்க வேண்டும். இந்தச் சிக்கல்களிலிருந்து எப்படியாவது தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று அவன் முயற்சி செய்ய வேண்டும். வாழ்க்கை

என்பது யாருக்குக் கடுமையான சிக்கல் எனத் தோன்றும்? வாழ்க்கையின் அர்த்தங்கள் என்ன என்று தேடி அது கிட்டாமல் வரலாறு, தத்துவம், சமூகம் எனத் தொடர்ந்து படித்து, சிந்தித்து, பலரோடு விவாதித்து விடை கிடைக்காமல் தவித்து – இப்படி தனக்குள் பலதிசைப் பயணம் செய்பவனுக்கே வாழ்க்கை கடுமையான சிக்கலாகி விடும். இப்படித் தனக்குள் தீவிரம் கொண்டவனுக்கே தன் மன ஆழத்திற்குள் பயணம் செய்வது வாய்க்கும். இவனுக்குள் தான் படைப்பியக்கம் தீவிரப்படும்.

திறனாய்வாளன் என்பவனுக்குப் படைப்பனுபவம் இல்லாமல் முடியாது. தனக்குள் படைப்பனுபவம்/படைப்பியத்தைக் கண்டுணர்ந்த ஒருவன் சிறந்த திறனாய்வாளனாகவும் இருக்க முடியும். எல்லா மனிதருக்குள்ளும் ஏதோ சில வகைகளில் படைப்பியக்கம் இல்லாமல் அவர்கள் வாழ முடியாது. மனிதனுக்குள் செயல்படும் படைப்பியக்கத்தை சாதி முதற்கொண்டு பல ஆதிக்க சக்திகள் குறுக்குகின்றன. திரிக்கின்றன. அழிக்கவும் செய்கின்றன. இதனால் மனித வாழ்வின் அர்த்தங்கள் அழிகின்றன. ஒரு படைப்பாளி மட்டுமல்லாமல் திறனாய்வாளனும் இதைப் புரிந்து கொள்ள முடியும்.

வரலாறு, தத்துவம் என்று தனக்குள் பலதிசைப் பயணம் மேற்கொள்ளும் படைப்பாளியைப் போலவே திறனாய்வாளனும் கலை, இக்கியம் குறித்த தன் பார்வையை வளமாக உருவாக்கிக் கொள்ள இயலும். வரலாறு, தத்துவம் முதலியவற்றில் இன்றியமையாத படிப்பறிவையும், பார்வையையும் கொண்ட மார்க்சியன் சிறந்த படைப்பாளியாகவும், சிறந்த திறனாய்வாள னாகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். கட்சிக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் சில சமயம் பணத்திற்கும் இடம் கொடுக்கும் மார்க்சியவாதியும் வளமான திறனாய்வாளனாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. இதனால் இவர்களுக்குள்ளும் படைப்பியக்கம் சிதைவடைகிறது. திறனாய்வும் திரிபடைகிறது. தமிழ் இலக்கியம் குறித்து மார்க்சியத் திறனாய்வாளர்களுக்குள் இத்தகைய விபத்துக்கள் நிறையவே நேர்ந்துள்ளன. இதனாலும் மார்க்சியம் மரியாதை இழக்கிறது.

★★★★★

தமிழ் இலக்கிய மாணவன் என்ற முறையிலும், மக்களின் விடுதலைதான் அரசியல் முதலிய இயக்கங்களின் இறுதி இலக்காக இருக்க முடியும் என்ற மார்க்சியப் புரிதலோடும் இருந்த நான், தமிழ்த்தேசியம் என்ற கருத்தியலுக்கு வந்து சேர்ந்ததில் வியப்பில்லை. ஏன்றகனவே தமிழ்த் தேசியம் என்ற முறையில் தமிழகத்தில் பெரியார் காலம் தொடங்கிப் பல்வேறு இயக்கங்களும் தமிழ் அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவோடு நமக்கு என்ன உறவு? மாநில சுயாட்சி போதுமா? தனிநாட்டு விடுதலை சாத்தியம்தானா? என்றெல்லாம் கேள்விகள் நிலவுகின்றன. தமிழ்மொழியின் தனித்தன்மை, மேன்மை, தொன்மை முதலியவற்றையும், தமிழ் வரலாற்றில் தமிழ் மன்னர்கள் அரசமைத்து பெருக வாழ்ந்ததையும் நினைவில் கொண்டு தமிழ்மக்களுக்குத் தனி அரசுரிமை தேவை என்று கருத்து ஒருபுறம். சமஸ்கிருதத்திற்கு எதிராக நெடுங்காலம் நாம் போராடினோம். இப்பொழுது நம்மீது இந்தியும் ஆங்கிலமும் திணிக்கப்படுகின்றன. இதன் விளைவாகத் தமிழ் அழிவதை ஒப்புக் கொள்ள இயலாது. தமிழின் காப்புக்காகத் தனிநாடு தேவை. இந்தியாவின் ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியா முழுவதும் தனி நாகரித்தோடு வாழ்ந்தவர்கள் திராவிட மக்கள்.

திராவிடம், தத்துவம், சமயம், வாழ்வியல் என்ற வகைகளில் உலகியலுக்கு அழுத்தம் தரக்கூடியது. இவ்வகையில் ஆரியத்திற்கு எதிரானது. திராவிடர் என்ற இனம் தன்னை ஆரியருக்கும், வடவருக்கும் விட்டுத்தர முடியாது என்பதும் ஒரு கருத்து. திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தனித்தமிழ் இயக்கம் ஆகிய வட்டாரங்களில் நிலவிய இவ்வகைக் கருத்துக்கள் தமிழ்த் தேசியம் என்ற கருத்தியலுக்கு மூலங்கள் என்று சொல்லலாம். 1965–இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் இவ்வகைக் கருத்தோட்டங்களின் குவிமையாக இருந்ததையும் நாம் மறுப்பதற்கில்லை. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற அரசியலும் தமிழ்த் தேசியத்தில் உள்ளடங்கும். ஆதித்தனார், ம.பொ.சி. ஆகியவர் உருவாக்கிய இயக்கங்களும் தமிழ்த் தேசிய உணர்வோடு கூடியவை. 1983க்குப் பிறகு தமிழ்

ஈழத்தில் எழுந்த மாபெரும் எழுச்சி தமிழகத்தில் தமிழ் மக்களின் விடுதலை என்ற உணர்வை தீவிரப்படுத்தியது. மார்க்சியரைப் பொருத்தவரை தமிழ்த்தேசியம் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. இன்னும் பலருக்குத் தனிநாட்டுக் கோரிக்கை உடன்பாடில்லை.

சம்பத் அவர்கள் தோற்றுவித்த தமிழ்த்தேசிய இயக்கம் தொடர்ந்து செயல்படவில்லை. எனினும் தமிழ் உணர்வாளர் மத்தியில் தமிழ்த் தேசியம் என்ற உணர்வு வீறுடன் வளர்ச்சி பெற்றது. மைய அரசுக்கு, மார்வாடி முதலிய வடவரின் பொருளியல் ஆதிக்கத்திற்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்களே அன்றி, வல்லரசின் ஆதிக்கம் குறித்து இவர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. மேற்கத்திய நாகரிகம் குறித்து இவர்களுக்குத் திறனாய்வில்லை. ஆங்கில ஆதிக்கத்தை இவர்கள் எதிர்க்க வில்லை. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் அழிவு குறித்து இவர்களக்குப் பார்வை இல்லை.

இந்தச் சூழலில்தான் தமிழ்த்தேசியம் என்ற கருத்தியலுக்கு நானும் வந்து சேர்கிறேன். தமிழ்த் தேசியம் என்ற உணர்வோடு பல்வேறு இயக்கங்களும், அமைப்புகளும் செயல்படுகின்றன. இவற்றிற்கிடையில் கருத்தொற்றுமை காணும் விருப்பமில்லை. சிலசமயம் இவர்கள் சந்தித்துக் கொண்டாலும், தமக்கிடையிலுள்ள கருத்து வேற்றுமைகளைக் களைந்து கொள்ளும நோக்கில் கலந்தாய்வுகள் இல்லை. ஓரிடத்தில் இவர்களை எவரும் ஒன்றுகூட்டவும் இயலாது.

ஆகவே கோவையில் நானும் நண்பர் இரவியும் நண்பர்கள் ஒத்துழைப்போடு மாதம் ஒருவர் எனத் தமிழ்த் தேசிய உணர்வாளரை அழைத்து கருத்தரங்கம் நடத்தினோம். நண்பர்களின் கேள்விகளுக்கு அவர்கள் பதில் தர வேண்டும். இவற்றை எல்லாம் பதிவு செய்து கொண்டோம். இம்முறையில் திரு.பி.ஆர்.குப்புசாமி, தோழர். தியாகு, தோழர். திரு. பெ. மணியரசன், தோழர் வே. ஆனைமுத்து, அறிஞர் கு.ச. ஆனந்தன், திரு. கி.வே., தமிழ்நாடன் ஆகியவர்களை அழைத்து கருத்தரங்கள் நடத்தினோம். இவர்களின் உரைகளைத் தொகுத்து "தமிழ்த் தேசியம் – பேருரைகள்" என்ற நூலை வெளியிட்டோம்.

ஒரு நூலின் எல்லைக்குள் பல்வேறு கருத்துக்கள் – அங்கங்கே சில/பல வேறுபாடுகளுடன் அடங்கி உள்ளன. தொடர்ந்து ஆய்வுக்கும், கருத்தொற்றுமை காண்பதற்கும் இந்தத் தொகுப்பு பயன்படும் என்று கருதினோம். இன்னும் சிலரை நாங்கள் அழைத்திருக்க வேண்டும். குறிப்பாக திரு. பழ.நெடுமாறன், திரு. சுப. வீரபாண்டியன்.

“நிகழ்” நின்று இரண்டாண்டுகள் கழித்துத் “தமிழ் நேயம்” தொடங்கினோம். தமிழ்த் தேசியம் என்ற கருத்தைத் தொடக்கம் முதலே வற்புறுத்தி எழுதினோம். நண்பர்கள் ஒத்துழைத்தனர். இனம், மொழி என்ற அளவில் மட்டுமே தமிழ்த் தேசிய உணர்வு அமைவது போதாது. இந்தி ஆதிக்கம் போலவே ஆங்கில ஆதிக்கமும் கடுமையாக எதிர்க்கத்தக்கது. உலகமயமாதல் ஆங்கில ஆதிக்கத்தை ஊக்குவிப்பதோடு தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரங்களான நீர், நிலம், வேளாண்மை, இயற்கை, கல்வி, மருத்துவம், பண்பாடு முதலிய பலவற்றையும் நாசமாக்கும். மேற்கத்தியர் வழியே இங்குவந்து சேரும் நவீன நாகரிகமும், நவீன அறிவியல் தொழில் நுட்பங்களும் இங்குள்ள ஆதிக்கச் சக்திகளுக்குப் பயன்படலாம். மக்களுக்கு இவை எதிரானவை. இங்கு வளர்ந்து வருவதாகச் சொல்லப்படும் சீர்கெட்ட, பொறுக்கித் தனமான முதலாளியம் இயற்கையையும், மக்களையும் அழிக்கிற முதலாளியம். இந்த முதலாளியத்தோடு கட்சிகளும், அரசியல் வாதிகளும், மேட்டுக்குடிகளும், நடுத்தர வர்க்கப் படிப்பாளிகளும் ஒத்துழைப்பதன் மூலம் தம் வாழ்வை அவர்கள் வளப்படுத்திக் கொள்ள இயலும். தேசம் அழிவது பற்றி இவர்களுக்கு அக்கறையில்லை. இவர்களும் சேர்ந்து தமிழை அழிக்கிறார்கள்.

இத்தகைய உணர்வை விரிவாகத் தாங்கி கடந்த நான்காண்டுகளாகத் தமிழ்நேயம் வெளிவருகிறது. நாங்கள் யாரையெல்லாம் கடுமையாகத் தாக்குகிறோம் என்பது அவர்களுக்கு நன்கு புரியும். ஐந்தாம் வகுப்புவரை தமிழ் என்பதுகூட அரசுக்கு உடன்பாடில்லை. தமிழைக் கல்லூரி முடிய பயிற்றுமொழியாக ஆக்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இங்கிருந்த போதிலும், அரசுக்கு இது உடன்பாடில்லை. இப்படிப் பலவற்றைத் தமிழ்

நேயத்தில் சுட்டிக்காட்டுகிறோம். தமிழ் இயக்கங்கள் என்று அறியப் பட்டவைகளுக்குக் காவிரிச் சிக்கலில்கூட அக்கறையில்லை. பசுமைப்புரட்சி பற்றி விமர்சனம் இல்லை. தாய்த்தமிழ்ப் பள்ளிகள் பற்றி அக்கறை இல்லை. இயற்கை வேளாண்மையை ஆதரிக்க வில்லை. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தை இவர்கள் ஆதரித்தனர். இதன் பாகத்தை இவர்கள் ஏற்கவில்லை. தமிழின் தொன்மை, மேன்மை என்று இவர்கள் பேசுவதோடு சரி. நவீன கால நோக்கில் தமிழ் இலக்கியம் குறித்து இவர்களுக்கு ஆய்வுகள் இல்லை. தற்கால நவீனத் தமிழ் இலக்கியம் குறித்து இவர்களுக்கு குறைந்தளவுக்கேனும் படிப்பறிவில்லை.

தலித்தியம், பெண்ணியம், நவீனத்துவம் பற்றியெல்லாம் இவர்களுக்குப் பார்வை இல்லை அல்லது இவை பற்றி இவர்கள் பேசத் தொடங்கியபொழுது அதிகளவுக்கு எதிர்நிலை மேற் கொண்டார்கள். இவர்களுக்குள் இருந்த மார்க்சியரும் இவற்றில் கூடுதலான கவனம் செலுத்தவில்லை. பெரியாரியத்திற்கு இவர்கள் தந்த மரியாதையை மார்க்சியத்திற்குத் தரவில்லை.

தமிழ்த் தேசிய இயக்கம் இவற்றின்மீதெல்லாம் அக்கறை செலுத்த வேண்டும். தமிழ்த் தேசிய இயக்கம் நடுத்தரவர்க்கம் சார்ந்த தமிழ் உணர்வாளர்களின் இயக்கமாக மட்டுமே இருப்பது போதாது. வடவரைத் தாக்குகிற பொருளியல் விமர்சனங்கள் போதாது. உழவர்களின் சிக்கல்களில் நமக்கு ஈடுபாடு தேவை. காவிரி தமிழ் மக்கள் வாழ்வுக்கு ஆதாரமான சிக்கல். ம.பொ.சி. முதலியவர்களை இப்பொழுது மரியாதையோடு நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ் இலக்கிய ஆய்வுகள் தேவை. பேராசிரியர்கள் அசலான தமிழ் ஆய்வுகளில் ஈடுபாடு கொள்ள வேண்டும். நவீன இலக்கியத்தோடு நமக்கு ஈடுபாடு தேவை. இவை பற்றியெல்லாம் தமிழ் நேயத்தில் விடாப்பிடியாக எழுதுகிறோம்.

இவற்றோடு மேலும் ஒன்று. எந்த ஒரு இயக்கமும் அதன் ஆதாரத்தில் மெய்யியலைக் கொண்டிருக்க வேண்டும். நமக்கு ஆதாரம் தமிழ் மெய்யியல். வள்ளுவரின் ஒப்புரவு, சித்தர்களின் சிந்தனைகள் முதலியவற்றை மையப்படுத்தி அசலான தமிழ்

மெய்யியலை நாம் வளர்த்தெடுக்க முடியும். சமத்துவமும், சமதர்மமும் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை என்பது தமிழ் மெய்யியலின் மையம். இந்த மெய்யியல் நம் நெஞ்சில் பதிந்திருந்தால் பணத்திற்கும் அதிகாரத்திற்கும் நாம் பலியாக மாட்டோம். மண்ணோடும் மக்களோடும் இணைந்திருப்போம். எளிய வாழ்வை நாம் மேற்கொள்வோம். அன்பை நம் நெஞ்சில் தாங்கியிருப்போம். இப்பொழுதுதான் நம் வாழ்வு நிறைவுள்ள வாழ்வாகும். பெரியாரியமும் மார்க்சியமும் இந்த அடிப்படையில் தான் கைகோர்த்துக் கொள்ள இயலும்.

உலக வரலாற்றின் ஊடுருவலோடு நாம் இருக்கிறோம். கண் திறந்து நாம் உலகைப் பார்க்கவேண்டும், வரலாற்றின் மிகக் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் நம் தமிழ் வாழ்வைக் காத்துக் கொள்ள வேண்டும். வல்லரசுகள் நம் வாழ்வுக்கு ஆதரவாக இருக்க முடியாது. வல்லரசுகளோடு ஒத்துழைக்கிற அரசதிகாரமும், முதலாளியமும் படிப்பாளிகளும் நமக்கு விடுதலை தர மாட்டார்கள். விடுதலை என்ற நோக்கில் செயல்படும் பல்வேறு இயக்கங்களோடு நாம் ஒன்றியிருக்க வேண்டும். தலித்தியம், பெண்ணியம், சூழலியம், பசுமை இயக்கம், மனித உரிமைகள் இயக்கம் இவற்றோடெல்லாம் நாம் இணைந்திருக்க வேண்டும். தமிழ்த் தேசியம் என்ற கருத்தியல் இத்தகைய பன்முகப் பார்வையோடு தான் வளர முடியும்.

தமிழோடும், மார்க்சியத்திதோடும், நவீன இலக்கியத்தோடும் நான் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டிருந்த உறவு தமிழ்த் தேசிய இயக்கத்துக்குள் என்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. தமிழ்த் தேசியம் என்பது குறுகலான பார்வை எதுவுமில்லை. மார்க்சியத்தை நான் கைவிடவில்லை. இனவெளி எனக்குள் இல்லை. தமிழ் வரலாற்றின் தொன்மை, மேன்மை முதலியவை காரணமாகத் தமிழர் என்ற முறையில் நமக்குச் சில கூடுதலான பொறுப்புக்கள் வந்து சேர்ந்துள்ளன. தொன்மை காரணமாகவே நம் பண்பாடு செழுமை மிக்கதாக ஆக்கம் பெற்றுள்ளது. சமத்துவமும், சமதர்மமும் இணை பிரியாதவை. எந்த வகை அதிகாரத்திற்கும் நாம் இடம் கொடுக்க முடியாது. வல்லரசுகளின் ஆதிக்கம் காரணமாக உலகம் அழிந்து

விடும் என்பதற்கான நிலைமைகள் இன்று தீவிரப்பட்டுள்ளன. உலகளவில் வானமும் பூமியும் இவர்களால் அழிவுக்கு உள்ளாகின்றன. அடித்தள மக்கள் வாழ்வின் விளிம்பு நிலையில் தற்போது தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். உலகளவில் எல்லா நாடுகளிலும் இப்படி ஒரு நிலைமை நேர்ந்துள்ளது.

மையங்களில் குவியும் அதிகாரம் மக்களை மரணம் நோக்கித் தள்ளுகிறது. எல்லா நாடுகளிலும் உள்ள அரசுகள் வல்லரசுகளோடு ஒத்துழைப்பதன் மூலம் தம் வாழ்வைத் தக்க வைத்துக் கொள்வதிலும் முனைந்துள்ளன. இத்தகைய போக்கை நாம் ஏற்பதற்கில்லை. உலகின் தொன்மையான நாகரிகத்தின் சார்பிலிருந்து நாம் இந்த நெருக்கடியை எதிர் கொள்கிறோம். உலகளவில் தேசிய இனங்களின் போராட்டங்களின் ஒரு பகுதியாக நாம் இருக்கிறோம். இத்தகைய விரிவான பார்வையோடுதான் தமிழ்த் தேசிய இயக்கத்தில் நாம் இணைந்துள்ளோம். வாழ்வா? சாவா? என்ற கேள்வியோடு நாம் நிற்கிறோம். நாம் வாழ்ந்தாக வேண்டும். உலகை வாழ்விக்க வேண்டும்.

தற்காலச் சூழலில் தமிழ்ப் படைப்பாளிகள் தமிழ்மீதும், தமிழ் மக்கள் மீதும் ஆழ்ந்த பற்றோடு எழுதவேண்டும் என்று நான் விரும்புகிறேன். தமிழ்த்தேசம் பல்வேறு நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டிருப்பதைப் படைப்பாளிகளால் உணர முடியும். நேரடியான அரசியலில் நாம் ஈடுபடவேண்டிய அவசியமில்லை. அரசியலென்பது நாளுக்குநாள் சகதியாக, சாக்கடையாக மாறிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவும் தமிழ் மக்களின் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. வாழ்வின் அவலங்கள் தொடர்ந்து பெருகுகின்றன. மனநோய்கள், தற்கொலைகள், கொள்ளைகள், ஊழல்களென்று வகைவகையான தாக்குதலில் தமிழ் மக்கள் சிக்கித் திணறுகின்றனர். நம் படைப்புகள், திறனாய்வுகள் முதலியவை தமிழ் மக்களின் மேன்மைக்கானவை என்பது உண்மையென்றால், மக்களின் அவலங்கள் குறித்து நாம் கூடுதலான அக்கறை கொள்ள வேண்டும். மனித விடுதலைதான் என்றைக்கும் இலக்கியத்தின் கருப்பொருளாக இருக்க முடியும்.

திறனாய்வுக்கும் இதுவே கருப்பொருள்.

தமிழ்த் தேசிய உணர்வின் இன்றியமையாத ஒரு கூறாகிய தமிழ் உணர்வு பெரும்பாலான படைப்பாளிகளுக்கு இல்லை என்பதை இங்கு ஒரு குறையாக நான் குறிப்பிட விரும்பவில்லை. தமிழ்த்தேசிய உணர்வை அரசியல் என்று கருதி அதிலும் குறிப்பாக திராவிட இயக்கத்தின் அரசியல் என்று கருதி நம் படைப்பாளிகள் விலகி இருப்பதே நமக்கு ஆரோக்கியமாகவும் கருதுவதாகவும் தோன்றுகிறது. அரசியல் என்பது பற்றிய குறுகலான பார்வை இது என்றே கருத முடியும். எப்படி இருந்த போதிலும், தமிழ் உணர்வின்றி, தமிழ் மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற உணர்வின்றிப் படைப்பாளிகள் இயங்க முடியாது. நடுத்தர மக்களின் பார்வையிலிருந்துதான் பெரும்பாலான படைப்பாளிகள் படைக்கிறார்கள். உலக மயமாதல் சீர்கெட்ட முதலாளியம், நவீன நாகரிகம் முதலியவற்றோடு ஒத்துச் செல்கிற உணர்வுடையவர்கள் நடுத்தரவர்க்கப் படிப்பாளிகள். இதன் காரணமாகவும் உழைக்கும் மக்கள்மீது இவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். வாழ்க்கை மேம்பாடென்பது வசதி வாய்ப்புக்களைக் கூடுதலாகத் திரட்டிக் கொள்வதில் இல்லை. சுரண்டலோடும், ஒடுக்கு முறையோடும் நம்மால் ஒத்துழைக்க முடியாது. சமத்துவமும், சமதர்மமும் தான் நம் மக்களையும், நம்மையும் மேம்படுத்த முடியும். அன்பும் அறமும் இல்லாத வாழ்க்கை வளமான வாழ்க்கையாக இருக்கவும் முடியாது. இம்முறையில் நடுத்தரவர்க்க படிப்பாளிகளும் படைப்பாளிகளும் இன்றைய வரலாற்றுச் சூழலில் எங்கிருக்கிறோம், யாரோடிருக்கிறோம் என்பது குறித்துத் தம்மைத் தாமே ஆய்ந்து கொள்ள முடியும். இதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வுக்கு இன்னும் நெருக்கமாகச் செல்ல முடியும். இப்படிச் செல்லும் பொழுது, தமிழ்த் தேசிய உணர்வு இவர்களுக்கு இயல்பாக வர முடியும். கூடங்குளத்தை நாம் எவ்வாறு ஏற்க முடியும்? காவிரி நீரில் நமக்கான பங்கை எப்படி கர்நாடகம் மறுக்க முடியும்? இப்படி எத்தனையோ கேள்விகள் நமக்குள் எழுகின்றன. இவை பற்றி எல்லாம் படைப்பாளிகள் சிந்திக்காமல் இருக்க முடியாது.

உழவர்களும், கைவினைஞர்களும், பெண்களும்,

தலித்மக்களும் இன்று சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து நாம் பார்க்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு நாளும் நாம் நொந்து போகிறோம். நம் மனச்சான்று நம்மைக் குற்றவாளி ஆக்குகிறது. படைப்பாளியாய் இருப்பதுகூட நமக்கு ஒரு மேன்மை என்று நம்மால் கருத முடியவில்லை. நாம் இன்னும் கீழ் இறங்கிச் செல்ல வேண்டும். அப்பொழுதுதாம் நம் படைப்புக்கள் உரம் பெற முடியும். ஒரு திறனாய்வாளன் என்ற முறையில் இப்படி ஒரு வேண்டுகோளோடு இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

கட்டுரையை முடிப்பதற்கு முன்பு முடிவுரையாகச் சிலவற்றைச் சொல்ல வேண்டும். எனக்கு இப்பொழுது வயது 68. உடல் நலம் சீராக இல்லை எனினும் ஒவ்வொரு நாளும் ஓய்வென்பது இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் தொடர்ந்து இயன்றவரை படிக்கிறேன். கடந்த ஐந்தாண்டுக்காலத்து இலக்கியப் படைப்புக்களை அதிகம் வாசிக்க எனக்கு வாய்ப்பில்லை. கோவையிலும் அண்மைக் காலத்தில் இலக்கிய அமைப்புக்கள் பெரும்பாலும் செயல்படுவதில்லை. நண்பர்களோடு இணைந்து சிலவற்றையே செய்ய முடிகிறது. இலக்கியச் சூழல் இல்லாத நிலையில் தீவிர வாசிப்புக்கு வாய்ப்புக் குறைகிறது. இந்தச் சூழலை அண்மைக் காலத்தில் மாற்ற முடியும் என்று தோன்றவில்லை.

என்னைப் பொருத்தவரை தமிழ் இயக்கத்தினுள் நான் இருப்பதாக உணர்கிறேன். நான் கற்ற மார்க்சியமும், தமிழும் தமிழகச் சூழலும் இந்த இயக்கத்தினுள் என்னை இணைத்திருக் கின்றன. தமிழ் என்ற பேரியக்கம் சங்க காலத்திற்கு முன் இருந்தே தோன்றி வளர்ந்து உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் வந்த எதிர்ப்புகளுக்கு இடையில் சில சமயம் தளர்ந்தும் அப்புறம் வீறு பெற்றும் வருகின்ற இயக்கம்.

தமிழ்தான் நம்மை வாழ்விக்கிறது என்று சொல்லுமளவுக்கு இந்த இயக்கத்தினுள் என்னை உணர்கிறேன். பாரதிதாசன் தமிழியக்கத்தின் பன்முக ஆற்றல்களை உள்வாங்கிக் கொண்டவராக நமக்குத் தென்படுகிறார். தமிழ் என்பதற்குக் காதல் என்றும், வீரம் என்றும், அன்பு என்றும், அறம் என்றும்,

கற்பு என்றும், கலை என்றும், இயற்கை என்றும், தவம் என்றும் நூறு பொருள் கண்டவர் பாரதிதாசன். பாரதிதாசன் அவர்களைப் பொருத்தவரை தமிழ்தான் அவருக்குக் கடவுள். தமிழ்தான் அவரது சமயம். தமிழியத்தின் பன்முகப் பரிமாணங்களின் பெருவீச்சாகத் திகழ்ந்தவர் பாரதிதாசன். தமிழ் மக்களின் தலைவன், தமிழறிந்தவனாக மட்டும் இருப்பது போதாது. தமிழாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்று பாரதிதாசன் கூறியது எவ்வளவு பெரிய உண்மை என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. தமிழ்ச் சாதி வள்ளுவர், இளங்கோ, கம்பன் ஆகியவர்களைத் தாங்கி இருப்பதன் மூலம் அமரத்துவம் உடையது என்று பாரதி கூறியதையும் இங்கு நினைவு கொள்கிறோம். தமிழோடும், தமிழ் மக்களோடும் தமிழ் வரலாற்றோடும் தன்னை இணைத்துக் கொண்டவர்கள் தமிழ் என்னும் பேரியக்கத்தின் வீச்சைத் தமக்குள்ளும் உணர முடியும். இதன் காரணமாகவே தற்போது தமிழின் நிலை குறித்து நாம் பெரிதும் கவலைப்பட நேர்ந்திருக்கிறது.

எனக்குப் பரிசுகள், விருதுகளில் நாட்டம் இல்லை. முதலாளிகள் தரும் பரிசுகளை நான் அறவே வெறுக்கிறேன். நம் சமூகத்தை நாசம் செய்யும் சக்திகளில் ஒன்றாக இருந்து கொண்டு, தமிழையும், தமிழ்ப் படைப்பாளிகளையும் நாங்கள் பாராட்டுகி றோம், பரிசு தருகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் முதலாளிகளின் மீது எனக்கு மரியாதை இல்லை. தமிழ் உணர்வுள்ளவன் சுரண்டலோடும், ஒடுக்கு முறைகளோடும் ஒத்துழைக்க முடியாது. தமிழ் அறம் அறிந்தவன் மக்களோடு தன்னைப் பகிர்ந்து கொள்வான்.

தமிழின் பெருமை சொல்லித் தம்மையும் பெருமைப் படுத்திக் கொண்டு தருக்கித் திரிபவர்கள் தமிழின் அறத்தை அழிப்பவர்கள். ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. அமெரிக்காவில் வாழும் தமிழறிஞர்கள் "விளக்கின்" சார்பில் எனக்குப் பரிசு வழங்குவதாக அறிவித்த போது உடனடியாக நான் ஒப்புக் கொள்ளவில்லை. அப்பொழுது பிரமிள் மரணப்படுக்கையில் இருந்தார். தமிழவனிடம் சொன்னேன். செல்லப்பா அவர்களுக்குப் பிறகு இந்த மரியாதையை பெறும் தகுதி

உடையவர் பிரமிள். அவருக்கு இப்பொழுது நினைவு இருக்கிறதோ இல்லையோ. இந்த மரியாதையை அவருக்கு நாம் செய்ய வேண்டும். என் வேண்டுகோளைத் தமிழவனும் ஏற்றுக் கொண்டார். அடுத்த ஆண்டு இந்தப் பரிசுக்காக என்னைத் தொடர்பு கொண்ட போது நான் கேட்டேன் "என்ன தகுதி கண்டு இந்தப் பரிசை எனக்கு வழங்குகிறீர்கள்", "வேறு சிலரும் இந்தப் பரிசைப் பெறத் தகுதி உடையவர்கள்" என்று கூறினேன். தமிழவனும் தொடர்ந்து வற்புறுத்தினார். ஏற்பதற்கு முன்பு சிந்தித்தேன். இந்தத் தொகையில் ஒரு ரூபாய் கூட எனக்கு வேண்டாம். தமிழுக்காக இதைச் செலவிட வேண்டும். தாய்த் தமிழ்ப் பள்ளிக்கும் மாணவர்கள் திருக்குறளைப் பயில வேண்டும் என்பதற்காகவும் இந்தத் தொகையைப் பிரித்துக் கொடுத்தேன். பல்கலைக் கழகத்தில் சங்க இலக்கியம் குறித்த கருத்தரங்கிற்காகத் தொகையில் ஒரு பகுதி தருவதாகச் சொன்னேன். அவர்கள் கருத்தரங்கு நடத்தவில்லை. தொகையும் தமிழ்நேயம் முதலியவற்றில் கரைந்தது.

இந்த விவரங்கள்கூட முக்கியமானவை அல்ல. எனக்குப் பரிசு வழங்கும்போது அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டார்கள். 'இலக்கியம் முதலியவை குறித்து மார்க்சியம் உட்பட பல்வேறு புதிய அணுகுமுறைகள் தமிழுக்குள் வந்து கொண்டிருக்கிற நிலையில், இவற்றின் வழியே தமிழ் மரபை விடாது பேணி வருபவர் ஞானி' இப்படி இவர்கள் குறிப்பிட்டது எனக்குப் பெரும் மனநிறைவாக அன்றும் இருந்தது ; இன்றும் இருக்கிறது. தமிழை ஒரு பேரியக்கம் என்று கூறினேன். அதன் வழியே வருவது தமிழ் மரபு. தமிழ் மரபென்பது சமத்துவத்தையும், சமதர்மத்தையும் தனக்கு உள்ளடக்கமாகக் கொண்டது என்பது என் புரிதல்.

தமிழகச் சூழலில் இன்றுவரை நிறைய விமர்சனங்களோடு நான் வாழ்ந்து வருகிறேன். நானும் ஒரு திறனாய்வாளன் என்பதனால் என்னைப் பற்றி வரும் திறனாய்வுகளை நான் மதிக்கிறேன். கற்றுக் கொள்வதற்கு வரும் வாய்ப்புகளை நான் தவற விடுவதில்லை. என்னைக் குறித்து விமர்சனம் எழுதிய நண்பர்கள் கோ. கேசவன், அ. மார்க்ஸ் என்று பலரையும்

நினைத்துக் கொள்கிறேன். யாரிடமும் எனக்குக் கோபம் இல்லை. கொஞ்சம் வருத்தமுண்டு. தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்வதற்காகவும், தமிழ்ச் சூழலில் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் பிறர்மீது தாக்குதல் தொடுக்கிறவர் மீது எனக்கு வருத்தமுண்டு. தமிழையோ, தமிழ் மக்களையோ வளர்க்கும் நோக்கம் இத்தகையவர்களுக்கு ஏன் இல்லை என்பது என் வருத்தம். தற்கால இந்திய, உலகச் சூழலில் தமக்குரிய இடத்தைப் பெற்றுத் தருவதற்கு நம் குழுச் சண்டைகள் அறவே பயன்படமாட்டா. தமிழின் ஆக்கத்தை அழிப்பதற்கு இவை பயன்படும்.

இப்பொழுதும் சிலரை நினைத்துக் கொள்கிறேன். ஒருவர் என் மரியாதைக்குரிய திரு. கோமல்சாமிநாதன் பேரன்போடு என்னோடு பழகினார். என்னைக் குறித்து "சுபமங்களாவில்" மரியாதையோடு எழுதினார். என் கட்டுரைகளை வெளியிட்டார். என்னைத் தாக்கியவர்களைக் கடிந்து கொண்டார். மரணம் தன்னை நெருங்கி வருவதை அறிந்த நிலையில் மிகவும் அவசரத்தோடு நண்பர்களை அனுப்பி என்னிடம் நேர்காணல் பெற்று வெளியிட்டார்.

இன்னொருவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், மௌனி முதலியவர்களை அன்றைய சூழலில் மார்க்சியர் புறக்கணித்ததை அவர் ஒருசமயம் எடுத்துரைத்த போது எனக்கு நிறைவாக இருந்தது. மதுரையிலும், கோவையிலும் சிலமுறை அவரோடு நெடுநேரம் உரையாடினேன். அவரது பேரறிவுக்கு வசப்படாதவர் என்று யாரும் இருக்க முடியாது.

என்னைப் பாராட்டி அவர் முதல்முறை கடிதம் எழுதிய போது படித்து நான் கண்ணீர் விட்டேன். இத்தனை பெரிய மார்க்சிய அறிஞர் ஒருவர் என்னை முதன் முறையாகப் பாராட்டுவது அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். இப்பொழுதாவது எனக்கு இந்த மரியாதை வந்ததே என்று கருதி மகிழ்ந்தேன். மார்க்சிய வட்டாரத்தில் எவ்வளவு கடுமையான தாக்குதலுக்கு நான் உள்ளாகி இருக்கிறேன். இவர்களுக்கு மத்தியில் சிவத்தம்பி அவர்கள் என்னை இனம்கண்டு கொண்டது எனக்கு நிறைவு

தருகிறது. கடைசியாக அவர் கோவைக்கு வந்த போது மதம் குறித்து மார்க்சியரின் நிலைபாடு பற்றி அவரிடம் கேள்வி கேட்டுப் பதிவு செய்தேன். தமிழ் நேயத்தில் வெளியிட்டேன். உரையாடலை முடித்துக் கொண்டு நான் புறப்பட்டபோது, அன்போடு அவர் கூறினார் "ஞானி, உங்கள் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளிவர வேண்டும். தமிழ் மரபை விடாது நீங்கள் மார்க்சிய நெறியில் பொருள் படுத்துகிறீர்கள். இதை மேற்கில் அறிஞர் அறிந்து கொள்ள வேண்டும். குறைந்தளவுக்கு உங்களின் சிறந்த கட்டுரைகளைத் தெரிவு செய்து ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து ஒரு நூலாவது வெளிவர வேண்டும்". எனக்கு இந்த வாய்ப்பு இல்லை என்பதை அவரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

என்னை இப்படி பொருட்படுத்துகிற இவரது பேரன்பை நான் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன். இன்னும் சில நினைவுகள் எனக்குள் எழுகின்றன. தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் நேர்ந்துள்ள நெருக்கடிகள் குறித்துத் தொடர்ந்து நான் எழுதுகிறேன். தமிழ் இலக்கியத்தை மார்க்சிய நோக்கில் பொருள்படுத்துகிறேன். தமிழ்ச் சூழலில் என்னை இனம் கண்டு பேரன்பும், பெருந்தன்மையும் உடைய என் மரியாதைக்குரிய திரு. பழ.நெடுமாறன் அவர்கள், திரு. பூ.அர. குப்புசாமி முதலியவர்களோடு என்னையும் சேர்த்து தமிழ்த் தேசிய இனச் செம்மல் என்று எனக்கு விருது வழங்கியதை நன்றியோடு நினைவு கூர்கிறேன். இன்னும் சிலர் பற்றியும் நான் வாய்ப்பு வரும்பொழுது எழுத வேண்டும். ஒன்றை இறுதியாகச் சொல்லி இந்த உரையை நிறைவு செய்கிறேன். பெரியவர் செல்லப்பா, சிட்டி தொடங்கி எத்தனையோ மரியாதைக்குரிய இலக்கியவாதிகளோடு உரையாடி இருக்கிறேன். ஆண்டுகள், மாதம், தேதிகள் பெரும்பாலும் என் நினைவில் தங்குவதில்லை. மற்றபடி நண்பர்கள், பெரியவர்களைப் பற்றிய நினைவுகள் எனக்குள் இன்னும் அழியவில்லை. என் குறைக்காக நண்பர் என்னை மன்னிக்க வேண்டும்.

நன்றி!

குறிப்பு :

சென்னையில் 17.11.2002 அன்று நடைபெற்ற "காவ்யா" வட்ட நிகழ்வுக்காக எழுதிய கட்டுரை. இந்த வாய்ப்பைத் தந்த என் அருமை நண்பர் திரு. சண்முக சுந்தரம் அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றி. ஞானி.

கோவை ஞானி, தமிழ் மெய்யியலின் முதல்

தரமான விளைச்சல்.

தமிழ்ப்படைப்பிலக்கியங்களுக்கு அவர் அளிக்கிற

மார்க்சிய நோக்கிலான

விமர்சனங்கள் எல்லையில்லாத ஆழமும் விரிவும்

கொண்டவை. அக்கறையுள்ள வாசகர்களின்

ஆழ்மனவெளிகளில் பந்தாட்டம் நிகழ்த்துபவை.

பழம் பெருமையில் இவருக்கு நம்பிக்கையில்லை.

தமிழுக்கும் தமிழனுக்கும் இன்றைய தேவை என்ன

என்பதிலேயே இவரின் நாட்டமெல்லாம்.

88-ல் நேர்ந்த பார்வை இழப்பு

இவரின் இலக்கிய, சமூகப் பயணத்தில்

மில்லிமீட்டர் அளவும் தடங்கலை ஏற்படுத்தவில்லை.

வரலாற்றில் தமிழன் தன்னைத் தக்கவைத்துக்

கொள்வானா என்கிற பதைபதைப்புத்தான்

தற்போதைய இவர் கருத்துக்களின்

மையமெல்லாம்.

015214

காவ்யா